tamileelamarchive

# எரிமலை

நவம்பர்-டிசம்பர் 2004




இனத்தின் உயிராய்
இனத்தின் உணர்வாய்
இனத்தின் உருவாய்
இனத்தின் அகமாய்
இனத்தின் அழகாய்
இனத்தின் மூச்சாய்
இனத்தின் பேச்சாய்
இனத்தின் வளமாய்
இனத்தின் வாழ்வாய்
வாழும் தலைவா! வாழி நீ வாழி!



# எரிமலை

## உள்ளே...



04

**தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரை - 2004**


### கட்டுரைகள்
பேராசிரியர் கா.சிவத்தம்பி ........ 68

### அணையாத தீபம்
அணையாத தீபங்கள் - தொகுப்பு ........ 82

### உண்மைப் பதிவு
தமிழ்க்கவி ........ 56
மணலாறு விஜயன் ........ 62

### களப் பதிவு
த.வஞ்சி ........ 110

### சிறுகதை
செ.யோகநாதன் ........ 46
செங்கை ஆழியான் ........ 48
அ.ச.பாய்வா ........ 52
மலைமகள் ........ 60
சாந்தன் ........ 66

### கவிதை
காசி ஆனந்தன் ........ 08
தா.பாலகணேசன் ........ 10
ஜெயா ........ 12
கந்தையா நவரேந்திரன் ........ 14
அன்புக்கரசன் ........ 15
அம்புலி ........ 44
மாலிகா ........ 51
ப.அருள்நேசன் ........ 55
த.ஜெயசீலன் ........ 57
ஞாலவன் ........ 65
சோ.பத்மநாதன் ........ 76
செ.புரட்சிகா ........ 84

### தொகுப்பு
மீள்பார்வை ........ 115
நினைவுக்குறிப்பு ........ 116
பதிவுகள் ........ 120




16

தலைவரிடமிருந்து கற்போம்



82

போராளிகளின் விடுதலை வாழ்வு



"இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்
(2004ம் ஆண்டு மாவீரர் நாள் உரையிலிருந்து—)




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திமூன்றாம் ஆண்டு

நவம்பர் - டிசம்பர்

2004

திருவள்ளுவர் ஆண்டு 2035

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com

www.erimalai.com


# தலைவாசல்

## விளக்கேற்றும் மாதம்

மாவீரர்களின் கல்லறைகளுக்கு விளக்கேற்றும் மாதம் நவம்பர் என்பதை நாம் நன்கு அறிவோம். இது எங்கள் வரலாற்றுப் பாரம்பரியம். விளக்கேற்றித் தொழுவோம் என்று நாம் சபதம் எடுத்துள்ளோம். அதை வருடாவருடம் நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளோம். விளக்கு வெளிச்சத்தின் குறியீடு. அது வெளியிடும் ஒளி இருளைக் போக்கும். எமது இருளைப் போக்குவதற்காக மாவீரர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். தமிழினம் விடிவு காணாதவரை அது இருளில் வாழும். நாம் இருளில் இருந்து விலகி வெளிச்சத்திற்கு வரவேண்டுமாயின் விடுதலை பெற்றாக வேண்டும். இதற்காகவே மாவீரர்கள் மரணித்தார்கள். அவர்களுடைய உள்ளத்து இலட்சியம் தமிழினத்தின் விடுதலை என்பது உறுதி.

விளக்கேற்றியதோடு எமது கடமை தீர்ந்துவிடவில்லை. வாழ்நாள் புராக நினைந்துருக வேண்டிய நாம் ஒரு நாள் விளக்கேற்றியதோடு திருப்திப்பட முடியுமா இல்லவே இல்லை. நவம்பர் 27 விளக்கேற்றும் நாளாக இருப்பினும் எமது நினைவிலும் கனவிலும் என்றென்றும் நாம் மாவீரர்களிற்கு விளக்கேற்றுகிறோம். நவம்பர் 27 மாத்திரம் விளக்கேற்றும் நாளல்ல எமது மனதால் நாம் அவர்களிற்கு ஒவ்வொரு நாளும் விளக்கேற்றுகிறோம். அவர்கள் எமது உடன்பிறப்புக்கள். அவர்களோடு நாம் ஒன்றாக வாழ்ந்தவர்கள். ஒன்றாக உணவருந்தி உறங்கி எழுந்தவர்கள். அவர்கள் பற்றிய நினைவுகள் எமது உள்ளத்தில் பசுமையாக உள்ளன. அவர்களை நினைக்கும் போது எமது கண்கள் பனிக்கின்றன. அவர்கள் நினைவு எமக்கு உத்வேகம் தருகிறது.

தமிழீழத்தில் இன்று மாவீரர் இல்லாத குடும்பத்தை காண முடியாது. பிள்ளையோ சகோதரத்தையோ நெருங்கிய உறவையோ நண்பனையோ இழக்காதவர்கள் யாருமில்லை. தமிழீழம் ஒரே குடும்பமாக போரிட்ட காரணத்தால் மாவீரர்களை ஈன்றெடுத்த சொந்தமாக எமது உதிரத்தில் உதித்த செல்வமாகப் போற்றுகிறோம். மாவீரர்களில் ஆண், பெண், எனது, உனது என்ற பாகுபாடு கிடையாது. எல்லா மாவீரர்களிற்கும் எல்லோருமாக விளக்கேற்றுவோம். மாவீரர்கள் எமது இனத்தின் பொதுச் சொத்து.



2004ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு

## தமிழீழத் தேசியத் தலைவர்

# மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
27.11.2004

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக் கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத் திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படைவலுச் சமநிலையை நிலைநாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம்மீது திருப்பினோம். எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவுபெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலைபெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசுக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேரறுக்கப்பட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொட

கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

எனது அன்பான மக்களே,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வுகொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக்கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந்நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள்வரை நீடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப் போயின. நெருக்கடி நிலையைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும் போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமானங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின. இவை ஒருபுறமிருக்க, சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்காவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நீண்ட காலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக் கொடுக்கவும் சிதைந்துபோன தமிழர் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவுகளும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத்திட்ட வரைவுகள் அமையப் பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவை நாமாகத் தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைத் தயாரித்தோம். இத் திட்டம் புதுமையான நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்திறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்றடவையாக விடுதலைப் புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந் நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதே சமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக் கண்டித்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப்பொதுத் தேர்தல் வழிவகுத்தது. இனவாதமும் மதவாதமும் பழமைவாதக் கம்யூனிசமும் ஒன்றுகலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றிபெற்றது. இந்த இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப்பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடகிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை

இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது. தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இப்பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தது. மூன்றாந் தரப்பு நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது. நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது. எமது திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் மிரட்டியது. சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சமாதான வழிமுறையைப் பேணி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும்போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுறமும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிக்கு முகம்கொடுப்பதாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப் பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம் வகிக்குங் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இனவாதத்திலும் போர்வெறி பிடித்த இராணுவவாதத்திலும் சிங்களப் பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிற் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமையவேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டி நிற்க, சந்திரிகாவின் அரசு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றி பேச விரும்புகிறது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெறவேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக் கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகிறார்கள். போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர்நிறுத்தம்செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கிவருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றிப் பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமையவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் தீவிரவாத இனத் துவேசச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்

கலாம். இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர்போன்று சர்வதேசச் சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப் பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கந் தயாராக இல்லை.

சிங்களப் பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப் போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைக் கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத் திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையுந் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடிமறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைந்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக்கனவை, எத்தகைய இடர்கள், சவால்களை எதிர்கொண்டபோதும் நிறைவு செய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# பொன் விழா வாழ்க பொலிந்து...

தம்பி பிரபா கரன்பேர் தனைக்கேட்டால்
எம்பிக் குதிப்பாள் எனது மகள்!
தெம்பில்
'நெருப்படா எந்தலைவர்' என்றார்ப்பாள்... 'மாற்றார்
உருப்படார்' என்பாள் உறுமி!

அயல்மனையான் தோழன் பிரபாகரனை
புயல் என்பான்! அப்புலி வீரன்
செயல்தான்
செயலென்பான்! விம்மும் செருக்கோடு மாற்றான்
முயலென்பான்! ஆர்ப்பான் முரசு!

முன்வீட்டுப் பாட்டி பிரபா கரன் முதலில்
என் வீட்டுப் பிள்ளை என மகிழ்வாள்...!
'நின் நாட்டுப்
பற்றை மறவேன்' என்பாள்... பறைவாள் 'தம்பி நீ
ஒற்றைத் தலைவனடா.... ஓம்!'

மூத்தான் அடுத்ததெரு.... 'மூச்சாய் எமை நாளும்
காத்தான் பிரபா கரனெ'ன் பான்!
பூத்தான்...
தனிக்கொற்றம் உண்டாம்! தழைக்குமாம் மானம்!
இனிக்குமாம் வாழ்க்கை இனி!

உறவு மகிழத் தமிழுலகின் உள்ளும்
புறமும் விழா நாள் மகிழ
அறம் மகிழ
இன்னுலா வந்தான் பிரபாகரன் இனியன்...
பொன்விழா வாழ்க பொலிந்து!

---

காசி ஆனந்தன்



# அகங்களினூடாகப் பாயும் ஆற்றின் பிறப்பு

தா.பாலகணேசன்

அவர் பிறந்ததற்கான கதையைக்
கேட்கும் ஆர்வம் பெருகிக் கொண்டிருந்த நாளில்
காலடிகள் தேய்ந்த முற்றத்தில்
சன்னங்கள் தைத்த சுவரில் சாய்ந்திருந்தபடி
பாட்டி கதை சொல்லத் தொடங்கினாள்

ஆலாபரணைகள் ஏதுமற்று
அது பெரிய கதை என்றாள்

கண்ணீரின் திரை வீழ்ந்திற்று
எம்முன்னே மறைத்தவள்
கதை சொல்லத் தொடங்கினாள்

கொதிக்கும் தார்ப்பீப்பா
தமிழ்ச் சிறீ
குண்டாந்தடி
துப்பாக்கி
சப்பாத்துக்கால்கள்
ஆமட்கார்
சகடை
தும்பி
சியாமாசெட்டி
Y8

மிளகாய்த்தூள்
மேசை லாச்சி
கொக்கட்டிச் சோலை
செம்மணி
நாசிகளைப்போன்றே
அவர்கள் நம் மீது வெறியோடு பாய்ந்தார்கள்

ஒளிரும் நட்சத்திரக் கூட்டங்களுக்குள்ளால்
இருந்தல்ல
எரியும் எம்மவர்களின்
சிதைகளுக்குள் இருந்து எழுந்து வந்தார்.

அவர் பிறந்தார் .



2

எங்களுடைய கதை இன்னும்
துலக்கமாக இல்லையென்றே
வரலாற்றாய்வாளர்கள் வருத்தப்படுகிறார்கள்.

சிதைக்கப்பட்ட முகம்
என்னுடையதும்
எங்களுடைய கல்வியும்
எதெதற்கோ முட்டுக்கொடுக்கும்
மரச் சட்டகமாகப் போயிற்று.

இரவல் மெட்டுக்களில் புனையப்பட்டவற்றை
எங்களுடைய பாடல்கள்
என ஏமாந்து முணுமுணுத்தோம்.

எங்களுடைய இனிய காதல் தோய்ந்த
பாடல்களை
கனவிலும் கேட்டிருப்போமோ தெரியவில்லை

இப்படியே எங்களுடையவை எவை என்று கேட்டால்
எங்களுக்கென்று எதுவுமே இல்லை
பண்பாட்டு அழிவின் விளிம்பு நிலையிலேயே
விடுதலைக்கான போர்ப் பறையை முழக்கினார்.

3

அச்சம் நிறைந்திருந்த
எங்களுடைய நாட்களைப்பற்றிய
நினைவுகளில் இருந்து நாம்
அவ்வளவு சீக்கிரமாகவா விடுபட்டிருக்கின்றோம்

அடையாளங்களை மறைத்துக்கொண்டு
ஊர்ந்தோம்
அடையாளம் இழத்தல்
அடிமை மனோபாவத்திற்கூடாக
மெல்ல பூமியை ஊடுருவிப் பரவியது

அப்பொழுது
எங்களுக்கான அடையாளங்களை
இயல்பு மொழியை
விடுதலை வாழ்வை
போராடி அடையும் பயணத்தை
வழி நடத்தத் தொடங்கினார்
புதிய பாதைகள் திறந்து கொண்டன.

4

அடிமைத் தனங்களுள் மூழ்கித் தவிக்கின்ற
அனைத்து மக்களுக்குமான
அசைவியக்கத்தை ஊற்றுக்கண்டது நிலம்
பின்னர் ஒரு நாளில் ஆறாகப் பரிணமித்தது
ஆற்றின் நடனம் எல்லோருள்ளும் நிகழத் தொடங்கிற்று
வீரம் பிறந்தது.



வீரம் - குனிஞ்சு வளையாமல் இருப்பதற்கான நிமிர்வு
மட்டுமே
நிமிர்வு - விடுதலைக்கான பேர் எழுச்சி
விடுதலைக்கான எழுச்சி
ஒன்றில் பற்றி எல்லாவற்றிலும் மூழ்கிறது
மூண்டெரியும் இயக்கம்
விடுதலைப் பேராறாகிப் பாய்கின்றது

விண்ணைக் கிழித்துச் செல்லுகின்ற
சிறகுகளை உடைய வீரர்கள்
பிறக்கிறார்கள்.

கோடை
எழில் பொருந்திய
மஞ்சள் பட்டாடைகளை அணிவிக்கிறது
அவர்கள் கரும்பனைகளுக்கு நிகராக நிற்க்கிறார்கள்
வீரியமும் மிக்கவர்களாக நிமிர்கிறார்கள்

கடலினது தீராத மொழியை ரசித்தபடி
வானத்தினது தீராத மௌனத்தை
வாசித்தபடி
விடுதலைப் பேராறு ஓசையற்று
எல்லோர் அகங்களுடாகவும் பாய்கின்றது

மலர்ந்து சொரியும்
நந்தவனமாகப் பூமி இருந்திருக்கக்கூடாதா ?

மலர்வதைப் போன்றே வாழ்க்கையும் வாய்த்திருக்கக் கூடாதா ?

இப்பொழுதுதான் என்ன காலம் கடந்தா போயிற்று
அதி மானுடப் பண்பாட்டு அதிர்வுகளை ஏற்படுத்தவல்ல
இசை மூலக் கூறுகளில் இருந்து

எல்லோரும் வாழ்வதற்கான பாடலை
வேறு யார் பாடுவார் என
அவள் அவளைச் சூழ்ந்திருந்த மனிதர்களிடம் கேட்டாள்.
வானத்தில் வெள்ளிகள் பூத்திருந்தன.



# அவன் பெயரின் உச்சரிப்பே போதும் இனம் எழுந்து நிமிர!

அகங்களைத் தந்து
முகங்களைத் தந்து
முகவரி தந்து
இருப்பின் வரியை
எழுதிய தலைவன்.

வற்றிய குரல்மொழி
வறுமை நீக்கி
சபையெலாம் நம் மொழி
பேசிடச் செய்தோன்.

விதியினை நொந்து
பொய்மையைப் போர்த்தி
சுருங்கிய மனிதம்
உயிர்பெறச் செய்தோன்.

சரித்திர நதியின்
திசையினை வகுத்தவன்.
காலச் சக்கரம் உருளும் போக்கை
சரியாய்க் கணித்த காலக் கணிதன்.

துன்பச் சிலுவையை தூக்கியபடிக்கு
துயர முள்முடி சூட்டியபடிக்கு
அகதி என்ற பொதுப்பதம் தாங்கி
இகழும் இனமாய் இளைத்தவர் தன்னை
மான இனமென நிமிர்த்திய புனிதன்

கட்டளை விரலின்
காலில் பணிந்து
நெளியும் மனிதப் புழுவென நோக்கியோர்
நோக்கம் நோக முதுகினை நிமிர்த்தி
வீரப் புலியினம் இதுவென நிறுத்திய
காலத்தின் தலைவன்.

சுடரும் விழி
சோதனைக் கற்களை
சாதனைப் படிகளாய் மாற்றி மிதிக்கும்
கூரிய மதி

மனங்களை அளக்கும்
மகிமைப் பண்பு
குலையாக் கொள்கை
வளையா வீரம்
நேர்வரும் பகையை மோதிச் சரிக்கும்
நிமிர்ந்த நடை
சதிப்படை அடிப்புலம்
அறுக்கும் ஆற்றல்.
அஞ்சுதல் அடங்குதல்
கெஞ்சுதல் கீழ்ப்படல் எனும்
பொருள் அறியா
பொங்கும் முறுவல்.

சூரியத் தகிப்பும்
சந்திர குளிர்ச்சியும்
ஒன்றிக் கலந்த மனிதப் புதுமை.
பகையினைக் கண்டால் தகிக்கும் சூரியன்
சனத்திடை நின்றால் குளிரும் சந்திரன்

காலப் புதுமையை - இனம் செய்த
தவத்தின் மகிமையை
வாழ்வாங்கு வாழ்கவென
வாழ்த்தித் திளைப்பது மனம் செய்த பேறு.

பரம்பரை இருளை
போக்கிய பகலவன்
பாதை நெடுகிலும் வாழ்த்தும் மலர்கள்.

இனத்தின் உயிராய்
இனத்தின் உணர்வாய்
இனத்தின் உருவாய்
இனத்தின் அகமாய்
இனத்தின் அழகாய்
இனத்தின் மூச்சாய்
இனத்தின் பேச்சாய்
இனத்தின் வளமாய்
இனத்தின் வாழ்வாய்
வாழும் தலைவா! வாழி நீ வாழி!

ஜெயா

# வீர விருட்சங்கள்

ஐம்பத்தாண்டு
இன அழிவுகள்
எமதிருப்பை அந்நியமாக்க,
தடையில்லாச் சுதந்திரம்
அவர்களுக்கு
தமிழர் சொத்தோடு
உயிரையும் சேர்த்தெரிக்க,
அரசியல் திருகு தாளங்களும்,
சலுகைப் பருக்கை களுக்கான
துரோகப் பலவீனங்களும்,
மன மடிப்புக்களுக்குள் அரும்பியிருந்த
தன்மானத் தூண்டிழைகளையும்
துளையிட்டரித்த
ஒடுக்குமுறைக் கொடூரங்களும்,
போதும், போதும்,
எல்லாமே போதுமென வீறுபெற்றுக்
குமுறிச் சிதறும் எரிமலையாய்
அன்று பொங்கு வெஞ்சினத்தின்
நெருப்புமிழ்கின்ற
அனல் நாக்குகள்,
அவன் ஆன்மாவை
வீரமாய் நுரைத்துச் சூடேற்றின.

வல்வைக் கடற்கரையோரத்து
ஈச்ச மரக்கிளைகள்
தம் சடைகளை
ஆட்டியாட்டி ஆமோதிக்க
வீரம் வீர விருட்சங்களாய்

மணல் சரளையின்
கரைகள் எல்லாம்
களமாடிய வாகையாளருக்குப்
புகழ்ப்பாட்டைத் தன்னலையாட்டத்தில்
தவழவிட்ட ஆழியன்னை,
இன்று மரணித்த ஆன்ம வீரங்களைச்
சுமந்து வந்து சோகமாய்
காத்துக்கிடக்கின்றாள் இன்னும்,
தன்னணைப்பில் கிடக்கும் நிலத்தின் விடிவுக்காகத்
தன் அலை உதடு நுரைகளுக்குள்
மூடி மறைந்தபடி..

தான் சேமித்த நினைவுகள் யாவும்
அலை சுமந்த கோபங்களாகி,
அவளது இரைச்சல் மொழியைத் தடைப்படுத்த,
பண்டு தொட்டுச் சொல்லிவந்த அவளது கவிதைகளெல்ல
வெற்றுச் சொற்களாய் உதிர்ந்து முடமாகின,
கடலின் ஆழ் வயிற்றில் மையமிட்டிருந்த
மௌனத்தையும் கிழித்துக்கொண்டு,
தமிழீழத் தேசிய கீதம்,
நீடுவாழும் தமிழ்த் தென்றலில்
மிதந்து உலாவரும் அந்த நாள்
அதோ தெரிகிறது, பார்!
அந்நாளில் ஆழியன்னை
கரைகளுக்குள்
நீட்டி நுரைத்து
கவிதை உரைப்பாள் கட்டாயமாக,
அந்தத் தானைத் தலைவனூடாக.

கந்தையா நவரேந்திரன்



# என்றும் வாழ்க தலைவர்

வல்லை மண் தந்த வற்றாத நதியே
நல்ல ஒளி தந்த நற்றமிழ் வளர்மதியே
வல்ல புலி வீரர்களின் வளமிகு தளபதியே
எல்லா மக்களும் போற்றிடும் எங்கள் குணநிதியே

பார்திகழ பிறந்த பாசமிகு அலையே
கார்த்திகையில் உதித்த கரிகாலன் மலையே
ஊர்திகழ உத்தமரை ஈர்ந்த பெரும் விலையே
ராத்திகமும் இம்மண்ணில் என்றும் எம் நிலையே

எம் மண் மீட்க என்றும் உழைத்தவரே
விண்மீன் போலே எம்மில் நிலைத்தவரே
எம்மினம் மீள எல்லோரையும் அழைத்தவரே
என்றென்றும் வாழ என்றும் வாழ்த்துகிறோம்.

---

போராளி அன்புக்கரசன் [ஜிக்கி]
நவம் அறிவுக்கூடம்



# தலைவரிடமிருந்து கற்போம்

திறலோன்

வேலுப்பிள்ளை பிரபாகரன்!

உலகின் தென்கோடி மூலையில் ஒரு சின்னஞ்சிறு நகரத்தில் பிறந்த இந்த மனிதர். இன்று உலகப் பெருநகரங்களிலும்கூட அறியப்பட்ட ஒரு மனிதராக, உலகப் பேரரசுகளாலும், உலகப் போரியல் வல்லுனர்களாலும், வியப்புடன் நோக்கப்படுகின்ற ஒருவராக, உலக விடுதலை இயக்கங்களுக்கும், விடுதலைக்காக போராடுகின்ற இனங்களுக்கும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியானவராகவும் கொள்ளப்படுபவராக, எதிரிகளால் புரிந்துகொள்ளப்பட முடியாதவராக, வெல்லப்பட முடியாதவராக இருக்கிறார் என்றால்....

அவர் யார்? அவருடைய தனித்துவம்தான் என்ன?

அவர் மனிதர்...

நாட்டையும் மக்களையும் நேசிக்கின்ற...

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்கின்ற சலுகைகளுக்கு மண்டியிடாத, போலிச் சமரசத்துக்கு இடங்கொடுக்காத உண்மை மனிதர்.

'இந்த உண்மை மனிதர்' என்ற அடையாளம்தான் உலகிலுள்ள மற்றத் தலைவர்களை விட அவரை வேறுபடுத்தி உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்க வைக்கிறது.

## தமிழினத்தின் கடந்த காலத்தலைவர்கள்


ஈழத்தமிழினத்தின் நவீனகால அரசியல் வரலாறு 1850களிலிருந்து ஆரம்பித்தது என்று சொல்லலாம். ஆறுமுகநாவலர், பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம், ஹென்றி பேரின்பநாயகம், ஜி.சுந்தரலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்று பெரிய தலைவர்கள் பரம்பரையே தமிழினத்துக்கு இருந்திருக்கிறது. இந்தத் தலைவர் பரம்பரையிடம் இல்லாத சிறப்பு, தனித்துவம் நமது தலைவரிடம் இருப்பதால்தான் அவர் தேசியத்தலைவர் என்று உயரிய இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறார்.

கடந்த கால தலைவர் பரம்பரையை நாங்கள் அடிப்படைவாதத் தலைவர்கள் மிதவாதத் தலைவர்கள் என்று இரண்டாக வகுக்கலாம். ஆறுமுகநாவலர், சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர்.பொன்னம்பலம் அருணாசலம், ஜீ.சுந்தரலிங்கம் ஆகியோரை அடிப்படைவாதத் தலைவர்கள் வரிசைக்குள்ளும். ஹென்றி பேரின்பநாயகம், ஜீ.ஜீ பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றோரை மிதவாதத் தலைமைக்குள்ளும் அடக்கலாம்.

அடிப்படைவாதத் தலைவர்கள் குறுகிய சமய சாதிய வட்டத்துக்குள் நின்று கொண்டு, தமிழ்மக்களது உரிமைப் போரையும் அந்த வட்டத்துக்குள் குறுக்க நினைத்தவர்கள். மிதவாதத் தலைவர்கள் இந்த வட்டத்துக்கு அப்பால் செல்ல முயன்ற போதிலும், மக்களின் உரிமைப் போராட்டத்தை வாக்குச் சீட்டு அரசியலைத்தாண்டி இறுதி இலக்கை நோக்கி வழி நடத்திச் செல்ல முடியாமலோ அல்லது விரும்பாமலோ இருந்தவர்கள்.

அடிப்படையில் இந்த இரண்டு பகுதியினருக்கும் இடையில் ஒரு ஒற்றுமையிருந்தது. இந்த இரண்டு பகுதியினருமே ஆங்கில மொழியில் கல்விகற்று, ஆங்கிலேயர்களுடைய அரசியல் கோட்பாடுகளுக்குள் நின்று கொண்டு அவர்கள் காட்டிய வழியில் சென்று உரிமைகளை வென்றெடுக்கலாம் என்று நம்பியதுதான் அந்த ஒற்றுமையாகும்.

ஆறுமுக நாவலர் கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு எதிராகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பாடுபட்டதாக சொல்லிக்கொண்டாலும், 'அந்தக் காலத்தில் அவர் செய்ததைப் போல வேறு எவரும் சிறப்பாகச் செய்திருக்க முடியாது' என்று பாராட்டப்படும் அளவுக்கு கிறிஸ்த்தவ மறை நூலான பைபிளை தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்து, மதமாற்றம் செய்த மதகுருமாரின் பணியை இலகுவாக்கியதும், சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு, சற்சூத்திரக் கோட்பாட்டை உருவாக்கி குடாநாட்டில் இருந்த சாதிய முரண்பாட்டை இன்னும் இறுக்கமாக்கியதும், தான் உருவாக்கிய கல்விக் கூடங்களில் தமிழ் பிள்ளைகளில் ஒரு பகுதியினருக்கு சாதி அடிப்படையில் கல்வி கற்க அனுமதி மறுத்ததும் அவர் தமிழினத் தலைவர் என்ற அடையாளத்தை இழக்க வைத்து மதப் பெரியார் என்ற வட்டத்துக்குள் அவரைக் குறுக்கிவிட்டது.



எண்பதுகளின் முற்பகுதியில் தேசியத்தலைவர்

அது போலவே இலங்கைத் தேசியம் என்ற கற்பனை தேசியத்தை நம்பிய சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம் போன்றவர்கள் அது தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்திடம் அடிமைப்படுத்துவதற்கு, பிரித்தானியர்கள் விரித்த சதிவலை என்பதை உணரவில்லை. முதலாம் உலக யுத்தகால நெருக்கடிகளுக்கு மத்தியில் சிங்கள மக்களின் உரிமைகளுக்காக பிரித்தானிய அரசிடம் வாதாடுவதற்கு இலண்டன் சென்ற சேர்.பொன் இராமநாதனுக்கு தமிழ்மக்கள் இழந்துவிட்ட இறைமைக்காகவும் உரிமைக்காகவும் வாதாடத் தோன்றவில்லை. இலங்கைத் தேசியத்துக்காக, அதன் ஆட்சி உரிமைக்காக அதிகளவுக்கு குரல் கொடுத்த சேர்.பொன் அருணாசலம் சிங்கள தேசியத்தின் கபடத் தனத்தை பௌத்த சிங்களப் பேரினவாத அச்சுறுத்தலை கவனிக்கத் தவறிவிட்டார்.

பின்னால் வந்த மிதவாதத் தலைவர்கள் தமிழ் தேசியம், தமிழர் தாயகம் பற்றியெல்லாம் முன்னையவர்களை விட வித்தியாசமாகச் சிந்தித்தாலும், இதற்காக அவர்கள் பரந்துபட்ட மக்கள் மத்தியில் வேலை செய்தாலும், பிரித்தானிய பாணி வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சிமுறையின் கீழ் வாக்குச் சீட்டு அரசியலின் மூலம் இவற்றை பாதுகாக்கலாம், இழந்த உரிமைகளை வென்றெடுக்கலாம் என்று நம்பியதும், மக்களை நம்ப வைத்ததும், இவர்கள் செய்த பெரிய முட்டாள்தனமாகும். இந்த வெஸ்ட்மினிஸ்டர் ஆட்சி முறையை வைத்துக் கொண்டே, 'இந்த மக்களுக்காக மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சி' என்ற கவசத்தை வைத்துக்கொண்டே சிறிலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை பறித்த போதும், அரசியல் உரிமைகளைப் பறித்து இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கிய போதும், தமிழ் மக்கள் மீது அரசபயங்கரவாதத்தையும், ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகளையும் தொடர்ச்சியாகத் தூண்டிவிட்ட போதும் இவர்கள் மலைபோல் நம்பிய ஜனநாயகப் பாரம்பரியங்களும், வெஸ்ட்மினிஸ்டர் பாணி ஆட்சி முறையும் தமிழ் மக்களைக் காப்பாற்றாத நிலையில் 'கடவுள் தான் இனி தமிழ்மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேதாந்தம் பேசத்தான் இவர்களால் முடிந்தது.

## பலம்தான் அதிகாரத்தின் அடிப்படை

இன்றைய நவீன உலகின் இருப்பு என்பது பலத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. சனநாயகம், சோசலிசம், கம்யூனிசம், முதலான அனைத்து அரசியல் சித்தாந்தங்களும் வழிமுறைகளும் கூட பலத்தின் அடிப்படையில்தான் நிலைத்திருக்கிறது. தேசங்களினதும், தேசிய இனங்களினதும் விடுதலை என்பதும், எழுச்சி என்பதும் கூட பலம் சார்ந்த விடயமாகத்தான் இருக்கிறது.

'விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்' என்கின்ற முழக்கங்களை முதன்முதலாக உலகுக்கு உரத்துச் சொன்ன, பிரெஞ்சுப் புரட்சி பஸ்தில் சிறையை உடைத்ததால் - அங்கிருந்த ஆயுதக்களஞ்சியம் புரட்சியாளரால் கைப்பற்றப்பட்டதால் வந்த பலத்தின் அடிப்படையில் தான் இறுதி இலக்கை எட்டியது.

சூரியனே அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராட்சியத்துக்கெதிராக அமெரிக்கர்கள் போர்க்கொடி தூக்கி ஐக்கிய அமெரிக்க குடியரசை நிறுவியதால்தான், காலனிய அடிமைச் சிறைக்குள் அடைபட்டுக் கிடந்த பல நாடுகளுக்கு சுதந்திரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை

பிறந்தது.

கடந்த காலத்தில் தங்களுடைய பலத்தை இழந்ததால்தான் ஆர்மேனியர்களும் குர்தியர்களும், ஸ்லாவியர்களும் ஒரு தேசமாக உருப்பெறாமல் பல பெருந்தேசிய அரசுகளின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிச் சிதறுண்டு போனார்கள்.

ஈழத்தமிழ் மக்களும் கடந்தகாலத்தில் பல மற்றவர்களாக நின்று உரிமைகளை யாசித்துக் கேட்டதால்தான் அகதிகளாக அடித்து விரட்டப்பட்டார்கள். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து பலவீனமாயிருந்த தமிழர் தரப்பை பலமுள்ள சக்தியாக மாற்றியவர் நமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.

18.08.1993ம் ஆண்டு தமிழீழ சட்டக்கல்லூரியிலே ஆற்றிய உரையிலே இதை அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது. வலுமிக்க வல்லரசுகள் தாம் விரும்பியவாறு சர்வதேச உறவுகளையும், சர்வதேச சட்டத்தையும் ஒழுங்கையும் உலக நாடுகள் மீது திணித்து வருகின்றன. இந்த நாடுகள் தமது நலன்களை பேணும் வகையில் ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்க முயல்கின்றன. நாமும் நமக்கென்று ஒரு பலமான அரசைச் கட்டி எழுப்ப வேண்டும். நமது நாடு பலம் மிக்கதாக இருந்தால்தான் அந்நிய ஆதிக்கங்களின் ஊடுருவல்களையும், தலையீடுகளையும் எதிர்கொண்டு முறியடித்து எமது தனித்துவத்தைப் பேண முடியும்".

அதேபோல 27.11.1992 மாவீரர் தின உரையிலே, "இந்த உலகில் அநீதியும் அடிமைத் தனமும் இருக்கும் வரை சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருந்துகொண்டுதான் இருக்கும். இது ஒரு வரலாற்று நியதி. ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பகுதியினராகிய நாமும் சுதந்திரத்துக்காகப் போராடிவருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல் இன்று உலக அரங்கில் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களை விடசாராம்சத்தில் வித்தியாசமானது. தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது" என்றும் நமது தேசியத்தலைவர் தெரிவிக்கின்றார்.

அதாவது 'அடிவாங்குபவன் திருப்பி அடிக்க முற்பட்டால்தான் அடிப்பவன் நிறுத்துவான்' என்ற யதார்த்தமான உண்மையை 'அடிவாங்குவது தமிழினத்தின் தலைவிதி' என்று சொல்லி அழுதுகொண்டும் தொழுதுகொண்டும் அடிமைகளாய் வாழ்ந்த தமிழினத்துக்கு உணர்த்தியவர் அவர். இதனாலே தான் அவர் ஏற்கனவே இருந்த தமிழ்த் தலைவர்கள் எல்லோரிலும் இருந்து வேறுபட்டு தனித்துவமான தலைவராக ஈழத்தமிழ் மக்களின் தேசியத்தலைவராக உயர்ந்து நிற்கிறார். உலகெங்கும் பேசப்படுகிறார்.

## புரட்சியை இறக்குமதி செய்யாத தலைவர்

கடந்த காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறோம், போராடுகின்றோம், புரட்சி செய்கின்றோம் என்று புறப்பட்ட எல்லோருமே, 'சுயம்' என்ற ஒன்று இல்லாதவர்களாக, இரவல் அடையாளத்தில் வாழ்வதையிட்டு திருப்திப்படுபவர்களாக இருந்தார்கள். தத்துவம், சித்தாந்தம், சட்டம், அரசியல், நிர்வாகம், போராட்டம் எல்லாவற்றிலுமே மேற்குலகை அப்படியே பார்த்தொழுகும்(கொப்பியடிக்கும்) தன்மைதான் அவர்களிடம் மேலோங்கி இருந்தது. பிரித்தானிய வாக்குச் சீட்டு அரசியல் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் எங்களுடைய அரசியலும் இருக்க வேண்டும். பிரித்தானிய நீதி நிர்வாகம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் எங்களுடைய நீதி நிர்வாகமும் இருக்க வேண்டும். பிரித்தானிய அதிகாரிகள் கழுத்தில் குளிர் பிடிக்காமல் 'ரை' கட்டினால் வெய்யில் கொழுத்தும் நாட்டில் வாழும் நாங்களும் 'ரை' கட்ட வேண்டும்.

புரட்சி என்றால் ரஷ்யாவில் லெனினும், சீனாவில் மாவோவும், கியூபாவில் சேகுவரா மற்றும் பிடல் காஸ்ரோவும் செய்ததைப் போலத்தான் புரட்சி செய்யவேண்டும். இப்படித்தான் இலண்டனிலும் மாஸ்கோவிலும் பீக்கிங்கிலும் மழைபெய்தால் நமது தாயகத்தில் குடை பிடிக்கின்ற போக்கு நிலவியது. ஆனால் இதையெல்லாம் தலைகீழாக மாற்றிவர் நமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.

அவர் யாரையும் எந்த நாட்டு 'மொடலை'யும் 'கொப்பி'யடிக்கவில்லை. அவர் எங்களுடைய மக்களின் விடுதலைக்காக, எங்களுடைய வாழ்வியல் சூழலை வைத்து, உலக மக்களின் அனுபவங்களை எங்களது வாழ்வியல் சூழலோடு பொருத்தி, எங்களுக்கென்று தனித்துமான அடையாளத்தை உருவாக்கினார்.

உதாரணமாக இன்று தமிழ் மக்களுக்கென்று தனித்துவமான காவல்துறை இருக்கிறது. அந்தத் தமிழீழக்காவல் துறையின் பொறுப்பாளர் நடேசன் அவர்கள் தலைவரைப் பற்றிச் சொல்லும் போது "நாங்கள் இந்தத் தமிழீழக்காவல் துறையை உருவாக்கிய போது, அவர்களுக்கான சீருடைபற்றிச் சிந்தித்தோம்". அப்போது தலைவர், சிறீலங்காவிலும் இந்தியாவிலும் இருக்கிற காக்கி நிறச் சீருடை நமது காவல் துறைக்கு வேண்டாம். காக்கி என்பது அடக்குமுறைச் சின்னமாக மக்களின் மனதில் பதிந்துவிட்டது. தமிழீழக்காவல்துறை மக்களுக்கான காவல் துறையாக இருக்க வேண்டும். மக்களின் மனதில் இதுவும் அடக்குமுறையைச் செய்கின்ற காவல்துறை என்ற



எண்ணமே வரக்கூடாது என்று கூறினார். அதன்படி இன்று கரு நீல வெளிர் நீலச் சீருடையில் எமது காவல்துறை மக்களுக்கான காவல்துறையாக சிறப்பான பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இந்தக்காவற்துறையின் செயற்பாடுகள் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது "தமிழீழக் காவற்துறையினர் நல்லொழுக்கம், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சீரிய பண்புடையவர்களாக இருப்பார்கள். பொது மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் சமூகநீதிக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உழைக்கும் மக்கள் தொண்டர்

களாகவும் கடமையாற்றுவார்கள். எமது பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் மக்களோடு அன்புடனும் பண்புடனும் பழகுவார்கள். சமூக விரோத குற்றச் செயல்கள் எவற்றுடனும் சம்பந்தப்படா தவர்களாகவும் தேசப்பற்று மிகுந்தவர்களாகவும் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள். தமிழீழக் காவற்துறையைப் பொறுத்தவரை குற்றங்கள் நடந்து முடிந்தபின் குற்றவாளியைத் தேடிப்பிடித்து கூட்டில் நிறுத்துவது அதன் நோக்கமல்ல. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்துக் குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்புவதே அதன் இலட்சியமாகும்" என்றார்.

இதே போலத்தான் தமிழ் மக்களுக்கென்று இன்று தனியான நீதித் துறை இருக்கிறது. பல இடங்களிலே தமிழீழ நீதி மன்றங்கள் இருக்கின்றன. இந்த நீதித்துறைக்கு பொறுப்பாக இருக்கும் பரா அவர்கள், "நாங்கள் இந்த நீதி மன்றங்களை உருவாக்கிய போது தலைவர் சொன்னார், நீதி மன்றங்கள் மக்களுக்கான நீதி மன்றங்களாக இருக்கவேண்டும். இங்கே போனால் உரிய நீதி கிடைக்கும் என்ற எண்ணம் மக்களுக்கு வரவேண்டும்" என்று. பொதுவாக நீதி மன்றங்கள் என் றாலே காலதாமதமும் பணவிரயமும் இருக்கும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உரிய நீதியும் கிடைப்பதில்லை என்ற எண்ணமே மக்கள் மனதிலே இருந்தது. இன்றைக்கு தமிழீழ நீதி மன்றங்கள் அந்த எண்ணத்தை மாற்றியிருக்கின்றன. எல்லைப் பகுதிகளில் இருக்கிற சிங்கள மக்கள் கூட தங்கள் பிணக்குகளை எங்களிடம் எடுத்துவரும் அளவுக்கு எங்களுடைய நீதி மன்றங்களின் செயற்பாடுகள் சிறப்பான முறையிலே அமைந்திருக்கிறது" என்றும் கூறினார்.

உண்மையிலேயே இன்றைக்கு, தனித்துவமான தேசியக் கொடி, தனியான படையணிகள், தனித்துவமான சீருடை, தனித்துவமான மரியாதை ஒழுங்கு(சலூட்) தனியான காவல் துறை, தனியான நீதி நிர்வாகக்கட்டமைப்புகள், தனியான ஆயப்பகுதி, தனியான தமிழீழப் போக்குவரத் துத் துறை என்று அடுக்கிக் கொண்டு போகும் அளவுக்கு எங்கும் எதிலும் எங்களது தனித்து வத்தை நமது தேசியத் தலைவர் நிறுவியிருக்கிறார்.

அகதிகள் என்றும் அரசியல் அநாதைகள் என்றும், அடையாளம் இழந்திருந்த தமிழினத்துக்கு இன்று அவர் தனித்துவமான அடையாளத்தையும், ஒரு அரசியல் முகவரியையும் பெற்றுத் தந்திருக்கிறார்.

தமிழர்கள் தனித்துவமானவர்கள். அவர்கள் அழுதுகொண்டும், தொழுது கொண்டும் வாழும் கோழைகள் அல்ல. எங்கும் எதிலும் சென்று எதையும் சாதிக்கவல்ல வீரர்கள் என்பதை அவர்



தமிழகக் காவற்துறையினர் பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திரும்பித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, தலைவர் அவர்கள் நீர், ஆகாரம் இன்றி சாகும் வரையிலான உண்ணாவிரதமிருக்கிறார்.

உலகிற்கு உணர்த்தியிருக்கிறார். இதுவரை மற்றவர்களை பார்த்தொழுகிய(கொப்பியடித்த) எம்மை இன்று எங்களை மற்றவர்கள் பார்த்தொழுகும் நிலைக்கு நமது தேசியத்தலைவர் உயர்த்தியிருக்கிறார்.

## கடலை வென்று தரையை வென்றவர்

"கடலை வெல்பவர்களால் தான் தரையை வெல்லமுடியும்" என்று சொன்னவர் மாவீரன் நெப்போலியன் போனபாட். கடந்த காலத்தில் இந்தக் கடல்பலத்தை வைத்துக் கொண்டுதான் ஐரோப்பிய அரசுகள் தங்களது சாம்ராட்சியங் களை விரிவுபடுத்தின. தமிழரிடம் கடல் பலம் இல்லாது இருந்ததால் தான் 1620ம் ஆண்டு 8000 கிலோமீட்டர்களுக்கு அப்பாலிருந்து வந்த போர்த்துக்கேயர்களால் யாழ்ப்பாண அரசை வீழ்த்த முடிந்தது.

முல்லைத்தீவில் ஆங்கிலேயப் படைகளை களை வெட்டிச் சாய்த்து அவர்களது பீரங்கியை கைப்பற்றுமளவுக்கு தரைப் பலத்துடன் இருந்த பண்டார வன்னியனிடம் கடல்பலம் மட்டும் இருந்திருந்தால் வரலாறு வேறுவிதமாக மாறி யிருக்கும்.

எங்களுடைய கடற்பரப்பில் சிறீலங்கா கடற் கடை ஆதிக்கம் செலுத்தியதால் தமிழீழத்தின் கரையோரக் கிராமங்களின் இருப்பு அச்சுறுத்த லுக்கு உள்ளாகியது. அந்த பகுதி மக்களின் வாழ்வு அழிந்தது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா படையினரின் இருப்புக்கும் இந்த கட லாதிக்கமும் கடல்வழி விநியோகமும்தான் முக் கியமானதாக இருந்தது.

கடலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந் தால்தான் தரையை கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும் என்பதை அனுபவரீதியாக உணர்ந்த நம் தலைவர் 1984ம் ஆண்டு கடற்புலிகளை உருவாக்கினார்.

இன்று அந்தக் கடற்புலிகளை வலிமை மிக்க படையணியாக தமிழினத்தின் மிகப் பெரும் பலமாக வளர்ச்சி பெற்று நிற்கிறது. உலகப் பெரும் கடற்படைகளுக்கு நிகராக, இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் பிரான் சின் நோர்மண்டிப் பகுதியில் நேசநாட்டுப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கத் துக்கு நிகராக, ஆனையிறவுச் சமருக்காக அன்று குடாரப்புப் பகுதியில் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தரையிறக்கம் உலகவல்லரசுகளை வியக்கவைத்தது.

இன்று உலகத்திலேயே பலம் பொருந்திய கடற்படை ஒன்றை வைத்திருக்கும் ஒரே ஒரு விடுதலை இயக்கம் என்ற சாதனையும் எமக்குக் கிடைத்திருக்கிறது.

## பெண்விடுதலையும் மண் விடுதலையும்

மக்கள் தொகையில் சரி அரைவாசிப் பங்கை வகிக்கும் பெண்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கி வைத்திருக்கின்ற சமூ கம் முன்னேறவும் முடியாது, விடுதலையடை யவும் முடியாது. அதாவது பெண் விடுதலை இல்லை என்றால் மண் விடுதலை இல்லை

என்ற வரலாற்று உண்மையை உணர்ந்து கொண்ட நமது தலைவர், மகளிர் படைய ணியை உருவாக்கி, கிடுகு வேலிகளுக்குள்ளும் ஆளுயர மதில்களுக்குள்ளும் முடக்கி வைக் கப்பட்டிருந்த தமிழீழப் பெண்களை அவற்றுக்கு வெளியே வரச்செய்து அவர்களது பலத்தை வெளிக் கொணர்ந்து சாதனை படைத்திருக் கிறார்.

இந்த மகளிர் படையணி தொடர்பாக 08.03.1991 அன்று அனைத்தலக மகளிர் தினத்தை முன்னிட்டு எமது தேசியத்தலைவர் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப் பிடுகிறார். "எமது சமூகத்தின் சனத்தொகை யில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட் டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெ டுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப் படுத்தியது. பெண்களை அரசியல் மயப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழப் பெண்கள் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தி இருக் கிறோம். தமிழர் வரலாற்றிலேயே நடை பெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றி ருக்கிறது. காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப் போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது. வீரத்திலும் தியாகத்தி லும் விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ் வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர். ஒரு புது மைப் பெண்ணை, புரட்சிப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது. தமிழீ ழத்தில் இந்தப் பெண் புரட்சி மேலும் தொடர வேண்டும்".

இன்று பெண்ணியம் பெண்விடுதலை பற்றி யெல்லாம் அதிகளவுக்குப் பேசப்படுகின்ற, விவாதங்கள் நடாத்தப்படுகின்ற நாடுகளைவிட, சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட் கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியிலேதான், பெண் கள் சுய கௌரவத்துடன் வாழவும், சுதந்திரமாக நடமாடவும் முடிகிறது.

வலிமைமிக்க உலகநாடுகளின் படையணி களிலே கூட கனரக ஆயுதங்களை இயக்குவதற் கும், போர் முனைகளை தனியாக எதிர் கொள் வதற்கும் பெண்களுக்கு உரிய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படாத நிலையில் இன்றைக்கு விடுத லைப்புலிகளின் மகளிர் படையணியினர், ஆட் லறி, மோட்டார்ப் படைப் பிரிவுகளை வழி நடத்து பவர்களாகவும், அனைத்துப் படைத்துறைச் செ யற்பாடுகளிலும் மற்றும் அரசியலில் நிர்வா கத்துறைச் செயற்பாடுகளிலும் ஆண்களுக்கு நிகரான ஆளுமையுள்ளவர்களாக, வளர்ந்து நின்று சாதனை மேல் சாதனைகள் படைப்ப தைக் கண்டு உலகம் வியந்து நிற்கிறது.



சுதுமலையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் தலைவர் பேசுகின்றார்



உண்ணாவிரத மேடையில் தியாகி திலீபனுடன் தேசியத் தலைவர்

## உயிராயுதங்கள்

உலகில் எப்பொழுதுமே இராணுவச் சமநிலை என்பது, உயிருள்ள மனிதர்களால், உயி ரற்ற உலோகப் பொருட்களாலான ஆயுதங்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படும் போர்த் தந்திரோபாயங்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட்டு வந்து. இன்றும் தீர்மானிக் கப்பட்டு வருகிறது. உயிரற்ற ஆயுதங்களின் சூட்டு வலு, அல்லது வெடிப்புச் சக்தியை போரிடும்

இரண்டு தரப்பாரும் தங்களுக்குக் கிடைத்த உளவுத் தகவல்களை வைத்துக் கொண்டு தங்களது ஆயுத தளபாட பலத்தை அதிகரிப்பதுதான் உலக நடைமுறையாக இருக்கிறது.

ஆனால் இங்கே உயிருள்ள மனிதன் உயிரற்ற ஆயுதத்தின் இடத்தை எடுத்து உயிராயுதமாக மாறும் போது எதிராளிகளுக்கு அந்த உயிராயுத்தின் வலுவை பலத்தை உறுதியை மதிப்பீடு செய்ய முடியாமல் போய் விடுகிறது.

அத்துடன் எதிரியின் இலக்கை அழிப்பதற்கு நூற்றுக்கணக்கான போராளிகள் செல்ல வேண்டிய வேலையை ஓரிரு போராளிகள் உயிராயுதமாகச் சென்று செய்வதன் மூலம் குறைந்த உயிரிழப்புடன் மிகப் பெரிய வெற்றியும் கிடைக்கிறது.

இது ஆதிக்க சக்திகளுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. ஒரு விடுதலைப் போராட்டத்தில் போருக்கு எதிரான போராயுதமாக உயிராயுதங்களை பயன் படுத்தவதற்கும், குறுகிய சிந்தனைப் போக்குடைய அடிப்படைவாதக் குழுக்கள் தங்களுடைய நோக்கங்களுக்கு உயிராயுதங்களைப் பயன்படுத்தவதற்குமுள்ள வேறுபாட்டை வேண்டுமென்றே மறைத்து, இந்த உயிராயுதங்களின் மகத்தான தியாகத்தை இந்த சக்திகள் கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.



இந்திய - தமிழீழப் போர்க்காலத்தில் தலைவர்

எமது விடுதலைப் போரில் உயிராயுதமாக இருக்கும் மாபெரும் சக்திகளான கரும்புலிகளை உருவாக்கியது பற்றி 05.07.1993 ஆம் ஆண்டு கரும்புலிகள் தினத்திலே ஆற்றிய உரையிலே பின்வருமாறு தலைவர் சொல்கிறார். "நாம் அழிவை எதிர் கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ, கைகொடுக்கவே உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கின்றோம். எமது சொந்தக்காலில் நிற்கின்றோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான ஆபத்தான சூழ்நிலையில் நிற்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்து போவதை தவிர்க்க முடியாது".

"பலவீனமான எமது மக்களின் பலம் வாய்ந்த ஆயுதமாகவே நான் கரும்புலிகளை உரு வாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத் தெறியும் நெருப்பு மனிதர்கள்".

"கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மனித நேயம் படைத்தவர்கள்".

"கரும்புலி என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகின்றோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத பூடகமான இரகசியத் தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே கரும்புலி என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும். ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது. இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. இது கருப்புலிகளின் சகாப்தம்".

"கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பம் ஆகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப் பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது".

## கெரில்லாப் போரிலிருந்து மரபுவழிச் சமருக்கு

நமது தேசியத் தலைவர் ஆரம்பத்தில் தனது நண்பர்களுடன் சேர்ந்து, புதிய புலிகள் இயக்கத்தை ஆரம்பித்த போது, "ஒரு துவக்கையும் இரண்டு மூன்று குண்டுகளையும் வைத்துக் கொண்டு தமிழீழத்தை பிடிக்கப்போகினமாம்!" என்று பலர் ஏளனமாகப் பார்த்தார்கள்.

கெரில்லா தாக்குதல்களை ஆரம்பித்த போது குளவிக் கூட்டுக்கு கல்லெறியிற சிறுபிள்ளைத்தனம், மக்கள் போராட்டத்துக்கு எதிரானது என்று பலர் நையாண்டி செய்தார்கள். இது பற்றித் தேசியத் தலைவர் குறிப்பிடுகையில் "கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப்போர் முறையை பரந்துபட்ட போராக விரிவாக்குவதே எனது நோக்கமாகும்" என்று கூறினார்.

இதிலே முக்கியம் என்னவென்றால் உலகளவில் கெரில்லா போர் முறையை கைக்கொண்ட பல விடுதலை இயக்கங்கள் (குறிப்பாக தென்னமெரிக்க நாடுகளில் உள்ள பல விடுதலை இயக்கங்கள்) அதை மக்கள் மயப்படுத்தி பரந்துபட்ட மக்களை அதில் பங்கேற்க வைக்குமளவுக்கு அதன் செயல் தளத்தை விரிவு படுத்தாமல் 'கெரில்லா போர் குழுக்கள்' என்ற வரையறைக்குள் மட்டுப்பட்டு நின்றுவிட்டதன் காரணமாக ஐம்பது அறுபது வருடங்களாகியும், அவர்களால் அவர்களது இலக்கையும் அடைய முடியவில்லை.

கெரில்லா போர்க் குழுக்கள் என்ற நிலையில் இருந்து வளர்ச்சி பெறவும் முடியவில்லை. ஆனால் நமது தேசியத் தலைவர் நமது மண்ணணுக்கு இந்தக் கெரில்லா போர் முறையை எந்த நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யாமல், இந்தப்போர் முறையில் உலக விடுதலை இயக்கங்கள் பெற்ற அனுபவங்களை மட்டும் எடுத்துக் கொண்டு எமது மண்ணுக்குரிய போரியல் துறையாக வளர்த்தெடுத்ததுதான் இன்று எமது படையணிகள் கெரில்லா போர் முறையிலிருந்து மரபுவழி படையணியாக வளர்ச்சியடைந்து மாபெரும் வெற்றிகளைக் குவித்ததற்கு அடிப்படை காரணமாகும். தமிழீழ விடுதலைப் போரில் தேசியத்தலைவரது கெரில்லா போர் உத்தியை மூன்று பிரிவாக வகுத்திருந்தார்.

(1) சிறீலங்கா காவல்துறையின் உளவுப் படையையும் துரோகிகளையும் அழித்தல்.

(2) தமிழீழத்தில் உள்ள சிறீலங்கா காவல் துறையின் நிர்வாகக் கட்டமைப்பை நிலை குலையச் செய்தல்.

(3) சிறீலங்கா இராணுவ ரோந்து அணிகள் மற்றும் படை முகாம்கள் மீது மறைந்திருந்தும் நேரிடையாகவும் தாக்குதல் நடத்தி அவற்றை அழித்து, தளப்பிரதேசங்களை உருவாக்கி அவ்விடங்களில் தமிழீழ நிர்வாகக்கட்டமைப்பை நிறுவுதல்.

புதிய தமிழ்ப் புலிகளின் முதலாவது இராணுவ நடவடிக்கையாக, 1975 ஆடி 27 அன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக் கருகில் வைத்து அப்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளரும், யாழ்ப்பாண மேயருமான தமிழினத் துரோகி அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப் பட்டார். இவ்வெற்றிகரமான முதலாவது இராணுவ நடவடிக்கையைத் தானே வகுத்து அதற்குத் தலைமை தாங்கிச்சென்று செய்து முடித்த பெருமை தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும்.

தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்திற் கான நிதி ஆதாரத்தைப் பெற்றுக்கொள்வது நியாயமானது என உணர்ந்து கொண்ட தேசியத்தலைவர். 1976 பங்குனி 5ம் நாள் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான புத்தூர் மக்கள் வங்கிக் குள் பட்டப் பகலில் தன் தோழர்களுடன் புகுந்து துப்பாக்கி முனையில் ரொக்கமாக 5 இலட்சம் ரூபாவையும் நகையாக 2 இலட்சம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு சென்றார். புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம், 1976 வைகாசி 5ம் நாள் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற புதிய பெயரை சூட்டிக் கொண்டது. புதிய தமிழ்ப் புலிகள் இயக் கத்தில் இருந்த மிகக்கடுமையான சில கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டு, முழுத் தமிழீழ மக் களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடிய முறையில், தலைவர் பிரபா கரன் அவர்களால் சட்ட திட்டங்கள் மாற்றப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நடை முறைக்கு கொண்டு வரப்பட்டது.

அத்துடன் இவ்வமைப்பு தேசியத் தலைவரால் நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டுத் தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்துடன், தமிழீழ மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாக விரிவடைந்தது.

1976 ஆடி 2ம் நாள் உரும்பிராயைச் சேர்ந்த நடராசா என்ற பெற்றோல் நிலைய முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். 1977 மாசி 14ம் நாள் காவற்துறை கான்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1977 வைகாசித் திங்கள் 18ம் நாள் சண்முகநாதன் என்ற பெயரைக் கொண்ட 2 காவற்துறையினர் இணுவிலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1977 ஆவணியில் ஐ.தே.கட்சி அரசால் தமிழின அழிப்பு' ஒன்று இலங்கைத் தீவு முழுவதிலும் நடத்தி முடிக்கப்பட்டது. 1978 தை 27ம் நாள் பொத்துவில் தொகுதியின் தமிழர் கூட்டணி வேட்பாளர் கனகரத்தினம் கொழும்பில் வைத்துச் சுடப்பட்டார்.

1978 சித்திரை 7ம் நாள், கொழும்பு 4ம் மாடி சித்திரவதையில் பெயர் பெற்ற இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 4 சிறீலங்கா உளவுப் படையைச் சேர்ந்த காவற் துறையினர் முருங்கன் மடு வீதிக்கு உட்புறமான காட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



இந்திய - தமிழீழ போர்க்காலத்தில் தலைவர்

1978 சித்திரை 25ம் நாள், முதன்முறையாக புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வரை எல்லாமாகச் சேர்ந்து 11 இராணுவ நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கமாக உரிமை கோரி அறிக்கை விட்டனர்.

1981 ஐப்பசி 15ம் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன்துறை வீதியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதுவே தமிழீழப் போராட்ட வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான முதலாவது ஆயுத நடவடிக்கையாகும்.

1982 ஆடி 2ம் நாள் நெல்லியடியில் காவற்துறைப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டு 3 பேர் படுகாயப்படுத்தப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

1982 புரட்டாதி 29ம் நாள் இனவெறியன் ஜே.ஆர். ஜெயவர்த்தனா சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பொன்னாலைப் பாலத்தில் வந்து கொண்டிருந்த கடற்படை வாகனங்களை அழிப்பதற்கு கண்ணி வெடிகளை விதைத்து வெடிக்க வைத்தனர்.

1982 ஐப்பசி 27ம் நாள் சாவகச்சேரி காவற்துறை நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி 3 பேரைச் சுட்டுக்கொன்று, 3 பேரைக் காயப்படுத்தி, பெரும்தொகையான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றார்கள். இத்தாக்குதலை அடுத்து வட மாகாணத்தின் பல காவற்துறை நிலையங்கள் மூடப்பட்டன. வடக்கில் காவற்துறை நிர்வாகம் நிலைகுலைந்து முடங்கிப் போனது.

1983 மாசி 18ம் நாள் பருத்தித்துறை காவற்துறை நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1983 பங்குனி 4ம் நாள் பரந்தனருகே உமையாள்புரத்தில் இராணுவத் தொடர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து நேரடிச் சமரில் ஒரு மணித்தியாலயமாக ஈடுபட்டனர். இத்தாக்குதலில் இராணுவக் கவச வண்டி ஒன்று சேதமாக்கப்பட்டதுடன் இராணுவத்தினர் ஐவரும் படுகாயம் அடைந்தனர்.

1983 சித்திரை 2ம் நாள் வடமாகாணத்தில் பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக யாழ். அரசாங்க அதிபர் பாதுகாப்பு மாநாடு ஒன்றைக் கச்சேரியில் நடத்துவதற்குத் திட்டமிட்டு இருந்தபோது மாநாடு தொடங்குவதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் கச்சேரிச் செயலகக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறிந்து தமது எதிர்ப்பை சிறீலங்கா அரசிற்கு உணர்த்தினர்.



தமிழீழ நீதியாளர்கள், சட்டவாளர்களுடன் தலைவர்

1983 வைகாசி 18ம் நாள் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதென அரசு அறிவிப்புச் செய்தது. இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். சிறீலங்கா அரசின் தேர்தல் மாயையிலிருந்து விடுபடுமாறும் சிறீலங்கா அரசின் சகல நிர்வாகங்களையும் நிராகரிக்குமாறும் வெகுசன ஆயுதப் போராட்டத்திற்கு அணி திரளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

1983 சித்திரை 29ம் நாள் சிறீலங்கா அரசின் இனவெறி அரசை ஆதரிக்கும் சகல தமிழ்த் துரோகிகளுக்கும் எச்சரிக்கையாக மூன்று ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கையின் விளைவாக ஐ.தே.கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து விலகியதுடன் தமிழர்கள் பலர் ஐ.தே.கட்சியிலிருந்தும் நீங்கிக்கொண்டனர்.

1983 வைகாசி 18ம் நாள் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு முடிவடைவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாக நல்லூர் கந்தர் மடத்தில் தேர்தல் சாவடிக்குக் காவலில் நின்ற இராணுவ, காவற்துறைப்படைகளின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட காவற்துறையினர் இருவரும், இராணுவத்தினர் இருவரும் படுகாயம் அடைந்தனர். இராணுவத்திடமிருந்து தானியங்கு சுரிகுழல் துப்பாக்கி ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

1983 ஆடி 23ம் நாள் நள்ளிரவில் திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் படைப்பிரிவு இராணுவத்திற் கெதிரான திடீர்த் தாக்குதலுக்காக காத்து நின்றது. 14 விடுதலைப் புலிகளைக் கொண்ட இப்பிரிவில் தலைவர் பிரபாகரனும் ஒரு போராளியாக நின்றுகொண்டு அத்தாக்குதலின் தலைமைப் பொறுப்பை லெப்டினன்ட் செல்லக்கிளியிடம் கொடுத்து இருந்தார். குறிப்பிட்ட இடத்துக்கு இராணுவத்தொடர் வந்ததும் கண்ணிவெடியை வெடிக்க வைத்து தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவத்தினர் 13 பேர் பலியாகினர். பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு நகர்ப்புற கெரில்லா தாக்குதல்களாக ஆரம்பித்த இந்தப் போர் முறை நமது தேசியத்தலைவரது திட்டமிடலாலும் வழி நடத்தலாலும், படிப்படியாக மக்கள் போராட்டமாகவும், மரபுவழிச் சமராகவும் மாறியது. படையினர் முகாங்களுக்குள் முடக்கப்பட காவல் நிலையங்கள் அழித்தொழிக்கப்பட குடாநாடு தளப்பிரதேசமாக மாறியது.

## இந்தியத் தலையீடும் தலைவலியும்

1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவுடனான உறவு பாதிப்புக்குள்ளாகியது. அப்போது இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தியுடன் ஒட்டும் உறவும் இல்லாத போக்கை ஜே.ஆர் கடைப்பிடிக்கத் தலைப்பட்டார். இதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் எதிரியான சிறீமாவோ பண்டாரநாயக்காவுடனான இந்திராகாந்தியின் நெருக்கமும் ஒரு காரணமாக அமைந்தது.

இலங்கையில் இந்தியப் பொருட்களுக்கு இருந்த சந்தை வாய்ப்பை ஜே.ஆர் ஜப்பானுக்கு வழங்கினார். அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளுடன் ஜே.ஆர் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கம் இவையெல்லாம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியை ஆத்திரமடைய வைத்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தகுந்த பாடம் படிப்பிப்பதற்கான சந்தர்ப்பத்திற்கு திருமதி இந்திரா காந்தியின் கொள்கை வகுப்பாளர்கள் காத்திருந்தனர்.

இதுவரை காலமும் இலங்கைத் தீவை அதிரவைத்த சம்பவங்களையும் அதன் வரலாற்றுப் போக்கினையும் குறிப்பாக தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அரசியல், இராணுவ நகர்வுகளையும் மிக உன்னிப்பாக அவதானித்து வந்த இந்திய கொள்கை வகுப்பாளர்கள், அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் உத்தரவின் பேரில் 1983 ஆடிக்கலவரத்தை ஏதுவாகக் கொண்டு இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் தலையிட முடிவு செய்தனர்.

தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதமும் பயிற்

சியும் அளித்து ஆயுத எதிர்ப்பியக்கத்தைத் தீவிரமாக்கி, சிங்கள அரசுக்கு நெருக்குதல் கொடுத்து, தனது பிராந்திய நலன்களை சாதித்துக் கொள்ள இந்தியா தனது வெளிநாட்டு விடயங்களுக்கான உளவுப்பிரிவான றோ மூலம் திட்டமிட்டது. அதே நேரம் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைப் போன்ற இலட்சிய உறுதியுள்ள ஒரு தலைவரை வளர்த்துவிடுவதன் மூலம் இலங்கையில் தமிழர்களுக்கான ஒரு தனிநாடு அமைந்துவிடக் கூடாது என்பதிலும் இந்தியா கவனமாக இருந்தது. எனவே அப்போதிருந்த தமிழ் போராளிக் குழுக்களுக்கிடையே மோதல் போக்கை வளர்த்து எல்லோரும் ஒன்றிணைய முடியாதவாறு தடுப்பதற்காக விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தியும் ஏனைய இயக்கங்களை ஒற்றுமைப் படுத்தி வைத்திருப்பதைப் போல போக்குக் காட்டி பிளவு படுத்தியும் பல நாடகங்களை றோ அரங்கேற்றியது.

சொந்தக் காலில் நிற்கத் திராணியற்ற, (அப்போதிருந்த) மாற்றியக்கத் தலைவர்கள் "ஆகா இந்தியா வந்து தமிழீழத்தை அடித்துப் பிடித்து கையில் தரப் போகிறது" என்று கனவு கண்டார்கள். மக்களையும் கனவு காண வைத்தார்கள்.

நமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் இதை நம்பவில்லை. பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷை பிரித்துக் கொடுத்ததற்கு இந்தியாவுக்கு இருந்த தேவை, தமிழீழத்தை பிரித்துக்கொடுப்பதற்கு இருக்கவில்லை என்பதும், இந்தியாவின் நோக்கம் சிறீலங்கா அரசை பணிய வைப்பதற்கு தமிழ் போராளிகளை பயன்படுத்துவதுதான் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் அவர் இந்தியாவை வெறுக்கவில்லை. இந்தியத் தலைவர்களை அவர் மதித்தார். இந்தியா தமிழ் மக்களின் நேச சக்தி என்பதுதான் அன்றும் சரி இன்றும் சரி அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

தலைவரைப் பொறுத்த வரை இந்தியாவோ அமெரிக்காவோ ஜப்பானோ நோர்வேயோ எந்த நாடானாலும் ஒரு தேசம் என்ற வகையில் அதை அவர் மதிக்கிறார். அந்த நாட்டினதும் மக்களினதும் அரசியல் விழுமியங்கள் பாரம்பரியங்கள் அனைத்துக்கும் அவர் மரியாதை செலுத்துகிறார். ஆனால் எந்த ஒரு நாடும் தங்கள் அரசியல் பொருளாதார நலன்களுக்காக தமிழீழ மக்களையோ தன்னையோ பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதை அவர் விரும்புவதில்லை. அவர் யாருக்கும் விலை போக மாட்டார். இதுதான் அவரது தனித்துவம்.

இந்தியா பற்றிய தனது நிலைப்பாட்டை தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார். "எமக்கு இந்தியாவின் உதவியும் நல்லெண்ணமும் அவசியம். அதே வேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு"

1984 ஐப்பசி 31, இல் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி தன் மெய்ப்பாது காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட, அவரது மூத்த மகன் ராஜீவ்காந்தி இந்தியப் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அவர் பிரதமரான சிறிது காலத்தில் இந்திரா காந்தியின் கொள்கை வகுப்பாளர்களாக இருந்த தமிழகத்தைச் சேர்ந்த ஜி. பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன் போன்ற தமிழகக் கொள்கை வகுப்பாளர்கள் தமது பதவிகளிலிருந்து விலகிச் சென்றுவிட, பின்பு வந்த கொள்கை வகுப்பாளர்களால் இலங்கை இனப் பிரச்சினையின் சரியான தாற்பரியத்தை ராஜீவ் காந்திக்கு எடுத்துச் சொல்ல முடியவில்லை. இதனால் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான தவறான புரிதலே ராஜீவ் காந்தியிடம் இருந்தது.

## திணிக்கப்பட்ட திம்புப் பேச்சுவார்த்தை

சரியான வழித்தடத்தில் சீரான வளர்ச்சிப் போக்கில் சென்றுகொண்டிருந்த தமிழீழ விடுதலைப்போரின் வீச்சத்தை தடுத்து நிறுத்துவதற்காக, அப்போதைய இந்திய அரசு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக 1985 ஆனிமாதம் 18ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டது.



தமிழீழக் காவல்துறையின் அணிவகுப்பொன்றை தேசியத்தலைவர் ஏற்றுக்கொள்கிறார்

இதனைத் தொடர்ந்து அதே ஆண்டின் ஆடிமாத முற்பகுதியில் இந்திய அரசின் மத்தியஸ்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பமாயின.

இந்தப் பேச்சுவார்த்தையில் இந்தியா தான் விரும்பிய தனக்கு சாதகமான ஒரு தீர்வை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் திணிக்க நினைத்தது. ஆனால் அதேநேரம், 'தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து அதன் அடிப்படையிலேயே தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும்' என்ற தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் கோரிக்கையை இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மற்றைய தமிழ்க்குழுக்களும் ஏற்றுக்கொண்டன.

ஆனால் இந்தக் கோரிக்கையைச் சிறீலங்கா அரசு நிராகரித்ததால் பேச்சுவார்த்தை சிக்கலடைந்தது. அதேவேளை, அப்போது நடைமுறையில் இருந்த போர் நிறுத்தத்தை மீறி சிங்களப் படைகள் திருகோணமலையிலும் வவுனியாவிலும் நடாத்தி முடித்த தமிழினப் படுகொலையில் 200 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது.


தனது நோக்கம் நிறைவேறாததால் ஆத்திரமடைந்த இந்திய அரசு சென்னையில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை நாடு

கடத்தியது. இதனால் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாரிய முரண்பாடும் இடைவெளியும் ஏற்பட்டது.

இந்திய அரசும் அதன் பிரதமரும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலையில் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அப்போதைய தமிழக முதல்வருக்கு அழுத்தங்களைக் கொடுத்து, 1986ம் ஆண்டு ஐப்பசியில் தமிழகக் காவற்




முத்தமிழ் விழாவில் தலைவர் பேசுகின்றார்



மூதாளர் பேணகத்தில் பெற்றோர்களை தேசியத் தலைவர் கௌரவிக்கின்றார்

துறை மூலம் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த தகவல் தொடர்புச் சாதனங்களைப் பறித்தார்கள். தலைவர் பிரபாகரனையும் மற்றைய போராளிகளையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று குற்றவாளிகளை நடத்துவது போன்று நடத்தினார்கள்.

## சாகும்வரையிலான உண்ணாவிரதம்

இந்நிலையில் தலைவர் பிரபாகரன் என்ன செய்யப்போகிறார் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. ஆயுதப் போராட்ட இயக்கத்தின் தளபதி, சிங்களப்படைகளின் சிம்மசொப்பனமான தலைவர் பிரபாகரன் அவர்கள் 1986ம் ஆண்டு கார்த்திகை 22ம் நாள், அனைவரும் எதிர்பார்த்ததிற்கு மாறாக தமிழகக் காவற்துறையினர் தங்களிடம் இருந்து பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திருப்பித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீர், ஆகாரம் இன்றி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை தொடங்கினார். அவரின் இந்தச் செயல் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. தலைவர் பிரபாகரனின் மன உறுதியைப் புரிந்துகொண்ட இந்திய அரசு கோரிக்கையை ஏற்றுத் தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பிக் கொடுத்தது.

## பெங்களூர் மாநாடு

இதற்குப் பின் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள சிங்கள அரசின் சனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா வந்தபோது அவருடன் தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாணத்தைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற ரீதியில் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கலாம் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா சொன்னதாக இந்திய அரச தரப்பினரால் தலைவர் பிரபாகரனிடம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தலைவரோ "வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டாக இருப்பதனை ஒன்றாக இணைக்கவேண்டும் என்பதனை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கும் போது, இரண்டை நாலாக கூறுபோடும் யோசனையை நாங்கள் எப்படி ஏற்கமுடியும்?" என்று கூறி நிராகரித்து விட்டார்.

அத்துடன் இந்த பெங்களூர் பேச்சுவார்த்தையில்தான், தலைவருக்கு முதல் அமைச்சர் பதவி தருவதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்திய அரசுக்கூடாக தெரிவித்தார். இதற்கு தலைவர் பிரபாகரன் "இது ஒரு மாயவலை, தமிழ் இனத்தை அழிப்பதற்கு வேறு வகையாகப் பின்னப்பட்ட சதிவலை. அதிகாரங்கள் எதுவுமற்ற, நினைத்தால் சனாதிபதியால் கலைக்கக் கூடிய மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யமுடியாத பொம்மைப் பதவிதான் முதல் மந்திரி பதவி" என்று கூறி அதனைத் தூக்கி எறிந்து விட்டார்.

## தமிழீழத்தில் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீடு

தமிழ் நாட்டில் இருக்கும் வரை தனக்கு இந்திய மத்திய மாநில அரசுகளின் நிர்ப்பந்தம் இருந்து கொண்டேயிருக்கும். இந்திய அரசுடன்


பேசவரும்போது டில்லியிலோ அல்லது சென்னையிலோ தன்னைக் கொலை செய்து தமிழ்ப் போரை அழிக்க முயற்சிக்கலாம். மொத்தத்தில் தமிழ் நாட்டில் இருக்கும்வரை ஆபத்து நீடிக்கவே செய்யும். எனவே தமிழீழம் திரும்பிச் செல்வதன் மூலம் விடுதலைப் போர் மேலும் வலுவடையும் என்ற உறுதியான முடிவில் தலைவர் பிரபாகரன் அவர்கள் 1987ம் ஆண்டு தை 3ம் நாள் தமிழீழம் திரும்பினார்.

1987ம் ஆண்டு ஆடி 24ம் நாள் இந்திய அதிகாரிகள் சிலர் யாழ்ப்பாணத்தில் தலைவரை சந்தித்து "இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உங்களைச் சந்தித்து முக்கியமான விடயமாகப் பேசவிரும்புவதாக" கூறி அவரை அவசரமாக டில்லிக்கு அழைத்து செல்ல முயன்றார்கள். இந்நிலையில் தமிழீழ மக்களுக்கு தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் "இன்று தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை வென்று எடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்துவரும் பொறுப்புக்களை நான் நேர்மையாகவும் உண்மையாகவும் உறுதியுடனும் செய்வேன் என நம்புகின்றேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்கால தீர்வுகள் எமது பிரச்சினையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபிட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத்தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகிறேன். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரிலேயே நான் தமிழீழத்தைவிட்டு உத்தியோக பூர்வமாக இந்தியா செல்கின்றேன்" என்று கூறிவிட்டு இந்திய அரசு அனுப்பி இருந்த இராணுவ உலங்குவானூர்தியில் டில்லிக்கு புறப்பட்டார்.

போகும் வழியில் தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி.ஆரை சந்தித்துப் பேசினார். அப்போதும் எதற்காக இந்த அவசர அழைப்பு என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. டில்லி சென்ற தலைவர் பிரபாகரன் அவர்களையும் அவரது ஆலோசகர்களையும் அசோகா ஹோட்டலில் தங்க வைத்தனர். சிறிலங்காவுக்கான அப்போதைய இந்திய தூதுவர் தீட்சித், இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் மேனன் உட்பட பல அதிகாரிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து இந்தியாவும் சிறிலங்காவும் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் பற்றி முதன் முதலாகத் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்டதும் தலைவர் பிரபாகரன் அதிர்ச்சி அடைந்தார். ஒப்பந்தத்தின் பிரதிகளை அவரிடம் கொடுத்துவிட்டு உடனே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை ஏற்கமுடியாது என்று தலைவர் பிரபாகரன் மறுத்தார். அவரை சம்மதிக்க வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தலைவர் பிரபாகரன் உறுதியாக ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். இந்தியப் பிரதமர் சந்திக்க விரும்புவதாக கூறி அழைத்துச் சென்றவர்கள், பிரதமரும் தலைவர் பிரபாகரனும் சந்திக்க ஏற்பாடு செய்யவில்லை.

இடையில் நான்கு நாட்கள் பறந்தோடின. தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்ததும் தமிழகத்தில் இருந்த இந்தியாவின் அடிவருடிகளான மற்றைய தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். சொல்லி வைத்தபடியே அவர்கள் ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்



செஞ்சோலைச் சிறார்களுடன் தலைவர்



காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறார்களுடன் தலைவர்


கொண்டு விட்டார்கள் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார். யார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆடி 29ம் நாள் கொழும்பு செல்லப்போவதாகவும் அவர் அறிக்கை விட்டார்.

இதற்குப் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியப் பிரதமர் சந்தித்தார். அப்போது தலைவர்

ஒப்பந்தத்திலுள்ள பலகுறைகளைச் சுட்டிக் காட்டினார். ஆனால் தலைவர் பிரபாகரன் இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டதாகப் பொய்யான செய்திகள் இந்திய அதிகாரிகளால் தொடர்பு சாதனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உடனே தலைவர் பிரபாகரன் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டார். அதன்பின் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த அசோகா ஹோட்டலைச் சுற்றி 'கறுப்புப் பூனைகள்' என்ற இந்திய கொமாண்டோப் படைப் பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

## இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம்

1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் நாள் தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றி,



தலைவருடன் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒப்புதல் இன்றி, தமிழீழ மக்களின் விடுதலையே தன் உயிர்மூச்சு என்று சொல்லி தமிழீழ விடுதலைப் போரை வழி நடத்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் ஒப்புதல் இன்றி அவரை டில்லியில் ஹோட்டலில் தடுத்து வைத்துவிட்டு, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்புக்குச் சென்று சிறீலங்காப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இந்திய இராணுவம் தமிழீழப் பகுதிகளுக்கு 'அமைதிப்படை' என்ற பெயரில் அனுப்பப்பட்டது.

ஒப்பந்தம் செய்துவிட்டு இந்தியா திரும்பிய இந்தியப்பிரதமர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் சிறீலங்கா அரசு இராணுவ ரீதியில் தலையிடா வண்ணம் தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் சில உறுதிமொழிகளை அளித்தார். இந்த உறுதிமொழிகளைப் பெற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பினார்.

## சுதுமலைப் பிரகடனம்

இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சுதுமலையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பல லட்சம் தமிழ்மக்கள், இந்திய இராணுவத் தளபதிகள், பத்திரிகையாளர்கள், முன்னிலையில் தேசியத் தலைவர் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

"எம்மக்களது விடுதலைக்காக, எம்மக்களது விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து தமிழீழ மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கிறது. நாம் ஆயுதங்களை கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன். தமிழீழ மக்களின் நலன்கருதி இடைக்கால அரசில் பங்கு பற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்துக்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்"

இதன் பின்னர் தலைவர் உத்தரவின் பேரில் ஆயுதங்கள் பலாலி இராணுவ முகாமில் வைத்து இந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, தலைவர் பிரபாகரனுக்குக் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றாது இழுத்தடித்து வந்தார்.

## திலீபனின் தியாகச்சாவு

இந்நிலையில் விடுதலைப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும் இந்தியாவின் 'இரட்சகர்' என்ற போலி வேடத்தை மக்களுக்கு புரிய வைக்கவும் தலைவர் பிரபாகரனின் அனுமதியுடன் தியாகி திலீபன், இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தில் இருந்த 5 விடயங்களை நிறைவேற்றும்படி கூறி நீராகாரம் இன்றி சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை 1987 ஐப்பசி 15ம் நாள் ஆரம்பித்தார். இந்தியாவின் துரோகப் போக்கினால் ஐப்பசி 26ல் லெப்டினன்ட் கேணல் திலீபன் வீரச்சாவடைந்தார்.

லெப்டினன் கேணல் திலீபனின் வீரமரணம் குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையில், "வடக்கு கிழக்கு அடங்கலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் இந்தச் சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒரு முகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடுஇணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்" என்றார்.

## 12 போராளிகள் வீரமரணம்

திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து பருத்தித்துறைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் இருவர் உட்பட 17 போராளிகள் சிறீலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டுப் பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். "போர் நிறுத்த நேரத்தில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போராளிகளும் கைது

செய்யப்பட்டது இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானது" என தலைவர் பிரபாகரன் இந்திய அரசுக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்துப் போராளிகளை உடன் விடுவிக்குமாறு இந்திய, சிறீலங்கா அரசுகளைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இந்திய அரசின் துரோகத்தனத்தால் 17 போராளிகளும் சயனைட் உட்கொண்டனர். அவர்களில் 12 போராளிகள் வீரச்சாவை அணைத்துக் கொண்டனர். இதுபற்றி மக்களுக்கு தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில் "எமது போராளிகளை விடுவிக்க வேண்டுமென இந்திய அரசு சிறீலங்கா சனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் உறுதியாகச் சொல்லி இருந்தால் இந்த அநியாயமான சாவுகள் நிகழ்ந்தே இருக்காது. இந்த வகையில் எமது போராளிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பிலிருந்து இந்திய அரசு தவறிவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்கும் அதிகாரமும் பொறுப்பும் தார்மீகக் கடமைப்பாடும் இந்தியாவுக்கு இல்லை என்றால் இந்தியப் படைகள் இங்கிருப்பதன் அர்த்தம் என்ன? சனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் சமூக விரோத இயக்கங்களுக்கும் பாதுகாப்பளித்து விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுவதுதான் இந்திய சமாதானப் படைகளின் நோக்கமா? எமது தலைவர்களுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதில் அவர்களைச் சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்கத் துணைபோனது இந்திய சமாதானப் படையினர் எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றம். இந்த சூழ்நிலையில்தான் நாம் இனி யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில்லை என முடிவெடுத்தோம்" என்றார்.

## இந்திய - தமிழீழப் போர்

1987ஐப்பசி 10ம் நாள் இந்திய - தமிழீழப் போர் எவ்வாறு ஆரம்பித்தது என்பதை அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனுக்கு 1987 ஐப்பசி 11ம் நாள் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "எமது தளபதிகளும் போராளிகளும் அநியாயமாகக் கொலையுண்ட சம்பவத்தின் எதிரொலியாக தமிழீழம் எங்கும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. இன மோதல்கள் வெடித்தன. இந்த வன்முறை முயற்சிகளுக்கு நாம் தான் காரணம் என்றும் நாம் ஒப்பந்தத்தை முறிக்க முயன்றதாகவும் இந்தியா எம்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தியது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு.பந்த், இந்திய தூதுவர் திரு. தீட்சித் இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சுந்தர் ஆகியோர் ஒருபுறமும், சிறீலங்கா சனாதிபதி ஜெயவர்த்தனா, தேசிய பாதுகாப்பு அமைச்சர்



பெண் கடற்புலிகள்

அத்துலத் முதலி மறுபுறமும் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினர். விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது என்றும், எமது போராளிகளுக்கு பொது மன்னிப்பு இல்லையென்றும் ஜெயவர்த்தனா அறிவித்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக திரு. பந்த் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இந்திய சமாதானப்படை விடுதலைப் புலிகள் மீது ஒரு விசமத்தனமான தாக்குதலைத் தொடங்கியது. 1987 ஐப்பசி 10ம் நாள் காலை அமைதிப்படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ்த்தினசரிப் பத்திரிகைக் (ஈழமுரசு, முரசொலி) காரியாலயங்களுக்குள் புகுந்தனர். பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர். அதன்பின் நண்பகல் விடுதலைப்புலிகளை வேட்டையாடி அழிக்கும் நோக்குடன் கோட்டை இராணுவ முகாமில் இருந்த இந்திய அமைதிப்படையினர் யாழ் நகருக்குள் பிரவேசிக்க முயன்றனர். அவர்களை நாம் தடுக்க முயன்றோம். அவர்கள் எம்மை நோக்கித்

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நாம் எமது தற்பாதுகாப்புக்காக திருப்பிச் சுட்டோம். போர் மூண்டது. இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது மணிக்கணக்கான தாக்குதல்களை நடத்தினர். தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எமது போராளிகள் மட்டுமன்றி பொதுமக்கள் பலரும் பெருமளவில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை, விடுதலைப் புலிகளை அழித்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறது இந்திய இராணுவம். நாலாபக்கமும் முற்றுகையிடப்பட்ட நிலையில் நாம் எமது தற்பாதுகாப்பிற்காக போராடி வருகிறோம். உயிருடன் கைதாகி அவமானப்பட்டுச் சாவதைவிட போராடி இறப்பதே மேலானது என்ற இலட்சியத்துடன் நாம் துப்பாக்கி ஏந்தியுள்ளோம்".

யுத்தம் தீவிரமாக நடைபெற்றது. யாழ் குடாநாட்டை கைப்பற்ற இந்தியப்படை ஒரு மாதகாலம் போரிட்டது. இப்போரைத் தலைவர் பிரபாகரன் தலைமையேற்று விடுதலைப் புலிகளை வழி நடத்தினார். தொடர்ச்சியான கெரில்லாப் போர்முறைதான் இனிமேல் இந்தியப் படையை எதிர்கொள்ளத் தகுந்த போர்முறை எனத் தீர்மானித்து, தலைவர் பிரபாகரன் தனது போராளிகளுடன் தமிழீழக் காடுகளுக்குச் சென்றார்.



கரும்புலிகள் அணியொன்றைப் தலைவர் பார்வையிடுகின்றார்

கெரில்லா போர் தொடர்ந்தது. இந்தியப் படையினர் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளை எதிர் கொள்ளத் திராணியற்ற இந்தியப் படை பொதுமக்கள் மீது தனது வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டுப் பொது மக்கள் பலரைக் கொன்று குவித்தது. பெண்கள் பலரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்தது.

இந்தப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தலைவர் பிரபாகரன் 12.10.1987 இலும் 14.10.1987 இலும் 13.01.1988 இலும் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்குப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமக்கு அளித்த உறுதி மொழிகளின்படி இடைக்கால அரசைத் தமிழ்ப்பகுதிகளில் நிறுவினால் தாம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்துக் கடிதம் அனுப்பினார். ஆனால் ராஜீவ் காந்தி தலைவர் பிரபாகரனைக் கொன்று, தமிழீழ விடுதலை அரசியல் இலட்சியத்தை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற வெறியுடன் தன்னுடைய ஆயுதப் படைகளை இலட்சக்கணக்கில் தமிழீழத்தில் இறக்கிவிட்டார். போர் தொடர்ந்தது.

## தமிழீழத் தேசியத் தலைவர்

'தமிழீழ விடுதலை' என்று சொல்லிக் கொண்டு ஆயுதம் தூக்கிப் போராடப் புறப்பட்ட தமிழ்க்குழுக்கள் எல்லாம் தமிழீழ மக்களுக்குத் துரோகம் செய்து 'தமிழீழவிடுதலை' என்ற இலட்சியத்தைக் கைவிட்டு இந்திய, சிறீலங்கா அரசுகளின் கைக்கூலிகளாக மாறிச் செயற்படத் தொடங்கினர்.

ஆனால் தலைவர் பிரபாகரனோ சாதி, சமய, பிரதேச வேறுபாடு இன்றி, தமிழீழ மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுத்தார். உலகம் பார்த்து வியந்து நிற்க சின்னஞ் சிறிய தமிழீழ தேசம் வீராவேசத்துடன் போரிட்டது. இலங்கைத் தீவில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறும் போரை தலைமை தாங்கி நடத்தும் ஒப்பாரும் மிக்காரும் அற்ற முதல் தலைவன் பிரபாகரன் தான் என்று சிறீலங்கா நாட்டு சிங்கள மக்களும் புகழ்ந்தனர். இப்போர் உக்கிரமாக நடைபெற்ற காலப் பகுதியில் இருந்து தலைவர் பிரபாகரன் என்ற நிலை 'தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்' என தமிழ் மக்கள் தமிழீழத்திலும் உலகெங்கிலும் அழைக்கத் தொடங்கினர்.

## அன்னை பூபதி தியாகச் சாவு

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தாய்க் குலம் எழுச்சி கொண்டு போராடப் புறப்பட்ட போது தென் தமிழீழத்தில் உள்ள மட்டக் களப்பில் அன்னை பூபதி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்து என்று இந்திய அரசுக்குக் கூறி உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். ஆனால் காந்தியம் பற்றி புகழ்ந்துரைக்கும் இந்திய தேசத்துப் பிரதமர் அன்னை பூபதியின் உண்ணாவிரதத்தை எள்ளி நகையாடினார். அன்னை பூபதி 19.04.1988 இல் 'தியாகச் சாவு' அடைந்தார். அன்னை பூபதியின் தியாகச் சாவு பற்றி அறிக்கை ஒன்றை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் விடுத்தார். "எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார். இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலைகுனிய வைத்தது. தனி மனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத்தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னத வடிவம் அடைகிறது" என்றார்.

## மாவீரர் நாள் [கார்த்திகை 27]

இந்திய ஈழப்போர் உக்கிரம் அடைந்து கொண்டிருந்த காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் தினமும் தம்முயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர். 1989, கார்த்திகை 27, அன்று அடர்ந்த தமிழீழக் காடு ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், முதலாவது விடுதலைப்புலிப் போராளி சங்கர் வீரச்சாவு அடைந்த நாளான கார்த்திகை 27 ஐ மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி உரையாற்றும் போது, "எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1207

போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். முதல் முறையாக இன்று இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக் காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப் புக்காக போரிட்ட படை வீரர்களின் நினைவா கவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக் கொண் டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச் சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடு வது வழக்கம். ஆனால் இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னு மொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச் சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப் படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒருபழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப் பட்டவர் களைத்தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண் டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலை வர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோ ரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பது டன், வீரச்சாவு அடைந்த எல்லா போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப்போக்கில் குறிப்பிட்ட சிலசில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக் கப்பட்டு, அந்த மரியாதைகள் குறிப்பிட்ட சில ஆட்களுக்குப் போகாமல் தடுத்து, எல்லோ ருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த மாவீரர் நாள் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்த வரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளு டன் ஒப்பிடும்போது எங்கள் இனத்தில் பெண் களை புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதே வேளை வீரர்களுக்குத்தான் பஞ்சமாக இருந் தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக்கூட நாம் கௌரவிக்க ஆரம்பித் துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட் கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலைநிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1207 போராளிகளின் (தற்போது 17700க்கும் அதிகம்) உயிர்த் தியாகம்தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்" என்றார்.

## சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை

1988இல் புதிய சனாதிபதியாக பதவியேற்ற பிரேமதாச 1989இல் இருந்தே விடுதலைப் புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு வருமாறு மாறி மாறி அழைப்புக்களை விடுத்தார். தமிழீழ மண் ணில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்திடவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளும் விரும்பியதால் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்க முடிவு செய்தார். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் விவேகமான இராசதந்திர காய் நகர்த்தலால் இந்திய - சிறீலங்கா உறவுகளில் பகைமை மூண்டது. இந்திய இராணுவத்தை வெளி யேறுமாறு பிரேமதாசா பகிரங்கமாக அறிவித்தார்.

சிறீலங்காவின் அழைப்பின் பேரில் அமைதிகாக்கப் போரிடுவதாகக் கூறி வந்த இந்திய அரசுக்கு நிலைமை சங்கடமாகியது. அவமானப்பட்டு போரில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் படுதோல்வியடைந்து முகத்தில் கரிபூசியபடி இந்திய இராணுவம் பங்குனி 1990இல் தமிழீழத்தில் இருந்து வெளியேறிச் சென்றது.

இந்திய அரசாலும் அதன் இராணுத்தாலும் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவம் என்ற கூலிப்படை சிதறுண்டு ஓடியது. பெரும்பான்மையோர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர். மாகா ணசபை கவிழ்ந்தது. இந்திய அரசின் இறுதித்திட்டமும் தவிடுபொடியாகியது.

தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது மறைவிடத்தில் இருந்து வெளியே வந்தார். சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இறுதியில் சிங்கள இனவாதத்தின் ஏமாற்று வேலைகளால், விவேகமான அரசியல் நகர்வுகளினாலும் விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றி கொண்டது. இந்திய இராணுவம் வெளியேறிய பிரதேசங்கள் துரித கதியில் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தன. இலட்சிய உறுதியும் போர் அனுபவமும் வீரமும் மிகுந்த விடுதலைப்புலிப் படைவீரர்களின் மின்னல் வேகத் தாக்குதல் களுக்கு பேச்சுவார்த்தை உருப்படியான தீர்வுகள் பற்றி ஆராயப்படாது முறிந்து போனது.

## தமிழீழப் போர் - 2

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் சிங்களக் காவல்துறையினரும் படையினரும் தொடர்ச்சி யாக மேற்கொண்ட அடாவடித்தனங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக 1990 ஆனி 10 ல் பேச்சுவார்த்தை முறிந்து இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தது. தென்தமிழீழத் தில் உள்ள கல்முனை என்ற இடத்தில் இஸ்லாமியத் தமிழர் ஒருவருக்கு எதிராக சிங்களக் காவற்துறையினர் மேற்கொண்ட மனிதவுரிமை மீறல் காரணமாக விடுதலைப் புலிகளுக்கும் சிங்களக் காவல்துறையினருக்கும் இடையில் எழுந்த சச்சரவு இறுதியில் யுத்தமாக மூண்டது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உடனடியாகவே இவ்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் சிறீலங்காவின் சிங்கள இனவாத அரசும் அதன் படைகளும் 'தமிழின அழிப்பும் தமிழ்மண் பறிப்புமே தமது இறுதி முடிவு' என்ற ரீதியில் செயற்பட்ட போது தமிழீழ மக்களையும் தமிழீழ மண்ணையும் பாதுகாப் பதற்குச் சிறீலங்கா அரசு ஏவிவிட்ட யுத்தத்தை எதிர்கொள்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

1991 புரட்டாதி 1ம் நாள் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அப்போதைய அரசியல், இராணுவ நிலைமைகள் பற்றி விளக்கும்போது பின்வருமாறு கூறினார். "தமிழீழப் போர் 2 தொடங்கும் போது, இருந்த பல சிங்கள இராணுவ முகாம்கள் தற் போது இல்லை. கொக்காவில், மாங்குளம் போன்ற இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டதால் வன்னிப் பிரதேசத்தின் பெரும்பகுதி எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. யாழ் கோட்டை முகாம் அழிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியும் விடுவிக்கப்பட்டது. ஆனையிறவுப் போரில் மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன் நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற்படியை எடுத்து வைத்தோம். பெரிய எண்ணிக் கையிலான இராணுவத்தை நீண்ட நாட்களாக தடுத்து வைத்துப் போரிட்டோம். ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புக்களை வளர்ச்சியின் ஊன்று கோலாகக் கருதவேண்டும். 10-07-91 இல் ஆனையிறவுப் போர் ஆரம்பித்து 23-08-91 வரையிலான 43 நாள் போரில் 564 போராளிகளை இழந்திருக்கிறோம். எதிர்பார்த்ததைவிட

பெரியளவில் படையினர் இறக்கப்பட்டு நீண்ட நாட்கள் இடம் பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது. துன்பங்களை அனுபவிக்கும் மக்களிடம் அடுத்து என்ன என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்யும். எனினும் பெரிய அளவில் அவர்கள் அணிதிரள வேண்டும். போராட்டத்தில் ஏற்படும் இழப்புக்களை உடனுக்குடன் ஈடுசெய்ய வேண்டும். மக்கள் முழுமையாக எம்மோடிணைந்து எமது கஷ்ட துன்பங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் நிபந்தனையற்ற வகையில் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு எப்போதும் தயாரக இருக்கிறோம். ஆனால் பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை சிறீலங்கா அரசுதான் உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசுக்கு எதிராகத்தான் போராடுகிறார்கள். இந்திய அரசு விடுதலைப் புலிகளைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றே கருதுகின்றேன். எந்த ஆயுதத்தாலும் எத்தகைய குண்டு வீச்சாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முடியாது"

## ஓரடி முன்னால் ஈரடி பின்னால்

பிரேமதாசாவுக்குப் பின் சிறீலங்காவில் சமாதானத் தேவதை என்ற மணிமகுடத்தோடு



பூநகரி கூட்டுப்படைத்தளம் அழிக்கப்பட்டபின் வெற்றிக்களிப்பில் போராளிகள்

பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சிக்காலம் எமது மக்கள் அதிகளவுக்கு இழப்புக்களையும், துன்பங்களையும் சந்தித்த காலகட்டமாகவும், அதேநேரம் எமது போராட்டம் எமது தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனத்தாலும் வழிநடத்தலாலும், ஒரு மாபெரும் பாய்ச்சலுக்குள்ளான காலகட்டமாகவும் இருக்கிறது. சந்திரிகாவும் தனது முன்னோர்களின் வழியில், நுனிநாக்கில் சமாதானத்தையும், யுத்தவெறியையும் வைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.

எப்போதும் சமாதானத்துக்கு பின் நிற்காத நமது தேசியத் தலைவர் தனது பிரதிநிதிகளை சந்திரிகா அரசின் பிரதிநிதிகளுடன் பேச அனுப்பினார்.

சந்திரிகா அரசோ தமிழ்மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக இதயசுத்தியுடன் பேசாது, காலத்தை இழுத்தடித்து தமிழ் மக்கள் மீது பாரிய போர் ஒன்றை தொடுப்பதற்கான தயாரிப்பு வேலைகளில் மறைமுகமாக ஈடுபட்டுவந்தது. இறுதியில் சந்திரிகா அரசின் பிடிவாதப்போக்குக் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தை முறிவடைய, சந்திரிகாவின் சமாதான முகமூடி தரித்த பேரினவாத முகம் வெளிச்சத்துக்கு வந்தது. தமிழ் மக்கள் மீதான தாக்குதல் முன்னெப்போதையும் விட தீவிரப்படுத்தப்பட்டது. கதிர்காமர் என்ற அரைத் தமிழர் மூலம் விடுதலைப் புலிகளை சர்வதேச அளவில் பயங்கரவாதிகளாகக் காட்டும் முயற்சியிலும் சந்திரிகா அரசு ஈடுபட்டது.

தமிழர் தாயகப் பகுதிகளை முற்றுகைக்குள்ளாக்கி, பொருளாதாரத் தடைவிதித்து, மக்களை ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலைக்குள் வைத்து இம்சைப்படுத்துவதன் மூலம் மனோவில் ரீதியாக தமிழ் மக்களின் விடுதலை உணர்வை சிதைத்து மழுங்கடித்துவிடலாம் என்று சந்திரிகா அரசு கனவு கண்டது. சிறீலங்கா படையினர் குடாநாட்டுக்கான நுளைவாயில்களான ஆனையிறவையும் பூநகரியையும் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு கிளாலிக் கடலூடாக பயணிக்கும் மக்களை தொடர்ச்சியாக கொன்று குவிக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தனர்.

சிங்களப் படைகளின் கொடூரங்கள் எல்லை மீறிய நிலையில் 1993 கார்த்திகை மாதம் தேசியத்தலைவர் வகுத்த தவளைப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கை மூலம், பூநகரி - நாகதேவன்துறை சிறீலங்கா இராணுவக் கூட்டுப் படைத்தளம் தகர்த்தெறியப்பட்டது. குடாநாட்டுத் தமிழ் மக்களின் வெளிமாவட்டப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் அச்சுறுத்தலாகவும் இருந்த தடைக்கல் தகர்த்தெறியப்பட்டது. தமிழ்மக்கள் மீது திணிக்கப்படும் எல்லாவித மான அடக்குமுறைகளையும் விடுதலைப்புலிகள் தகர்த்து எறிவார்கள் என்பதற்கான சமிக்ஞையாகவும் இது இருந்தது.

இதை புரிந்துகொள்ளாத சந்திரிகா அரசு, இராணுவத் தீர்வு ஒன்றை திணித்து தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று கனவுகண்டது. நவாலித் தேவாலயத்தின் மீதான தாக்குதல், நாகர்கோவில் பாடசாலை மீதான தாக்குதல், மடுத் தேவாலயத்தின் மீதான தாக்குதல் என்று திட்டமிட்ட தொடர்ச்சியான படுகொலைகளை நடத்தியது. அத்துடன் தனது முழுமையான இராணுவ பலத்தையும் ஒன்று திரட்டி குடாநாட்டை கைப்பற்றுவதற்கான சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, வரலாற்றின் மாபெரும் மக்கள் இடப்பெயர்வு என்று குறிப்பிடும்படி தமிழ்மக்களை அவர்களது சொந்த நிலங்களில் இருந்து இரவோடு இரவாக விரட்டியடித்தது. மக்களே இல்லாத நாய்களும் நரிகளும் உலாவிய யாழ்நகரில் ஆக்கிரமிப்பின் சின்னமான சிங்கக்கொடியை ஏற்றியதுடன் அதை சிங்கள இனத்தின் மாபெரும் வெற்றியாகவும் கொண்டாடியது.

இந்தச் சண்டையின் போது யாழ் குடாநாட்டின் மீதான தங்கள் கட்டுப்பாட்டை இழந்து விடாமல் தக்க வைப்பதற்காக விடுதலைப் புலிகள் தங்கள் ஆளணி படைபலம் அனைத்தையும் ஒன்று குவித்துப் போராடுவார்கள் என்றும், இராணுவ ரீதியாக மீண்டும் தலையெடுக்க முடியாதபடி அவர்களது முதுகெலும்பை முறித்துவிடலாம் என்றும் சந்திரிகா அரசும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் கனவு கண்டனர்.

ஆனால் நமது தேசியத் தலைவர் தனக்கே உரித்தான சாணக்கியத்துடன், 'ஓரடி முன்னால் ஈரடி பின்னால்' என்ற புகழ்பெற்ற இராணுவ அரசியல் தந்திரோபாய அடிப்படையில் (ஒரு புரட்சிகரமான சண்டையில் புரட்சியாளர்கள் தங்களது தளப் பிரதேசங்களை விரிவாக்கி முன் செல்லும் போது, எதிரி அதை தடுத்து நிறுத்தி போராளிகளின் தளப் பிரதேசங்களை கைப்பற்ற தன்னுடைய படைபலத்தின் பெரும்பகுதியை கொண்டு வந்து குவிக்கின்ற போது புரட்சியாளர்கள் சடுதியாகப் பின்வாங்கி, எதிரியை ஒரு பொறிக்குள் மாட்டிவிட்ட நிலைக்கு உள்

ளாக்கி விட்டு, தங்களது உத்திகளையும் படை பலத்தையும் மறுசீரமைப்புக்குள்ளாக்கிக் கொண்டு எதிரிக்கு அவன் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு மரண அடிகொடுத்து அவனை எழும்பவே முடியாமல் செய்து விடுவது.) குடாநாட்டை விட்டு போராளிகளுடன் வன்னிக்கு பின்வாங்கினார்.

அவரது இந்த தந்திரோபாய அடிப்படையி லான பின்வாங்கலை, தோல்வியின் அடிப் படையிலான பின்வாங்கல் என்றும், விடுதலைப் புலிகளின் சகாப்தமும், தேசியத்தலைவர் பிரபா கரன் அவர்களின் சகாப்தமும் முடிந்துவிட்ட தென்றும் சிறீலங்கா அரசும் அதற்கு முண்டு கொடுக்கும் சிங்களப் பேரினவாதிகளும், அவர் களை அண்டிப் பிழைக்கும் தமிழ்த் தேசத்து ரோகக் கும்பல்களும் கொக்கரித்தன.

தலைவரை நம்பி வன்னிக்கு அவர்கூடவே இடம்பெயர்ந்து சென்ற இலட்சிய உறுதியுள்ள இலட்சக்கணக்கான மக்களைப் பார்த்து பைத்தி யக்காரர்கள் என்று எள்ளி நகையாடியது இந்தக் கும்பல். போர் வெறி கொண்ட சந்திரிகா அரசு வன்னிப் பெருநிலப் பரப்பின் மீது கடுமையான பொருளாதாரத் தடை மற்றும் மருந்துத் தடை களை விதித்தும், விமானத் தாக்குதல்களை நடாத்தியும் சொந்த இடங்களை விட்டு விரட்டி யடித்த மக்களை மேலும் துன்பத்துக்கும் நெருக் கடிக்கும் உள்ளாக்கியது.

1996ல் பரந்தன் ஆனையிறவு இராணுவத் தளத்திலிருந்து சத்ஜெய இராணுவ நடவடிக்கை ஒன்றைத் தொடங்கி கிளிநொச்சி நகரை ஆக்கிர மித்து ஏற்கனவே குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கு தங்கியிருந்த மக்களை வன்னிக் காடுகளுக்குள் விரட்டியடித்தது.

## மூக்குடைத்த முல்லைச்சமர்

யாழ்ப்பாணக் குடாநாட்டையும், கிளி நொச்சி நகரையும் கைப்பற்றிவிட்ட மமதையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதி பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தை யும் உலாவர, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உலக நாடுகளுக்கெல்லாம் பறந்து, பறந்து "பயங்கர வாதிகளை ஒடுக்கிவிட்டோம், அவர்களின் முது கெலும்பை உடைத்து விட்டோம். அவர்கள் இப்போது காட்டுக்குள் பதுங்கி இருக்கும் ஒரு சிறு குழு. கூடிய விரைவில் அவர்கள் முற்றாக அழிக்கப்பட்டு விடுவார்கள்" என்று பரப்புரை செய்ய, பல நாடுகள் அது உண்மை என்று நம்பிக் கொண்டிருக்க, 1996ம் ஆண்டு ஆடி மாதம் 18 ம் திகதி வன்னியில் வங்கக்கடலோரத் தில் கேட்ட வெடியோசை உலகை வியக்க வைத்தது.

எமது தேசியத் தலைவரின் திட்டமிடலிலும் வழிகாட்டலிலும் முல்லைத்தீவில் இருந்த சிறீலங்கா படைத்தளத்தளம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடந்த சமரில் விடுதலைப் புலிகளால் துடைத்தெறியப்பட்டது. இந்தச் சமரில் ஆட்லெறியும் கனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட, 1200 படையினர் கொல்லப்பட்ட னர்.

'ஓயாத அலைகள் ஒன்று' எனப் பெயரிடப்பட்ட இந்தச் சமரில் கொல்லப்பட்ட படையின ரின் உடலங்களை பெற்றுக் கொள்ளுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சிறீலங்கா அரசுக்கு நமது தேசியத் தலைவர் சர்வதேச போரியல் மரபுகளுக்கு இணங்க அழைப்பு விடுத்த



முல்லைச்சமரில் கைப்பற்றிய ஆட்லறிகளுடன் போராளிகள்



முல்லைச்சமரில் கைப்பற்றப்பட்ட ஆட்லறிகளை பார்வையிடும் தலைவர்

போது, உலக நாடுகள் மூக்கில் விரலை வைத்தன. சிங்கள மக்கள் திகைத்தனர்.

'பலமிழந்து காட்டுக்குள் ஓடிவிட்டதாக சொல்லப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு அரச படைகளின் ஒரு பெரிய படைத்தளத்தையே நிர்மூலமாக்கக்கூடிய பலம் எப்படிக் கிடைத்தது'

இதற்குரிய சக்தி எங்கிருந்து வந்தது? என்றெல்லாம் உலகநாடுகளின் கொள்கை வகுப்பாளர்களும், அரசியல் இராணுவ ஆய்வாளர்களும் வியந்து நோக்கினர்.

நமது தேசியத்தலைவரது சத்தியையும், அவருக்குள்ள பலத்தையும் உணர்ந்து கொண்டனர். சந்திரிகா ரத்வத்தை கதிர்காமர் கூட்டணியின் மூக்குடைபட்டது. அவர்களது முகமூடி கழன்று, கோரமான பொய்முகம் வெளிச்சத்துக்கு வந்தது.

எதிரியின் ஓராயிரம் எதிர்ப் பிரச்சாரங்களை - பொய்ப்பிரச்சாரங்களை புரட்சியாளர்களின் ஒரு பெரிய இராணுவ வெற்றி ஒரு சில நிமிடங்களில் முறியடித்துவிடும் என்பது உண்மையானது.

## மரபுவழிச் சமரும் மக்கள் யுத்தமும்

முல்லைச் சமரிலே கைப்பற்றப்பட்ட 122 மில்லிமீற்றர் ஆட்லெறி விடுதலைப் புலிகளின் படையணிகளை மரபுவழிச் சமரின் மற்றொரு பரிமாணத்தக்கு இட்டுச் சென்றது. இந்தச் சமர்க்களத்திலே எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை எடுத்தச் செல்வதற்கும், கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை அப்புறப்படுத்துவதற்கும் பலநூற்றுக் கணக்கான



ஜெயசிக்குறு எதிர்ச்சமரில் எதிரியின் இலக்கொன்றை தாக்கி அழித்துவிட்டு வெற்றியுடன் திரும்பும் போராளிகள்

மக்கள் நேரடியாக வந்து போராளிகளுக்கு தோளாடு தோள் கொடுத்து உதவியதானது, மக்கள் யுத்தம் என்ற ஒரு பரிமாணத்துக்கும் எமது போராட்டம் வளர்ந்து விட்டதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

அதேவேளை 1993ல் பூநகரி நாகதேவன்துறை கடற்படைத் தளம் தாக்கி அழிக்கப்பட்டபோது நமது தலைவர் சந்திரிகா அரசுக்கு உணர்த்திய அதே செய்தியை இந்த முல்லைப் படைத்தளம் வீழ்த்தப்பட்ட போது கொஞ்சம் அழுத்திச் சொல்லியிருந்தார். அதாவது "தமிழ் மக்கள் போரை விரும்புவர்கள் அல்ல. அவர்கள் மீது போர் திணிக்கப்பட்டால், அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டால் விளைவுகளும் பயங்கரமானதாக இருக்கும். தமிழர்கள் அடிவாங்குவதற்கும் அடிமைகளாய் வாழ்வதற்கும் பிறந்தவர்கள் அல்ல என்பதை சிங்களம் உணர வேண்டும்" என்பதே அந்தச் செய்தியாகும்.

ஆனால் அதிகார மமதையில் தலைகால் புரியாமல் ஆடிய சந்திரிகா அரசு இந்தச் செய்தியை அதிலுள்ள தாக்கத்தை புரிந்து கொள்ளவே இல்லை. "முல்லைத்தீவெல்லாம் பெரிய விசயமில்லை. அதை மீண்டும் கைப்பற்றுவோம். வன்னியைப் பிடிப்போம். ஏ ஒன்பது பாதையைத் திறப்போம். புலிகளை கடலில் போய் விழும்படி செய்வோம்". என்றெல்லாம் சவடால் விட்டபடி வன்னிப் பெருநிலப்பரப்பை ஆக்கிரமிப்பதற்கான யுத்தத்தை தொடுத்தது.

1997 நடுப்பகுதியிலிருந்து 1999 நடுப்பகுதிவரை வன்னி மண் போர் முரசுகொட்டி அதிர்ந்தது. போர்வெறி கொண்டு எம் தாயகத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவரும் சிங்களப்படைகளை அடித்து விரட்டி தாயகத்தை காக்கும் அந்த வரலாற்றுச் சமரில், வன்னி மக்கள் பெண்கள் ஆண்கள் வயதானவர்கள் என்று வலுவுள்ள எல்லாருமே எல்லைப்படைகளாகவும் தேசியத் துணைப்படைகளாகவும் போர்களம் புகுந்தனர்.

வன்னி மண்ணில் கால்வைத்த சிங்களப் படை மரணஅடி கொடுத்துத் தூத்தியடிக்கப் பட்டது. பரந்தன் கிளிநொச்சி படைத்தளங்கள் மாங்குளம் புளியங்குளம் கரிபட்ட முறிப்பு கனகராயங்குளம் நெடுங்கேணி மணலாறு சிலோன் தியேட்டர் பகுதிகளில் இருந்த படைத் தளங்களும் படை முகாங்களும் தகர்த்தெறியப் பட்டன.

26 மாதங்கள் தொடர்ச்சியாக நடந்த சண்டையில் மூவாயிரத்துக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். இதைவிட பலமடங்குக்கு அதிமான படையினர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழர் படையின் போர் உக்கிரத்தை தாங்க முடியாமல் இந்தக் காலப்பகுதியில் இருபதாயிரத்துக்கும் அதிமான படையினர் படையணிகளை விட்டு தப்பியோடித் தலைமறைவாகினர். கெரில்லா போராக ஆரம்பித்து, மரபுவழிச் சமராக மாறி பின்னர் மக்கள் புரட்சி என்ற நிலைக்கு வளர்ந்த எமது போராட்டத்தை பார்த்து உலகம் ஆச்சரிப்பட்டது. எமது தேசியத் தலைவரின் ஆளுமையைக் கண்டு திட்டமிடலைக் கண்டு உலகம் வியந்தது.

சேற்றில் கால் புதைந்த யானையின் கதி. சந்திரிகா ரத்வத்தை கதிர்காமர் கூட்டணிக்கு ஏற்பட்டது.

போராட்டத்தில் மக்களின் பங்கு தொடர்பாக தலைவர் தனது 2000 மாம் ஆண்டு மாவீரர் தின உரையிலே பின் வருமாறு குறிப்பிடுகிறார்

"எல்லைப் படையாக அணி திரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாகப் பங்கு கொண்டு போராடியது, எமது விடுதலைப் போராட்டத்துக்குப் புதிய தெம்பையும், பலத்தையும் அளித்தது. குடும்பப் பொறுப்பைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்கு கொள்வது எமது தேசத்துக்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்து கொள்ளும் போதுதான், அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண்டும். அது தான் எமது போராட்டத்தில் பாரிய திருப்பு முனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டி, எமது விடுதலை இலட்சியத்தை வெகு விரைவில் நிறைவுபெறச் செய்யும்".

## தகர்த்தெறியப்பட்ட அடிமைச் சின்னம்

வன்னிப் பெருநிலப்பரப்பை கைப்பற்றி ஏ- ஒன்பது நெடுஞ்சாலை பிடிப்பதற்காக சிங்களப் படைகள் மேற்கொண்ட 'ஜெயசிக்குறு படைநகர்வு' சுக்கு நூறாக்கப்பட்டதும் கிளிநொச்சி பரந்தன் படைத்தளங்கள் தகர்தெறியப்பட்டு அந்தப் பிரதேசம் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டதும், அவர்களது அடுத்த இலக்கு ஆனையிறவு தான், என்பது சந்திரிகா அரசுக்குத் தெரிந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நுளைவாயிலாக இருந்த மூன்று நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட ஆனையிறவுப் படைத்தளம் என்பது தமிழ் மக்களுக்கு அடிமைத்தனத்தின்- ஆக்கிரமிப்பின் சின்னமாகவும் சிங்கள தேசத்துக்கு அவர்களது அதிகாரத்தின் - மேலாண்மையின் சின்னமாகவும் விளங்கியது. எனவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தத் தளத்தை தகர்த்தெறிவது வரலாற்றுக் கடமையாகவும், சிங்களதேசத்தை பொறுத்தவரை அதை தற்காத்து தக்கவைத்துக் கொள்வது வரலாற்றுத் தேவையாகவும் இருந்தது.

இதனால் ஆனையிறவுக்கான சமர் என்பது தமிழினத்தின் வெற்றியையும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் தோல்வியையும் தீர்மானிக்கப் போகின்ற ஒரு சமராகவும் இருந்தது. சந்திரிகா அரசு இந்த ஆனையிறவுத் தளத்தை தக்கவைப்பதற்காக உலக வல்லரசுகளிடம் ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. உலகப் பெரும் வல்லரசு நாடான அமெரிக்கா, இந்தத் தளத்தில் இருந்த படையினருக்கு சிறப்புப் பயிற்சியும் படைத்துறை நிபுணத்துவ உதவியும் வழங்கியது. இந்தியாவும் தன் பங்குக்கு படைத்துறை நிபுணத்துவ உதவியையும் ஆயுத உதவியையும் வழங்கியது.

ஆயுத பலமும் ஆட்பலமும் வல்லரசுகளின் பின்புலப் பலமும் இருக்கின்ற போது, ஆனையிறவுப் படைத்தளத்தை விடுதலைப் புலிகளால் நெருங்கவே முடியாது என்று சந்திரிகா அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நேரத்தில், நமது தேசியத் தலைவர் நன்கு திட்டமிட்டு இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரான்சை ஆக்கிரமித்திருந்த ஹிட்லரின் ஜேர்மன் படைகளை முறியடிப்பதற்காக, அமெரிக்கா தலைமையிலான நேசநாட்டுப் படைகள் பிரான்சின் நோர்மண்டிக் கடற்கரையில் தரைஇறங்கிய நிகழ்வுக்கு நிகராக கடற்புலிகளின் படகுகள் எமது போராளிகளைக் கொண்டு போய் தரையிறக்கிய போது, சிறீலங்கா கடற்படை, வான்படை, தரைப்படைகள் இணைந்து தாக்குதல் நடத்தியும் அந்த வரலாற்றுப் பெரு நிகழ்வை தடுத்து நிறுத்த முடியவில்லை.

அனையிறவு தளத்தை வீழ்த்துவதற்கான சமர் குடாரப்பு, தாளையடி, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, இத்தாவில், மாசார், சோரன்பற்று, கிளாலி, பளை, இயக்கச்சி என்று பரந்து விரிந்த சமராக உக்கிரமான சமராக நேரடிச்சமராக வெடித்த போது, உலகின் கவனமெல்லாம் அந்தக் களமுனையை நோக்கித்தான் குவிந்திருந்தது.

சிங்களப் படைகள் கிளாலி, பளை, ஆனையிறவு என்று பல முனைகளில் விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கு எதிராக அவர்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்காக பல முயற்சிகளை மேற் கொண்டும் அவையெல்லாம் தோல்வியில் முடிந்தன.



ஆனையிறவுப் பெருந்தளத்தில் புலிக்கொடி ஏற்றுகின்றார் கேணல் பாநு



வெற்றிகொள்ளப்பட்ட ஆனையிறவுப் பெருந்தளத்தில் போராளிகள்

2000மாம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் நாள் தமிழர் படைகள் ஆனையிறவுத் தளத்துக்குள் பிவேசிக்க, சிங்களப்படைகள் தோற்றுப் பின்வாங்கி ஓட, தமிழர்களின் வெற்றி, தமிழீழப் போராட்டத்தின் வெற்றி, நமது தேசியத் தலைவரின் வெற்றி உலகளாவிய ரீதியில் பிரகடனப்படுத் தப்பட்டது.

2000மாம் ஆண்டு சித்திரை மாதம் 30 ம் நாள் பளை நகரமும் கைப்பற்றப்பட யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிக்கிப் போயுள்ள தங்களின் நிலை என்னவென்று சிங்களப் படைகள் கலங்கின. ஆக்கிரமிப்பின் சின்னம் தகர்ந்தது. அச்சுறுத்தல் மறைந்தது. அடிமைத்தனம் ஒழிந்தது என்று தமிழ்மக்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

விடுதலப்புலிகளின் படையணிகள் படிப்படியாக முன்னேறி யாழ்நகர எல்லையை அடைந்த போது சிங்களம் திகைத்தது. சந்திரிகாவின் நிம்மதி பறிபோனது. "எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்று" என்று படையினரின் பெற்றோர் போர்க்கொடி தூக்கினர்.

## பக்கச் சார்பாக இருந்த உலகம்

ஆனையிறவு தந்த பாடத்திலிருந்து படிப்பினை பெறாத சிறீலங்கா அரசு மறுபடியும் உலக வல்லரசுகளிடமிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டு தன்னுடைய அனைத்துப்



போரை ஓய்வுக்கு கொண்டு வந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தேசியத்தலைவர் அவர்கள் கையொப்பமிடுகின்றார்.

படைபலத்தையும் திரட்டி ஆனையிறவை மறுபடியும் கைப்பற்றுவதற்கான உக்கிரமான போரைத் தொடுக்கத் திட்டமிட்டது.

இரண்டாயிரமாம் ஆண்டு மாவீரர் தின உரையிலே இது பற்றி தலைவர் பின்வருமாறு விளக்கு கிறார். "எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் இன்று நாம் ஒரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி, எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசல்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி, குடாநாட்டை வன்னி மாநிலத்தில் இருந்து துண்டித்து வைத்திருந்த, ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை, இவ்வாண்டு நாமீட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும். தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக இருபதாயிரம் இராணுவத்தினருடன், தொடர் வலய முகாம்களால் சூழப்பட்டு பரந்தனிலிருந்து பளை வரையும் கரையோரத் தளங்களோடும் 80 மைல் பரப்பளவைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம் எம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நிகழ்வானது, உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவச் சாதனையாகும். இப்புகழீட்டிய வரலாற்றச் சமரில் புலிகள் வகுத்த நுட்பமான போர் வியூகங்களும், திகைப்பூட்டும் தரையிறக்கங்களும், வீரஞ்செறிந்த தாக்குதல்களும் தந்திரோபாயங்களும், போரியல் கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் உலகத்தக்கு எடுத்துக்காட்டியது. வெளிநாட்டில் பயிற்சிபெற்ற உள்நாட்டில் களமாடி, முதிர்ச்சிபெற்ற சிங்களத்தின் சிறப்புப் படையணிகள் இந்தச் சமரில் சிதைக்கப்பட்டன. இந்த நிகழ்வானது சிங்களத்துக்கு இராணுவ பொருளாதார ரீதியில் முண்டுகொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றி கொண்டு, தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதே வேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணிகள், யாழ்ப்பாணத்தின் நக ராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது. அதேசமயம் எமது மற்றையபடையணிகள், தனங்கிளப்பு வழியாக கைதடி நாவற்குழி, மட்டுவில் பிரதே சங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து ஒரே யொரு ஆகாய விநியோக மார்க்மாக விளங் கிய, பலாலிப் பெருந்தளம் எமது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானது. மின்னல் வேகத் தில் நடந்த இந்தத் திடீர் திருப்பங்களின் விளை வாக, சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியைச் சந்தித்தது. சந்திரிகா அம்மை யார் நிலை குலைந்து போனார். ஆயினும் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளின் உதவியைப் பெற்று நெருக்கடியைச் சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலி களிடம் வீழ்ந்தால் அங்குள்ள முப்பதாயிரம் சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படும் என உலகெங்கும் அபாயச் சங்கை ஊதினார். இந்த அபாயச் சங்கைக் கேட்டவுடனேயே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவி செய்ய முன்வந்தன.

தனது கடற்படையின் உதவியுடன், சிங்கள இராணுவத்தை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந் தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணிதிரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயு தங்கள், யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும் ரஷ்யாவும் நவீனரக போர் விமா னங்களையும், உலங்கு வானூர்திகளையும் அனுப்பி வைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இராணுவம் வலுப்படுத்தப் பட்டது. அபாயச் சங்கை ஊதி உலகத்தின் உதவியைப் பெற்று, இராணுவத்தைப் பலப் படுத்தி, யாழ்ப்பாணத்தில் போரைத் தொடங் கும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணச் சமரில் ஒருதலைப் பட்சமாக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்களத் துக்கு உதவிகளை வழங்கியதால், எமது போர்த் திட்டங்களை தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

## நோர்வேயின் அமைதி முயற்சி

ஆனையிறவுச் சமர் முற்றுப்பெற்ற காலத் தில் நோர்வே அரசு அமைதி முயற்சியில் ஈடுபட

முன்வந்தது. நமது தேசியத் தலைவர் அவர்களை 2000 ஆண்டு கார்த்திகை மாதம் நோர்வே பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியதை அடுத்து சமாதானத்தில் தனக்குள்ள பற்று உறுதியைக் காட்டும் முகமாக அவர் நான்கு மாதம் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்.

அடங்காத திமிரும் மாறாத போர்வெறியும் கொண்ட சந்திரிகா அரசு, அதை தலைவரதும் விடுதலைப் புலிகளதும் பலவீனமாக நினைத்தது. தலைவரது பெருந்தன்மைக்கு மதிப்புக் கொடுத்து பதிலுக்கு யுத்தநிறுத்தம் செய்ய மறுத்தது.

தலைவர் அறிவித்த ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் முறிவடைந்த அன்றே ஆனையிறவை மறுபடியும் கைப்பற்றுவோம் என்று பறைசாற்றிக் கொண்டு தீச்சுவாலை என்ற குறியீட்டுப் பெயருடன் ஒரு பெரும் படை நகர்வை ஆரம்பித்தது.

இதுவரை நடந்த தமிழீழச் சமர்களில் மிகவும் உக்கிரமான சமர் என்று சொல்லக் கூடிய இந்தச்சமரிலே எதிரியை தந்திரமாக உள்ளே வரவழைத்து அவனது நகர்வுகளை ஒரு முனைப்படுத்தி, பலமுனைத் தாக்குதல் நடத்தி அவனை நிர்மூலமாக்கிய தலைவரின் போர்த் தந்திரம் உலக வல்லரசுகளை திகைக்க வைத்தது. சிங்களப் படையினரின் போரிடும் ஆற்றல் உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் இந்தச் சமருடன் உடைக்கப்பட்டது. இந்தச் சமரில் சிறிலங்கா படைகளுக்கு ஏற்பட்ட படுதோல்வி, சிறிலங்கா அரசுக்கு முண்டு கொடுத்து நின்று, ஆயுத தளவாடங்களைக் கொட்டிக் கொடுத்த உலக நாடுகளுக்கு ஏற்பட்ட தோல்வியாக உலக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் விமர்சித்தனர்.

இது பற்றி 2001 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையிலே தலைவர் இவ்வாறு சொல்கிறார். "சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் நாம் நோர்வேயின் தூதுவர்களை சந்தித்துப்பேசியதை அடுத்து, சமாதான முயற்சியை முன்னெடுக்கும் நோக்குடன், நான்கு மாதங்களுக்கு ஒருதலைப் பட்சமாகப் போர்நிறுத்தம் செய்தோம். சந்திரிகா அரசு எமது அமைதி முயற்சியை கேலிசெய்து நிராகரித்ததுடன், ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இறுதியாக எமது போர்நிறுத்தம் முடிந்த ஒரு சில மணி நேரத்துக்குள் "அக்கினிச் சுவாலை" என்ற பாரிய படையெடுப்பை மேற்கொண்டது. இப்படையெடுப்பை முறியடித்து நாம் மேற்கொண்ட மூர்க்கமான எதிர்த்தாக்குதல், சிங்கள அரசுக்கு ஒரு உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது விடுதலைப்புலிகள் இலகுவில் இராணுவ ரீதியால் தோற்கடிக்கப்பட முடியாத பலம்பொருந்திய சக்தியாக இருக்கிறது என்பதை உணர்த்தியது"

## சிங்கள மக்களுக்கு அறைகூவல்

சந்திரிகா அரசு தமிழ்மக்களை அழிப்பதற்கும், தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படைநகர்வுகளை தடுத்து நிறுத்தி நிர்மூலமாக்கி, அரசபடைகளின் போரிடும் ஆற்றலைக் கேள்விக்குள்ளாக்கி, இராணுவச் சமநிலையில் முன்னணியில் நின்று கொண்டு, நமது தேசியத் தலைவர் சமாதானத்துக்கான அழைப்பை விடுத்தார்.



வன்னியில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியாளர் மகாநாட்டில் தேசியத் தலைவர் அவர்கள் பங்குபற்றுகிறார்.




ஜப்பானில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது

இந்த அழைப்பு அப்போது நடைபெறவிருந்த சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலை மையமாக வைத்து சிங்கள மக்களுக்கு விடப்பட்டது. 2001 ம் ஆண்டு மாவீரர் தின உரையிலே தலைவரின் இந்த அழைப்பு இவ்வாறு இருந்தது.

"தமிழரின் தேசிய இனச்சிக்கலானது, சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களின் அரசியல் சக்திகளை ஈர்த்துவருகிறது. சமாதானம் வேண்டி நிற்கும் சக்திகளுக்கும், சமாதானத்துக்கு எதிரான தீவிரவாத சக்திகளுக்கும், மத்தியிலான போட்டியாக இந்தத் தேர்தல்

நடக்கிறது. எனவே எதிர்காலத்தில் இந்தத் தீவில் சமாதானம் நிலைபெற வேண்டுமா? அல்லது போர் தொடர வேண்டுமா? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொது மக்களுக்கு விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதவரை அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேறாதவரை, இத்தீவில் சமாதானமும், நல்லெண்ண ஒத்திசைவும், பொருளாதார மேம்பாடும் எட்டப் போவதில்லை என்பதை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும், நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்ல. எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானதுமல்ல. சிங்கள இனவாதிகளின் அடக்குமுறைக் கொள்கைகள் காரணமாகவே, தமிழ் சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு தோன்றிப் போராக வெடித்திருக்கிறது. ஆயுத பலத்தினால் எமது மக்களை அடிமைகொள்ள முனையும் அரசுக்கும் அரசபடைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்து வருகிறோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாக பாதித்து



ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை ஆணையர் கிறிஸ் பாற்றன் அவர்கள் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களைச் சந்திக்கின்றார்.

வருகிறது என்பது எமக்குத் தெரியும். போர்வெறி கொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக் கொள்கையால் பல்லாயிரக் கணக்கான அப்பாவிச்சிங்கள இளைஞர்களும் அநியாயமாக் கொல்லப்பட்டு வருகிறார்கள். அது மட்டுமன்றி இந்தப்போரினால் எழும் பொருளாதாரப் பளுவை சிங்களப் பொதுமக்களே சுமக்க வேண்டியுள்ளது என்பதும் எமக்குத் தெரியும். எனவே இந்தக் கொடிய போருக்கு முடிவுகட்டி நிரந்தரச் சமாதானத்தை நிலைநாட்டுவதாயின் போர்வெறி கொண்ட இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்கி விடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வரவேண்டும்".

தலைவரின் இந்த வேண்டுகோள் சிங்கள மக்களை சிந்திக்க வைத்தது. போர் வெறிகொண்ட சந்திரிகாவின் கட்சிக் கூட்டணி 2001 மார்கழி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது சமாதானத்தை கொண்டு வருவேன் என்ற உறுதி மொழியோடு ரணில் விக்கிரமசிங்கா சிறீலங்காவின் பிரதமரானார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

தேசியத்தலைவர் அறிவித்த சமாதானத்துக்கான அழைப்பை அடிப்படையாக வைத்து, நோர்வே அனுசரணையாளர்கள் எடுத்த தீவிர முயற்சியால் 2002 ம் ஆண்டு மாசி மாதம் 22ம் நாள் தேசியத்தலைவருக்கும் சிறீலங்கா பிரதமருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (மாசி 21ம் நாள் தலைவரும் 22 நாள் ரணிலும் கையெழுத்திட்ட இந்த ஒப்பந்தம் மாசி 22ம் நாள் நடைமுறைக்கு வந்தது)

இந்த ஒப்பந்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரச படைகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக நடந்துவந்த போர் தற்காலிக ஓய்வுக்குள்ளானது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சந்திரிகா அரசால் தமிழர் தாயகப் பகுதியின் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடை படிப்படியாக தளர்த்தப்பட்டது. கண்டி யாழ்ப்பாணம் ஏ ஒன்பது நெடுஞ்சாலை, மக்கள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டது.

2002 ம் ஆண்டு சித்திரை மாதம் 08 நாள் திறக்கப்பட்ட ஏ 9 நெடுஞ்சாலையூடாக குடாநாட்டுக்குள் பிரவேசித்த விடுதலைப்புலிகளின் போராளிகளுக்கு உணர்வு பொங்க குடாநாட்டுமக்கள் அளித்த வரவேற்பு மக்களெல்லாம் தலைவர் பிரபாகரன் பக்கம் என்ற

உண்மையை மீண்டும் ஒருமுறை உலகிற்கு பறைசாற்றியது.

## ஊடகவியலாளர் மகாநாடு

2002 ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ம் நாள் தேசியத் தலைவர் ஊடகவியலாளர் மகாநாடு ஒன்றை நடத்துவதாக அறிவிப்பு வெளியான போது உலகம் பரபரத்தது. வியக்கத்தக்க



நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன் அவர்கள் தமிழீழத் தேசியத்தலைவரைச் சந்திக்கிறார்

சாதனைகள் பல புரிந்த, இந்த நூற்றாண்டின் பலம் மிக்க விடுதலை இயக்கத்தினதும் மக்களினதும் தலைவரை நேரில் பார்க்கவும், அவரது கருத்தைக் கேட்கவும் உலகெங்குமிருந்து பெரும் ஊடகங்களின் பிரதிநிதிகள் உட்பட 300க்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் வன்னிக்குப் படையெடுத்தனர்.

இந்த நூற்றாண்டில் நடந்த மிகப்பெரிய ஊடகவியலாளர் மகாநாடு என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு அந்த மகாநாடு வரலாறு படைத்தது. ஒரு காலத்தில் நாங்கள் தேடிச் சென்று செய்தி சொன்னாலும் திரும்பியே பார்க்காத பெரிய பெரிய ஊடகங்கள் எல்லாம் நமது தலைவரைப் பற்றியும் சமாதானத்தின் மீது தனக்குள்ள பற்றுறுதி பற்றியும் அந்த மகாநாட்டில் அவர் தெரிவித்த கருத்துக்களை ஒளி, ஒலி, அச்சு வடிவம் என்று பல் முனைகளில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

## ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள்

2002ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16,17,18 ஆகிய மூன்று தினங்கள் விடுதலைப்புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்து நாட்டின் சத்தாஹிப் கடற்படைத்தளத்தில் நடைபெற்றது. பின்னர் 2002 ஐப்பசி 31 தொடக்கம் கார்த்திகை 3 வரையும், 2003 மார்கழி 2 தொடக்கம் 5 வரையும், 2003 தை 6 தொடக்கம் 9 வரையும், 2003 மாசி 7தொடக்கம் 8 வரையும், 2003 பங்குனி 18 தொடக்கம் 21 வரையும் என்று தாய்லாந்து, நோர்வே ஜேர்மனி என்று பல இடங்களில் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

ரணில் அரசும் தங்களுடைய கட்சியின் அரசியல் பாரம்பரியத்துக்கு இணங்க இந்தப் பேச்சுவார்த்தையையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் தமக்கு சாதகமாக வைத்துக் கொண்டு தந்திரமாக நமது போராட்டத்தை சர்வதேச இராணுவ வலைப்பின்னலுக்குள் மாட்டிவிடும் வேலையை இரகசியமாகச் செய்துவந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் பேச்சுவார்த்தை மேசையிலும், ஏற்றுக் கொண்டபடி போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய புனர் வாழ்வுப்பணிகள் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இராணுவ நடவடிக்கைகள் மற்றும் உயர் பாதுகாப்பு வலையங்கள் என்பவற்றால் தங்களது சொந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், இரவல் வீடுகளிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் வாழவிட்டுவிட்டு பேச்சுவார்த்தையை இழுத்தடித்துச் செல்ல தலைவர் விரும்பவில்லை.

தமிழ்மக்களின் அத்தியாவசியமான தேவைகளை விரைந்து நிறைவேற்ற ஏதுவான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை முன்வைத்துவிட்டு நேரடிப் பேச்சுவார்த்தையில் இருந்து

தற்காலிகமாக ஒதுங்கிக் கொண்டார்.

## சந்திரிகாவின் மீள்பிரவேசம்

தேசியத் தலைவருக்கும் ரணிலுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் தொடர்ச்சியாக நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளால் சிங்கள மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழந்திருந்த சந்திரிகா ரணில் தமிழீழத்தை பிரித்து தம்பாளத் தட்டில் வைத்து தலைவரிடம் கொடுக்கப் போகிறார் என்பது போலவும் சிறீலங்காவின் பாது காப்புக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டது போலவும் பிரச்சாரம் செய்ததுடன் ரணிலின் அரசையும் வீழ்த்திவிட்டார்.

2004 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடந்த தேர்தலில் இனவாத சந்தர்ப்பவாத ஜே.வி.பி கூட்டணியோடு சேர்ந்து தீவிரமான இனவாதத்தை முன்வைத்துப் போட்டியிட்ட சந்திரிகாவின் கூட்டணி வெற்றிபெற, தமிழர் தாயகத்தில் தேசியத்தலைவரின் தலைமைத்துவதை ஏற்றுப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று, விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் மக்களெல்லாம் என்றும் தலைவர் பிரபாகரன் பக்கம் தான் என்பதை அனைத்துலக சமூகத்தக்கு மறுபடியும் எடுத்துச் சொல்லப்பட்டது.



கடற்புலிகளின் அணிவகுப்பை தேசியத் தலைவர் அவர்கள் பார்வையிடுகின்றார்

## பொறிவைத்தவரையே பொறிக்குள் மாட்டியவர்

பொதுவாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கான காலகட்டம் என்பது பெரும்பாலான விடுதலை இயக்கங்களுக்கு சோதனைக் காலகட்டமாகவும், அந்த விடுதலை இயக்கங்களை உலக மேலாதிக்க சக்திகள் ஒரு பொறிக்குள் சிக்கவைத்து தாங்கள் தங்களுடைய நலனுக்காகத் திணிக்கின்ற ஒரு தீர்வை தவிர்க்க முடியாதபடி ஏற்றுக் கொள்ள வைக்கின்ற ஒரு காலகட்டமாகவும் இருந்திருக்கிறது. பாலஸ்த்தீனம், எரித்திரியா, அயர்லாந்து, கொலம்பியா போன்ற பல நாடுகள் இதற்கு உதாரணமாக இருக்கின்றன.

எங்களுடைய தேசியத் தலைவர் விடயத்திலும் சிங்கள ஆளும் வர்க்கம் அப்படித்தான் கணக்குப் போட்டது. போர் இல்லை என்றால் அவரால் தாக்குப் பிடிக்க முடியாது. சமாதான காலத்தில் ஊடுருவல்களைச் செய்தும் துரோகிகளை விலைக்குவாங்கியும் அவரை பலவீனப் படுத்தி தாங்கள் விரும்பிய ஒரு தீர்வை உலக மேலாதிக்க சக்திகளின் துணையோடு திணித்து விடலாம் என்று சிங்கள ஆளும் வர்க்கம் மலை போல நம்பியது.

ஆனால் நமது தேசியத் தலைவர் இதையெல்லாம் தவிடுபொடியாக்கி போரில் மட்டுமல்ல அரசியலிலும் நாங்கள் சாணக்கியர்கள் என்பதை தனது தற்போதைய ஒவ்வொரு நகர்வுகள் மூலமும் நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

விடுதலைப் போராட்டம் என்பது பலவீனமான நிலையில் இருந்து கொண்டு சலுகையாகக் கொடுப்பதை ஏற்பதற்கல்ல, பறிக்கப்பட்டதை, மறுக்கப்பட்டதை, சுயகௌரவத்தோடு, பலத்தோடு நின்று திருப்பி எடுப்பதற்கு அல்லது மீட்பதற்கானது என்பதை உலகிற்கு உணர்த்திய ஒரே தலைவர் நமது தேசியத் தலைவர் மட்டும்தான்.

எப்போதும் அதிகார வர்க்கம் முன்வைத்த தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தும் விடுதலை இயக்கங்களின் நடைமுறைக்கு மாறாக, விடுதலைக்குப் போராடுகின்ற மக்கள் முன்வைக்கின்ற தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில்தான் பேச வேண்டும் என்கிற முன்மாதிரியை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை திட்டத்தை முன் வைத்தன் மூலம் உருவாக்கியவரும் நமது தேசியத்தலைவர் தான்.

இன்று இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் நியாயத் தன்மையையும், அதன் அடிப்படையில் பேசவேண்டியதும், அதை வழங்க வேண்டியதும் அவசியம் என்பதை உலகநாடுகள் ஏற்றுக் கொண்டு விடுதலைப்புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினரை, அழைத்துப் பேசுகின்ற நிலையில் சிங்கள அதிகார வர்க்கமும் சந்திரிகா அரசும் ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் தாங்கள் வைத்த பொறிக்குள் தாங்களே சிக்கித் தவிக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

## தலைவரின் இன்னொரு பரிமாணம்

நமது தேசியத் தலைவரின் ஆளுமை என்பது போர் மற்றும் அரசியல் பக்கங்களுடன் நின்றுவிடவில்லை. சமூகம், பொருளாதாரம்

நிர்வாகக் கட்டமைப்புகள், மனிதாபிமானப் பணிகள் என்று பல்துறை சார்ந்து வியாபித்து நிற்கிறது.

## செஞ்சோலை சிறுவர் இல்லம்

யுத்த சூழ்நிலையால் பெற்றோரை, பாது காவலரை இழந்த பெண்பிள்ளைகளின் பரா மரிப்புக்காக தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்புரையின் பேரில் 1991 ஐப்பசி 23ம் நாள் செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் அனுப்பப் பட்ட வாழ்த்துச் செய்தியில் "வரலாற்றுப் பெரு மைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்தச் செஞ்சோலை வனாகத்தில் நாம் இன்று இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர் விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்க ளாய் மாறி ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந் தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்" என்றார்.

## காந்தருபன் அறிவுச்சோலை

சிறீலங்கா அரசு திணித்த கொடிய போரி னால் பெற்றோரை இழந்த ஆண்பிள்ளைகளின் பராமரிப்புக்காக தேசியத்தலைவரால் காந்த ரூபன் அறிவுச் சோலை ஆரம்பிக்கப்பட்டது. 1993 கார்த்திகை 13ம் நாள் காந்தருபன் அறிவுச் சோலை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது அவர் ஆற்றிய உரையில் "எல்லோருக்கும் பொது அன்னையான தமிழ் அன்னை இந்தச் சிறுவர்களைத் தாயாக அரவணைத்திருக்கி றாள். எமது போராளிகள் அனைவருமே இவர் களது சகோதரர்கள். எமது இயக்கம் என்னும் மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணைபிரி யாத அங்கமாக இணைந்து உள்ளனர். தனிக் குடும்பம், அந்தக் குடும்பத்தை சுற்றி உறவுகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப் பால் ஒரு பரந்த வாழ்வையும் விரிந்த உறவு களையும் வைத்துக் கொண்டு வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்தச் சமூகச் சூழலில் இவர்களிடம் மண் பற்றும் மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றி வளர சடுபடுகின்றோம். ஆனால் இத்தகைய சமூக சேவைகள் வெற்றி பெற சமுதாயம் தனது ஆக்கபூர்வமான உதவிகளை மனப்பூர்வமாக வழங்க வேண்டும்" என்று கூறினார்.

## வெற்றிமனை

போரின் அழுத்தங்களாலும், தங்கள் கண் முன்னாலேயே உறவுகளை பறிகொடுத்த அதிர்ச்சியாலும் மனநிலை பாதிக்கப் பெண் களை பாதுகாத்து உரிய சிகிச்சை வழங்கிப் பராமரித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப் பதற்காக வெற்றிமனை என்ற இல்லமும், அதை பராமரிக்கவும் சமூகத்தின் பல்வேறு கொடுமை களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் பாது காப்பும் தன்னம்பிக்கையும் கொடுத்து புனர் வாழ்வளிப்பதற்குமாக பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் என்ற அமைப்பும் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டது.

## மூதாளர் பேணகம்

போரில் தமது பிள்ளைகளை இழந்து ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்ட முதியோரையும், சொந்தபந்தங்கள் இருந்தும் அவர்களினால் கைவிடப்பட்ட முதியோரையும் 'அவர்கள்' யாரு




நாற்படையினரின் அணிவகுப்பை தேசியத் தலைவர் அவர்கள் பார்வையிடுகின்றார்

மற்றவர்களல்ல, பல்லாயிரக்கணக்கான, போராளிகளையும் இலட்சக்கணக்கான தமிழீழ மக் களையும் பிள்ளைகளாகவும் சொந்த பந்தங்களாகவும் கொண்டவர்கள் என்ற நம்பிக்கை யைக் கொடுத்து முதுமையில் அவர்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்காக தேசியத் தலைவரால் இந்த மூதாளர் பேணகம் உருவாக்கப்பட்டது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

போரினால் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கும் சொந்த இடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டு அகதிமுகாங்களிலும் தற்காலிக குடிசைகளிலும் வாழும் மக்களின் நலனுக்காக தமிழர் புனர் வாழ்வுக்கழகம் தேசியத்தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1985ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தேவைபற்றி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிடும் போது "தமிழீழ மக்கள் இரு போர் முனைகளைச் சந்தித்துக்



கொண்டிருக்கிறார்கள். ஒன்று சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துமண்மீட்கும் போர் முனை, மற்றையது சிங்களப் பேரினவாத அரசின் பொருளாதாரத் தடைகள் என்னும் அடக்கு முறையை எதிர்த்து உற்பத்திப் போர்முனை. இதயம் எவ்வாறு குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்குபடுத்தி நோய்களையும் பாதிப்புக்களையும் வென்றிட உடலுக்கு உதவுகின்றதோ அவ்வாறே தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமிழீழம் எங்கும் உழைப்பைக் குருதியாய் ஓட வைத்து தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியின் அத்திவாரமாக திகழ வேண்டும்" என்றார். இவ் அமைப்பின் வளர்ச்சியால் இன்று தமிழீழத்தில் பல குடும்பங்கள் நிவாரணத்தை நம்பி வாழாமல் தாமாகச் சுயதொழில் மூலம் வாழும் நிலையைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## தியாகி திலீபன் மருத்துசேவை

சிங்கள அதிகாரவர்க்கம் தமிழ்மக்களை போராலும் பட்டினியாலும் கொல்ல நினைத்தது ஒருபக்கம் என்றால், மருந்துத் தடையை விதித்தும் மருத்துவ மனைகளை அழித்தும், நோயாலும் காயங்களுக்கு உரிய சிகிச்சை இன்மையாலும் எமது மக்களை கொல்ல வைத்தது. இன்னொரு பக்கமாக இருந்தது. இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்ட நமது தேசியத்தலைவர் போராளி மருத்துவர்களைக் கொண்டு, கிடைக்கும் அடிப்படை உயிர்காக்கும் மருந்துகளை வைத்துக் கொண்டு மக்களை காப்பதற்காக உருவாக்கிய அமைப்புத்தான் தியாகி திலீபன் மருத்துவ சேவையாகும். இன்று இந்த தியாகி திலீபன் மருத்துவ சேவை தமிழர் தாயகமெங்கும் வியாபித்த கிராமிய மக்களின் வாழ்வோடு ஒன்றிவிட்ட ஒரு அமைப்பாக மாறிவிட்டது.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்

தமிழீழத்தின் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகமாகும். 1994 ஆம் ஆண்டு வைகாசி 6ம் நாள் வேளாண் மன்னர்களுக்கு பரிசு அளித்து கௌரவித்து உரையாற்றிய தமிழீழத் தேசியத் தலைவர் "தமிழீழம் ஒரு செழிப்பான பூமி, வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக் கூடிய நீர் வளத்தையும் நில வளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனம் கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த இலக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். ஆக்கபூர்வமான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இந்த முயற்சிகள் மேலும் மேலும் தீவிரம் பெற்று, விடுதலை பெறும் தமிழீழம் தங்கு நிலையற்றதாக தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமைய வேண்டும்" என்றார்.

## தமிழீழப் படைத்துறைப் பள்ளி

1991 புரட்டாதி 19ம் நாள் உருவாக்கப்பட்ட தமிழீழ படைத்துறைப் பள்ளியின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "தமிழீழப் படைத்துறைப் பள்ளி எனது முயற்சிகளில் ஒன்று. எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ளவேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, புத்திசாலிகளாக,

தேசப்பற்று உள்ளவர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்" என்று கேட்டிருந்தார்.

### விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது கலையும் பண்பாடும் எமது தேசத்தின் ஆன்மா. இந்த நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவிற்கு 1992 ஆடி 15 இல் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அனுப்பிய செய்தியில், "எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி, மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தைக் கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது" என்று குறிப்பிட்டிருந்தார்.

### புலிகளின் குரல் வானொலிச் சேவை

தமிழினத்தின் குரல் வளையை நசித்து தமிழ் மக்களை சிறீலங்கா அரசு கொன்று குவித்த போது உள்ளூரிலும் உலக நாடுகளிலும் இருந்த ஊடகங்கள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டிருந்த நேரத்தில் எங்களுடைய உரிமைக் குரலை உலக அரங்குக்கு உரத்துச் சொல்வதற்காக தேசியத் தலைவர் புலிகளின் குரல் வானொலியை உருவாக்கினார். இந்தப் புலிகளின் குரல் வானொலிச் சேவையின் ஓராண்டு பூர்த்தி நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் "எமது எதிரியான சிங்கள அரசும் அதன் கைக்கூலிகளான தமிழ்த் துரோகக் குழுக்களும் எமக்கு எதிராக மிகவும் கேவலமான விஷமப் பிரச்சாரங்களை ஆற்றி வருகின்றன. எதிரியின் பொய்ம்மையான கருத்துப் போருக்கு எதிராக உண்மையின் ஆயுதமாக எமது வானொலியின் குரல் ஒலிக்க வேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசாக புலிகளின் குரல் ஒலிக்க வேண்டும்" என்றார்.

### தமிழீழ சட்டக் கல்லூரி

1993 தை 25ம் நாள் தமிழீழ சட்டக் கல்லூரியில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன்.அவர்கள் உரையாறும் போது "தமிழீழத் தனியரசு என்ற இலக்கை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். அந்தத் தனியரசுக்கான அத்திவாரங்களை நாம் இப்போதிருந்தேகட்டியெழுப்ப வேண்டும். நீதித்துறை அரச நிர்வாக இயந்திரத்தில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு நிறுவனம் என்பதால் இப்பொழுதிருந்தே இத்துறை சம்பந்தமாக எமது போராளிகளாகிய உங்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. சமூக நிர்வாகத்தில் நீதித்துறை பிரதானமானது. நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதிபரிபாலனத்தைக் கையாள வேண்டும். முன்பு நீதிபரிபாலனத்திற்கென நாம் உருவாக்கிய இணக்க மன்றுகள் என்ற அமைப்பில் பல தவறுகள் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். இந்த இணக்க மன்றுகளால் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் மக்களின் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் இலக்காகின. சுயநலமற்ற முறையில், பாரபட்சமற்ற முறையில் நீதி வழுவாது தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. எனவேதான் ஒழுங்கும் கட்டுப்பாடுமுடைய எமது இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளைக் கொண்ட நீதி நிர்வாகமானது ஒரு வலுவான அரசிற்கும் கட்டுப்பாடுடைய சமூக அமைப்பிற்கும் ஆணிவேரானது. சமூக நீதி சரிவரப் பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வளரும்" என்றார்.

### தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் 1993 மாசி13 இல் வெளியிட்ட அறிக்கையில் "மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது. சமுதாய விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிக்கும் கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். இன்று தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியைத் திட்டமிட்ட வகையில் சிறீலங்கா அரசு புறக்கணித்து வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவர் சமூகம் கல்வியை கற்க வேண்டியிருக்கிறது. தமது ஆர்வத்தினாலும் திறமையினாலும் கடும் உழைப்பினாலும் கல்வி கற்றுப் பொதுத் தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வுக்கு ஈடாக முதல் தடவையாக தமிழீழக்கல்வி மேம் பாட்டுப் பேரவை சிறப்புற நடாத்தி முடித்திருக்கிறது. இந்த முயற்சியை நான் மனப் பூர்வமாக பாராட்டுவதுடன் இத்தேர்வில் தோற்றிய தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியிருந்தார்.

இவை தவிர தமிழீழ வைப்பகம், தமிழீழ நீதி நிர்வாகத்துறை, நிதி நிர்வாகத்துறை, காவல் துறை, விளையாட்டுத்துறை, என்று ஒரு முழுமையான நாட்டின் கட்டமைப்புக்கு ஏற்றவிதத்தில் தமிழீழ தனியரசுக்கான இராணுவ அரசியல் பொருளாதார சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்கி வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்.

## வரலாற்றுப் பெருமை

ஒருகாலத்தில் தமிழர்கள் என்றால் யார் என்றே தெரியாத நிலைதான் உலகத்தில் இருந்தது. தமிழர்களை தெரிந்த மட்டங்களில் கூட அடிமைகள் என்றும் நாடோடிக் கூலிகள் அவர்களை சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்றும் தான் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இந்த அதிகார மமதையுடன் கூடிய நம்பிக்கை எல்லாம் இன்றைக்கு தகர்த்தெறியப் பட்டிருக்கிறது. இன்றைக்கு நமது தேசியத்தலைவரால் உலகில் தமிழர்களுக்கென்ற ஒரு அடையாளமும் முகவரியும் கிடைத்திருக்கிறது.

தமிழர்கள் என்றால் அடிவாங்கி வாங்கி அழுதுகொண்டும் தொழுதுகொண்டும் வாழப் பிறந்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தவர் அவர் உலக வரலாறு கிறிஸ்துவுக்கு முன் பின் என்று எழுதப்படுவது போல தமிழினத்தின் வரலாறு நாளைக்கு தேசியத் தலைவருக்கு முன் பின் என்றுதான் நிச்சயம் எழுதப்படும். அந்த வரலாற்று நாயகன் வாழுகின்ற காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்கின்ற பெருமை 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவதைப் போல' நிச்சயமாக எமக்குக்கிடைக்கும்.


தகவல்கள்

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம்.
tamil net
eelamweb
IPCS(Institute of peace and conflict studies)
Worldpress.org
Global-defence.com



# நாங்களாக இருப்போம் நாம்

அம்புலி

‘கொங்கிறீற்று’ச் சித்திரங்கள் பார்த்து
புளகிக்கின்றன எம்மூர்கள்.
‘றெகினோ’ எம் முகவரி தேடி வந்ததால்
கூரைகளின் தாரகைகள்
காணாமற் போயின.
கறையான்களின் சொந்தம் தவிர்த்த
மனைகள்
வசிப்பதற்கு ஏதுவாயிருக்கிறது
இப்போது.
கந்தகப் புகை கவிழ்ந்த
எங்கள் நாளாந்தம்
நிம்மதிப் பெருமூச்சுதிர்த்த போதில்
அழகாயிருக்கிறது எங்களது வாழ்வும்.

கனேடியத் தெருக்களில்
தமிழீழம் வசிப்பதைவிடக்
கிளிநொச்சி நகரத்தில்







சிங்கப்பூர் உருவாகினால்
நன்மையே யாவருக்கும்.

ஆனாலும்
எழும்புகின்ற கட்டடங்கள்
என் புருவாகி நிற்கும்
காட்சியை நினைத்துப்
பார்த்தீர்களா யாராவது?
தார்ச் சாலைகளில் குருதி பாய்வதாய்
கனவு வரவில்லையா உங்களுக்கு.
பதிந்து பறக்கும்
உலங்கு வானூர்திகள்
சின்னப் புன்னகை விசிறுவதாய்
சிரித்துப் பேசிய மனிதர்கள் பலருக்கு
கூர் நகம் நீள்வதாய்
பிரமை தோன்றியிருக்கிறதா?
எப்போதாவது
முட்கம்பிகள் முனை துருத்தி
கனவுகள் கிழியத் துயர்
விழிப்பு வந்து எழவில்லையா நீங்கள்.
அழிக்க முடியவில்லை நெஞ்சுள்
வடுவாகிப் போன அந்த வாழ்க்கையை.
குளிரூட்டிய மீன்களைவிட
மலிந்து போகுமோ எங்கள் மதிப்பு.
காய்கறிகளை விடக் குறைந்து
போகுமோ எம்முயிர்களின் விலைகள்.
காலத் தராசு சுதந்திரத்தை எடை போட
உயிர்களைக் கேட்கிறதா
இன்னுமின்னும்.
உதிரமே நனைத்தே
மீதி வரலாறு எழுதப்படுமெனின்
மகிழ்வாய் வரவேற்போம் அதை.
பற்றையும் காடு குடைந்த
இவ்விடமும்
மீண்டும் சொந்தமென வந்தாலும்
நிம்மதியே நிறையட்டும்
ஓர் பொழுது.

பசியாய் வயிறு நிறைய
கண்ணீரால் முகங்கள் கழுவப்பட
சாப்பறையால் வாசல்கள் அதிர
பிண ஊர்வலங்களால் தெருக்கள் நிறையக்
காலம் கழுத்தில் கருக்கிட்டாலும்
எங்களதாய் இருக்கட்டும் எல்லாமும்.

தேசியம் உடைக்க விளைந்த
துரோகத்தை விடவும்
ஆபாசங்களால் மலிந்த மனங்களை விடவும்
எதூதர் அனுப்பிய
தெரு ஊர்திகளை விடவும்
அந்த வாழ்க்கை
எப்போதும் உயர்ந்தது.

அணுகுண்டுகளை அடிப்படிக்குள்
வைத்துக் கொண்டிருக்கும்
மானுட நேயப் போதகரை விட
சிறைக் கைதிகளோடு
சித்திரவதை பேசும்
மனித உரிமைகளை விட
வெடிகுண்டு சுமக்கும்
எங்கள் தீவிரவாதம்
உயர்வானது உன்னதமானது.

மலைகளில் மிருகங்களாய்
உலாவுவதை விடப்
படுகுழியிலும் மனிதர்களாக இருப்போம்.

# புரந்தார் கண் நீர்மல்க



செ. யோகநாதன்

நட்சத்திரங்கள் களைத்துச் சோர்ந்து படுத்திருந்த வானத்தைப் பார்த்தபடியே அமைதியாக உட்கார்ந்திருந்தாள் வசந்தி. மனதினுள் அளவுமீறிய மகிழ்ச்சி கிறுகிறுத்துக்கொண்டிருந்தது. இதுவரை இப்படிப் பொங்கிப் பிரவகிக்கும் மகிழ்ச்சி அவளுக்கு ஏற்பட்டதில்லை. சூரியகண்கள், நெடுந்தூரநோக்கில் பார்த்தபடி இருந்தன. பனிச்சென்று யாவுமே இன்றைக்குப் புத்தம் புதிதாக அவளுக்குத் தெரிந்தன.

அந்தச்செய்தியை அவள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்தாள் என்பது உண்மையென்றாலும் அதைத் தெரிந்துகொண்டதும் மனதினுள் மகிழ்ச்சி பிரவகித்தது. அவளது கடந்தகால வாழ்வும், ஒவ்வொரு நாட்களும் பூவிதழ்களாய் அவிழ்வதுபோல மனம் பரவசம் கொண்டது. இந்த மகிழ்ச்சிப் பிரவாகத்தை யாரிடம் சொல்லிக் கொண்டாடுவது? யாரிடமும் சொல்லமுடியாது.

மங்கிய நட்சத்திரங்களிடையே ஒரு நட்சத்திரம் திடீரென்று ஒளிப்பிரவாகமாய் ஊற்றெடுப்பதுபோல அவளது கண்கள் உணர்ந்தன. இப்படி ஒரு காட்சி தனக்கு வெகு அபூர்வமாகத் தோன்றும் என்று அவள் மலரவளிடம் ஒருநாள் சொன்னபோது அவள் முழுமையாகச் சிரித்தாள். பிறகு அவளது விரல்களைப் பற்றிக்கொண்டு வாஞ்சையோடு பார்த்தாள். கொஞ்சநேர இடைவெளிக்குப் பிறகு கட்டாயம் உனக்கு அப்படியான அபூர்வக் காட்சி தோன்றுவது அதிசயமே இல்லை என்று சொன்னாள். அவளை அறியாத பரவசம் கண்களிலே வெளிச்சமாய் படர்ந்தது.

இவ்வளவும் சொல்லிட்டுத் தன் உணர்வுகளை வார்த்தைகளில் கொண்டுவர முடியாதவள்போல சில கணங்கள் மௌனமாக இருந்தாள் அவள். அந்த மௌனத்துக்கு எண்ணற்ற ரகசியங்கள் உட்புதைந்திருந்தன. அவர்கள் இருவரிடையேயும் இப்படிதான் மௌனமே சிலவேளைகளில் நீண்ட நேரத்துக்குப் பேச்சுமொழியாகிவிடும்.

மீண்டும் வானத்தைப் பார்த்தாள் வசந்தி. இப்போது அந்த நட்சத்திரத்தை காணவில்லை. முன்னர் போலவே எல்லா நட்சத்திரங்களும் பாதிக்கண்களை மூடிக்கொண்டாற்போல் இவள் உணர்ந்தாள். இதேபோல தக, தகக்கின்ற பிரகாசம் பொருந்திய நட்சத்திரங்கள் திடீர் என்று அவளின் பார்வையில் அழுத்தமாகப் பிரகாசிக்கும். ஆனால் அவள் அதை அடிக்கடி காணாவிடினும் கண்டபொழுதிலேயே ஒரு பேரொளிபோல மனத்தினுள் அழுத்தமாக விதை ஊன்றிவிட்டது. அந்த விதை உமிழ்ந்த பிரகாசம் அவளை எல்லாத் துன்பங்களில் இருந்தும் சட்டென்று உயரத்துக்குத் தூக்கிவிடும். ஆனால் அதற்கு ஒரு சரியான இலக்கணம் சொல்லமுடியாதபடி வெளிச்சம் உமிழ்கின்ற ஆற்றல் எப்படி வாய்த்தது என அவள் ஆச்சரியப்பட்டாள். அந்த ஒளியில் எல்லாமே இருந்தன. ஆனால் நேருக்கு நேராகப் பார்க்க முடியாது எனினும் பார்க்கவேண்டுமென மனம் உன்னுகின்ற பிரகாசம் அது.

இப்பொழுது வானத்தின் வெகுதொலைவில் ஒற்றைச்சுடராய் பொறி ஒன்று படுகின்றது. கண்களைத் தீட்சண்ணியப்படுத்தி விட்டு பிரமிப்புக்குள் ஆழ்த்திவிட்டு அந்த வெளிச்சம் காணாமற்போயிற்று எனினும் என்ன? அந்த வெளிச்சமும், தீட்சண்ணியமும் எத்தனை விந்தைகளை விதைத்திருக்கும். யாருக்கும் சொல்லாத மௌனத்துடன்.

அவள் கரும்புலிக்கான பூரண பயிற்சி பெற்றதும் மனதினுள் எல்லையற்ற மகிழ்ச்சி பிரவகித்தது. சின்னஞ்சிறிய கிராமம் முழுவதும் அழித்து நாசமாக்கப்பட்டு அந்த அப்பாவி மக்கள் கொத்திக் குதறப்பட்டபோது அவளின் பிஞ்சுக் கண்கள் வேதனையோடு நொந்தன. அவளால் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடமுடியவில்லை. ஆனால் ஒரு வைரம் பாய்ந்த உறுதி நெஞ்சினுள்ளே வலுக்கொண்டது. இவ்வளவு கொடுமைகள் செய்த பிறகும் மிருகக் கூட்டங்களைப் போல அவர்கள் துள்ளித்துள்ளி ஆடினர். கண்களில் கயமை மின்ன அங்கே உயிரிழந்து கிடந்த பிஞ்சுகளையெல்லாம் கால்களால் உருட்டியும் புரட்டியும் கேவலப்படுத்தினர்.

அவளுக்கு அந்த மறைவிடத்தில் இருந்தாவது ஏதாவது செய்ய வேண்டும்போல தீக்கனல் நெஞ்சினுள் பிரவகித்தது. ஆனால் வெறும் கையும், காலும் எதைச்செய்ய முடியும்?

எல்லாம் அடங்கி ஒய்ந்து மரணமும் கொடூரமும் கரையை மூடிக்கிடந்த அந்த வேளையில் அவளுக்குள் ஒரு வெளிச்சம் மெல்ல முகத்தை எட்டிப்பார்த்தது. அமைதியாக எழுந்தாள்.

இந்த அமைதிக்கூடாக நிறைய நெருப்புக்கோடுகள் உருவெடுத்தன. அந்தக் கிராமத்திலே மௌனத்தைச் சுமந்துகொண்டு எரிந்து காயப்பட்ட உணர்வோடும். இரண்டொரு நாட்கள் அவள் திரிந்தாள். இந்தக் கொடூரமான கொடுமைகள் ஏன் என்ற கேள்வி அவளது உடல் எங்கும் ராட்சத நெருஞ்சி முட்களாய்ப் பிய்த்தெறிந்தன. ஆனாலும் மனம் சோர்வடையவில்லை. இதற்கெல்லாம் பழிவாங்கவேண்டும் என்ற ஆக்ரோசம் நெஞ்சினுள்ளே தணற்பூக்களாய் படர்ந்துபரவின.

இந்தவேளையிற்தான் அவள் ஒருகையை இழந்த அனுசுயாவைச் சந்தித்தாள். அனுசுயா வாட்டசாட்டமாய் இருந்தாள். கண்களிலே மின்னுகின்ற துணிவைப் பார்க்கின்றபோது அவளின் வார்த்தைகளை அப்படியே ஒப்புக்கொண்டு அவள் சொன்னபடி எதையும் செய்யக் கூடியவர்கள். அவளுடைய சின்னக் கண்களில் எவரையும் வசீகரிக்கும் தீட்சண்ணியம் இருந்தது. சட்டென்று அவள் கண்களை வசந்தி நிமிர்ந்து பார்த்தாள். கண்களோடு சேர்ந்து மனத்திலும் இருட்டு பளீரென்று அறைந்தது. இவளை அறியாமல் விம்மல் சுழித்து உதிர்ந்தது.

அவளின் மனதை உடனே உணர்ந்துகொண்டாள். அவள் "ஏன் திடுக்கிட்டுப்போனாய்? என் ஒற்றைக் கண்ணிலேயே என் இரண்டு கண்களின் வெளிச்சமும் இருக்கின்றது. அதைப்பற்றிக் கவலைப்படாதே" என்றாள். இப்படி யார் செய்தது?

யார் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறாய்?

அந்த மிருகங்கள்தான் என்றாள் வசந்தி.

கொஞ்சநேரம் இருவரும் மௌனத்தில் மூழ்கிப்போய் இருந்தனர்.

"இந்த கொடுமைகளுக்கு ஒரு முடிவு வராதா?"
என்று தன்முன்னே உள்ள பலரையும் பார்த்துக் கேட்பது போலக் கேட்டாள் வெப்பமான பெருமூச்சுடன் வசந்தி.

அனுசுயா மௌனமாகவே இருந்தாள். மௌனத்தை அவளே கலைத்தாள். "அப்போ இதற்கு என்ன செய்யலாம்?"

"இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்" "எப்படி?" ஒற்றைக் கண்ணில் வெளிச்சம் சுடர அவளைப் பார்த்தாள் அனுசுயா.

"நாங்கள் இதற்கு எதிராகப் போவதைவிட வேறு ஒரு வழியுமில்லை" தன்னை அறியாத பரவசத்துடன் கொஞ்சம் கேள்விகளுடனும் அவளைப் பார்த்து, "நீங்கள் என்ன சொல்லுறியளோ அதன்படி நான் எதையும் செய்வேன்" என்றாள் வசந்தி.

"அப்படியா?" புன்னகை மணக்க அவளின் கைகளை மிகுந்த வாஞ்சையோடு பற்றிக்கொண்டாள் அனுசுயா.

கைகளிலே ஆயுதங்களோடு பிறந்தவள்போல அவ்வளவு நுட்பமாகச் செயற்பட்டாள் வசந்தி. ஒரே நேரத்தில் கண்களும், கைகளும் எதையுமே துல்லியமாகத்தொட்டு நிற்கும். ஆயுதங்களைக் கையாள்வது மட்டும்மல்ல புதிய ஆயுதங்களை உருவாக்குவதிலும் அவள் மின்னலாய்த் தெறித்தாள்.

சில மாதங்களுக்குள்ளாகவே அவளின் வீரசாகசங்கள் எல்லாரையும் பிரமிக்கவைத்தன. புதியவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதில் ஆர்வத்தோடு இருந்தவர்களுக்கு அவள் மின்னலானாள். கரும்புலியான அவள் அன்றைக்குத் திடீரென்று எல்லைற்ற மகிழ்ச்சியடைந்தாள். இந்த மகிழ்ச்சி அளக்கமுடியாது விரிவடைந்தது. கண்கள் மூடிய போதும் திறந்தபோதும் உறக்கத்திலும் விழிப்பிலும் அவளை அந்தப் பேரொளியே வசீகரித்துக்கொண்டது.

பயிற்சியில் இருந்த அவள் எதிர்பாராதவிதமாக அங்கு மௌனம் பிரவகித்ததைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். வார்த்தைகளே வரவில்லை கண்கள் இமைக்கவில்லை. கணப்பொழுதுக்குள் எங்குமே மின்னல் தொடர்ந்து வெளிச்சம் பூத்துப் பரவினாற்போல அவள் பிரமித்துப்போய் நின்றாள்.

"என்ன?" அந்தக் கனிந்த குரல் அவளை இன்னும் பிரமிப்பினுள் ஆழ்த்திற்று.

"வசந்தி உம்முடைய ஆளுமையில் எனக்கு நம்பிக்கையுண்டு" அவள் அவரை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல், பார்க்காமல் இருக்கவும் முடியாமல் மனம் தத்தளித்தாள். அபூர்வமான அந்த நட்சத்திர வெளிச்சம்போன்ற பார்வையை அவளால் நேர்கொண்டு பார்க்கமுடியவில்லை. மௌனமாகவே நின்றாள். "உம்முடைய திறமை மிக அபூர்வமானது" வாழ்வின் எந்தக் கட்டத்திலும் உணர்ச்சிவசப்படாத அவள் கண்களால் பொலபொலவென்று கண்ணீர் பெருகி ஓடுவதை உணர்ந்தாள். நெஞ்சு தளதளத்து விம்மிற்று. அந்த அபூர்வ நட்சத்திரத்தின் வெளிச்சம் இப்போதும் அவளைப் பரிவோடும், கனிவோடும் வருடிக்கொடுப்பதாக அவள் உணர்ந்துகொண்டாள்.

அந்தக் கொஞ்சநேரம் அவளுக்கு வாழ்க்கையின் ஆழ்ந்த அர்த்தத்தை விளக்குவதாக அவள் மனம் உணர்ந்தது. தந்தையையும், தாயையும் ஒரே உருவில் கண்டு புளகாங்கிதம் அடைந்தவள்போல மௌனம் படர்ந்திருந்த அந்த இடத்தில் அவள் பிரமித்து நின்றாள். சுடர்விடும் அந்த நட்சத்திரம் சட்டென்று அங்கிருந்து மறைந்தது. அங்கு நின்றவர்கள் பரவசத்துடன் வார்த்தைகள் அற்றவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

முன்னர் ஆயுதங்களோடு இயங்கியதைவிட இப்போது வீறுகொண்ட நெருப்பாய் சுடர்ந்துகொண்டிருந்தாள். முன்பு ஒருநாள் வீதியெங்கும் குரூரமாக கொத்திக் குதறப்பட்ட பச்சைப் பிஞ்சுகள், உதிர்ந்த மொட்டுக்கள் யாவுமே அவளை அறியாமல் அவளின் கண்களிலே வந்து நின்றன. வலிவும் பொலிவுமாய் இருந்து உடல் சிதைந்த அனுசுயா பளீரென்ற பார்வையுடனும் பளிச்சென்ற புன்னகையுடனும் அவள் தோள்களில் கை கொடுத்தாள்.

வானத்தை நிமிர்ந்து பார்த்தாள் வசந்தி. அந்தப் பளபளப்பான ஒற்றை நட்சத்திரம் இப்போது மேலும் மேலும் ஒளிசுடர்ந்துகொண்டிருந்தது. கண்களால் பார்க்கமுடியாத பிரகாசம் எங்கும் பரவுவதாய் உணர்வு தொட்டது. அந்த நட்சத்திரத்துக்குப் பெயர் இல்லை. இதுதான் என்று சொல்லத்தக்க அடையாளம் எதுவும் இல்லை. ஆனால் சுடர் உமிழும் அந்த நேரத்தில் அது சாகாவரம் பெற்றுவிடுகிறது.





# வேலிப் பொட்டு

செங்கை ஆழியான்

காரைநகரில் பஸ்சிலிருந்து இறங்கிய என்னை நண்பன் சுரேந்திரன் எதிர்கொண்டு வரவேற்றான். இளம் வயதில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் நாங்கள். அவன் யாழ்ப்பாணத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றி வந்தான். அந்தக் காலத்தில் 'போஸ்ரல் கிளறிக்கல்' என புறம்பான ஒரு பரீட்சை தபால் திணைக்களச் சேவைக்கென இருந்தது. அப்பரீட்சையில் சித்தியடைந்து பணியை ஏற்றதால் எங்களுடன் திறமையாகக் கல்விகற்ற சுரேந்திரன், கனகலிங்கம், மார்க்கண்டு ஆகிய மூவரையும் இலங்கைப் பல்கலைகழகம் இழந்தது. 'ஜெனரல் கிளறிக்கல்' சித்தியடைந்ததால் வைத்திலிங்கம் என்றொரு திறமைசாலியையும் அது இழக்க நேர்ந்தது. இந்த காலம் மாதிரி பல்கலைக்கழகத்தையும் ஏமாற்றி அங்கு உள்வாரி மாணவராக கல்வி கற்றபடி, உத்தியோகம் பார்க்கிற திணைக்களத்தையும் ஏமாற்றி சம்பளத்தோடு பட்டம் பெறும் வாய்ப்பு அன்றிருக்கவில்லை. இருந்திருந்தால் முன் குறித்த நால்வரும் பட்டதாரிகளாக இருந்திருப்பார்கள்.

சுரேந்திரன் என்னை பார்த்துச் சிரித்தான் "போவம் வா" என்றபடி இறங்கிய இடத்தில் வீதியோரம் இருந்த ஒரு படலையைத் திறந்து உள்ச் சென்றான்.

"இதுதான் உன்ர வீடாடா?"

"இல்லையடா. கனதூரம் போகஹும் வளவுகளுக்குள்ளால

பொட்டுகளூடாகப் போனால் கிட்ட".

> "எங்கட சமூகம் எப்படி அன்னியோன்யமான உறவுகளைப் பேணின என்பதற்குப் பொட்டுக்கள் நல்ல உதாரணம்"



நான் தொடர்ந்தேன். நாங்கள் முதலில் நுழைந்த வளவுக்காரர் எங்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தம் வேலைகளில் ஈடுபட்டனர். முற்றத்து நாய் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டது. அந்தக் காணியின் அடிவளவை நோக்கி சுரேந்திரன் நடந்தான். வேலியில் ஒருவர் குனிந்து நுழைந்து அப்பால் வெளிப்படக்கூடிய அளவிற்கு ஒரு பொட்டு இருந்தது. அதனூடாக இருவரும் புகுந்தோம். கிணற்றடியில் நடுத்தர வயதான பெண் குறுக்குக்கட்டுடன் குளித்துக்கொண்டிருந்தாள். அவள் எங்களைப் பார்த்து பதற்றமடையவில்லை.

"என்ன தம்பி இண்டைக்கு வேலையில்லையே?"

"இவன் என்ர பிரெண்ட் அக்கா யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறான்".

நாங்கள் இவ்வாறு வளவுகளுக்கூடாக வேலிகளில் காணப்பட்ட பொட்டுகள், கண்டாயங்கள் என்பவற்றின் ஊடாகப் பயணப்பட்டு சுரேந்திரன் வீட்டு வளவிற்குள் புகுந்தோம். பொட்டுகளை இணைத்து ஒற்றையடி வழித்தடமே உருவாகியிருந்தது.

"றோட்டால வாறதெண்டால் ஒரு மணி பிடிக்கும் பத்து நிமிசத்தில இப்ப வந்திட்டம்". சுரேந்திரன் சிரித்தபடி.

"முன்னர் யாழ்ப்பாணத்திலும் இப்படியான பொட்டுக்கள் இருந்தன. எங்கட சமூகம் எப்படி அன்னியோன்யமான உறவுகளைப் பேணின என்பதற்குப் பொட்டுக்கள் நல்ல உதாரணம். என்னுடைய அக்காமார் தங்கட சொந்தக்கார வீடுகளுக்கு றோட்டுக்களால ஒழுங்கைகளால போனதில்லை. ஒரு பொட்டால புகுந்து ஊரையே சுற்றி வந்திருக்கினம். இப்ப காலம் மாறிப்போச்சுது. உறவுகளின் பிடிமானம் அற்றுபோய்விட்டது. பொட்டுகள் அடைத்து மூடப்பட்டுவிட்டன" என்றேன் கவலையோடு.

எனக்குத் தெரியதக்கதாக எனது ஊரில் பொட்டுகள் பல இணைப்புக்களாக விளங்கியுள்ளன. வீதியில் ஏறாமலேயே எங்கும் போய் வர முடிந்தது. நான் பத்தாம் வகுப்புப் படிக்கும் வரை எங்கள் வீட்டிற்கும் பக்கத்து அம்மான் வீட்டிற்கும் இடையில் முதலில் ஒரு பொட்டும் பின்னர் அது பெரியதொரு கண்டாயமாகவும் இருந்தது. அம்மான் மகளைக் கட்டிக்கொள்ள என் அண்ணன் மறுத்ததால் இரு குடும்பங்களுக்கும் சச்சரவு கிளம்பிப் பின்னர் பெரும் சண்டையாகிவிட எங்கள் ஐயா ஒருநாள் எவர் தடுத்தும் கேட்காமல் பொட்டைக் கிடுகு வைத்து மறித்தடைத்துவிட்டார். அப்படி அடைத்தும் வடக்குப் பக்க சின்னம்மா வளவுப் பொட்டூடாக அம்மாவுக்கும் மாமிக்கும் இடையில் பேச்சு வாக்கு கொடுக்கல் வாங்கல் இருந்ததை அம்மானும் ஐயாவும் பல வருடங்களாக அறிந்திருக்கவில்லை.

பொட்டு அடைபட்டு இரு குடும்பங்களும் பிரிந்ததும் எங்கள் அம்மம்மா தனித்திருந்து அழுது புலம்பியது எனக்கு இன்னமும் நினைவிருக்கு.

"அழாதை ஆச்சி நான் உன்னை மாமி வீட்டிற்கு றோட்டால் அழைச்சுப்போறேன்" என்று எவ்வளவு நான் எடுத்துக் கூறியும் அம்மம்மா சமாதானப்படவில்லை.

"உறவுகள் அறுந்தால்தான் யாழ்ப்பாணத்தான் பொட்டுகளை அடைப்பான். உனக்கு அது எங்க தெரியப்போகுது. நீ சின்னப்பிள்ளை. உன் கொம்மாவை உன் கொப்பர் பெண் பாத்தது எப்படித் தெரியுமே?"

"எப்படி?"

"தரகர் கந்தையா வீட்டிற்கு ஊர்ப் பொம்பிளைப் பிள்ளையள் பின்னேரங்களில தாயம் போட்டு விளையாடப் போவது வழக்கம் அது பெரிய வளவு எட்டுக்கோடு விளையாட ஊர்ப்பிள்ளைகள் வரும். ஐயனார் கோவிலடிப் பிள்ளையளும் வருவினமெண்டால் பாரன்"

"அதெப்படி ஆச்சி? நடுவில தார்றோட்டு.."

"தங்கட வீடுகளில இருந்து வருவினம். பொட்டுகளால வந்து றோட்டியில அங்கால இங்கால பாத்திட்டு கண்ணில எத்துப்பட்ட வளவுப்படலையைத் திறந்து புகுந்திடுவினம். பிறகென்ன...? ஆ என்ன சொன்னன்...? கொம்மாவைக் கொப்பர் பெண் பாத்த கதை. தாயம் போட கொம்மா கந்தையா வீட்டிற்குப் போக .. அங்க கொப்பரைத் தரகர் அழைச்சு வைத்திருந்தார். "உந்தச் சிவப்பிதான் ஆள்" என்று காட்டியிருக்கிறார். கொம்மாவுக்கு அசுமாத்தா விசயம் விளங்கிப் போச்சுது. பொட்டுகளால புகுந்து ஓடி வந்திட்டா. முகமெல்லாம் வியர்த்து ஒழுகுது. பேச முடியவில்லை.

"பிறகு?"

"பிறகென்ன... உன்ர கோத்தை பின்னேரங்களில பொட்டுகளூடாகப் போறதும் உன்ர கொப்பர் ஏதாவது சாட்டோட கந்தையர் வீட்டிற்கு வாறதும்.. ரெண்டு பேருக்கும் கட்டிவைச்சம்..."

"இந்தப் பொட்டுகளுக்குப் பின்னால் பெரிய கதையள் இருக்குது அம்மா...." என்று நான் அம்மாவிடம் ஒருநாள் கேட்டேன். "அம்மம்மாவுக்கு என்ன வேலை. இதுகளை உங்களுக்குச் சொல்லுறதுகளை விட......" என்று அம்மா வெட்கப்பட்டார்.

ஆச்சிக்கு அம்மான் வீட்டுடனான தொடர்பு பொட்டு அடைபட்டதால் துண்டிக்கப்பட்டுப் போனதில் மிகுந்த கவலை.

"இவங்கள் ஒவ்வொருத்தனும் பிடிச்சுராவிகள். விட்டுக்கொடுக்க மாட்டான்கள். அடைச்ச பொட்டை ஒருநாளைக்கு உன்ர அம்மான் பிய்த்தெறிவான் பார்.."

"எப்ப?"

"நான் மண்டையைப் போடுற அண்டைக்கு" என ஆச்சி திடமாகக் கூறியபடி ஒப்பாரியைக் கேட்ட அம்மான் பொட்டைப் பிய்த்தெறிந்தபடி ஓடிவந்தார். பிரிக்கப்பட்ட பொட்டு பின்னர் வெகுகாலமாக அடைபடவில்லை. மச்சாளைக் கட்டிய கொழும்புக்காரன் 'அறுக்கையில்லை' என்று மதில் கட்டியபோது தான் உறவோடு அடைபட்டது.



"

மெய்யா யாழ்ப்பாணத்திற்கென இருக்கின்ற குறிகாட்டிகளில - ஐடன்டிட்டியில இந்தப் பொட்டுகளும் முக்கியமானவை. எங்கட சமூக உறவின் நெருக்கத்தை அவை பிரதிபலித்தன.

"

"என்னடா பேசாமல் இருக்கிறாய்?" என்று கேட்டான் சுரேந்திரன். "இந்த பொட்டுகளை எண்ணிக்கொண்டன்"

"மெய்யா யாழ்ப்பாணத்திற்கென இருக்கின்ற குறிகாட்டிகளில - ஐடன்டிட்டியில இந்தப் பொட்டுகளும் முக்கியமானவை. எங்கட சமூக உறவின் நெருக்கத்தை அவை பிரதிபலித்தன. ரவுண் பக்கங்களில் இவை அருகிவிட்டாலும் கிராமபுறங்களில் அரிதாக இருக்கின்றது. முன்னோர்போல அதிக வளவுகளை இணைக்காவிட்டாலும் ஒன்றிரண்டு வளவுகளை யாவது இணைக்கின்றன. இந்தப் பொட்டுகள் பற்றி பல சங்கதிகள் ஊரில் இருக்கிறது."

"எங்கட ஊரில ஆடுகால் மணியத்தார் பொட்டு புகுந்ததால பட்ட கதை ஒன்றுண்டு"

"சொல்லடா.."

"ஆடுகால் மணியத்தாருக்கு ஊரில் ஒரு தொடுப்பு இருந்தது.. அவற்றை வீட்டிலிருந்து ஏழாவது வீடு... நடுசாமத்தில் மனிசன் பொட்டுகளால அங்க போய் வருவார். மணியத்தாரின்ர மனிசி தன் தமையனிடம் இதைச்சொல்லி அழுதாள். அந்தப் பாவி மனிசனைத் தடுக்க முடியவில்லை. "அண்ணை நீதான் ஒரு வழி பண்ணவேண்டும்"

ஆடுகால் மணியம் கடக்கிற பொட்டுகளில் ஒன்று அவருடைய மனைவியின் தமையன் வீட்டில் இருந்தது. "ஆர் இந்த நேரத்தில் பொட்டுல போவது?" என்று கேட்டால் "அது நான் என்றபடி குரல் தந்துவிட்டுப் போய்விடுவார்கள். ஓரிருமுறை மணியத்தாரும் குரல் தந்து சமாளித்திருக்கிறார். போகிற வருகிறவர்களிடம் காரணம் கேட்கமாட்டார்கள்.

அமாவசை தினமொன்றில் ஆடுகால் மணியம் பொட்டால் தொடுப்பு வீட்டிற்குப் போனதைக் கண்ட மச்சான்காரன் தன் வீட்டில் எப்பவும் கட்டி நிற்கிற கடியன் கறுவல் நாயை பொட்டின் பக்கத்துக் கதியாலில் கட்டிவிட்டார். அதுவும் பொட்டின் வாசலில் நிலத்தைக் கிண்டி குளிருண்டாக்கிக்கொண்டு படுத்து விட்டது. கும்மிருட்டில் தொடுப்பு வீட்டிலிருந்து குசியாகத் திரும்பி வந்த ஆடுகால் மணியம் பொட்டுக்குள் நுழைவதற்காகக் குனிந்து கைகளை படுத்திருந்த நாயின்மீது ஊன்ற அது திடுக்கிட்டு மணித்தாரைக் கவ்வியது. அதற்கு அகப்பட்டது மணியத்தாரின் மூக்குத்தான். ஆடுகால் அலறிய அலறலில் ஊரே விழித்துக்கொண்டது.

அரிக்கன் லாந்தரோடு மச்சான்காரன் ஓடிவந்தான்.

"கவ்வ வேண்டிய இடத்தில கவ்வாது விட்டிட்டுது" என்று தனக்குள் மச்சான் முணுமுணுத்துக்கொண்டான். "மூக்குப் போனாலும் பரவாயில்லை மனிசன் கிடைச்சாரே" என்று மணியத்தாரின் மனைவி திருப்திபட்டுக்கொண்டாள்.

சுரேந்திரன் பெரும் குரலில் சிரித்தான். அடுக்களைக்குள்ளிருந்த மனைவி எட்டிப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லை அப்பா..." என்றான் சுரேந்திரன்.

"ஒண்டுமில்லாததுக்கே சிரிக்கிறியள்?"

சுரேந்திரன் சொன்னான் "எங்க ஊரில ஒரு சோக சம்பவம் நடந்தது. பிராந்துக் கிழவியின் வளவு பென்னம் பெரியது. புளிய மரங்கள், இலுப்பைமரங்கள் என சோலையாக இருக்கும். புளியம்பழங்கள் சொரிகின்ற காலத்தில் அவற்றினைப் பொறுக்குவதற்கும் இலுப்பைப்பழம் பொறுக்குவதற்கும் அயல் அட்டையில் உள்ள சிலர் விடியமுன்னம் பொட்டுக்குள்ளால வந்திடுவினம். பொட்டுகளைப் படலையிட்டு கட்டிவிட்டும் பயனில்லை. கிழவிக்குப் பொட்டுகளை அடைக்க விருப்பமில்லை. அதேநேரம் தன் ஒரே வருமானத்தை இழக்கவும் விருப்பமில்லை. ஒருநாள், நாலாம் சாமம் ஓலைப் பெட்டியையும் தூக்கிக்கொண்டு சுப்பரப்பா கிழவியின் வளவிற்குள் பொட்டுக்குள்ளால புகுந்தார். புளியமரத்தடியில் வெள்ளைச்சேலை அணிந்த உயரமான ஒரு உருவம் ஆடிக்கொண்டு நின்றிருந்தது. சுப்பரப்பாவிற்குப் புளியமரத்து முனிகளின் கதைகள் நினைவு வந்தது. 'ஆ' என்றலறியபடி நிலத்தில் சரிந்தார். அவ்வளவுதான் ஓடிவந்த பிராந்துக் கிழவி "அது நானடா" என்று எவ்வளவு கூறியும் பயனில்லை. கள்ளரைப் பயமுறுத்த எண்ணிய கிழவியின் திட்டம் முதல்நாளே சோகத்தில் முடிந்தது.

பொறுக்கிறவை பொறுகிக்கொண்டு போகட்டும் என்று கிழவி பாராமுகமா இருந்தாலும் சுப்பரப்பாவின் சாவிற்குப் பிறகு ஒருத்தரும் அந்த வளவுக்கை வரவில்லை. புளியமரத்து முனியோடு சுப்பரப்பாவின் ஆவியும் அங்கு உலாவுவதாக வதந்தி பரவிவிட்டது.

"சாப்பிட வாருங்கள்" என்றழைத்தபடி என் நண்பனின் மனைவி வந்தாள். சாப்பிடும்போதும் வேலிப்பொட்டுகள் பற்றியே பேசிக்கொண்டோம். "பொட்டுக்கள் ஏன் குறைந்து வருகின்றன" "பொட்டுகளுக்குள்ளால சயிக்கிள்கள் ஓட முடியாது. "இப்ப றோட்டுகள் வசதியாக அமைச்சிட்டினம்"

"பெண்புரசுகள் இப்ப வெளியில் சுதந்திரமாகத் திரிய முடிகிறது."

"அந்தக் காலத்தில பெரும்பாலும் எல்லோரும் அலுவல்கள் முடிஞ்சால் வீட்டிற்குள் அடங்கிவிடுவர். இப்ப பெண்புரசு ஆண்பிள்ளைகள் எல்லாம் றோட்டிலதானே"

"இவையெல்லாம் காரணங்கள் என்றாலும் யாழ்ப்பாணத்தானின் விரிந்திருந்த மனம் இன்று ஒடுங்கிச் சுருங்கி சுயநலத்தோடு குறுகிவிட்டதுதான் காரணம். நாங்கள் நாங்களாகவில்லை."

"இந்தியன் ஆமியும் இலங்கை ஆமியும் யாழ்ப்பாணத்தில வைச்ச பொட்டுக்களையும் கவனிக்கவேணும்" என்றாள் சுரேந்தனின் மனைவி.

"நீர் இப்ப எந்தப் பொட்டைச் சொல்லுகிறீர்?"

"இரண்டையும்தான்.

■



## மாலிகா கவிதை

அந்த நெட்டூரம் நிகழ்ந்த அன்றிருந்து
இப்படித்தான் ஒருவாய் நீர்கூட உள்ளிறக்காமல்
சோர்ந்துமாய் வெறித்த பார்வையுடன்
சோபிதம் அகல ஒற்றைப்பனையாய் நிற்கிறது
இந்த நெடிய பனை.
காலெடுத்து [illegible] வாழ்வென்றும்
ஜனனத்திலிருந்தே அருகென்றாகி
இணையென இருந்தன ஒருசோடிப் பனைகள்.
பெருங் காற்றடிக்கும்போதில் மெல்லத் தோளுரசி
பலமேற்றி
பருவமெய்தியதும் காதல் மீதூர சிரித்துப்பேசி
இருந்தன இரண்டும்.
நேற்றொருவன் வந்தான்
ஆண் மனிதனாம்.
மளமளவென்று பெண்ணுடல் சுற்றிப்பற்றி
மார்புரச ஏறிக் கழுத்தில் கருக்கிட்டான்
மூச்சுத் திணறியது பெண்ணுக்கு,
கீழே விழுந்த கோடாரிவெட்டு ஒவ்வொன்றுக்கும்
துடித்துப்போனான் காதலி.

அருகிருந்த ஆண்பனைக்கு,
உன் ஆசைக் காதலனுக்கு
ஏதேதோ சொல்லி அரற்றியிருப்பாய் பெண்பனை.
உடல் கலங்கி எதிரொலிக்கக் கத்தியது.
மௌனத்தில் உறைந்து [illegible]
[illegible]
[illegible]
[illegible]
விட்டுச்சென்றாய்?
யாரோ வந்து வெட்டா மற்றதையும்.
காதலியிடம் போய்ச்சேரட்டும்
இந்த ஒற்றைப் பனையின் உயிரும்.



# ஆத்ம விசாரம்

அ.ச.பாய்வா

அமானுஷ்யமான சூழல்களில் தான் மனிதனுக்கு ஞானம் பிறக்குமென்பதையும், மனிதனின் வாழ்க்கை வட்டமே மிகமிகச் சிறியது தானென்பதையும் நானிப்போதுதான் முதன் முதலாக உணர்கிறேன்.

மன்னம்பிட்டிப் பிரதான வீதியிலிருந்து தெரியாதவன் தலைவகிடிழுத்தாற் போலமைந்த, ஒடுங்கியவோர் ஒற்றையடிப் பாதையின் அந்தத்திலிருக்கும் சேனைத் திடலில், கடந்து போன என் இருபது வருட வாழ்க்கையின் அர்த்தங்களைத் தேடிக் கொண்டிருப்பதே ஒரு சுகந்தான்.

எனது குடும்பம், பிறந்த களிமண் வீடு, வேலியற்றவளவு, பேர, தெம்பிலி மரங்கள், இரண்டு பெட்டி நெல்விதைக்கும் பள்ளத்துப் பனங்களித்தரை, சிறிசேன, பந்துல என்கிற உயிருள்ள உயிரற்ற பிண்டங்களென்று சுருங்கி, அன்பு, பாசம் என்கிற சராசரி உணர்வுகளோடு என் சாதாரண வாழ்க்கை முடியப்போகிறதே என்பதை நினைத்தால் வேதனையாகவும் வெட்கமாகவுமிருக்கிறது.

முரட்டுப் பச்சைக் காக்கித் துணிக்குள் வியர்வையில் மசமசத்துப் போகுமுடலில் ஏ.கே 47 ஐயும் 'கோல்ஸ்சர்'(ரவைக்கூடு) யையும் ஏந்திக் கொண்டு நானிந்த வன்னிக்காட்டில் நிற்பதில்கூட எனக்கு உடன்பாடில்லைதான். யாரோவொரு பஞ்சத்திலடிப்பட்ட தொத்தல் ஆமிக்காரனென்று என்னைப் பார்க்கும் எந்தவொரு தமிழனும் கேலி செய்வான்.

இந்த விமர்சனங்கள் கூட அவனுக்கு எங்கள் சிங்கள இராணுவத்தின்மீது இயற்கையாய் ஏற்பட்ட வெறுப்பாலும் சலிப்பாலும் கூட இருக்கலாம். ஆனால் தோளிலே சுமந்து கொண்டிருப்பது, வெறுமனே துப்பாக்கி மட்டுமல்ல என் குடும்ப வறுமையுந்தான் என்பதை என்னைப் புரிந்தவர்களைத் தவிர வேறு எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நானும் இவைகளையெல்லாம் பற்றிக் கவலை கொள்ள முடியாதுதானே.

ஒட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி, ஹாமதுறுவினால் வரைந்து ஓதிக் கொடுக்கப்பட்ட கறுத்த நாடாவில் கழுத்தில் தொங்கும் செப்புத் தகட்டுக் கூடு, வெல்லநாரால் கோர்த்து இடுப்பில் கட்டப்பட்ட, 'கோள்பி' திறந்த நிலையில் அரைக்காற்சட்டை, பருவ காலத்திற் கேற்ப மாங்காயோ, விளாங்காயோ, சுட்ட தாமரைக்கிழங்கோவென ஏதோ வொன்றைக் கார்ந்து கொண்டு சிறிசேனவுடனும் பந்துலவுடனும் ஊர்மனையிலுள்ள குளத்திலோ வாய்க்காலிலோ நீச்சலடித்தல், எருமையேற்றம், கள்ளப்பால் கறத்தலெனக் கடந்துபோன என் சிட்டுக் குருவி வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறேன்.

இவ்வாறானதோர் கோலத்தில்தான் என்னையும் பந்துவுவையும் சிறிசேனவையும் சேர்த்து, எங்களூரில் ஏதோ ஆராய்ச்சிக்கு வந்த 'சுத்தா' ஒருத்தன் (வெள்ளை நிறமான எல்லோருமே எங்களுக்குச் சுத்தாதான்) எடுத்த புகைப்படமொன்று ஏதோவொரு ஆங்கில நாளேட்டில் அவனுக்குப் பரிசு பெற்றுக் கொடுத்ததாக எங்கள் 'ஸ்கோல மாத்தயா' சொல்லக் கேட்டுப் பெருமைப்பட்டோம்.

ஆனாலந்தச் 'சுத்தா' எங்களைப் பற்றியென்ன எழுதியிருப்பானென்று இப்போதுதான் என்னால் உணர முடிகிறது. அவனுக்கு நாங்கள் விநோதப் பிராணிகளாய்த் தெரிந்திருப்போம் போல.

ஆனாலிப்போது எனது கழுத்தில் கிடப்பதோ, அந்தப் பழைய கறுத்து நாடாவில் கோர்த்த செப்புத் தகட்டுக் கூட்டுக்குப் பதிலாக மற்றெல்லா இராணுவ வீரர்களையும்போல தங்கச் சங்கிலியில் கோர்த்த தங்க வெள்ளரசு இலை. ஆனாலும் எனது அப்பா மிகுந்த நம்பிக்கை விசுவாசத்தோடு எனது கழுத்தில், ஒரு நிறை 'பொசன்' தினத்தன்று கட்டிவிட்ட அந்தச் செப்புத் தகட்டுக் கூட்டை நினைத்தால் எனக்கிப்போதும் கண்களில் நீர் முட்டும்.

அது பார்வைக்கு 'சயனைட்' குப்பியைப் போலிருந்தால், நண்பர்கள் நாங்கள் மூவரும் சேர்ந்து 'அந்த' விளையாட்டு விளையாடுவோம். அந்த விளையாட்டும் சலித்துப்போன ஒரு நாள் 'கிறனைட்' விளையாட்டு விளையாடுவோமென்று பந்துல கொடுத்த யோசனைதான் அதற்கு எமனாயிற்று.

எல்லைக் கிராமங்களைக் 'கொட்டி' தாக்கப்போவதாகக் கூறி எங்களூரில். முகாமிட்டு இராணுவம் இளைஞர்களுக்குக் கொடுத்த பயிற்சியின்போது பார்த்ததைப்போல, 'கிளிப்' எறியும்போது 'டு.......ம்...' என்று, எறிந்தவர் சப்தமிட்டுத் தரையில் 'நிலை' யெடுக்க வேண்டும்.

செப்புத் தகட்டுக் கூட்டின் மூடிக்கு மேலே நாடா கோர்ப்பதற்காக வைக்கப்பட்ட கொழுக்கியை வாயில் வைத்துக் கடித்து மூடியைக் கழற்றி எறிந்த விளையாடிய அன்றே அது தொலைந்துவிட்டது.

அதன்பிறகு அப்பாவிடம் வாங்கிய அடிகள், அவரதைத் தேடித் திரிந்த நாட்கள், தாயத்துக்கூட்டை அவமதித்ததன் பரிகாரமாக விகாரைக்குக் கொடுத்த 'தான' என யாவும் நினைவுக்கு வருகின்றன.

அதுமட்டுமா, மன்னம்பிட்டிப் பாலத்தினடியில், வரண்டு கிடக்கும் மாவலித்தாயின் மடியில் அருங்கோடை காலங்களில் எங்களுக்குள் நாங்கள் நடத்தும் தென்னைமட்டை காட்டுத் தேங்காய் கிரிக்கட் போட்டிகளையும், மாரி காலங்களில் பாலத்தின் மேல் நின்று வியந்த அந்த சலப்பிரவாகத்தையும் எண்ணிப் பார்க்கிறேன்.

காலந்தான் எவ்வளவு பொய்யானது. நிரந்தர மென்பதே ஒன்றுமில்லையா ! அப்படியென்றால் எதற்காக இந்த யுத்தம்! புரியவில்லையே புத்த ஹாமுதுறுவே.

* *

அதென்ன தேவையோ, குடும்பப் பற்றோ, ஏதோவொன்று என்னைப் பிடித்துப் பலவந்தமாய்த் தள்ளி விட்டாலும், இராணுவத்தில் சேர எனக்கு எவ்வித அடிப்படைத் தகைமைகளும் இருந்ததில்லைதான்.

நேர்முகப் பரீட்சையின் போதுதான் தெரிந்தது, எனது உண்மையான உயரம் ஐந்தடி இரண்டங்குலமென்று.



விசுக்கோத்துக்காகவே சில நாட்கள் ஸ்கூலுக்குப் போன எனக்கு, அப்பா எப்படியோ 'ஸ்கோல லொக்கு மாத்தயா' வைக் கெஞ்சிக் கூத்தாடி, இரண்டுபெட்டி நெல்லுக்கும் தெம்பிலிக் குலைக்கும், நான் ஐந்தாம் வருடம் சித்திடைந்தவனென்று விடுகைப் பத்திரத்தில் எழுதி வாங்கித் தந்தாலும் நான் அதிகமாக எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதே இராணுவத்தில்தான்.

படிப்பின்றி நானெப்படி சங்கிலி, சப்பாத்தென்று அணியமுடியும் ஏனைய சிப்பாய்களைப் போல.

இத்தனைக்குமப்பால், இராணுவத்தின் கட்டுப்பாடுகள் எனக்கு விசித்திரமாயிருந்தன. இதயமற்ற வெறும் கட்டளைகளுக்காக எதையும் செய்யப் பழக்கப்பட்ட இயந்திர மனிதர்களுடன் கடந்த ஒரு வருட காலமாக வாழும் நான் முதல் நியமனம் பெற்று வவுனியாவுக்கும் முருங்கனுக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசத்தின் நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் காடுகள் அழிக்கப்பட்டு, இருநூறு யாருக்கொன்றாய் இரண்டு பேர் கொண்ட சிறுசென்றிகள் சகிதம் நிறைந்திருந்த அந்த ஆளரவமற்ற பிரதேசத்தில், இன்னும் எத்தனை நாள் நான் வாழவேண்டும் 'தெய்யனே....!' நான்கடிக்கு நான் கடியிலான பள்ளம், நான்கைந்து பனையோலையிலான கூரை, ஏழெட்டு மணல் மேடைகள், அவைகளுக்கிடையே துப்பாக்கியுடன், காற்றின் சிறு அதிர்வையும் எதிரியாயெண்ணிக் குறிவைத்தபடி, ஆபத்தின்றிக் கடந்துபோகும் ஒவ்வொரு விநாடியையும் வாழ்வதற்காய்க் கிடைத்த கணங்களாக எண்ணி அற்ப சந்தோசத்துடன் நாங்கள்.

இந்தப் பிரதேசத்தின் இயற்கை வளங்கள், வீடுகள், குடியிருப்புகள், கோவில்கள்தான் என்ன பாவஞ் செய்தன?

எங்களை அழிவுக்குப் பயன்படுத்தி அதிலிருந்து பெற்ற லாபங்களை உயரதிகாரிகள் அனுபவிக்கிறார்ளென் பதும் நாமறிந்த விடயம்.

ஒருவன் இரத்தத்தை வியர்வையாய்ச் சிந்தி உழைத்ததை இன்னொருவன் அடக்கு முறையால் அபகரிப்பதைப் புத்தபகவான் எவ்வாறு அனுமதிப்பார்?

நாங்களெல்லாம் பௌத்தர்களென்று சொல்லவே வெட்கமாயிருக்கிறது. என்னை மிகவும் பாதித்ததும், மனித அநாகரிகங்களுக்குச் சிகரம் வைத்தாற் போலமைந்ததுமான இன்னொரு விடயம், எங்கள் சென்றிக்கும், தூர்ந்துபோன குழாய்க் கிணற்றுக்குமிடையிலமைந்த பழமைமிக்க அந்தச் சின்னஞ்சிறிய பிள்ளையார் கோவில்தான்.

இந்த அழகிய கோவில்தான் இவர்களுக்கு என்ன செய்தது. ஒரு கொடூரமன ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாகவே இதைக் கருதுகிறேன்.

காலங்காலமாக அரசோச்சிவந்த, பூசை புனஸ்காரங்களால் மகிமையுற்று, எத்தனையோ பக்தர்களின் வேண்டுதல் களையெல்லாம் தன்னுட் சுமந்துநின்ற பிள்ளையார் சிதைந்து புழுதியில் கிடக்க, நேற்று வந்து புத்த பகவானைப் பிரதிஷ்டை செய்தது என்ன நியாயம். எங்கள் கிராமத்தில் சேனையை அழிக்கவரும் யானையைக்கூட 'கணதெய்யோ' வென்று அம்மா கையெடுத்துக் கும்பிடுவாளே.

இராணுவத்திலுள்ள அநேகர் பின் தங்கிய ஏழைக்கிராமங்களிலிருந்து வந்தவர்கள்தானே. இவர்களால் கூட இந்தப் பண்புகளை எவ்வாறு நிராகரிக்க முடிந்தது. இல்லை... வேறெதனைத்தான் சாதித்து விட்டார்கள்?

புத்தர் சிலைகளைத் தாம் கைப்பற்றிய இடங்களில் பிரதிஷ்டை செய்துவிட்டால் எல்லாருமென்ன பௌத்தர்களாகி விடுவார்களென்று எண்ணமா, இல்லை, எல்லாமே பௌத்த பிரதேசமாகிவிடுமோ?

யுத்தத்தில் கூட தர்மம் கடைப் பிடிக்கப்பட்டதாமே ஒரு காலத்தில், எங்கள் 'ஹாமதுறு' கூட 'சில்' ஓதும்போது கொலை செய்யக்கூடாது. அது பாவமென்பார். ஆனாலிங்கு என்னதான் நடக்கிறது? ஒரு வேளை பௌத்தர்கள் பௌத்தர்களைக் கொலை செய்யக் கூடாது. ஆனால் ஏனையவர்களைக் கொலை செய்யலாமெனத் தவறாய்ப் புரிந்து கொண்டார்களோ, என்னவோ? நாங்கள் புரிவதுகூட நியாயமற்ற யுத்தந்தானே உரிமைகளை மறுப்பதுகூட பாவமல்லவா?

தனிமையென்பதே ஒருவனுக்குக் கிடைத்த மகத்தான தண்டனை தானென்பதை நான் முற்றாக உணர்கிறேன். காலையிலும் மாலையிலும் பவுசரில் தண்ணீர் கொண்டுவரும் இரண்டு கிழக்கோப்ரல்கள், சாப்பாடு கொண்டுவரும் அருவருப்பான சமையல்காரன், ஒரு நாளைக்கு இரண்டு தடவை 'ட்ரக்' வண்டிகளில் கையசைத்துச் செல்லும் முகந்தெரியாச் சகவீரர்கள், காய்ந்து வரண்ட வனாந்தரச் சூழல், புழுதிபடிந்த வானம், தார்வீதியில் கானலாய் வெம்பி நெளிந்து காற்றில் கலந்து முகத்திலறையும் உஷ்ணம், இதற்குமேல் வாசிப்பதற்கு ஒரு வரியுமில்லையென்றாகிப் போன பழைய பத்திரிகையென சலித்துப்போன இவைகளை விட்டால் மனதுக்கு ஆறுதல்தரும் ஒரேயொருவிடயம், எனது சென்றிக்கு நேரே நீண்டுவளர்ந்த இரண்டு நாணற்புற்களை இணைத்து, ஆபத்தான அதன் விளிம்பில் கூடுகட்ட எத்தனிக்கும் அந்தப் பெயர் தெரியாத சிறிய சிட்டுக்குருவிச் சோடிதான்.

இப்போது என்னுலகமோ, மணல்மூடை இடுக்குகளுக்குள்ளே ஒளிந்திருக்கும் மரணத்தைக்கூட அறியாது, கடந்த ஒருவாரமாக அவையிரண்டும் அந்த இரண்டு நாணல்களையுமிணைத்துக் கூடுகட்டச் செய்யும் முயற்சிகளையெண்ணி வியந்து கொள்வதுதான்.

இரண்டு நாணல்களையும் இணைக்கும் முயற்சியில் அவை தோற்றுப்போன ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொண்டு வந்த மூலப்பொருள்களைச் சேர்த்தால் மூன்று நான்கு கூடுகள் கட்டலாம். சளைக்காத இந்தப் போராட்டத்துள் அவை தமக்குள் என்னதான் பேசியிருக்குமோ. ச்சே.... பறவைகளின் மொழி புரியாதுபோனதேயெனக்கு.

நான்கூட ஒரு தடவை, அந்த இரண்டு நாணல்களையும் சிட்டுகளுக்குத் தெரியாமல் இணைத்து வைப்போமாவென எண்ணியதுண்டு. ஆனால் சிட்டுகளின் கூட்டில் மனிதர்களின் கைமணம் பட்டால் அவை மீண்டுமந்த இடத்துக்கு வராதென அம்மா கூறிய ஞாபகம்.

அதேவேளை இரண்டு நாணல்களையும் இணைப்பதிலவை வெற்றி கண்ட அந்த நாளைத்தான் எப்படி யென்னால் மறக்க முடியும். நானடைந்த சந்தோசத்தை, சென்றியிலிருந்த என் சகாவிடம் கூறியபோது முகத்தை அஷ்டகோணலாக்கி, "உம்பட்ட வெடக் நே ஒய்.... மந்தவசக் மேகுருல்ல ஹித்த தெக்கம மரணவா" (உனக்கு வேலையில்ல ஒய்... ஒரு நாளைக்கு இந்தக் குருவி இரண்டையும் கொல்லுவன்) என்று கெட்ட வார்த்தையில் சலித்துக் கொண்டான். அவனைப் போன்ற ஏராளமான சடங்களின் நடுவில் நான் வந்து மாட்டிக் கொண்டதே தூரதிஷ்டவசமான நிகழ்வுதானே.

உண்மையிலென்னால் நம்ப முடியவில்லை. எனது சகா இவ்வளவு மூர்க்கனாய் நடந்து கொள்வானென்று. சிட்டுக்களின் கீச்..கீச் சப்தம் தனது பகல் கோழித் தூக்கத்துக்குப் பங்கம் விளைவிப்பதாய்க் கூறி, முற்றுப் பெறாத அதன் கூட்டை, முந்தையதினம் என்கண் முன்னேயவன் பிய்த்தெறிந்தபோது, அவையிரண்டும் தூரத்திருந்தும் கூட்டினருகில் வந்தும்

இரண்டு நாட்களாய் அவல ஒலியெழுப்பிப் பறந்து போனதும், ஒற்றை நாணலில் பிய்ந்து தொங்கிய அந்தப் பாதிக்கூடும், என் மரணபரியந்தம் என் நினைவை விட்டுப் பிரியப்போவதில்லை.

நமது இராணுவம் நாச வேலைகளுக்குப் பேர்போனதென்கிற உண்மையை மெள்ள மெள்ள என் மனம் உள்வாங்கத் தொடங்குகிறது. மூர்க்கனான சகாவின் முன் கோழையாகிப் போனதில் வெட்கமும், ஒருவேளை இவ்வாறான தனிமை எனக்குள் விரக்தியையும், என் சகாவைப் போன்றே என்னையும் ஆக்கி விடுமோவென்கிற பயமும் என்னை ஆட்கொள்கிறது.

இவ்வாறந்தச் சிட்டுக்களைப் போல்தானே இந்தத் தமிழர்களும் வேதனைப்படுவார்கள். திக்கொன்றும் திசைக்கொன்றுமாய்ச் சிதறி, எங்கெல்லாமிருந்து தங்கள் வீடுகளையெண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்களோ.

இந்தப் பாவமும் பழியு மெல்லாஞ் சேர்ந்தொருநாள் என்னையுமென் சந்ததியையும் கருவறுக்கத்தான் போகிறதோ? அதற்குள் நான் விடுதலையாகவேண்டும்.

அன்றைய கடமை முடிந்து சீருடைகளைக் கழற்றிவிட்டு, முகாமில் எனக்குத் தந்த 'கஹட்டா'வைப் பருகுகிறேன். இருள் சூழ்ந்த வனாந்தரத்துக்கும், வழித்துத் துடைத்துவிட்டதைப் போன்றிருந்த வானத்துக்குமிடையே, அழித்தல் தான் கருமமென் றில்லாதவொரு புதிய பாதையைத் தேடுகிறேன். நிர்மலமான என் மனத்திரையுள் அது நன்றாகவே தெரிகிறது.

என்ன விலை கொடுத்தாகிலும் இதிலிருந்து நான் விடுதலையாக வேண்டும். என் பெற்றோர்களும் நிட்சயமாய் என்னுணர்வுகளைப் புரிந்து கொள்வார்களென மனம் நம்புகிறது.

மாவலியில் நீந்திச் சேற்றுமணம் குடிக்க வேண்டும் போலிருக்கிறது. இதுவுமென்ன ஒரு வகை நிஷ்கரண அவஸ்தையோ?

அந்திவானத்துக் கரைசலுக்கு மேலும் மெருகூட்டிக் கறுப்புப் புள்ளிகளாய் இரண்டு சிட்டுக்கள் பறக்கின்றன. அவைகளேன் என் சிட்டுக்களாயிருக்கக் கூடாது?

இங்கில்லாவிட்டாலும் அவை வேறெங்கோவொரு பாதுகாப்பான சூழலில், ஏன்... துப்பாக்கிச் சனியன்களின் சுடுகுழல்களுக்குள் கூட ஒரு நாள் கூடுகட்டி அமைதியாய் வாழுமென்ற நம்பிக்கை பிறக்கிறது. எழுந்து மங்கிய சிமினி விளக்கின் முன்னமர்ந்து எழுதத் தொடங்குகிறேன்.


'ஆதரனிய அம்மா தாத்தா
வெத்தட்ட.....'

---

ஊராம் கல இலக்கிய சஞ்சிகையிலிருந்து இக் கதையினை மறு பிரசுரம் செய்கிறோம்

---

# முதல் மணி



பாவம் மனசு
நொந்து வெந்துபோகிறது.
காய்த்து
தொங்கும்
வலித்திரள்களினூடு
விஷப்புழுக்கள்
தின்று கொழுத்து
உந்தி எழும்.
பாவம் உயிர்
உறிஞ்ச உறிஞ்ச
திமிறித் திமிறி விழும்.
கல்லின்மேல்
முள்ளின்மேல்
மோதியும் ஆக்கிய
அச்சுக்குள் அகப்படுகிறது.
புரியேறாமல்,
சுரி பிரட்டி
முகம் திருத்தும் காதல்.
ஆயுள் சுருட்டி எடுத்துக்கொண்ட
காலம் சொல்லிக்கொண்டு செல்கிறது.
"முதல் சாவுமணி
ஓர் கொலுசுமணி"

ப. அருள்நேசன் ■



# தீச்சுடர்

தமிழ்க் கவி

தீச்சுடர் 8

மகிழ்ச்சியான அந்த முகாமில் அந்த வித்துடலின் செய்தி சூழலை மாற்றிது. நளாயினிக்கு வித்துடல் வரப்போகும் செய்தியை ஆண்கள் தொடர்பகத்திலிருந்து றொசன்தான் கொண்டுவந்தார். ஆனையிறவுச் சண்டை நேரம் ஒரு வெள்ளை வானின் சாரதியாக நின்றவன், ஒரு போராளி. அவனையும் வாகனத்தையும் கண்டாலே சாவுச் செய்தியென்பது புரிந்துவிடும்.

கொஞ்சம் பருமனான, அழகான, மிடுக்கான, அமைதியான போராளி, 'அக்கா பொடி வருது' என்றபடி உள்ளே வந்தான். அந்த வீட்டின் மால் அவ்வளவு பெரிதான மண்டபமில்லைத்தான் எனினும் உடனடியாக இரண்டு வாங்குகளைச் சேர்த்துப்போட்டு துப்பாக்கி சுத்தம் செய்வதற்காக வந்த சிந்தித் துணியை விரித்தாள் மிதுலா. அயல் வீடுகளுக்குச் செய்தி சொல்லப் போனாள் வேணுகா தமயந்தியும் பானுமதியும் மரங்கொள்ளாமல் பூத்துக் குலுங்கிய பொன்னலரி மலர்களைப் பறித்தார்கள். வீதிபடலைக்



கருகில் சிறுவர்கள் ஒன்றுகூடினர். பானுமதி அவர்களிடம் 'ஞானம் உங்கட வீட்ட நித்திய கல்யாணி இருக்கெல்லே... கொஞ்சம் கொணர்ந்து தாவன்' என்றாள்.

"ஆரக்கா வீரச்சாவு"

"சின்னத்தம்பனை... உமா..."

"எங்கயாம் அடிபாடு"

"மணலாறு..."

"பொடி இஞ்ச வருமே..."

"ஓமடா... போய் பூவக் கொண்டா இப்பதான் குறுக்கு விசாரணை செய்யிறாய்" தமயந்திதான் அதட்டினாள். சிறுவர்கள் ஓடினார்கள். அதற்குள் சின்னாச்சிப் பெத்தாவும், நாகமணியக்காவும் வந்துவிட்டனர். வரும்போதே குத்துவிளக்கு, தேங்காய் போன்றவற்றைக் கொண்டு வந்தனர் "பிள்ளையள் சாப்பிட்டிட்டியளே.... பிறகு பொடி வந்தா சாப்பிடேலா. சாப்பிடுங்கோ. உதுகளை நாங்கள் செய்யிறம்" நாகமணியக்கா வீட்டுச் சாமான்களை ஒதுக்கி வைத்து கூட்டினார்.

நளாயினி துயிலுமில்லத்துக்கான முன்னேற்பாடுகளைச் செய்யப் புறப்பட்டாள். அப்போது மேஜர் சாரதி வந்தாள். "அக்கா எல்லாம் பீட்டருக்கு அறிவிச்சிருக்கு அவை கவனிப்பினம். வீட்டுக்கு அறிவிச்சு பெற்றோரையும் கூட்டி வருகினமாம். நீங்கள் பொடியோட போகலாமாம்...." என்றாள்.

போதிய போக்குவரவு வசதிகளோ, தொலைதொடர்பு வசதிகளோ இல்லை. அந்த முகாமிலிருந்து பதினான்கு கிலோமீற்றர் தூரத்திலிருந்தது துயிலுமில்லம். உடல்களை எரிக்க கூடாது புதைக்கவேண்டும் என்ற நடைமுறை அப்போதுதான் வந்திருந்தது.

துயிலுமில்லத்துக்கும் அப்பால் பதினான்கு கிலோமீற்றர் சின்னத்தம்பனை. இவ்வளவு தூரமும் மிதிவண்டிப் பயணம்தான். நளாயினி வயிற்றில் பாரிய காயமேற்பட்டு சிகிச்சை முடித்து வந்திருப்பவள் எனவே கோமதி அவளைத் தான் ஏற்றிச் செல்வதாக முடிவாகியிருந்தது. ஆனால் வித்துடல் கொண்டு வரும்போது போவதானால்.... எப்படியும் வாகனத்தில் போகலாம். இப்படி யோசித்துக் கொண்டிருக்க றொசானின் வெள்ளை வாகனம் வந்துவிட்டது. இதற்குள் வாகனச் சத்தம் கேட்டு அயலிலுள்ள இளைஞர்கள் பலர் ஓடிவந்தனர். உடல் கிடத்தியிருந்த பேழையைத் தூக்கி வந்து மாலுக்குள் வைத்தனர். பின்தொடர்ந்து வந்த ஊர்ப்பெண்கள் ஒப்பாரி சொல்லி ஒரு பாட்டம் அழுது தீர்த்தனர். இதற்குள் சின்னாசிப் பெத்தா குத்துவிளக்கை கொழுத்தி தேங்காய் உடைத்து அருகில் வைத்தார். சாம்பிராணி கொழுத்தப்போன கோமியை அதட்டினார். மாலை போடப்போன தமயந்தியும் தடுக்கப்பட்டாள். கிழவி வியாக்கியானம் செய்தது.

"தெரியாத பிள்ளையளே நீங்கள். செத்த உடம்புக்குள் நுண்கிருமிகள் பெருகுங் கண்டியளோ. சாம்பிராணி மணக்க அதுகள் கெதிக்கக்கொண்டு வெளியால வரும். பூவும் தண்ணியுங்கூட உடம்ப நாறப்பண்ணிப் போடும்" என்றார். "தெரியாமலேயே அந்த நாளையிலேயே சவமெடுக்க ஆயித்தமெண்ட பிறகு தானே குளிக்கவாத்து புதுத்துணி போட்டு மாலை போடுறவை. பிறகுதானே கைப்பூரங் கொளுத்துறது" என்றார் ராசம்மாக்கா.

"மாவீரர் புகழுடம்பு. பூமாலை கொண்டு போடாட்டி.... சரியில்லை...." இது கோமதி. "ஏன் அதுக்குத்தானே புலிக்கொடி போத்தியள். மலர்வளையமாகக் கட்டிக் காலடிக்க வையுங்கோ.... எடுக்கக் கிட்ட மாலை போடலாம்" யாரோ குளிர்பானம் கரைத்துக் கொண்டு வந்தார்கள். அதை ஒவ்வொருவராகக் குசினிப்பக்கம் போய்க் குடித்தார்கள். மகிழங்குளப் பாடசாலைப் பிள்ளைகள் வரிசையாக வந்து பூப்போட்டார்கள். நாகமணியக்கா உடலுக்கு மேலாக ஒரு வெள்ளைத் துணியைப்போட்டு முழுப் பூக்களையும் அதில் விழவைத்துச் சுருட்டி எடுத்தார்.

றொசானுடைய வாகனம் வந்துவிட்டது. உடலுடன் நான்கு பெண் போராளிகளும் ஏனையோர் மிதிவண்டியிலும் சென்றனர். இந்தப் பக்கம் அந்தப்பக்கம் என்று சொல்வதுபோல இடையில் பிரித்து நின்றது பெருங்காடு. நொச்சிகுளம் வந்தபோது தோரணங்கள் கட்டப்பட்டு வீதிகள் சுத்தம் செய்யப்பட்டிருந்தன. தவசியாகுளம் கடந்து ஈச்சங்குளம் துயிலுமில்லத்தடியில் வாகனம் வந்தபோது, துயிலுமில்லத்துள் மக்கள் குழி வெட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. அதைக் கடந்து உமாவின் வீட்டுக்கு உடலைக் கொண்டுபோனார்கள். பின் அங்கும் இரு மணித்தியாலங்கள் உறவினர் நண்பர்களுடன் துயர்பகிர்ந்த பின் பெற்றோருடன் மீண்டும் ஈச்சங்குளத்துக்கு வந்து வித்துடல் விதைக்கப்பட்டது.



எல்லாக் கடமைகளும் முடிந்தபோது இரவு எட்டு மணியாகியிருந்தது. நளாயினி மீண்டும் வவுனியா மாவட்டத்தைப் பொறுப்பெடுத்துச் சில நாட்களேயாகியிருந்தன. அவளுக்கு இன்னும் ஒரு உந்துருளி கிடைக்கவில்லை. இந்த பெருநிலப்பரப்பு முழுதும் மிதிவண்டிப் பயணம்தான் அதுவும் போதியளவில் இல்லை.

கோதாண்ட நொச்சிக்குளத்துக்கும் கதிரவேலர் பூவரசங்குளத்துக்கும் இடையேயுள்ள காடு ஏறக்குறைய ஆறு கிலோமீற்றர் வரும். அழகான அடர்ந்த காட்டிடையே வளைந்து வளைந்து செல்லும் வண்டிப்பாதை இதில் பகலில் பயணம் செய்வது ஒரு அற்புதமான மனதை நிறைக்கும் அனுபவமாகும்.

இரவில் பயணம் செய்வது நெஞ்சை உறைய வைக்கும் திகில் நிறைந்தது. பகைவர் நடமாட்டம் யானைகள், காட்டுப் பன்றிகள் என எந்த நிமிடமும் ஆபத்தானது. இந்த வழியேதான் நளாயினியும் பிள்ளைகளும் முகாமுக்கு திரும்பவேண்டும். பொழுது கருகும் போதே இருவரை அனுப்பிவிட்டாள். இப்போது அவளும் இரு போராளிகளும் நின்றனர்.

வன்னித் தெருக்களில் பகலில் சைக்கிளோடுவதே பெரிய கஸ்ரம் இரவில் நினைத்துகூடப் பார்க்கவேண்டாம். எனவே நடந்தே போய்விடுவது என்ற முடிவோடு நளாயினியும் பிள்ளைகளும் நடக்க ஆரம்பித்தனர். வழியில் ஓர் ஆண் போராளி எதிர்ப்பட்டான்.

"அக்கா எங்க இதால"

"பார்க்கத் தெரியேல்லயே"

"ஆசுப்பத்திரியால வந்து எத்தின நாள்"

"அதுக்கு"

"அதுக்கோ! அதுக்குள்ள நடந்து வெளிக்கிட்டாச்சோ. வாங்கோ. தெரிஞ்ச இடத்தில நிண்டிடுப் விடியப் போகலாம்"

"ஏலாது விடியச் சமூக மேம்பாட்டுப் பயிற்சிக்கு ஆசிரியர்களைத் தேடணும்"

"கடவுளே.... சொன்னா விளங்க வேணும். உந்தப் பாதையில போனகிழமை என்ன நடந்தது தெரியுமே"

நளாயினிக்கு கோபம் "என்ன நடந்தாலும் எனக்கென்ன.... நான் கையில என்ன விறகுக் கட்டையே வச்சிருக்கிறன்" என்றவள் அவனைப் பொருட்படுத்தாது "நடவுங்க கெதியா" என்று தன்னுடன் வந்த போராளிகளுக்குக் கட்டளையிட்டாள். கோமதி தொடர்ச்சியாக வவுனியாவில் நின்றாள். ஆதலால் அந்தப் பெருங்காட்டின் ரகசியங்கள் அவளுக்குத் தெரிந்திருந்தன. மிருகங்கள் அதன் காலடி மணம் என்பவற்றிலிருந்து புரிந்துகொள்வாள். அச்சம் என்பதேயில்லாத தன் பொறுப்பாளருடன் பேசிக்கொண்டே நடந்தாள்.

கோதாண்ட நொச்சிகுளத்திலிருந்து ஆரம்பிக்கும் அவ்வண்டிப்பாதை ஒரு நூறுயார் தொலைவில் பறங்கியாற்றைத் தொடும். கும்மென்ற இருளில் சலசலத்துப் பாயும் ஆற்றின் ஒலி மனிதக் காலடிகள் பட்டுச் சுருதி மாறியது. இரு கரையும் வாகனங்கள் இறங்கி ஏறுவதற்கு வசதியாகச் சாய்த்து வெட்டப்பட்டிருந்தது.

ஆற்று நீரில் கைகால்களை அலம்பி முகத்துக்கும் குளிரக் குளிர தெளித்துக் கழுவிவிட்டு நிமிர்ந்தாள். பின்நாளில் உயரமாகப் போடப்பட்ட விருந்த பாலத்துக்காக சிலிப்பர்கட்டைகள் ஒருபுறம் குவிக்கப்பட்டிருந்தன. இருளில் யாரும் மறைந்து நின்றாலும் தெரியாது. அதற்கிடையில் இரண்டு மூன்று கம்பிச்சுருள்களும் இருப்பதை பகலில் அவதானித்திருந்தாள்.

அந்தப் பாதை மேலும் ஐம்பது. நூறுயார் தூரத்தில் இரண்டாக பிளக்கும் ஒன்று வலப்புறமாகச் செல்லும் இடப்புறம் பாலமோட்டை செல்லும் பாதை. கதிரவேலர் பூவரசங்குளம் செல்லும் பாதையில் அந்தக் கச இருட்டிலும் நடந்துகொண்டே பாதையை விபரித்தாள் கோமதி.

இன்னும் இரண்டு கட்டை நடந்தா(3.5k.m) வண்ணான்குளம் வரும். அதற்கடுத்து வாறது. கதிரவேலர் பூவரசங்குளம். அதுக்கு முதல் அந்தா..... அந்தா..... அந்த கேயாப்பின் வளைவு. அவடத்தைத்தான் ஒருக்காப் பதுங்கியிருந்து றெஜியண்ணையைச் சுட்டவங்கள்

"ஆர்..."

"புளொட்காறராம்"

"என்னண்டு உளவில்லாமக் களவுபோகுமே. அங்கால காட்டுக்க தனிவீடு போட்டிருந்தா கிழவியொருத்தி......

"ஓ.... எங்களுக்கு முந்தி விளாம்பழமெல்லாம் கொணர்ந்து தருவா...! அவவே தான். அவவின்ர பேரன் என்டு கேள்வி" "நீ சத்தம் போட்டுக் கதையாத... பிறகு ஆரைச் சுட்ட...."

"நிதி செய்தார் றெஜியண்ணை. கொஞ்சம் கட்டை... முன் வழுக்கை.." "எட எங்கட றெஜி ம் ... பிறகு ஏன் இதில வந்தவர்"

"தெரியாதே அவர் தினசரி காலம நொச்சிகுளப்பக்கமிருந்து இதாலதானே வாறவர். காத்திருந்து சுட்டுப் போட்டாங்கள். ஆள் முறுக்கிகொண்டுபாய, பிறகும் சுட்டாங்களாம். மோட்டார்ச் சயிக்கிள் ரயரில சூடு. ஆள் நிம்மிலேயே ஓடி வந்திட்டார்" (பின்னர் ஒருநாள் இதேயிடத்தில் வைத்து றெஜி சுடப்பட்டார். அதேயிடத்தில் அத்துரோகியும் கைதுசெய்யப்பட்டு சுடப்பட்டார்)

"பிறகு.....!"

"பிறகென்ன வந்தவன் உந்தக் காட்டுக்கால கொஞ்சத் தூரம்தான் ஓடினாப் பறநாட்ட கல்லுத்தானே ஓடிச்சேந்திட்டான்" "இந்தக் கோயிலடியக் கடந்தா ஊர் மனைதான்" இரவு 11.30க்கே நளாயினியும் சுகந்தியும் கோமதியும் முகாமுக்கு வந்து சேர்ந்தனர். மறுநாள் முழுவதும் நளாயினியால் எழுந்திருக்க முடியவில்லை. வயிற்றில் பட்டிருந்த காயம் இன்னும் உள் புண்ணைக் கொண்டிருந்ததோ அவளுக்கு குடலடைப் பையும் ஏற்படுத்தி விட்டதால் வயிற்றுக்குள் எதுவும்மில்லை. வெறுமனே பனடோலையும் சுடுதண்ணீரையும் கொடுத்துப் பார்த்தார்கள். உள்ளி மிளகென்று வைத்தியத்தில் இறங்கினர். ஒரு டம்ளர் நீரைப் பருக்கினால், மூன்று ரம்ளர் நீர் வெளியேவந்தது. எவருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. "போய் அண்ணாக்களின்ர பேசில சொன்னா, கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கென்டாலும் கொண்டுபோவினம். ஓடுங்கோ..."

நளாயினி கிழிந்த நாராய் பாயில் கிடந்தாள்.

• • • • • • • • • • • • • • • • • •

இன்னும் வரும்


த. ஜெயசீலன்

# நிலக்கவிதை



எங்கள் நிலத்தின் இனிய அழகுகளை
உங்களுக்குச் சொல்லும்
உவமைக் குவமைசொல்ல
வார்த்தைகளே இல்லை!
மர்ம மிலுக்குகளும்,
நாகரிகம் என்று நடிக்கும் புதுமைகளும்,
இடாம்பீகம் காட்டும் ஆரவாரச் சோடனையும்,
படாபடோகப் போலிச் பளபளப்பும்,
என்நிலத்தில்
இருக்காது!
எங்கும் இயற்கை அழகுகளும்,
நிரைநிரையாய் நிற்கும் நிஜமும், பழமைகளும்,
எளிய நடைமுறையும்,
இறையோடு ஒன்றிநிற்கும்
வழிமுறையும், வேடமற்ற வாழ்வும்,
போலியான
நாகரீகந் தன்னை நம்பிச் சுயம் இழந்து
போகா விழுமியமும்,
புதுமைபோடு உறவுபூண்டும்
மண்ணோடு இன்றுமொட்டும் வரலாறும்,
எம்நிலத்தின்
வண்ணங்களாய் நிற்கும்!
எனக்கென் நிலவாழ்வே
பிடிக்கிறது
நவீன நாகரிகப் பெருமைப் சொல்லித்
தடல்புடலாய் இயந்திரமாய்த் தத்தளிக்குஞ்
சிறைவாழ்வோ
வெறுக்கிறது,
நானென் நிலவாழ்வைக் காதலித்தேன்!

எந்தன் நிலவாழ்வில்
இரண்டொன்றாய்க் குறைபாடு
இருந்திடினும் அதையே இறுதிமட்டும் விரும்பிடுவேன்!
அந்தக் குறைகளையும் அகற்றக்..
கவிவரைவேன்!
எந்தன் நிலத்தின் இயல்வாழ்வைப் போலத்தான்
எந்தன் கவியும் இயல்பை அவாவிற்று
சோடனை, வியப்பூட்டல்,
சொற்சிலம்பம் போன்றவெறும்
சிலுசிலுப்புக் களையன்றி எளிமையாய் உயிர்த்தும்பி,
விலகாதோர் விழுமியத்தின்
வேரில் செழித்தபடி,
சீவிக்க வேண்டுமெனுந் தெளிவோடு வாழ்கிறது.



*//என்னுடன் கைகோர்த்து நடக்க நீ தயாரானால், என் பாதையில் வரலாம். என் கைகளைப் பிணைத்துக்கட்டி, உன் பின்னால் என்னை இழுத்துத்தான் திரிவாயானால், நீ உன் பாதையிலேயே போ. நான் என் சிறகுகளை அகல விரித்துப் பறக்கத் தொடங்கி நீண்ட நாட்களாயிற்று//*

**மலைமகள்**

# கதவுகள் திறந்துதான் உள்ளன...

தலைமுறை தலைமுறையாகவே புத்திக்கூர்மையும், ஆளுமையும் என்னுள் கடத்தப்படுவதாக உணர்கின்றேன். எப்போதுமே எதையுமே சாதிக்கக்கூடிய ஆற்றலுடன் நான் இருந்துவருகிறேன். எதையுமே நிர்வாகத்தையும் சிக்கலின்றி இயக்ககூடிய ஆளுமை பண்டுதொட்டு என்னிடம் இருந்து வருகிறது. ஆனால் என் புத்திசாலித்தனத்தை தம் புத்திசாலித்தனத்தினால் சந்திக்காமல், தம் அதிகாரத்தால் என்னை அடக்கமுனையும் மனிதர்களே இந்த உலகில் பெரும் எண்ணிக்கையில் என் முன் உலாவுகிறார்கள். எனக்கு இருக்கும் ஒரே ஒரு மனவருத்தம் என்னவென்றால், என்னுடைய புத்திசாலிதனத்தை, ஆளுமையை மதித்து கௌரவிக்கக்கூடிய, உணர்வுகளைப் புரிந்துகொள்ளக் கூடிய மனிதர்களைப் பெரும்பாலும் காணமுடிவதில்லை என்பதுதான். தாய்வழிச் சமுதாயம் அழிந்த நாள் முதலாய் நான் அவர்களை, அந்த நல்ல மனிதர்களை தேடியலைகின்றேன் இன்னும்தான் நான் அவர்களைச் சந்திக்கவில்லை.

நான் காணுகின்ற மனிதர்களை என்னைத் தம் அதிகாரத்தால் அடக்க முயலுகின்றார்கள். அல்லது அன்பு என்னும் போர்வையில் கட்டுப்போட்டு முடக்க முயலுகிறார்கள். இரண்டு வழிகளுமே சரிவராத நிலையில் எனக்கு 'அடங்காப்பிடாரி' , 'ஒருமாதிரி' என்று பட்டங்களைச் சூட்டிவிட்டு விலகி நின்று வீண் விமர்சனம் செய்து என்னை மழுங்கடிக்க முயலுகின்றார்கள். நான் தம்மைவிட ஒரு படியேனும் குறைந்தவளாக இருக்கமாட்டேனா என்ற ஆதங்கம் அவர்களிடம் நீண்ட காலமாகவே இருந்துவருகின்றது. நாலுபேருக்கு முன்னால் என்னை அறிவுபூர்வமானவள், உணர்வு பூர்வமானவள் என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. என்னைவிட தாங்களே அறிவுபூர்வமானவர்கள், ஆளுமையானவர்கள் என்று நாலுபேரிடம் காட்டிகொள்ள முயலும்போது, நான் ஒன்றுமே தெரியாதவள்போல் இருந்துவிட்டால், அதில்தான் இவர்களுக்கு எத்துணை மனநிறைவு! தம்மைவிட ஒரு பெண் மேலானவள், அவர்களுக்கு உண்டாகும் கொதிப்புத்தான் எத்துணை! அப்படியான நேரங்களில் அவர்களுக்கு முடியுமானால் என்னைக் கொன்றேவிடுவார்கள். இவர்களுடன் எப்படி நான் கை குலுக்க.....?

இப்படித்தான் ஒருமுறை பாஞ்சாலபுரத்தில் ஜனகனின் மகாசபையில் பிரம்மவாதியான யக்ஞவல்கியனுடன் பிரம்மம் பற்றிக் கருத்தாடல் செய்யச் சென்றிருந்தேன். யக்ஞவல்கியனால் என் கேள்விக்களால் திணறிப்போன யக்ஞவல்கியன், 'நிறுத்து கார்க்கி. இதற்குமேல் கேள்வி கேட்டால் உன் தலை அறுந்து விழுந்துவிடும்' என்று அந்த மகாசபையில் கூடியிருந்த அத்துணை அறிஞர்கள் முன்னிலையில் நாகரிமேயில்லாமல் கத்திக் கூச்சலிட்டுத்தான் அந்தக் கருத்தாடலை நிறுத்த முடிந்தே தவிர, என் அறிவோடு தன் அறவால் மோதியல்ல. பின்னொரு நாளில் இன்னொரு சம்பவம் நடந்தது. சோழ மண்டலத்தில் கம்பன் என்னைத் தன் கவியால் மட்டம் தட்ட முயன்று என்னிடம் மூக்குடைபட்டான். எப்படியாவது என்னை 'எடி' போட்டு மட்டம்தட்ட விரும்பிய கம்பன் 'காலடி நாலிலைப் பந்தலடி என்று நொடி போட்டான். ஒரு தண்டிலே நான்கே இலைகள்மட்டும் கொண்டிருக்கும். ஆரை என்ற கீரையைப் பற்றியதே நொடி. என்னை 'எடி' போடவே கம்பன் நொடி போட்டான். விட்டேனா நான்

"எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேல் கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே ஆரையடா சொன்னாய் அடா"

(அவலட்சணமே, எருமைமாடே, கழுதையே, குட்டிச்சுவரே, குரங்கே, நீ கேட்டது ஆரை என்ற கீரையை அடா) என்று பதில் கொடுத்து மடக்கினேன். கவிச்சக்கரவர்த்தியே ஆனாலும் ஒரு பெண்ணை மட்டம் தட்டிதான் தன் புலமையைக் காட்ட நினைத்த கம்பனை வேறு எவ்வாறு நான் அணுகியிருக்க முடியும்?

வேறொரு நாளில் பீஷ்மனும் சால்வனும் சேர்ந்து என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி அவமானப்படுத்தியதை இன்னும் எத்தனை தலைமுறை கடந்தாலும் மறக்க முடியுமா என்னால்.....?

சாளுவ மன்னன் சால்வனுடன் மனதால் ஒன்றியிருந்த என்னை சுயம்வர நாளன்று சுயம்பர மண்டபத்திலிருந்து என் சகோதரிகள் இருவருடன் சேர்த்து தம்பி திருதராட்டினனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதற்காகத் தூக்கி சென்றான் பீஷ்மன். அத்தினாபுரத்திலிருந்து அவனது அரண்மனைக்குக் கொண்டு சென்ற பின், நான் என் மனதில் இருந்ததை பீஷ்மனிடம் தெரிவித்தேன். அவன் என்னைச் சால்வனிடம் அனுப்பினான். சுயம்வர மண்டபத்துக்கு வந்திருந்து ஏமாற்றத்துடன் நாடு திரும்பியிருந்த சால்வனோ.

"பீஷ்மனால் தூக்கிச்செல்லப்பட்ட பெண்ணை என்னால மணம் செய்ய முடியாது. நீ பீஷ்மனிடமே போ அம்பை" எனத் திருப்பியனுப்பிவிட்டான். மீண்டும் பீஷ்மனிடம் வந்து அவன் தம்பி திருதராட்டினனுக்கே என்னை மணம்செய்து வைக்குமாறு கேட்க, "இன்னொருவரை மனதால் நினைத்த உன்னை என் தம்பிக்கு மணம் செய்து கொடுக்க முடியாது. நீ சால்வனிடமே போ "

என பீஷ்மன் திருப்பியனுப்ப, மீண்டும் சால்வனால் மறுக்கப்பட்டு பீஷ்மனிடம் திரும்பி வந்து "உங்களால்தான் இந்த நிலமை வந்தது. நீங்களே என்னை மணம் செய்யுங்கள்" என்று கேட்க, அவன் மறுத்துவிட்டான். நான் என்ன குப்பையா இப்படிச் சால்வனாலும் பீஷ்மனாலும் மாறி மாறி தூக்கி வீசி எறியப்பட?

நான் ஒரு பெண். உடலும் உயிரும் உணர்வும் கொண்ட மனித உயிர். என் இளமை உணர்வுகளைத் தூண்டியவன் சால்வன். கேட்டுகேள்வி இல்லாமல் தூக்கிச் சென்றவன் பீஷ்மன். தன்னுடைய மனதால் ஒன்றிய என்னை பீஷ்மன் தூக்கிச் சென்றான் என்று காரணம் சொல்லி மறுத்தான் சால்வன். தன்னால் தூக்கிச் செல்லப்பட்ட என்னை வேறொருவனை விரும்பினேன் என்று காரணம் சொல்லி மறுத்தான் பீஷ்மன். அவன் பிரம்மச்சாரிய விரதம் கடைப்பிடித்தது வேறு விடயம். ஒரு பிரம்மச்சாரி ஏன் என் வாழ்வில் தலையிடவேண்டும்?

இந்த இருவரில் ஒருவராவது எனக்கும் மனம், விருப்பு, வெறுப்பு, உணர்வு இருக்கும் என்பதைச் சிறிதும் புரிந்துகொள்ள முயன்றார்களா?

எனக்குத் தெரியும் சால்வன் என்னை மறுத்தது பீஷ்மன் என்னைத் தூக்கிச்சென்றான் என்பதற்காக மட்டும்மல்ல, அவனது அரண்மனையில் நின்றபோது என் ஒழுக்கம் மாறுபட்டிருக்கக் கூடுமோ என்ற ஐயத்தால் தான் என்பதைக்கூட புரிந்துகொள்ள முடியாத அளவு முட்டாளா நான்?

தன்னிலேயே நம்பிக்கையில்லாத சால்வனிடம் மனதை கொடுத்தது என் தவறுதான். ஆனால் இந்த பீஷ்மன் கடையிலே ஒரு பொருளை வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோய்க் காட்டி, பிடிக்கவில்லை என்றதும் கடையிலே திருப்பிக் கொடுப்பதுபோலல்லவா என் வாழ்வுடன் விளையாடினான். ஒரு பாட்டாம் பூச்சிபோல் விளையாடித் திரிந்த, சிட்டுக்குருவிபோல் கட்டற்றுப் பறந்த என் சிறகுகளை ஒடித்து என்னைக் காயப்படுத்தியதுமல்லாமல் காயத்துக்கு மருந்து போட மறுத்த அவன் மிருகத்தனத்தை என்னவென்று சொல்ல?

எவனோ ஒருவனின் கதையைக் கேட்டு என்னில் ஐயுற்ற இராமன், வேடம் புனைந்து வந்து என்னை ஏமாற்றிய இந்திரன், தானும் இந்திரனிடம் ஏமாந்துவிட்டுத் தன் ஆற்றாமையால் என்னில் சினந்த கௌதமன்..........

இப்படி இவர்கள்போல இன்னும் எத்தனை பேரை நான் காலங்காலமாக கண்டு வருகின்றேன். இது போன்றவர்களிடம் இனியும் ஏமாந்து போக நானென்ன மூளையே அற்றவளா?


என்னை அறிவால் மடக்குவதில் தோற்று, பின் என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தி என்னை ஏறி மிதித்த இவர்கள் இப்போது என்னவென்றால் என் உரிமைக்காகத் தாம் குரல்(?) எழுப்பப் போகிறார்களாம். என் விடுதலைக்காகத் தாம் வழியமைக்கப் போகிறார்களாம். என்னைத் தம் பின்னால் வரட்டாம். எப்படியிருக்கிறது?

அடப் போடா பைத்தியக்காரா! அன்றொரு நாள் ஜனகனின் மகா சபையில் "உன் தலை அறுந்து விழுந்துவிடும்" என்று நீ கத்தினாயே. அன்றே நான் உன்னை நன்றாக அறிந்துகொண்டேன். நான் நடந்து போகும் பாதையை நீ தீர்மானிக்கத் தேவையில்லை. என் வழியில் நீ குறுக்கே பாய்ந்து விழாமல், விலகி நடப்பாயானால் அதுவே போதும். என் வழி எனக்கு தெரியும். அதற்காக, இந்த உலகம் உள்ளவரையும் நீயும் , நானும் தனித்தனி வழிகளில்தான் பயணம் என்று உன்னை நான் தள்ளி வைக்கவும் இல்லை. என் பாதை உனக்குத் தடை செய்யப்படவும் இல்லை.

என் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, என் திறமைக்கு மதிப்பளித்து என் ஆளுமையை கௌரவிக்கக்கூடிய மனிதர்கள் என்னோடு என் வழியில் எப்போதும் நடக்கலாம். என்னுடன் கைகோர்த்து நடக்க நீ தயாரானால், என் பாதையில் வரலாம். என் கைகளைப் பிணைத்துக்கட்டி, உன் பின்னால் என்னை இழுத்துத்தான் திரிவாயானால், நீ உன் பாதையிலேயே போ. நான் என் சிறகுகளை அகல விரித்துப் பறக்கத் தொடங்கி நீண்ட நாட்களாயிற்று. மண்ணிலே உள்ள கூண்டு பொன்னால் ஆனதாக இருந்தாலும், இனி அதற்குள் நான் வந்தமரப்போவதில்லை. இந்த மண்ணிலே எத்துணை பசிய புல்வெளிகளும், பச்சை மரங்களும், ஆற்றோரங்களும், கடற்கரைகளும் உள்ளன நான் இறங்கி இளைப்பாற.

ஆனால் என் மனதின் கதவுகள் நல்ல மனிதர்களின் வருகைக்காக எப்போதும் அகலத் திறந்தபடியேதான் உள்ளன.

சரிநோ
ஒக் 14.27.1999





# போரும் வாழ்வும்



## துணைப்படை வீரர் மேஜர் மயில்குஞ்சு

மணலாறு விஜயன்

பதினாறு ஆண்டுகளுக்கு மேலாய், எமது விடுதலைப்பயணத்தில் விழிப்போடு இருந்து வழிகாட்டிய வீரன் விழி மூடிக்கொண்டான். மரணத்தின் பின் மாவீரனாய் எங்கள் தலைவனால் கௌரவிக்கப்பட்ட மாமனிதன் என்ற பெருமையோடு விழிமூடிக்கொண்ட குஞ்சண்ணனுக்கு மணலாற்று மண்ணில் பெரும் சரித்திரமொன்று உண்டு. அந்தப் பெரும் சரித்திரத்தில் சில துளிகளை மட்டுமே என் பேனாவுக்கு எழுத வலுவுண்டு.

வடதமிழீழத்திலிருந்து தென்தமிழீழத்துக்கும் தென்தமிழீழத்திலிருந்து வடதமிழீழத்துக்கும் எமது போராளிகளின் பெரும் படையணிகள் அவசரமாக நகர

வேண்டிய காலங்களிலெல்லாம் "டேய் மயில்குஞ்சுவை ஏத்திவா" என்று லெப்.கேணல். அன்பு சொல்லிய மறுகணமே அவருடைய மொட்டை ஜீப் வண்டி காற்றாய்ப் பறந்துவரும் இராஜ மரியாதையோடு ஏற்றிவரும் ஜீப் வண்டியின் முன் இருக்கையில், அவன் கம்பீரமாய் அமர்ந்திருந்து வரும் அன்றைய நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

அன்றென்ன இன்றுவரை இதே மரியாதைதானிருந்தது. வடதமிழீழத்துக்கும், தென்தமிழீழத்துக்கும் இடையில் எத்தனை பெருங்காடுகள் இருக்கின்றனவோ அத்தனை காடுகளும் இவனுக்கு அத்துபடி. திக்குத் தெரியாத இந்தக் காடுகளில் ஒவ்வொரு அங்குலமும் இவன் காலடி கண்டவைதான். மணலாற்றுக் காடுகளுக்கோ, திருமலை, மட்டக்களப்புக் காடுகளுக்கோ பேசும் சக்தி இருக்குமாயின் குஞ்சண்ணனின் கதையை கண்ணீர் சிந்தச் சொல்லிக்கொண்டேயிருக்கும்.

மயில்குஞ்சண்ணனின் இழப்பை ஈடுசெய்யமுடியாது. நூறு இருநூறில்லை. ஆயிரக்கணக்கான போராளிகளையும் ஆளின்ர கையில நம்பிக்கையோடு ஒப்படைப்பம். போகவேண்டிய இடத்தை மட்டுமே சொல்லுவம். எதாலபோனால் எப்பிடிப் போனால் பாதுகாப்பாய்ப் போய்ச் சேரலாம் என்பதெல்லாம் அவனுடைய திட்டந்தான். காட்டு மரங்களின் இனம். செறிவு, முதிர்வு இவற்றைக்கொண்டே எந்த இடத்தில் நிக்கிறமெண்டு சொல்லுவான். இலை உதிரும் சத்தம், கள்ளிமுறியும் சத்தம் சருகுசரசரக்கும் சத்தம், பறவைகளின் பார்வை, அவை எழும்பும் ஒலி மிருகங்களின் அலறல், எல்லாவற்றுக்கும் அவன் சரியான காரணத்தைச் சொல்லுவான். எதிரியின் மூச்சு, அவன் மணம் எல்லாம் உடனே உணர்ந்துவிடும் வல்லமை இவனிடமிருந்தது. படைப்பில் இவன் வித்தியாசமான பிறப்பாய் படைக்கப்பட்டிருக்கிறான். "காடு சம்மந்தமான முழு அறிவையும் ஆளை வச்சுக்கொண்டே எங்கடை பொடியளுக்குப் படிப்பிக்க வேணுமடாப்பா" என்று தலைவர் கூடச்சொன்னவர். நாங்கள்தான் கவலையீனமாய் இருந்திட்டம். மணலாற்றுக்காட்டில ஆளில்லாம நாங்கள் இறங்கேல்ல. கூட்டிக்கொண்டு போகேக்க "இதில நில்லுங்கோ" என்டால் அதில நிப்பம். "இந்த இடத்தில பொயிசன் போடுங்கோ" என்டால் அதிலதான் போடுவம். போட்டால் போட்டதுதான். நம்பி இருக்கலாம். அதால ஆமி வருவானெண்டு ஒரு அபார அனுபவசக்தி இவனிட்ட இருக்குது.

றெக்கி எடுக்கிறதுக்கு இவனைப்போல இன்னுமொராள் புதிதாய்த்தான் பிறக்கோணும். ஆள் பதுங்கி இருந்தால் ஒரு சின்ன அசைவு கூட இருக்காது. ஆமி அருகால வாறானெண்டால் அப்படியே ஒடுங்கி சுருண்டு சின்ன உருவமாய் வந்திடுவான். கடைசி வரையிலும் ஆமியால கண்டுபிடிக்க முடியாது. இப்பிடி ஒடுங்கி சுருளும் சக்தியை எவரிட்டேயும் நான் இதுவரை காணேல்லை. ஆள் ஒழிச்சா கண்டுபிடிக்கேலாது. அதாலதான் சின்னனிலே இருந்து மயில்குஞ்செண்டு எல்லாரும் அழைத்தார்கள். நெருக்கடியான நேரங்களில் இவரை இழக்காமலிருந்த நாங்கள் இப்ப ஆளை இழந்திருக்கவே கூடாது. மணலாற்றுச் சிங்களவரும், ஆமியும் கேள்விப்பட்டால் பாட்டி வைச்சுக் கூத்தாடுவாங்கள். பத்து பதினஞ்சு வருசமாய் முயற்சி செய்தும் கொல்லேலாமல்ப்போன புலி வீரச்சாவடைஞ்சிட்டுதெனக் கேள்விப்பட்டதும் துள்ளிக் குதிச்சிருப்பான்.

எதைச் சொன்னாலும் மனம் ஆறாது. மயில்குஞ்சை இழந்தது பெரும் இழப்பு என்று மணலாற்றுக் காட்டில் முன்னர் தளபதியாக இருந்த பாண்டியன் என்ற போராளி சொல்லிக்கொண்டிருந்தபோது அவனது விழிகள் நிரம்பியிருந்தது.

குஞ்சண்ணனை இழந்தது பெரிய இழப்பு குப்பி கட்டாட்டியும் அவனைப் போதுமகனாய் எந்தப் போராளியும் பார்த்தது கிடையாது. எந்தப் போராளியைக் கேட்டாலும் மேஜர் தரத்துக்குக் கீழே அவரைச் சொல்லமாட்டார்கள். எடுத்த எடுப்பிலேயே மேஜர் எனச் சொல்லத் தகுதியானவர். அண்ணை சரியான கௌரவத்தைக் கொடுத்திருந்தார். அவரின்ர மனதில இடம்பிடிச்ச மாபெரும் வீரன் என மூத்த தளபதி பால்ராஜ் அண்ணன் கூறும்போது அவரது குரல் தளதளத்தது.

"மயில்க்குஞ்சுக்கு இரண்டு பக்கங்கள் இருக்குது மாஸ்ரர். ஒண்டு குடும்பப் பக்கம், மற்றது இயக்கப் பக்கம். குடும்பப் பக்கத்தில ஆளிட்ட நிறையப் பலவீனங்கள் கிடக்குது. இயக்கப் பக்கம் அதீத பலங்கொண்டது. பயிற்சி இல்லாமலே இயக்கக் கட்டுப்பாடுகளில்லாமலே இயக்கத்தில இருந்த பற்று என்ற உணர்வைப் பெரிசாய்த் தாக்கியது. புல் மோட்டையில ஒரு தடவை ஒன்பது பேரோட றெக்கிக்குப் போயிருந்தான். றெக்கியெல்லாம் பாத்திட்டு ஒரு இடத்தில வந்து குளிச்சிருக்கினம். பதுங்கியிருந்த ஆமி சுடத்தொடங்கினான். மேஜர். கருணா அதில் வீரச்சாவடைஞ்சிட்டான். குளித்துக்கொண்டிருந்த மயில்குஞ்சுக்குக் கையில் காயம். குளிச்ச உடுப்போட நீந்தி ஆத்தால ஆள் வந்து சேர்ந்தது. காயப்பட்டதுதான் ஆள் பயந்து போய் விட்டபோய்ச் சேந்திடுமென நினைச்சன். "அண்ணை உவனை விடக்கூடாதண்ண. உவனுக்கு உடனேயே அடிக்கோணும்" என்டு ஆவேசத்தில நிண்டுது. உடனேயே குறூப்பொண்டு வெளிக்கிட்டுது. ரெண்டுமூண்டு நாளுக்குள்ளேயே புல்மோட்டை ரோட்டில வல்சு ரோந்து வந்த ஆமிக்கு அடி நடந்தது. அதில ஒரு ஆமிதான் தப்பி ஓடினான். மிச்சம் இருபத்தெட்டுப் பேரையும் அடிச்சு றைபிள்களையும் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான்.

இது மாதிரி இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. றெஜியைக் கேட்டால் அதை விபரமாகச் சொல்லுவான். றெஜிக்கு ஆளெண்டால் போதும். ஆள் வீரச்சாவெண்டு கேள்விப்பட்டால் அழுவான். இவரோட அவனுக்கு நல்ல ஒட்டு. ஒருநாள் ஏழுபேரோட றெக்கிக்கு போயிருந்தான். ஆமி பதுங்கியிருந்து அடிச்சு ரெண்டு பேர் வீரச்சாவு. றைபிளும் பறி போட்டுது. றெஜியைப் பொடியள் பகிடி பண்ணினாங்கள். றெஜி அழுது போட்டான். அப்ப மயில்க் குஞ்சுதான் அவனை "அழாதேடாப்பா ரெண்டுமூண்டு நாளைக்குள்ள வெண்டு தரலாம்" எனத் தேற்றினான். சொன்னமாதிரியே ஆமிக்கு அடிச்சு பன்னிரெண்டுபேரைக் கொன்று றைபிளும் எடுத்துக்கொண்டு வந்தாங்கள். றெஜியோட இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. ஒருநாள் ஆமிக்கு அடிக்க ஒப்பிக்கு மரத்தில ரெண்டுபேரும் ஏறியிருந்திருக்கினம். இவையளுக்குத் தெரியாமல் ஆமி மரத்துக்குக் கீழால போயிருக்கிறான். போகேக்க கண்டு அடிக்க வெளிக்கிட்டிட்டுட்டான். உடனே றெஜி குண்டைக் கழட்டி கீழே போட்டிட்டு வெடிச்சகையோட இறங்கி ஓடியிருக்கிறான். மரத்துக்குக் கீழே ரெண்டு றைபிள் கொழுவியிருந்தது. றைபிளுக்கும் மயில்க்குஞ்சுக்கும் என்ன நடந்ததே தெரியாதென றெஜி நினைச்சுக்கொண்டு சென்றிபோட்ட இடத்துக்குப் போய்ச்சேர அங்க ரெண்டு றைபிளோடையும் ஆள் நிக்குது. இவ்வளவு வேகமாய் எப்படி வந்து சேர்ந்ததெண்டு தெரியாது. என ஆச்சரியத்தோடு கூறினான். இப்படியெல்லாம் நிறைய நடந்திருக்குது.

இன்றும் றெஜிக்கு தெரியப்படுத்தேல்ல. கேட்டால் தாங்கமாட்டான் என மூத்த தளபதி சொர்ணம் வேதனையோடு கூறினார்.

மயில்க்குஞ்சு தனிய நடத்திய தாக்குதல்கள் சிலவற்றை நினைத்துப் பார்த்தேன். கோட்டைக் கேணியில உழவியந்திரத்தில் வந்த ஆமிக்கு சக்கை அடித்துப் பதினெழுக்குமேல் ஆமியைக் கொன்றான். இன்னொருநாள் ஆத்தைக் கடக்க வந்த அஞ்சு ஆமியைச் சுட்டுபோட்டு றைபிளையும் எடுத்துக்கொண்டு வந்தான். தான் தனிய என்ற பயம் அவனிடம் ஒருபோதுமே இருந்ததில்லை.

மண்கிண்டி இராணுவ முகாம் அழிப்புக்கான பிரதான கர்த்தா இவன்தான். முகாமுக்குள் ஒவ்வொருநாளும் புகுந்து அதுக்குள்ள நிலைகளை அக்கு வேறு ஆணி வேறாய் அறிந்து வந்தான். மணலாற்றுக் காட்டிலுள்ள முகாமொன்றினுள் புகுந்து அவனது சமையலறைக்குள்ளே சாப்பாடுபோட்டு சாப்பிட்டுவிட்டு வந்தநாள் ஒன்றுகூட உண்டு. நம்ப முடியுமா? நம்ப முடியாத சாதனைகளைத்தான் நாள் முழுவதும் செய்தான்.

1995ம் ஆண்டு மணலாற்றில் மூன்று இராணுவ முகாம்களைத் தாக்கச் சென்று காட்டிக் கொடுத்த துரோகிகளால் எம் போராளிகளை இழந்து தாங்க முடியாது அழுத அந்த நாட்களை நினைத்துப் பார்க்கின்றேன். எமது வேவுப்புலி வீரர்களை அந்த முகாமுக்குள் அழைத்துச் சென்று சல்லடைபோட்டு முழுமையான வெற்றிக்கு வழிகாட்டிவிட்டு சண்டைக்காக எமது போராளிகளை அழைத்து சென்றவன். துரோகிகளின் காட்டிக்கொடுப்பில் தாக்குதல் வெற்றியடையாமல் போனபோது எமது மகளிர் படைப் பிரிவின் ஓரணி வழிமாறி சிங்களக் குடியேற்றங்களுக்கு நடுவே சிறிய காட்டுத்துண்டொன்றுக்குள் பதுங்கியிருந்தனர். வாக்கி டோக்கி தொடர்பிருந்தும் அவர்கள் இருக்கின்ற இடத்தை எவராலும் புரியமுடியவில்லை. காயமடைந்த போராளிகளோடு ஒருவாராகப் பசியோடிருந்த அவர்களை மீட்க முடியுமென்ற நம்பிக்கை குறைந்துகொண்டே சென்றது. திசைமாறிய ஏனைய அணிகளை ஒழுங்கமைத்து உரிய இடங்களுக்குக் கொண்டுவந்த மயில்குஞ்சண்ணனிடமே இறுதியாக இதுவும் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் இருக்குமிடத்தின் அமைப்பை வாக்கிடோக்கியில் கேட்டறிந்துகொண்டே குஞ்சண்ணன் இடத்தை இனங்கண்டு கொண்டான். பகலில் செல்ல முடியாததால் இரவுக்காகக் காத்திருந்த குஞ்சண்ணன் அன்றிரவே குறிப்பிட்ட இடத்தை சென்றடைந்து அவ்வணியை அழைத்து வந்தார்.

அந்த நாளை நினைத்தால் இன்றும் வாய்விட்டு அழ வேண்டும். எங்கள் போராளிகளின் உயிர்களை தன் உயிரிலும் மேலாய் சுமந்து காத்தவன். எழுத்தில் இவனது போர்ப் பயணங்களை எழுதிக் காட்டுவது இயலாது.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் நாளில் என்னுடன் பேசிக்கொண்டதை நினைத்துப் பார்க்கிறேன். "எங்க குஞ்சண்ணை ஊர்ப்பக்கம் போறியளோ" எனக்கேட்டேன் "வேற எங்க மாஸ்ரர், ஒரு வழமையான வேலைக்குத்தான்" எனக்கூறி விட்டு சைக்கிளை வேகமாக உழக்கினான். தான் பிறந்த கொக்குத்தொடுவாய் மண் பறிபோனது அவனது மனதில் ஆறாத வடுவாயிருந்தது. அவனுடைய இறுதிப் பயணமாய் இருக்குமென நான் கனவிலும் நினைத்ததில்லை.

மயில்குஞ்சண்ணனின் வீர உடலில் கால்வருடி, முகம்வருடி அழுதுகொண்டிருந்த அவனது மனைவி சொல்லி அழுத சில வார்த்தைகளை நினைக்கின்றேன்.

"காடெண்டாலே பயமில்லாத நீங்கள், நேற்று மட்டும் இண்டைக்குக் காட்டுக்குப் போறதெண்டு நினைக்கப் பயமாய்க் கிடக்குதப்பா என்று சொன்னியளே, சாவுவரப்போவதைத் தெரிஞ்சுதான் சொன்னீங்களோ. அக்கா, ஆள்வர ரெண்டு மூண்டு நாளாகும் என்று சொல்லிச் சுட்டிக்கொண்டு போனார்கள். ஒவ்வொரு தடவையும் இப்படிதான் சுட்டிக்கொண்டு போய் சுட்டிக்கொண்டு வந்துவிடுவார்கள். வீட்டில நீங்கள் நின்ட நாட்களை எண்ணிப் பார்க்கலாமே. எல்லா நாளும் போராளிகளோட காட்டில்தான் நிண்டனீங்கள். நீங்கள் மட்டக்களப்புவரை போராளிகளைக் கூட்டிக்கொண்டு போயவர, மாதக்கணக்கில் கூட தனியாகத்தான் இருந்தனான். இண்டைக்கு நிரந்தரமாய்ப் போட்டியளே" என்று சொல்லி அழுதாள். அந்த வீரனின் காலடியில் நின்று கண்ணீரால் மட்டுமே காணிக்கை செலுத்த முடிந்தது. அவனுக்காக சில வரிகளை உடன் எழுதவேண்டும் என்ற வேகத்தில் சில நிமிடங்கள் எழுத்துருவாய் அவனோடு பேசிக் கொண்டேன். ■

விழிக்க மறந்த கண்கள்
தூக்கமும் துன்பமும்
தொடர்ந்ததினால்
எட்டாத வேதனைக் கரைகளை
எட்டாமலேயே போனதாக எண்ணி
சடகிடையே ஓர்
கண்ணீர் வாழ்க்கை
பார்வைகளை மறுத்ததினால்



பாதைகள் திசைகளையிழந்து
சிக்கித் தவித்தன
உண்மைகளை நோக்கிய
தேடல்கள்
உருவங்களிடம்
தங்களையே இழந்து போயின.
இழப்புக்கள்
விளக்கங்களுடன் விரிந்து
இலக்கணமாகியது
பற்றுக்கொண்ட தேடல்களும்
கூடவே ஒட்டிக்கொண்டன
இருட்டு மேடையில்
சுருட்டால் நாடகம்
நலமே நடந்தேறியது
தொலைந்துபோன சொந்தங்களிலே
எஞ்சிப் போனவை;
எழ்மையும் ஏளனமுமே!
நியாயக் கற்பிதங்கள்
கோட்டு சூட்டும் மட்டும்
போட்டிருக்கவில்லை
கோவணமும் சால்வைத்துண்டும் கூட
எட்டி நின்று ஏவல் செய்தன
மேடைக்கு வெளியிலும்
நடமாடும் வேசங்கள்
அவற்றின் கூச்சலிலே
அருகில் நின்ற ஆதாவென்றெண்ணி
நம்பியே வெம்பிய கூட்டங்கள்
மூடிய கண்களுக்குள்ளே
முழுநேர விரிவுரைகள்
வெளிச்சத்திற்கு வேலியிட்டன.
வேலியென்ன
தாழ்ப்பாளே போட்டன.
கடந்து போனவையெல்லாம்
இழந்து போனவையாம்
புதிய விளக்கங்கள்
கண்ணுக்கு மை இட்டு
அழகென்று அறிவுறுத்தின
குருட்டுக் கண்கள்
இருட்டுக் வாழ்க்கையிலும்
இழந்ததை

தாம் மறந்ததை - ஏதோ
மீட்டுக் கொண்டதைப்போல்
மகிழ்ந்து கொண்டன
தேவைகளின் நிர்ப்பந்தத்தில்
நீண்டு வரும் கைகள்
வாங்குவதிற்காக ஏங்கி நிற்கும்
ஏங்கி ஏங்கி
எதையுமே வாங்காமல்
தூங்கிப்போகும் - அல்லது
துளியொன்று கிட்டிவிட்டால்
துள்ளிப்போகும்
முட்டும் நீர்த்துளிகள்
கண்கள் மீறி
எட்டிப் பார்க்க
எல்லைகளைத் தாண்டிய
அழுகைகள்
வெளிச்சத்திற்குள் வந்து
வேவு பார்க்கும்
இருட்டு மேடைகளின்
வரட்டு வாதங்கள்
கேள்வி குறிகளாகி
விலகிப் போக
தூக்கத்தின் துயரங்கள்
வாழ்க்கை வரைமுறைகளோடு
அளக்கப்படும்
வாங்கிய கைகள்
ஓங்கும் நாள்வரின்
துயரங்கள் தூரமாகி
எட்டினும் எட்டாமல்
விட்டுப் போய்விட
காரணங்களைத் தேடிய
கண்கள்
பார்வைகளுக்குள்
பதிந்து கொண்டதை
எடை பார்த்து
எடுத்துக் கொள்ளும்
நாளை நம்கையில்
வாழ்வு எம்கையில்
வரைமுறைகளும் அவ்வாறே!
ஆமாம்
இறந்தகாலம் பாடங்களாகி
இலட்சியம் எதிர்காலமாக
போராட்டம் நிகழ்காலமாகட்டும்!!
அப்போதுதான்
வினாக்கள் விடைகளைக்காண
விடைகள் வரைகளைக்காண
வரைகள் மனிதத்தைக் காணும்!!!

ஞாலவன்

சாந்தன்

# பின்னல்



அருமை, அரசடிச் சந்திக்கு வந்ததுமே நேரத்தைப் பார்த்தார். ஏழேகால். நேரேபோய், அரச மரத்தோடு இருந்த வைரவரடியில் இரண்டு நிமிடம் கண்மூடி நின்றார். பிறகு இடமும் வலமும் வடிவாகப் பார்த்துவிட்டுக், தெருவைக் கடந்துபோய் பூவரசடியில் நின்றுகொண்டார்.

பஸ் சத்தங்கேட்டது. நேரத்துக்கு வருகிறது இன்றைக்கு. வலக்கையிலிருந்த பையை இடக்கைக்கு மாற்றிக்கொண்டு அருமை தயாரானார்.

ரிக்கெற்றை வாங்கிகொண்டு எங்கே இடமிருக்கிறது என்று பார்த்தபோது, சந்திரனின் சிரித்த முகம் பளிச்சென்று கண்ணில் பட்டது.

"இப்படி வாங்கோ" தன் பக்கத்தில் வெறுமையாய்க்கிடந்த இடத்தைக் காட்டினான் அவன். அருமை உட்கார்ந்ததும் "இன்றைக்கு எனக்குக் கிளினிக்" என்றான் சந்திரன். அவர் அலுவலகத்திற்குப் போகிறாரென்பது அவனுக்குத் தெரியும்.

அடுத்த நிறுத்தத்திலேயே பஸ் நிரம்பிவிட்டது. அவர்களை ஆறுதலாகப் பேசவும் விடாமல் தலைக்கு

மேல் வளைந்த சனம் - அருமை தன்னுடைய நிறுத்தம் வந்து இறங்கும்போது கஷ்டப்பட்டுத்தான் இறங்க வேண்டியிருந்தது. இறங்கியதும் சட்டையைத் தட்டியபடி, 'வாறன்' என்றார் அண்ணாந்து. யன்னலூடகத் தலையசைத்தான் சந்திரன். விறுவிறென்று நடந்தார் அருமை.

சந்திரன் அடுத்த நிறுத்தத்தில் இறங்கவிருந்தான். அதுதான் கடைசி பஸ் நிலையம். தெருவில் போக்குவரத்து நெரிசல் தொடங்கிவிட்டிருந்தது. பள்ளிப் பிள்ளைகளின் சைக்கிள்களும், மண்ணெண்ணெய்ப் புகை கக்கும் வாகனங்களுமாய். பஸ், விடாமல் ஹோண் அடித்தபடிதான் போய் நிலையத்தில் வட்டமடித்து நின்றது. எல்லாரும் இறங்கும்மட்டும் காத்திருந்தான் சந்திரன். எட்டு மணி எட்டே காலுக்குப் போனாலும் போதும். மச்சான்காரன் இடம் பிடித்து வைத்திருப்பான்.

இறங்கி நடந்தபோது, எதிர் வெய்யில் கண்களில் அடித்தது. பட்டணம் மூச்சுப் பிடித்து இயங்கத் தொடங்கியிருந்தது. நடைபாதையில் பரப்பியிருந்த கடையொன்றுக்கு விலகியபோது, எதிரே வந்த நடுத்தரவயதுப் பெண்ணொருவர், அவன் கையைப் பற்றினார்.

"அக்கா!" அப்போதுதான் கவனித்தான் சந்திரன் "துலைக்கோ, இந்தநேரம்?" உதிலை பாங்குக்கு. அத்தான் பின்னாலை வாறார்.

"எனக்கு இண்டைக்கு கிளினிக்" சிரித்தபடி நகர்ந்தான், "வரட்டே நேரமாகுது"

"எட! திரும்பிப்போகேக்கை அவனை வீட்டை வரச்சொல்லியிருக்கலாம்" என்று நினைத்தபடி நடந்தா அக்கா. "பரவாயில்லை, எங்கட பாங்க் அலுவல் எத்தினைக்கு முடியுமோ" என்றொரு சமாதானமும். எதிரே பேப்பர்க் கடையில் நின்றவரைப் பார்த்ததும் அதிசயமாக இருந்தது.

"என்னெண்டு என்னை முந்திக்கொண்டு வந்தநீங்கள்?"

"நான் சைக்கிளெல்லோ" சிரித்தவர்,

"நடவும் பின்னாலை வந்திடுறன்", என்று விலகி நின்றார். பேப்பர் கடையிலிருந்து வெளியே வந்த ஒருவர் அத்தானிடம் வந்தார்.

"நடா, குறை நினையாதை எனக்கு இப்ப ஒன்பதுக்கு வகுப்பு ஒண்டிருக்கு" என்றார் வருத்தம் தெரிவிப்பதுபோல.

"ரைட், பிறகு சந்திப்போம்" நடா விடை கொடுக்கவும் மாஸ்ரர் தன் பேப்பரை அவசரமாக மடித்துப்பையில் வைத்தபடி போய்ச் சற்றுத் தள்ளிநின்று சைக்கிளை எடுத்தார்.

மாஸ்ரர் பாடசாலை வாசலருகில் வந்து இறங்கவும் எட்டே முக்கால் வழிபாட்டு மணிஅடிக்கவும் சரியாயிருந்தது.

*

இரண்டே முக்காலுக்கு மீண்டும் மாஸ்ரர் வெளியே வந்தபோது, வெய்யில் கண்ணை மின்னியது. காற்றேயில்லாத காங்கை.

இந்த வெய்யிலில், இந்தப்பள்ளி நெரிசல்களில் வீடுபோய்ச்சேர மூன்றேகாலகி விடும். அதன் பிறகென்ன மத்தியானச் சாப்பாடு என்று அலுத்தபடி சைக்கிளை மிதித்தார்.

வீடு போய்ச் சேர்ந்து, மேல் கழுவி, சாப்பிட்டு விட்டு, 'முருகா' என்று பேப்பருங்கையுமாய் நாற்காலியில் சாய்ந்தபோது நாலுமணி.

"தம்பி இன்னும் ரியூஷனுக்கு வெளிக்கிடேல்லையோ?" மனைவியைக் கேட்டபடி பேப்பரைப் பிரித்தார்.

"தீபன்!" தாய் உள்ளே போனா. அதற்காகவே காத்திருந்தவன்போல வெளியே வந்து "போட்டு வாறன்" என்று சைக்கிளை எடுத்தான் தீபன்.

படலையைச் சாத்திக் கொழுவிவிட்டுத் தாவியவன், சட்டென்று குதித்து, பின் சில்லை அழுத்திப்பார்த்தான். சளிந்தது சரிதான்! நாலரைக்கு வகுப்பு. சைக்கிள் கடை வரை தள்ளத்தான் வேணும் ஓட்டமும் நடையுமாய் உருட்டினான்.

"இரண்டு ஒட்டு" என்றார் சிறீயண்ணை, ரியூப்பைத் தண்ணீர் வாளியால் எடுத்தபடி.

"என்னவோ கெதிப்பண்ணித் தாங்கோ அண்ணை, தயவு செய்து" கணக்குகளின் நினைவாகவே இருந்தது தீபனுக்கு. நேரத்துக்கு வந்துவிடுவார், விக்ஸ்.

ஆனால், குளிப்பு, சாப்பாடெல்லாம் அவதி அவதியாய் அரைகுறையில் முடித்தும் அன்றைக்கு நேரத்திற்கு வரமுடியாமலாகிவிட்டது. விக்சுக்கு! இத்தனைக்கும் அன்று வேலைக்கும் போகவில்லை. வீட்டில் வயறிங் கொஞ்சம் சரிபார்த்து திருத்துவிக்கவேண்டிருந்தது. "நீங்கள் காலமைபோய் சாமான்களை வாங்கி வையுங்கோ, நான் பத்துப் பத்தரைக்குள்ள வந்திடுவன்" என்று சொல்லியிருந்தான் பாலா.

என்றாலும், பாலா வரவே பன்னிரண்டாகிவிட்டது. அதன் பிறகு தொடங்கி, வேலையெல்லாம் முடிய மூண்டேகால்! அன்று முழுக்க யாரையோ ஏசிக்கொண்டேயிருந்தான் பாலா.

ஏதோ அலுவலாய் ஏதோ கந்தோருக்குப் போனானாம். அங்கிருந்த கிளாக்கர் மினக்கெடுத்தி விட்டாராம்!

"அரை மணித்தியாலத்திலை செய்யிறவேலை, ஸோர். அந்தாள் ஏதோ சட்டங்கள் பேசி மூண்டு மணித்தியாலம் சுணக்கிவிட்டுது! நல்ல பேர் வைச்சாங்கள், எருமை எண்டு......"

"எருமையோ?"

"அருமையாம்! அருமை....."






# கடலும் தமிழ்ப் பண்பாடும்

**தமிழ் மக்களின் வரலாறு, பண்பாட்டுப் பிரக்ஞையினுள் 'கடல்' பெறும் இடம் பற்றிய ஓர் உசாவல்**

பேராசிரியர் கா. சிவத்தம்பி






1

கடல் எனும் இயற்கை அலகு தமிழ்ப் பண்பாடு என விளங்கிக்கொள்ளப்படும் தமிழர் வாழ்வியல் தொடர்ச்சி நிலை உணர்வின் இருப்பிலும் பேணுகையிலும் எத்தகைய இடத்தினைப் பெறுகின்றது என்பது பற்றிய ஒரு புலமை உசாவலாக இக்கட்டுரை அமைகிறது. இந்த உசாவலின் ஆழ அகற்சி வரையறைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும். இம்முயற்சியின் பொழுது பண்பாடு என்பதன் இயல்பு நன்கு புரிந்து கொள்ளப்படல் வேண்டும். பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தினைப் பற்றி தெரிவிக்கும் அதன் உயிர்ப்பு நிலை (The Unforming Spirit of a Community) என ரேமண்ட் வில்லியம்ஸ் கூறுவது மிக முக்கியமானதாகும். இதில் தெரியப்படுத்தல் என்பது ஒரு முக்கியமான சொல். அதாவது அந்தப் பண்பாட்டினுள் வாழ்வோருக்கும் அந்தப் பண்பாட்டினை அறிய விரும்புவோருக்கும் தெரியப்படுத்துதல் என்பதாகும். ஒரு பண்பாட்டினுள் வாழ்பவருக்கு தமது பண்பாடு பற்றிய தன்னிலை உணர்கையே முக்கியமானபடியால் இந்தத் தெரிவித்தலை அந்தப்

பண்பாட்டினுள் வாழ்பவருக்குத் தெரிவித்தல் என்று கொள்வது முக்கியமானது. சற்றுத் தெளிவாகக் கொள்வதானால் தமிழர் ஒருவர் தமிழ்ப் பண்பாடு என எதனை உணர்ந்து கொள்கிறார் என்பதே இங்குள்ள அச்சாணியான பிரச்சினையாகும்.

இந்த உணர்கை இரண்டு நிலைப்பட்டது.

1. தனது இன்றைய வாழ்விறூடே - இருப்பினூடே - சீவிப்பினூடே தன்னைத் தமிழர் என்று உணர்ந்து கொள்வதற்கான நடைமுறைகள், சிந்தநிலை ஆகியனவாகும்.

2. கடந்தகால வரலாற்றின் பேறாக ஆனால் வெறும் வரலாறாக இல்லாமல் இன்றைய இருப்புடன் இணைவதாக உள்ள ஒரு நினைவுப் பேறாகவும் (Treasured Historical Legacy) தொழிற்படல் வேண்டும். உண்மையில் பண்பாடென்பது வரலாறல்ல. வரலாற்றின் பெறுபேறாக வந்து, எம்மைப்பற்றிய ஓர் அடையாள உணர்கையாக அமைவது ஆகும்.

பண்பாடு பற்றிய மேற்கூறிய அடிப்படை உண்மையை மனதில் நிறுத்திக்கொண்டு பண்பாட்டின் உருவாக்கம் எவ்வாறு நிகழ்கிறது என்பதனை நோக்கும்போது அவ்வச் சமுதாயங்கள் வாழுகின்ற, வாழ்ந்துவருகின்ற, வாழ்ந்துவந்த சூழல் முக்கியமாகிறது. சூழல் என்பது இயற்கைச் சூழல், சமூகச் சூழல் ஆகிய இரண்டும் ஆகும். இயற்கைச் சூழல் என்பது சமூகச் சூழலையும் தீர்மானிக்கும் நிலம், தட்ப வெப்பம், புல் பூண்டு சூழவுள்ள உயிரினங்கள் ஆகியனவற்றைக் கொண்டது. தொல்காப்பிய பொருளதிகாரம் கவிதைக்கு உரிய பொருள் முதல் நிலையில் நிலத்தையும் காலத்தையும் கொண்டு அந்த நிலத்து வாழ்க்கையின் கருவாக (The Womb of Life) அதனுள்ளிருந்தே உணர்வுகள் தோன்றும். உண்மையில் அந்தக் கருதான் நமது பண்பாட்டின் தொகுதி. தெய்வம், உணவு, மிருகம், மரம், பறவை, தொல்வாத்தியம் ஆகிய இவற்றுடன் அந்தப் பிரதேசத்துக்குரிய இயல்பான பொருளாதார நடவடிக்கையும் இணைத்துக்கொள்ளும். இவை யாவும் அந்த முதலாகிய நிலத்தினை தளமாகக் கொண்டு இயங்கும்.


2

இவ்வாறு பார்க்கும்போது தமிழகம் என்று கொள்ளப்படத்தக்க புவியியற்பரப்பின் இயற்கைக் கூறுகள் யாவை என்பதனை நோக்கல் வேண்டும். ஏனெனில் தமிழ் நாட்டில் அந்தப் பௌதீக அமைப்புத்தான் தமிழர் பண்பாட்டின் சிவிழுலையும் நதிமூலமுமாகும். ஒட்டு மொத்தமான இந்திய உபகண்ட நில அமைப்பினுள் வைத்துப் பார்க்கும்போது வடவேங்கடம், தென்குமரி ஆயிடை காணப்படும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் பிரதான புவியியல் அம்சம் அது ஒரு தீபகற்பமாக அமைவதுதான். அதாவது தமிழ்நாட்டின் மேற்குக் கரையோரத்திலும், கிழக்குக் கரையோரத்திலும், தெற்குக் கரையோரத்திலும் அது கடலாற் சூழப்பட்டுள்ளது. இந்தியாவின் தூர தெற்கு (Far South) என்று கொள்ளப்படும் தமிழகம் உஷ்ணவலயப் பிரதேசத் தீபகற்பமாகும். இந்நிலை காரணமாக இது வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றாலும் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றாலும் பாதிக்கப்படும் ஒன்றாகும். தொல்காப்பியர் காலத்தில் மேற்குத் தமிழகமாகவிருந்த சேரல(கேரள) பிரதேசம் தனிப் பண்பாட்டு, மொழி அலகாக ஆகியதன் பின்னர் கிழக்குக் கடற்கரையோர வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றே முக்கியமாகிறது. இந்த வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று தமிழ்நாடு இந்திய மாநிலத்து விசாகப் பட்டினம் முதல் தமிழகத்தின் தென்பகுதியாக அமைந்துள்ள ஈழத்தின் கிழக்குக் கரையோரம் வரை முக்கியப்படுகிறது. தமிழகத்திலும் ஈழத்தின் கிழக்குக் கரையோரத்திலும் மலைகள் எவையும் இல்லாததால் இப்பருவப்பெயர்ச்சிக் காற்றின் முழுத் தாக்கமும் அப்பிரதேசத்தினுள்ளே படுகிறது. சூறாவளிக்காற்று, வெள்ளம் கடல்கரைமீதி உள்ளே போதல் ஆகியன அடிக்கடி நிகழ்கின்றன. கடல்வழி வரும் இக்கொந்தளிப்புக்கள் காரணமாகத் தமிழகத்துக் கிழக்குக் கரைப் பட்டினங்கள் கடலால் கொள்ளப்பட்டன. என்றும் அந்தக்கடல் கோள்கள் காரணமாக தமிழ்ச் சங்கங்கள் அழிந்தன என்பதும் தமிழ்நாட்டின் வரலாற்று மரபோடு இணைந்துவிட்ட ஓர் விடயமாகும். இந்தக் கடல்கோள் என்பது தமிழர் நினைவில் மிகமிக ஆழமாகப் பதிந்துள்ள ஒரு நினைவாகும்.

இறையனார் களவியலுரையில் வரும் தமிழ்ச் சங்கங்கள் பற்றிய ஐதீக எடுத்துரைப்பில் இக்கடல் கோள்கள் குறிப்பிடப்படுகின்றன. தமிழரின் உணர்கை மரபினுள் கிபி 5ம், 6ம் நூற்றாண்டுகளிலேயே இந்நினைவு இத்துணை ஆழமாகப் பதிந்திருந்தது என்பதற்குச் சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் வரும்

'வடிவேலெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள...'
(18-20) என்ற வரிகள் சான்றாகும்.


இத்தீபகற்பத் தன்மை காரணமாக இந்தியாவின் உள்ளேயுள்ள நாடுகளைத் தவிர மற்றைய நாடுகளுடன் தொடர்புகொள்ள வேண்டிய தேவையோ உந்துதலோ தமிழருக்கு ஏற்பட்டபொழுது அத் தொடர்பை கடல் மார்க்கமாகவே செய்யவேண்டிய ஓர் அத்தியாவசியத் தேவை இருந்தது. இன்றும் இருந்து வருகிறது. இதனால் கடல் வழிப்போக்குவரத்து என்பது தமிழரின் உலகநிலை நின்ற தொடர்புகளுக்கு மிகமிக முக்கியமான ஒன்றாகியது. இவர்கள் கடல்மார்க்கப் பயணத்திற்கான தொழிற்பாடுகளை மேற்கொள்ளுவது ஏறத்தாழ புவியியல் அத்தியாவசியமாகிவிடுகிறது. அத்தகைய ஓர் உந்துதல் நிலையில் கடல், கடற்பயணங்களுக்கான கலங்களை ஆக்குவதென்பது இப்பண்பாட்டினுடைய இருப்பிற்கும் தொடர்ச்சிக்கும் அத்தியாவசியமாகிறது.

தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இலங்கையும் குறிப்பாக அதன் மேற்குக் கரையோரமும் கிழக்குக் கரையோரமும் இந்த வாழ்நிலை நிர்ப்பந்திப்புக்கு ஆளாகின்றன. இதனால் இலங்கையின் மேற்குக் கரையோரத்திலும் கிழக்குக் கரையோரத்திலும் கடல்மார்க்கப் பயணம் முக்கியமாகின்றது.

தமிழகம், வடகிழக்கு இலங்கையின் இந்தப் புவியியல் நிலை காரணமாக இப்பிரதேசம் ஆசியாவின் மிகப் பிரதானமான கடற்சந்தியாக உள்ளது. மேற்கே அரபிக்கடல் முதல் இந்து சமுத்திரம் வரையிலிருந்து கிழக்கே தென்கிழக்காசிய, சீன, ஜப்பானிய பிரதேசங்கள், அவுஸ்திரேலியா என வரும் நிலப்பகுதிக்குக் கீழ்ப்பட்ட கடற்பிரதேசத்தில் தமிழகத் தீபகற்பம் முக்கிய புள்ளியாக அமைகிறது. இந்தப் புள்ளி தென்னிந்தியத் தீபகற்பத்தையும் இலங்கையையும் தன்னுள் உள்ளடக்குகிறது. இதனால் மேற்குக் கரையோரத்திலும் கிழக்குக் கரையோரத்திலும் கடற்கரைப் பட்டினங்கள் தோன்றுகின்றன. இந்தக் கடற்கரைப் பட்டினங்கள் தமிழர் பண்பாட்டில் மிகுந்த இடத்தைப் பெறுகின்றன. இவ்விடத்தில் இந்து சமுத்திரப் பெருங்கடற் பரப்பில் தமிழகத்துக்குள்ள இந்த இருப்பின் முக்கியத்துவமே எடுத்துக் கூறப்படுகின்றபடியால் இங்கு அவை விவரிக்கப்படவில்லை.

இக்கட்டத்தில் அழுத்திக் கூறப்படவேண்டிய அம்சம் இப்பிரதேச வாழ்க்கை கடல்வழியாக வரும் மேற்குநிலைத் தொடர்புகளுக்கும் கிழக்குநிலைத் தொடர்புகளுக்கும் தன்னை ஆட்படுத்திக்கொள்வதுதான். இது ஆழமான முக்கியத்துவம் கொண்டது. இதனால் பயணம் முதல் சீனம் வரையிலான ஓர் இணைவு தமிழக நிலையினுள் காணப்படுகின்றது. இதனை நாம் ஓர் வரலாற்றுத் தரவாக பார்த்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் உரியதாகக் கொள்ளவேண்டுவதில்லை. இவ்வம்சம் இப்பிரதேசத்தின் வாழ்க்கை மரபினுள் இணைந்துவிட்ட ஒன்றாகும். கிரேக்கச் சொல்லான 'Hora' (ஹோரை) என்பது முக்கிய வேளைகளைக் குறிக்கப் பயன்படுத்துவது, அரபு வழிவரும் இஸ்லாமிய சித்தர் முதல் சீனச் சித்தர் மரபுவரை தமிழகத்துச் சிந்தனை மரபினுள் ஓர் இணைநிலை காணப்படுகின்றது என்கின்ற உண்மை மிக முக்கியமானதாகும். சித்தர் மரபு தென்னிந்தியாவின், உண்மையில் திராவிடத்தின் ஒரு முக்கிய கூறு என்பர். அது தமிழ்நாட்டில் நிறைந்த பொலிவைப் பெற்றது.

இவ்வாறாக தமிழ்நாட்டின் தீபகற்ப நிலை அதன் பண்பாட்டு உரு



வாக்கத்தில் முக்கிய இடம் பெறுவதாகும். இவ்வுடஷ்ணவலய தீபகற்ப நிலைப்பாடு கடலையும் காற்றையும், மலையையும் வெய்யிலையும், சந்திரனையும் சூரியனையும் விதந்து போற்றுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திற்று என்று கொள்ளவேண்டும் போலத் தெரிகிறது. இதன் பிரதிபலிப்பினை நமது இலக்கியப் பாரம்பரியத்திலேயே காணலாம். திருக்குறள் வான் சிறப்பை (மழையை) பாயிரத்துள் ஒன்றாகக் கொள் ளும். சிலப்பதிகாரமோ நூலின் தொடக்கத்தில் சூரியனையும் சந்திரனை யும் மழையையும் போற்றுவதைக் காணலாம். இதற்கான காரணம் பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாகும். குறிப்பாகச் சூரியனும் சந்திரனும் மத ஐதீகத் தொடர்புகளின்றி இயற்கைச் சக்திகளாகவே வியந்து போற்றப் படுவது மிக மிக முக்கியமானதொரு உண்மையாகும். சூரியன் பற்றிய வேதக் குறிப்புகளில் ஐதீகக் குறிப்புகள் பல இணைந்துவரும். இங்கு வெயில், நிலவு, மழை ஆகியன இயற்கைத் தொழிற்பாடுகளாகவே போற் றப்படுகின்றன. இந்த இயல்பின் தொடர்ச்சியை நாம் இப்பொழுதும் காணலாம். தை, சித்திரை மாத வருடப்பிறப்புக்களின் போது செய்யப் படும் பொங்கல் இந்த இயற்கை நிகழ்ச்சிகளின் கூறுகளோடு இணைந்தே போற்றப்படுவதை அவதானித்தல் வேண்டும்.

மொழியைப் பண்பாட்டின் வேராகவும் விழுதாகவும் கொள்ளல் வேண்டும். அவ்வப்பண்பாட்டுக்குரிய சொற்கள் அவ்வப்பண்பாடுகளில் மொழிக்குரியனவாகவே இருத்தல் இயல்பு. மொழிக்கும் பண்பாட்டிற்கும் உரிய ஊடாட்டம் அத்தகையது. எஸ்கிமோ மொழியில் பனிக்கட்டி நிலையை 72 வெவ்வேறு நிலைப்படுத்திக் காட்டுகின்ற சொற்கள் உள் ளன என்பர். கடல் பற்றித் திவாகர நிகண்டு தரும் பட்டியல் சுவாரசியமான தாகும்.

'அத்தி, பௌவம், அளக்கர், ஆர்கலி
ஆழி, பெருநீர, அம்பர், முந்நீர்
உப்பு, வீரை, சக்கரம், சாகரம்
வேலை, வெள்ளம், மகாலயம், நேமி
சலந்தி, வாரி, சலதி, அலையே
பாரா வாரம், உத்த சமுத்திரம்
பரவை, உவாவே, நரலை, புணரி
வேலா வலயம், கார்கோள், ஓதம்
வாருணம், சிந்து, வாரம், அம்புராசி
(கார்மலி) உவரி, கடல் எனக் கருதுவர்
(திவாகரம் 878)

பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கடலுக்கான இச் சொற்களஞ்சி யத்தைப் பார்க்கும்போது இடைக்காலத் தமிழகத்தில் சமஸ்கிருத நிலைப் பட்ட வைதீக இந்துப் பண்பாடு எத்துணை ஆழமாக வேரூன்றிவிட்டது என்பது இப்பட்டியலில் வரும் வடமொழி அடியினை உடைய சொற் களான பௌவம், அம்பரம், சக்கரம், சாகரம், மகாலயம், நேமி, சலநிதி எனவரும் சொற்களாற் தெரிகிறது.

ஆனால் அதேவேளையில் ஆழி, பாரி, புணரி என வரும் முற்றிலும் தமிழ்ப் பெயர்களும் நின்று நிலைப்பதைக் காணலாம். கடல், ஆழி என்பன திராவிடச் சொற்கள் என்பது DED திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி மூலம் தெரியவருகிறது.



இந்தியக் கவிதை மரபில் தமிழ்க்கவிதையின் தனித்துவம் அது வடமொழிச் (பாளி, சமஸ்கிருதம்) செல்வாக்குகளுக்கு உட்படுவதற்கு முன்னர் பெற்றிருந்த சூழலியல் தன்மையிலேயே காணப்படுகிறது எனலாம். மக்கள் வாழ்ந்த குடியிருப்புப் பாரம்பரியங்களின் அடிப்படையில் அக்குடியிருப்புக்களின் புவியியல், சமூகவியல் கூறுகளினூடாகவே - ஆண், பெண் உறவு வழிநின்ற கவித்துவ உணர்ச்சி வெளிப்பாடு அமைந்திருந்தது. அந்தக் கவித்துவப் பாரம்பரியத்துக்கான இலக்கண அமைதியினைக் குறிப்பிடுவது திணை மரபு ஆகும். இச்சமூக - கவித்துவ மரபினைத் திணைமரபு என்பது தமிழ் மரபு திணையே நிலம், குலம், ஒழுக்கம் என பிற்காலத்து நிகண்டு ஒன்று விளக்கம் கூறும்.

இந்தத் திணை மரபில் அவ்வந் நிலங்களுக்குரிய 'ஒழுக்கம்' அவ்வப் பிரதேசங்களுக்குள்ள பிரத்தியேக இயல்புகளைக் காட்டும் பூவின் பெயரால் குறிப்பிடப்பெற்றது. அந்நிலஞ்சார் குடியிருப்புக்கள் பின்வருமாறு அமைந்தன. மலையும் மலைசார்ந்த இடமும்(குறிஞ்சி) காடும் காடு சார்ந்த இடமும் (முல்லை), வயலும் வயல் சார்ந்த இடமும்(மருதம்) கடலும் கடல் சார்ந்த இடமும் (நெய்தல்) இவ்வாறு கூறுவது உண்மையில் உரையாசிரியப் பாரம்பரியத்தை ஒட்டியதாகவே உள்ளது. இதற்கான தொல்காப்பியச் சூத்திரத்தின் அழுத்தம் இந்த முறையில் அமையவில்லை.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மை வரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையான் சொல்லவும் படுமே.
(அகத்திணையியல் சூ. 5)

இக்குறிப்பில் மலை. மலைவாழ் குடியிருப்பு. தெளிவாகவே குறிப்பிடப் பெறுகிறது. ஆனால் காடுறை உலகம் என்பதில் காடு உள்ள உலகம் (இங்கு உலகம் என்பது அவர்களின் இருப்பு வட்டமாகும்) என்ற குறிப்புத்தான் உள்ளதே தவிர அந்தக்குடியிருப்பு காடு திருத்தப்பட்ட குடியிருப்பு என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. (காடு கொன்று நாடாக்கிய என்று கூறுவது தமிழ் மரபு. ஆனால் இங்கு காடு உள்ளது. ஆனால் வாழ்க்கை காட்டில் இல்லை) அதேபோன்று வயலும் வயல் சார்ந்த இடமும் பற்றிப் பேசும்போது நீர்ப்பாசனத்துக்குரிய நீரையே பிரதானப்படுத்திக் கூறுகிறார். தீம்புனல் உலகம் என்பதில் தீம்புனல் என்பது நன்னீர் ஆகும். நன்செய் நிலத்துக்கு வேண்டியது நன்னீர்.

இவ்விவரிப்பில் நமக்கு முக்கியமானது கடல்பற்றிய குறிப்பு இல்லாது பெருமணல் உலகு என்று கடற்கரை குறிக்கப் பெறுவது. தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியின் புவியியல் தன்மையை தெரிந்தவர்களுக்கு இதன் முக்கியத்துவம் விளங்கும். ஏனெனில் இப்பிரதேசத்தில் கடற்கரையை அடுத்து கழிநிலம் இருக்கும். அந்தச் சதுப்பு நிலத்தின் எல்லையில் மீனவக் குடியிருப்புக்கள் இருக்கும். மாரிகாலத்தில் கரையை மீறிப் பாய்ந்த கடல் கழிகளைத் தோற்றுவித்திருக்கும். அந்த நீர் கடலுக்குள் திரும்பிப் பாய்ந்து விடுவதில்லை. இந்த நீர்நிலையோரங்களில் - கழியோரங்களிலே காணப்படும் ஒரு மெல்லிய சதுப்புநிலக் கொடியே நெய்தல் கொடியாகும். அதன் பூ சற்று நீல நிறமானது உண்மையில் இது அலைவாயிலுள்ளதல்ல சற்று உள்ளே உள்ளது. இதில் வாழ்பவர்கள் மீன்பிடி, உப்பு விளைவித்தல் ஆதிய காரியங்களில் ஈடுபடுபவர். முதல் மூன்று திணைகளிலுமுள்ள மக்கள் போன்று நிச்சயமாக முல்லையிலும் மருதத்திலும் உள்ளவர்கள் போன்று இவர்கள் தாம் வாழும் சூழலில் இயற்கையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்துபவர் அல்லர். இங்கு இவர்களுடையது கடலை நம்பிய சீவியமே அல்லாமல் கடலைத் தம்வசப்படுத்தும் சீவியம் அல்ல. இதனால் இந்தத் திணையில் மனித வலுவின் ஆதிக்கப்பதிகை இல்லை. இயற்கை வலுவின் ஆதிக்கத்திலேயே வாழ்க்கை நடைபெறுகிறது. இதனாற் போலும் இந்நிலத்து மக்களின் ஆண் - பெண் உறவில் மற்றைய நிலங்களிற் காணப்படாத ஒரு இயலாமை இரங்கல் காணப்படுகிறது எனலாம். இந்த இரங்கல் இந்த நிலத்தின் பண்பாடாக இன்றுவரை உள்ளது. 'கடல் மேல் பிறக்க வைத்தான் எங்களைக் கண்ணீரில் பிழைக்க வைத்தான்' - என்ற வாலியின் பாடல்வரை. புதுவை இரத்தினதுரையின் மிகவும் பிரசித்தமான 'வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்' என்னும் பாடல் வரை இந்த வாழ்க்கையின் ஏக்கங்கள் தெரிகின்றன.

மீன்பிடியையும் உப்பு விளைவித்தலையும் பிரதான தொழிலாகக் கொண்ட இந்நில மக்கள் தங்கள் மீன்பிடிக்காக கடலில் நெடுந்தூரம் சென்றனர் என்று கொள்ளுவதற்கு இடமில்லை.

அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சி ஒன்றில் அகநானூற்றில் வரும்,

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணை புணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் இளையுடன் துவன்றி
உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ
அயிர் திணி அடைகரை ஒலிப்பவாங்கி
பெருங்களம் தொகுத்த உழவர்போல
இரந்தோர் வறுங்கலம் மல்கவீசி
பாடுபல அமைத்து கொள்ளை சாற்றி
கோடு உயர் திணி மணல் துஞ்சும் துறைவ!
(அகம் 30:01-11)

குறிப்பு: இன்று நடைபெறும் கரைவலை மீன்பிடித்தலையே குறித்ததாதல் வேண்டும் என்று கூறுகிறது.

மேலும் நெய்தல் நில வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளைப் பற்றிப் பார்க்கின்றபோது அந்த வாழ்க்கை இன்றைய ஒரு சொற்றொடரைப் பயன்படுத்திக் கூறுவதானால் வறுமைக்கோட்டுநிலை வாழ்க்கையாகவே காணப்படுகின்றது. இவர்களுடைய தொழில் வழியாக குறிப்பிட்ட அளவுக்குமேல் அதாவது விற்பனைச் சாத்தியப்பாட்டுக்குமேல் பிடிக்கப்பட்டால் அதனையே கருவாடாக்க வேண்டியிருந்ததே தவிர ஒரு பெரு உபரியைத் தோற்றுவித்திருக்க முடியாது. இதனால் அன்றாடச் சீவியத்துக்கு அப்பால் கையிருப்போ சேமிப்போ இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை. அந்தப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்தமான கீழ்நிலைக்கு இது காரணமாக இருக்கலாம். நெல்லுக்காக மீன் விற்றனர் என்று கூறப்படுகின்றது. உப்பு எல்லோருக்கும் தேவைப்பட்ட ஒரு பொருள் எனினும் அதன் விற்பனையால் இவர்கள் பெருமளவு பணம் சம்பாதித்தனர் என்று சொல்ல முடியாது. உப்பு வணிகம் ஒரு குறை விருத்தியுள்ள நிலையிலேயே காணப்பட்டது. தெய்வமாக சுறா எலும்பு கொள்ளப்பட்டதற்கான தரவுகள் உள்ளன. பெரும்பாலும் பெருங்கடலில் உள்ள சுறா இந்தச் சாதாரண மீன்பிடியாளர்களிடத்து ஏற்படுத்திய பய உணர்வையும் அக்குறிப்புகள் சுட்டுகின்றன எனக்கொள்ளலாம். இன்றும் கூட இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறையிலே பெருமாற்றம் ஏற்பட்டு விட்டதாகக் கூறமுடியாது என ஒல்ச்சின் தம்பதியர் தமது 'The Birth of Indian Civilization' என்ற நூலில் கூறுவர்.

ஏறத்தாழ இன்றைய மீனவக் குடும்பங்களிலே காணப்படும் வாழ்க்கை முறையே அக்காலத்திலும் இருந்தது எனக் கொள்ளலாம். ஆனால் கடல்சார் தமிழர் வாழ்வியலில் உண்மையில் நெய்தல் நிலத்துப் பட்டினங்களோடு தொடர்புற்று நின்ற இன்னொரு வாழ்க்கைமுறை இருந்தது. துரதிஷ்ட வசமாக திணை வகுப்பிலுள் அது முக்கியத்துவப் படுத்தப்படவில்லை. கடலோரப் பட்டினங்களாக விளங்கிய புகார் போன்ற இடங்கள் பிறநாட்டு வணிகத் தொடர்புகள் காரணமாக மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்தன. சங்க இலக்கியத்தில் பேசப்படும் புகார் பட்டினத்தை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். கடற்கரையோரத்தைச் சார்ந்த அப்பட்டினம் வளம் மிக்க ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. கப்பல்

கள் வருவதும் போவதும் பிரதானமாகக் கட்டி நிறுத்தப்பட்டுள்ளமையும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இக்கடல் வணிகத்தால் வரும் இலாபம் மிகப் பெரிய இலாபம் இது முற்றிலும் வணிக நிலைப்பட்ட வாழ்க்கையாகவே தெரிகிறது. நிர்வாக விடயங்களைத் தவிர்ந்த விடயங் களில் அரச பிரசன்னம் இருந்ததாகவே கொள்ள முடியாது உள்ளது. இந்த வணிக வாழ்க்கையில் ஏறத்தாழ கி.பி 2 முதல் 4/5வரை நிலவிய இந்தோ-ரோம வணிகக் காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பதற்கு 'வினைய விளிச்ச' போன்ற பௌத்த நூல்கள் சான்று பகிர்கின்றன. ஐஸ்வரியம் நிறைந்த இந்த வணிக வாழ்க்கை முறை பெருமனால் உலகுக்குரிய தெனக் கூறப்படும் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தாகும். உண்மையில் வணிகம் சார்ந்த பட்டினங்களை நகரமயவாக்கலுக் கான குறிப்பாகவே கொள்ளல் வேண்டும். பண்டைய தமிழகத்தில் அரசனுடைய இருப்பைப் பற்றி அல்லது முக்கியத்துவம் பொருந்திய குடியிருப்பைப் பற்றி பேசும்போது நகர் (நகரம்) என்ற சொல் பயன்படுத்தப் படுகின்றது. இது முற்றிலும் ஒரு திராவிட மொழிச் சொல்லாகும். (DED) ஆங்கிலத்தில் Urbanization க்கான நடைமுறையை நகரமயவாக்கம் என நாம் இப்பொழுது மொழி பெயர்க்கிறோம். அடிப்படையில் அதில் தவறு இல்லை எனினும் தமிழ்நாட்டின் வரலாற்றில் நகரமயவாக்கம் என்பது கடற்கரைப் பட்டினங்களிலேயே தொடங்குகிறது. பின்னர் இது கும்ப கோணம் போன்ற உள்ளூர் மத்திய இடங்களுக்கு விரிவடைகிறது. பிற்காலகட்டத்தில் கோயில்கள் நகர மயவாக்கத்தின் மையங்களாகின் றன. தமிழ் நாட்டின் முந்து வரலாற்று நிலையில் வணிகப் பட்டினங் களையே பிரதான நகரமயவாக்க தொடக்க மையங்களாகக் கொள்ளல் வேண்டும். (புகார், முசிறி போன்றவை) சங்க இலக்கியத்தின் குறைபாடு என்னவென்றால் தமிழ்நாட்டின் நகர மயவாக்கப்பட்ட சூழலில் நிலவிய ஆண் - பெண் உறவு பற்றிக் குறிப்பிடாது விட்டமையே ஆகும். நெய்தல் வாழ்க்கை வணிகப்பட்டின வாழ்க்கை ஆகாது. 'படுதிரை வையப்பாத்திய' பண்பின் அடிப்படையில் இதுவும் கடற்கரையே எனினும் இது நெய்தல் நிலம் சுட்டும் கழிமுக வாழ்க்கையைக் கொண்டதன்று. இது உபரி மிகுந்த மன்னர்கள் செல்வந்தர்களின் வாழ்க்கையையும் உள்ளடக்கியதாகும். இந்த உண்மையை மனங்கொண்டு சிந்திக்கும்போதுதான் நெடுநல் வாடையில் வரும் அரசிருக்கை நகரம் எவ்வாறு திணை மரபையே கேள்விக்குள்ளாக்குகிறது என்பது புலப்படும்.

இந்த வணிக வாழ்க்கையினுடைய பிரதான அம்சமாக அடுத்துப் பேசப்படவேண்டியது அந்நிய அல்லது பிறநாட்டு வணிகத்தொடர்பும் இந்த வணிக வாழ்க்கைக்கான வணிகர்களது பொருளியற் கூட்டமைப்பு மாகும். உரோமத் தொடர்புக்கான நாணய, அகழ்வாய்வுச் சான்றுகள் பெரும்பாலும் அதனைக் கிறிஸ்த்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண் டுக்கு உரியனவாகவே கொள்ளுகின்றன. உரோம நாணயங்களைப் பின்பற்றி உள்ளூர் நாணயங்களை வேந்தர்கள் குறிப்பாகச் சேரர்கள் வெளியிட்டனர் என்று சுப்பராயலு போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக் கூறுகின்றனர். மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற வாசனைத் திரவியங்களாகிய மிளகு, திப்பிலி போன்றவை பற்றிய



குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணப்படுகின்றன.

சங்க காலத்தின் இறுதி எனக் கொள்ளப்படும் காலப்பிரிவிலேயே இந்த வணிக மேலாண்மை மேல்நிலைப்பட்டிருத்தல் வேண்டும்.

பட்டினப்பாலையில் வரும் புகார்ப்பட்டின விவரிப்பினை சிலப்பதிகாரத்தில் வரும் புகார்ப்பட்டின விரிப்போடு ஒப்பிடும்போது இந்த வளர்ச்சியினை நாம் காணலாம். வணிகர்களின் சமூக வாழ்க்கை துணை கட்டிறுக்கமாக அமைந்திருந்தது என்பதனையும் எத்துணை உபரிச் செல்வத்தை உடையதாய் இருந்தது என்பதனையும் இந்திரவிழாவெடுத்த காதை, கடலாடுகாதை என்பவற்றால் அறியலாம். புகார் முற்றிலும் ஒரு நகர் (Urban) மையமாகவே விளங்கிற்று. தமிழ் நாட்டின் பிற்கால நகரமயவாக்கப் போக்கினை தென்னிந்தியாவில் வணிகம், கருத்து நிலை, நகரமயவாக்கம் (Trade Ideology and Urbnization In South India 300 BC to AD 1300) என்ற செண்பகலட்சுமியின் நூலில் காணலாம்.

வணிகத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்கள் வணிகர்களது உடைமையாகவே காணப்பட்டன என்று கொள்வதற்கு இடமுண்டு. தமிழகத்தின் கப்பல் கட்டும் கலைபற்றிய விபரங்கள் விரிவான வரலாற்று ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லையெனினும் சாத்தன் குளம் இராவகன் அவர்கள் எழுதிய கப்பற்கலை இவ்விடயத்தில் அரிய தகவற் கருவூலமாகவே உள்ளது. கரையோரத்திற் பயன்படுத்தப்படும் கட்டுமரம் முதல் தோணி, கப்பல் போன்ற பல்வேறு மரக்கலங்கள் பற்றிய குறிப்புக்களை நாம் காணக்கூடியதாக உள்ளது. கி.பி.10ம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகரத்தில் பின்வரும் மரக்கலப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.



'வங்கம், பாதை, தோணி, யாணம்,
(தங்கு) மதலை, திமில், பாறு, அம்பி,
ப·றி, சதாவே, பாதரி, நவ்வே
போதகம், தொள்ளே, நாவாய் என்று இவை
மேதகு நீர்மேல் ஒரு மரக்கலம்'
(1280)

இதனைத் தொடர்ந்து தோணிக்குரிய பெயர்களை விவரித்துக் கூறுகின்றார். (1282) பெருங்கடலிற் செல்லும் கப்பல்கள் காற்று வீச்சைப் பயன்படுத்தியே தமது பயணங்களை அமைத்துக்கொண்டன. கப்பலில் பாயைப் பயன்படுத்தி காற்று வீச்சுக்கேற்ப பயணங்களை அமைத்துக் கொண்டனர். இதன் காரணமாக குறிப்பிட்ட காலங்களிலே மாத்திரம் இந்தக் கப்பற் போக்குவரத்து நடைபெற்றது.

பாய்மரக் கப்பல் கட்டும் கலையில் தமிழரிடையே சிறப்பான தொழில்நுட்ப அறிவு காணப்பட்டதென துணிந்து கூறலாம். 'Schooner'(ஸ்கூனர்) எனப்படும் நீராவிக் கப்பல் வரும்வரை பாய்மரக் கப்பற் போக்குவரத்து முதல்நிலை எய்தியிருந்தது. இந்தக் கப்பற் போக்குவரத்துக்காக அரேபியர் இப்பிராந்தியத்தின் காற்றடிப்பு முறையினை நன்கு ஆராய்ந்திருந்தனர். பருவப் பெயர்ச்சிக் காற்றைக் குறிக்கும் 'Monsoon' எனும் சொல் 'முசும்' என அரபுச் சொல்வழியாக வந்தது.

முத்துக் குளிப்பு அரச ஆதிக்கத்தின் கீழ் வந்தது போன்று கடல் வணிகம் வரவில்லை என்பதனை தமிழ்நாட்டின் பிரபுத்துவ வளர்ச்சி என்ற எனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். (Stduies in Ancient Tamil Society) கி.பி 600 க்குப் பின்னர் வருகின்ற கிழக்குக் கரையோர வணிக வளர்ச்சியிலும் வணிகக் குழுக்களினது வணிக முதலாண்மையே முக்கியப்படுகின்றது. இலங்கையில் அனுராதபுரத்தில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகளையே உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் வணிகக் குழுக்களே புத்த கோயில்களுக்கு வேண்டிய மதக் கொடைகளை வழங்கியுள்ளமை தெரிகிறது. கி.பி 7ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் முகிழ்க்கும் கோயிற் பண்பாட்டுக் கூறுகள் (அரண்மனையும் ஆலயமும்) தென்கிழக்காசியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பது வரலாற்று மாணவர்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

ஏறத்தாழ கி.பி 9 ஆம் நூற்றாண்டிலிருந்து, அதாவது சோழர் வருகையுடன் நெடுந்தூர வணிகம் தமிழக வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறத் தொடங்கியது. ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், வலஞ்சயர் என்ற பெயர்களைக்கொண்ட வணிகக் குழுக்கள் வணிக முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் மதக்கொடைகளை வழங்கி வந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. சோழர் காலத்து வணிகம் பெருமளவு கிழக்குக் கடற்கரையோரத்திலேயே காணப்பட்டது. தென்கிழக்காசிய நாடுகள் முழுவதும் தமிழகத்து செல்வாக்குப் பரவியமைக்கான சான்றுகள் உண்டு. இக்காலகட்டத்தில் வங்காள விரிகுடாவை சோழக்குளம் என மிகைப்படக் கூறிய வரலாற்று ஆசிரியர்கள் உளர்.

இவ்வணிகம் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத்திலும் இலங்கையின் வடகிழக்குக் கடற்கரையோரம் வரையிலும் தொடர்புகளைப் பேணி வந்தது. இலங்கையில் நிலவிய சோழர் ஆட்சி (1017-1070) இந்த இணைவுக்கு உதவியிருக்கலாம். இந்தத் தொடர்புகள் காரணமாகவே மன்னார் பிரதேசத்தில் உள்ள மாதோட்டமும் கிழக்குக் கரையோரத்தில் உள்ள திருகோணமலையும் முக்கியமாகின்றன. திருகோணமலையின் பெயர் திரிகோகர்ணமலை என்றே இருந்திருத்தல் வேண்டும் என்றும், இந்திய கிழக்குக் கரையோரத்தின் மேற்பகுதியில் உள்ள கோகர்ணமலையினைக் கொண்டு இதற்குப் பெயர் வந்திருத்தல் வேண்டும் என்றும் கூறுவர்.

கிழக்குக் கடற்கரையோரத்தில் நடந்த தமிழ்நாட்டு வணிகம் அந்தப் பாரம்பரியம் குன்றிய பின்னரும் கூட தொடர்ந்து நடந்தபெற்று வந்ததற்கான சான்றுகள் உண்டு. பிற்காலத்தில் இந்தப்பிறநாட்டு வணிகத் தொடர்பினை செட்டிமார் மேற்கொள்ளுகின்றனர். இவர்கள் தம்மை நகரத்தார் என்று கூறிக்கொள்ளும் மரபு உண்டு. பிரித்தானிய ஆட்சி ஒருமைப்பாடு வழங்கிய வாய்ப்பினைப் பயன்படுத்தி செட்டிமார் தங்கள் வணிக நடவடிக்கைகளை பர்மா முதல் சிங்கப்பூர் வரை மேற்கொண்டனர். இலங்கைக்கும் வந்தனர். இச்செட்டி சமூகத்தினர் தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் முருகன் கோயில்கள் அமைப்பது வழக்கம். இப்பண்பினை மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இலங்கை கொழும்பிலும் காணலாம்.

இலங்கையின் வடக்குக் கரையோரத்தைச் சார்ந்த தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய கடலோரப் பட்டினங்களையும் கிழக்கே திருகோணமலை (கந்தளாய், தம்பலகாமம்) உள்ளிட்ட பகுதிகளையும் தளமாகக் கொண்டு 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் கடல்வழி வணிகம் நடந்து வந்துள்ளது. இந்த வரலாறு பற்றிய தகவல்கள் உதிரியாகவே பதியப்பட்டுள்ளன.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய காலம் முதல் (18 ஆம் நூற்றாண்டின் இறுதி) 20 ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் இறுதிவரை ஏறத்தாழ 2 ஆவது உலக மகாயுத்தம் தொடங்குவதற்கு முன்னர் வரை இவ்வணிகம் சிறப்புற்று விளங்கிற்று என்பதற்கான சான்றுகள் உள்ளன.

இலங்கையின் வடகிழக்கு கரையோரப் பகுதிகளில் வாழ்பவரை 'கரையார்' எனும் ஒரு மரபு உண்டு. இவர்கள் மீன்பிடியிலும் கடலோடி வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இவ்வணிகம் ஒல்லாந்தர் காலத்திலும் காணப்பட்டது என்பதற்கு வல்வெட்டித்துறை பருத்தித்துறையில் உள்ள 'ரேவடி' எனும் சொல் சான்றாகும். ரேகு எனும் டச்சுச் சொல் கங்கத்தைக்



குறிக்கும். (யாழ்ப்பாணத்திலும் கோட்டைக்குப் பக்கத்திலிருந்த இடத்தை ரேகடி என்பர்) ஈழநாட்டுப் புலவர் சரித்திரத்தில் கணேசையர் வல்வெட்டித் துறையைச் சார்ந்த ஏகாம்பரப் புலவரை கடலோடிப் பரம்பரையினர் என்பார்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறையைச் சார்ந்த வியாபாரிகள் தமிழகத்தின் கிழக்குக் கரையோரத்தில் இருந்த நாகபட்டினத்துக்குச் சென்று அங்கிருந்து விசாகபட்டினத்துக்குச் சென்று அதன்மேல் வடக்கே கல்கத்தாவுக்கும் மேலே பர்மாவுக்கும் சென்று வணிகம் செய்தனர் என்பதற்குமான சான்றுகள் உள்ளன. பர்மாவில் அக்யாப் (Akhyab) எனும் துறைமுகத்துக்குச் சென்றனர். வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழில் மிகப் பிரபலமாக விளங்கிற்று. பருத்தித்துறையில் கப்பல்களைத் திருத்தும் தொழிலை மேற்கொண்ட குழுமத்தினர் வாழ்ந்த பிரதேசம் இன்றுவரை ஓடக்கரை எனக்குறிப்பிடப்படும். பருத்தித்துறையினைச் சேர்ந்த வர்த்தகர்களிடமிருந்து 1866, 68 காலப்பகுதி வரை மகமைகள் பெற்றனர் என்பதற்கு நாவலர் வெளியிட்ட விஞ்ஞாபனம் சான்றாகும்.

இந்த வணிகப் பாரம்பரியமும் கப்பற் பாரம்பரியமும் இரண்டாவது உலக யுத்த காலத்திற்குப் பின்னர் அழிந்துவிட்டது. ஆயினும் இத் தொழில்நுட்பமே சட்டத்துக்குப் புறம்பான தமிழக வடஇலங்கை வணிக உறவுக்கு காலாகிற்று. இக்கப்பல் கட்டும் பாரம்பரியத்தில் பிற பண்பாட்டுத் தொடர்புகளும் பிற்காலத்தில் வந்து சேர்ந்தன. உதாரணமாக தண்டியல் (Tindil) என்ற படகுத் தலைவனைக் குறிக்கும் சொல் உருதுச் சொல் ஆகும்.

இந்தக் கடல் பாரம்பரியத்தோடு சேர்ந்த சில வழிபாட்டு முறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இந்துக்களிடையே கப்பலுடையார் கோயில் (வல்வெட்டித்துறை) கடல் நாச்சியம்மன்(மட்டக்களப்பு) என்ற வழிபாட்டு முறைமைகள் உண்டு. கத்தோலிக்க, கிறிஸ்தவர்களிடையே கடலுக்கான விசேட 'அர்ச்சிஷ்டர்' ஆகிய சந்தியோகுமையர் (ST.James) அந்தோனியார் வழிபாடுகள் கடற்கரை கிராமங்களில் உண்டு. இவர்களுடைய


பாய்க்கப்பல் வணிகம் காற்று வீச்சினை நம்பியிருந்ததால் ஆடிப்பிறப்பு கடலோரக் கிராமங்களில் இன்றும் கொண்டாடப்படுகிறது. ஆடிப்பிறப்பு விவசாய வாழ்க்கையிலும் முக்கியம் பெறுகிறது. ஆடிப்பிறப்புடனேயே சோளகம் தொடங்குகிறது. சோள(ழ)கம் என்ற சொல்லே சோழமண்டலக் கரையோரக் காற்றினைக் (Comandel Cost) குறிப்பதாகும். ஆவணி, புரட்டாதி வரை சோளகம் வீசும். சோளகக் காற்றுக் காலம் வடகிழக்குக் கிராமங்களில் பெரிதும் விரும்பப்படுவதொன்றாகும்.



4

தமிழ்ப் பண்பாட்டின் செழுமையான உருவாக்கத்துக்கு கடல் தொடர்புபட்ட முறைமையினை இதுவரை நோக்கிய நாம் 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் இருந்து இந்தியத் தொழிலாளர்களை கப்பல்களில் ஏற்றி மொரிஷியஸ், மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, கரீபியன் தீவுகள் போன்ற இடங்களுக்கும் இலங்கைக்கும் கொண்டு வந்ததை மறக்கக்கூடாது. வறுமைநிலை காரணமாக பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட இவர்கள் குறிப்பாகத் தென்னாபிரிக்கா மொரிஷியஸ், கரீபியன் நாடுகளில் தங்கள் அடையாளங்களை இழந்திருந்து இப்போதுதான் படிப்படியாக மீளும் நிலைக்கு வந்துள்ளனர். மலேசியா, சிங்கப்பூரில் தமிழருக்கு உத்தியோக அந்தஸ்து உண்டு. தென்னாபிரிக்காவிலும் இப்போது தமிழ்மொழி இந்திய மொழிகளுள் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தென்னாபிரிக்காவிலுள்ள சகல மொழிகளிலும் தமிழ் ஆறாவது இடத்தைப் பெறுவதாகக் கூறப்படுகிறது. இக்கூற்று சரிபார்க்கப்படல் வேண்டும்.





# அற்புதங்கள் இங்கே அநேகம்



வெப்பம் அடங்கிக் குளிர்காற்று வீசுகிற
ஐப்பசியில் ஓர்நாள்
மணி மாலை ஆறிருக்கும்
வெள்ளமாய் மக்கள் வெளியேறி
வீதிவழி அள்ளுண்டு போனார், அலையலையாய்,
ஆம் ஆம் ஆம்
ஆயிரம் பத்தாயிரங்கள் அல்ல
பல லட்சம்
தீபரவ ஊர்ந்து விரையும் எறும்புகளாய்
ஊர் மனைகள் விட்டும்
உறவுகளை விட்டும் - தம்
வேரடியின் மண்ணை உதறி நடந்தார்கள்!
தேவாலயங்கள், மடம், பள்ளி, புறத்திண்ணை
தாவாரம் எங்கும் தரித்துக் கிடந்தார்
கண்ணீர் வார
விம்மி நெடுமூச் செறிந்தார்கள்
'ஆரோடு சொல்லி அழலாம்?
அகதி என்ற பேரோடு அலைந்து
பிறநாடு போவோமா?

வேண்டுதல்கள் - ஏக்கம் ஒருநாள் பலிக்க-
இவர் மீண்டு வந்தார்
தம்மண் மிதித்தார், புளகித்தார்
பாட்டனார் தொட்ட பழங்கிணற்று நீர்
தலையில் ஊற்றி உடல் புளகித்து
உச்சிகுப் போனார்.
மாளிகையும் வாகனமும் மாடு, ஆடு, கோழி என
சூழ இருந்த அனைத்தும் தொலைத்தவர்கள்
மீள எழுந்து நிமிர்ந்த விதம் - வீரம்
ஈழம் உலகுக்கு எடுத்துரைத்த அற்புதங்காண்!
வெந்து தணியாத மண்மீதிலே நின்று
அந்தி பகலாய் அரும்பாடு பட்டார்கள்
மாதேவன் பண்ணங்கம் ஆடும் மயானத்தின்
மீதும் தமிழர் விவசாயம் செய்கின்றார்!
தேனீயாய், சிற்றெறும்பாய், சேமித்து
தம்முயிராய் மானமதைப் போற்றும்
மனிதர்களாய் வாழுகின்ற
அற்புதத்தைப் பாட அழைத்தீரோ, பாணரே!
சற்பனையை வில்கும் கதைகள்
கவிதைக்குப் பாடுபொருள்!
எங்கள் குருதியிலே கோலத் தோய்த்து
கடுபாட்டோடு எழுதும் பரம்பரைநாம்!

பூமி அதிரப் புறப்பட்டு முன்னேறி
ஆமி புக, மக்கள் அள்ளுண்டு வந்தார்
இந்த இருமாள், [illegible]
பஞ்சாய்ப் பறந்து பறகையிலே
கண்டேன் நான்!

மனிதன் ஒருவன்
ஒரு வண்டியினை
பாடுபட்டுத் தள்ளி வருகின்றான்.
மூப்பால் தளர்ந்து
முனகிக் கிடந்தான் அத்தேப்பன்
அருகே கிழவி - தாய்
இருவரையும் சொத்தாய்க் கருதி
வேறெதையும் காவாது
அத்தேர் இழுத்து நடந்தானே
அம்மகனை
பாடாத பாட்டென்ன பாட்டு - நெஞ்சில்
படமாக ஓடுதே அக்காட்சி மீட்டும்.
காலை மணி ஏழு
கையில் ஒரு பை
வழக்கம் போல அவசரமாய்
ஓடுகிறேன் சந்தைக்கு
என்னெதிரே வந்தாள் இளவயது மங்கை
அவள் கண்ணின் ஒளி
நெஞ்சின் உறுதியினைக் காட்டிற்று
எதையும் கணத்தில் எடுக்காது
அவள் நடந்த விதம் —
இந்தப் பெண் வேறு ரகம் என்று சொல்லிற்று
பார்த்தேன்
அடிபெயர்த்து அப்பாலை நடந்து வந்தாள்.
பார்த்தேன் - அவளுக்குக் கைகள் இரண்டுமில்லை!
வேல் நெஞ்சில் பாய விறைத்துப்போய் நின்றேன்!
பெண்போன திசையறியேன் போன பணிமறந்தேன்
ஊனம் பிறப்பால் உறின், ஊழ்வினை எனலாம்.
கூனும் குருடும் குறைபாடுதான்
சனம் இனம் உறுதல் கண்டு
ஆயுதம் ஏந்தி
மான நெடும்போர்க் களத்திலே
தன்னிரண்டு
கையும் இழந்தாளைக் கண்ணுற்ற நாள் முதலாய்
எரியும் மனம்
கனவு நனவெல்லாம் அக்காட்சி!
கற்பனை அல்ல
கலைவாணர் சொல்லுகிற
அற்புதங்கள் இங்கே அநேகம் அரங்கேறும்!

புண்பட்டதும் இன்றிப் பொசுக்கிய இம்மண்ணிலிருந்து
மீண்டும் எழுவோம், வியக்கும் உலகு!
எங்கள் வேர் ஆழப் பாயும்
விழுது பல இறங்கும்
ஆராலும் எம்மை அசைக்க முடியாது.





■ சோ. பத்மநாதன்

# வீரம் விளைந்த மண்

2

■ திறலோன்

சிறீலங்கா படையினரின் ஓமந்தை தடைமுகாமுக்கு வவுனியாவிலிருந்து பேருந்துகளும், சிற்றூந்துகளும் பயணிகளை ஏற்றிவந்து இறக்கிவிட்டுச் செல்கின்றன. அந்தப் பகுதியில் சிறீலங்கா படையினரின் பயணச் சோதனைகளை முடித்த பயணிகள், அங்கிருந்து 250 மீட்டர் தூரம் இராணுவ சூனியப் பிரதேசத்துக்கூடாக நடந்து வர, வன்னி நிலம் வரவேற்கிறது என்ற பெயர் பலகைக்கு அண்மித்த பகுதியில் தமிழீழப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அவர்களை அங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவிலுள்ள, தமிழீழ (விடுதலைப் புலிகளின்) சோதனைச் சாவடிக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருந்தன.

அந்த அதிகாலை வேளையில் மக்கள் அணியணியாக நடந்துவர, எந்தவித தாமதமுமில்லாமல் தமிழீழ போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் அடுத்தடுத்து அவர்களை அழைத்துச் சென்ற காட்சி, அங்கே எங்களுக்கென்று ஒரு நாடு உருவாகிவிட்டது என்பதற்கும், அங்கே ஒரு தனியான நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிவருகிறது என்பதற்கும் சாட்சியாக இருந்தது.

அடக்குமுறைச் சின்னமான காக்கி நிறத்துக்குப் பதிலாக, கருநீல, வெளிர்நீலச் சீருடையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும் தமிழீழக் காவல்துறையினர், சிங்கள அரசின் அடக்குமுறைகள் உடைக்கப்பட்டு விட்டதற்கு சான்றாக நின்றனர்.

வாடகைக்கு அமர்த்திய வாகனங்களும், குடாநாட்டுக்குச் செல்லும் பேருந்துகளும் நேரடியாகவே புளியங்குளத்திலுள்ள தமிழீழ (விடுதலைப்புலிகளின்) சோதனைச் சாவடிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. புளியங்குளத்திலுள்ள (தற்போது தற்காலிகமாக) தமிழீழ சோதனைச் சாவடியில் யாழ் செல்லும் பயணிகளுக்கான பகுதி, வன்னி செல்லும் பயணிகள் பகுதி என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. குடாநாட்டுக்குச் செல்பவர்கள் யாழ் பயணிகள் பிரிவிலும் வன்னிக்கு செல்பவர்கள் வன்னிப் பயணிகள் பிரிவிலும் தங்கள் வாகனங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்த வேண்டும். நாங்கள் சென்ற சிற்றூந்து யாழ் பயணிகள் பிரிவில் நிறுத்தப்பட்டது.

ஒரு காலத்தில் மரந்தாவும் குரங்குகளும், மருண்டோடும் மான்களும், மலைக்க வைக்கும் யானைகளும் நிறைந்த அடர்ந்த காடாக இருந்த அந்த பிரதேசம் இன்று போரில் பொட்டல் வெளியாகிப் போனாலும், தமிழீழ தேசத்தின் தற்காலிக நுளைவாயில் என்ற சிறப்போடு, மக்கள் நிறைந்த வாகனங்கள் நிறைந்த பரபரப்பான பகுதியாகக் காணப்பட்டது.

பிரமாண்டமான கிடுகுக் கொட்டகைகளில் தமிழீழத்தின் அந்தத் தற்காலிகக் குடிவரவுப்பகுதி, வரவேற்புப் பகுதி, வெளிநாட்டுப் பயணிகளுக்கான பகுதி, போக்குவரத்து அனுமதி பெறும் பகுதி, ஆயப்பகுதி, தீர்வை செலுத்தும் பகுதி, திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பகுதி, முறைப்பாட்டுப் பகுதி, பயணிகள் இளைப்பாறும் பகுதி என்று பல்வேறு பிரிவுகளாக நேர்த்தியான முறையிலே பிரிக்கப்பட்டு, சுறுசுறுப்போடு இயங்கிக்கொண்டிருந்தது.

சீருடை அணிந்த இளையோர் சிறந்த முறையில் தங்களது கடமைகளை செய்து கொண்டிருந்தனர். ஒரு நாட்டின் இறங்குதுறை அல்லது நுளைவாயில் அதாவது துறைமுகம் அல்லது விமான நிலைய குடிவரவுப்பகுதி எப்படி இருக்குமோ அவற்றுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாமல் அந்த தமிழீழ குடிவரவுப்பகுதி இருந்ததைப் பார்க்கப் பெருமையாக இருந்தது. என்ன சிறீலங்கா உட்பட்ட மற்ற நாடுகளின் குடிவரவுப் பகுதிகள் குளிரூட்டப்பட்ட பிரமாண்டமான கட்டிடங்களில் இயங்கும், நமது நாட்டில்



பயண அனுபவம்

குடிவரவுப் பகுதி கிடுகுக் கொட்டிலில் வெய்யில் அனலாக கொழுத்தும் பொட்டல் வெளிப் பகுதியில் இருக்கிறது. இது தான் வித்தியாசம்.

வெளிநாட்டுப் பயணிகளான எங்களை பணிப்பீடம் இரண்டில் உள்ள அனைத்துலகத் தொடர்பகத்துக்குச் செல்லும்படி கூறினார்கள். அங்கே எங்களுடைய விபரங்களைப் பதிவதற்கும், எங்களுடைய கேள்விகள் சந்தேகங்களுக்கும் பதிலளித்து எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் என்று பணியாளர்கள் இருந்தார்கள். எனக்கு அந்தப் பணியகத்தில் கேட்க வேண்டிய நிறையக் கேள்விகள் இருந்தன.

என்னை சந்தித்த பணியாளரிடம் அவற்றைக் கேட்ட போது, தங்களுடைய பொறுப்பாளர் இவற்றுக்குரிய விளக்கங்களை உங்களுக்கு தருவார் என்று கூறி, அவரது சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தந்தார்கள். என்னை அன்போடு வரவேற்று உபசரித்த அந்தப் பொறுப்பாளரிடம், "ஏன் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகளில் கிளிநொச்சிக்கு செல்பவர்களை ஏற்றுவதில்லை? நீங்கள் அனுமதி கொடுக்க மறுப்பதனால் தான் நாங்கள் அவ்வாறு ஏற்றுவதில்லை என்று பேருந்துச் சொந்தக்காரர்கள் சொல்கிறார்களே? இது உண்மையா?" என்று எனது முதலாவது கேள்வியைக் கேட்டேன். "நாங்கள் கிளிநொச்சிக்குச் செல்லக்கூடாது என்று எவரையும் தடுப்பதில்லை. இந்த ஏ ஒன்பது பாதையினூடான பயணம் தொடர்பாக இரண்டு நடைமுறைகளை நாங்கள் வைத்திருக்கிறோம். ஒன்று, இதனூடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் செல்பவர்கள் தொடர்பானது. மற்றது, இதனூடாக வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் செல்பவர்கள் தொடர்பானது. அதிலும் வன்னி மேற்கு மற்றும் மத்திய பகுதியான கிளிநொச்சி மல்லாவி அக்கராயன் வட்டக்கச்சி பூநகரி பகுதிகளுக்கு தனியான நடைமுறையும், வன்னி கிழக்குப் பகுதியான விசுவமடு, புதுக்குடியிருப்பு முள்ளியவளை பகுதிகளுக்குச் செல்வதற்கு தனியான நடைமுறையும் வைத்திருக்கிறோம். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் ஒரு வாகனம், எத்தனை பயணிகளை ஏற்றிச் செல்கிறது என்ற பதிவை இந்தச் சோதனைச் சாவடியில் பதியவேண்டும். இங்குள்ள போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு, அதை சரிபார்த்து அதற்குரிய அனுமதியை வழங்கும். இந்த அனுமதியை முகமாலை சோதனைச் சாவடியில் உள்ள எமது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் சரிபார்த்த பின்னர் தான் அந்த வாகனத்தை குடாநாட்டுக்குச் செல்ல அனுமதிப்பார்கள். அதாவது இங்கு ஒரு பயணியை குடாநாட்டுக்கு செல்வதாக பதிந்துவிட்டு, அந்த வாகனம் அவரை வன்னியில் இறக்கிவிட்டுச் செல்லமுடியாது. இது ஏன் இந்த நடைமுறை, என்று சிலபேர் கேட்கலாம். எங்கள், இந்த விடுதலைப் போராட்டத்திலை, இந்த மண்ணை மீட்கிறதுக்கு எத்தனை ஆயிரம் போராளிகள் தங்கட உயிரை அர்ப்பணித்திருக்கினம். எத்தனை இலட்சம் மக்கள் அவலங்களையும் இழப்புக்களையும் சந்தித்திருக்கினம். இண்டைக்கு நாங்கள் எங்கட மண்ணிலை 70 வீதத்தை மீட்டிருக்கிறம் என்டால், அது சும்மா வந்ததில்லை. போராட்டம் இன்னும் முடியாத நிலையிலை, எங்கடநாடு இன்னும் முழுமையா விடுதலை பெறாத நிலையிலை, இந்த சமாதான காலத்திலும் எதிரி இன்னும் எங்களை அழிக்கிறதுக்கு முயன்றுகொண்டுதான் இருக்கிறான். எங்கட பகுதிகளை உளவு பார்க்கிறதுக்கும், நாச வேலைகளை செய்யிறதுக்கும் அவன் ஆக்களை அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறான். இதுக்காக நாங்கள் எல்லாரையும் சந்தேகப்பட்டு சோதனைசெய்ய முடியாது. அதனாலைதான் உளவாளிகளும் போராட்டத்துக்கு வேண்டப்படாத நபர்களும் விடுவிக்கப்பட்ட எங்கட தாயகப் பிரதேசத்துக்குள் ஊடுருவுவதை தடுக்கிறதுக்காகத்தான் இந்தப் பொது நடைமுறையை வைத்திருக்கிறோம்" என்று அந்தப் பொறுப்பாளர் ஒரு நீண்ட விளக்கத்தைத் தந்தார்.

"அப்படி என்டால் வெளிநாட்டிலை இருந்து வாற ஒருத்தர் வன்னிக்கு போக வேணும் என்டா என்ன செய்யிறது?" என்று நான் அவரை திருப்பிக் கேட்டேன். "இது ஒன்றும் சிக்கலான விசயமில்லை. கொழும்பிலை இருந்து வாற ஆக்கள் கிளிநொச்சி அக்கராயன் மல்லாவி வட்டக்கச்சி பகுதிகளுக்கு நாங்கள் பிடித்துக் கொண்டுவாற வாகனத்திலை இங்கை அனுமதி பெற்றுக்கொண்டு போகலாம். விசுவமடு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை பகுதிகளுக்கு(வன்னி கிழக்கு) வெளிமாவட்ட வாகனங்கள் போக அனுமதியில்லை. வெளிமாவட்ட வாகனங்களிலை வாறவை அந்த வாகனத்தை திருப்பி அனுப்பிப் போட்டு, வன்னி மாவட்ட வாகனம் ஒன்டை பிடிச்சுக் கொண்டு போகலாம். வெளிநாட்டிலை இருந்துவாறாக்கள் கொழும்பிலைபோ யாழ்ப்பாணத்திலைபோ அல்லது வேறு வெளி மாவட்டங்களிலைபோ வன்னிக்கு வாறதுக்கு என்டு சொல்லி வாகனங்களைப் பிடிக்கிற போது ஓமந்தைக்கு அல்லது கிளிநொச்சிக்கு என்டு சொல்லிப் பிடிக்கிறது தான் நல்லது. அதை விட்டு பேருந்துக்களை ஓமந்தைக்கு வந்து இங்காலை இந்த புளியங்குளம் சோதனைச்சாவடியில் பதிஞ்சு போட்டு தமிழீழ போக்குவரத்துக் கழக பேருந்துக்களில் வன்னிக்குப் போகலாம். வன்னி கிழக்குப் பகுதிக்கு போறவை புதுக்குடியிருப்பிலை இருக்கிற நந்தவனத்துக்கும் (அனைத்துலகத் தொடர்பகக் கிளை) வன்னி மேற்கு மற்றும் மத்திய பகுதிக்கு போறவை கிளிநொச்சியிலை உள்ள நந்தவனத்துக்கும் போனால் வேண்டிய ஆலோசனைகளையும் வன்னியில் உள்ள முக்கிய இடங்களை சுற்றிப் பார்க்கிறதுக்கான உதவிகளையும் பெறலாம்" என்று அந்தப் பொறுப்பாளர் விரிவாக எடுத்துச் சொன்னார்.

பொதுவாக கிளிநொச்சிக்கோ அல்லது வன்னியின் பிற பகுதிகளுக்கோ, கொழும்பிலிருந்து நேரடியாகப் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை. ஆனால் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு செல்லவிரும்பும் ஒருவர் யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தில் சென்று புளியங்குளம் சோதனைச் சாவடியில் கிளிநொச்சியில் இறங்கப் போவதாகச் சொன்னால் பொதுவாக அனுமதி வழங்கப்படுகிறது. கொழும்பில் சில பயணச் சீட்டுப் பதிவகங்களின் உரிமையாளர்களும், சில வாகன ஓட்டுனர்களும் சொல்வதைப் போல, கெடுபிடிகள் நடைபெறுவது என்று எதுவும் கிடையாது. பொதுவாக வெளிநாடுகளில் இருந்து செல்லும் ஒருவர் பத்து அமெரிக்க டொலர் அல்லது ஆயிரம் இலங்கை ரூபா குடிவரவுக் கட்டணமாகக் கட்டவேண்டும். குடும்பமாகச் சென்றால் குடும்பத் தலைவர் அல்லது தலைவியின் பெயரில் ஒருவருக்கு மட்டும் அந்தக் கட்டணம் அறவிடப்படுகிறது. வெளிநாட்டில் இருந்து

**அந்தக்காலத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பார்த்து இது எங்களுடைய விமான நிலையம், இது எங்களுடைய குடிவரவுப் பகுதி, இது எங்களுடைய ஆயத்துறை, இவர்கள் எங்களுடைய குடிவரவு அதிகாரிகள், என்றெல்லாம் சொல்ல முடிந்ததா எங்களால்? அல்லது உணர்வுதான் எங்களிடம் இருந்ததா? எங்களுக்கென்று எமது என்று உரிமை கொண்ட ஏதுமே இல்லாத ஏதிலிகளாகத் தானே நாங்கள் இருந்தோம்! ஆனால் இன்றைக்கு எங்களுக்கென்று எல்லாமே வந்துவிட்டது. அந்த புளியங்குளம் மண்ணிலே நிற்கின்ற பொழுது, 'இது எங்களுடைய மண், இது எங்களுடைய நிலம், இது எங்களுடைய குடிவரவுப் பகுதி, இவர்கள் எங்களுடைய குடிவரவு அதிகாரிகள்' என்று எங்கள் மனதிலே பிறக்கிற உணர்வு இருக்கிறதே! இதற்கு ஏது ஈடு இணை!**




செல்லும் எங்களுக்கு இது ஒரு பெரிய தொகை இல்லை. இங்கே நாங்கள் விமானச் சீட்டு வாங்கும் போதே நாங்கள் தங்கியிருக்கும் புகலிட நாட்டு அரசாங்கத்துக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் கூட விமானநிலைய வரியை கட்டித்தான் வாங்குகிறோம். இந்தக் கட்டணத்தை நாங்கள் செலுத்தியதும் 'தமிழீழம் உங்களை வரவேற்கிறது' என்ற தலைப்பிட்ட பயண அனுமதி பத்திரம் ஒன்றையும் பணம் கட்டியதற்கான பற்றுச் சீட்டையும் தருகிறார்கள்.

'தமிழீழம் உங்களை வரவேற்கிறது' என்ற தலைப்பிட்ட பயண அனுமதி பத்திரம் என்பது தமிழீழத்தின் கடவுச் சீட்டு. வெளிநாட்டிலிருந்து தாயகம் செல்லும் ஒருவர் மறுபடியும் தாயகத்தை விட்டு தான் தங்கியிருக்கும் புகலிட நாட்டுக்கு திரும்பிச் செல்லும் வரை தன்னுடன் வைத்திருக்க வேண்டும்.

அடுத்து வாகனத்துக்கு பயண வரி அறவிடுவது தொடர்பாகவும் புளியங்குளத்தில் உள்ள அனைத்துலகத் தொடர்பகத்தின் பொறுப்பாளரிடம் கேட்டேன். இது உண்மையில் மீட்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தினூடாக வெளியாட்கள் வாகனங்கள் பயணிப்பதற்கு தமிழீழப் போக்குவரத்துக் கழகத்துக்குச் செலுத்துகின்ற கட்டணம் என்றும் தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்கு தீர்வை கட்டிய வாகனம் ஒன்றுக்கு முன்னூறு ரூபா வீதமும், தீர்வை கட்டாத வாகனங்களுக்கு நாலாயிரம் ரூபா வீதமும் அறவிடப்படுகிறது என்றும், இதை வாகன உரிமையாளர் தான் கட்ட வேண்டுமேயன்றி பயணிகள் அல்ல என்றும் அந்தப் பொறுப்பாளர் தெளிவுபடுத்தினார்.

உண்மையில் இங்கே ஐரோப்பாவிலே குறிப்பாக பிரான்சில் ஒரு அதி வேக நெடுஞ்சாலையில் ஒரு வாகனம் பயணிக்க வேண்டும் என்றால் பயணத்தூரத்தை பொறுத்து ஒரு குறிப்பிட்ட தொகை கட்டணம் கட்டியே ஆகவேண்டும். கட்டணம் செலுத்தாமல் அந்த நெடுஞ்சாலைகளில் பயணிக்கவே முடியாது. ஜேர்மனி சுவிஸ் போன்ற நாடுகளில் மொத்தமாக ஒரு ஆண்டுக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் இந்தக் கட்டணத்தை அறவிடுகிறார்கள்.

அடுத்து வெளிநாட்டில் இருந்து செல்லும் ஒருவருக்கு 12 விதமான பொருட்களுக்கு தீர்வை விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் 15 வகையான பொருட்களை அவர் ஒரே நேரத்தில் தீர்வையின்றி எடுத்துச் செல்லலாம். ஆயப்பகுதியில் பொது நடைமுறையாக அனைத்துப் பொருட்களும் சோதனையிடப்படுகின்றன. தீர்வை விலக்குக்கு உட்படாத பொருட்களுக்கும், வணிகநோக்கத்தோடு எடுத்துச் செல்லுகின்ற பொருட்களுக்கும், தீர்வை கட்டவேண்டும். இதில் வெளிநாட்டில் இருந்து வருபவர் உள்நாட்டில் இருப்பவர் என்ற பாகுபாடுகள் எதுவும் காட்டப்படுவதில்லை.

கொழும்பிலிருந்து குடாநாட்டுக்குச் செல்லும் சிலர் தாங்கள் வணிக நோக்கத்துக்காக எடுத்துச் செல்லும் பொருட்களை வெளிநாட்டில் இருந்து செல்லும் பயணிகளிடம் கொடுத்து, அதை அவர்களுடைய பொருட்கள் என்று சொல்லி தீர்வை செலுத்தாமல் கொண்டு செல்ல எத்தனிப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டில் இருந்து செல்பவரின் பயணம் தாமதமாவதோடு அவர் மேலதிக தண்டப் பணமும் கட்ட வேண்டி ஏற்படும். பொதுவாக இந்தக் குடிவரவுக் கட்டணம் அறவிடுவது, வாகனங்களுக்கான பயணத் தீர்வை அறவிடுவது, ஆயச் சோதனைகளை மேற்கொள்வது, பொருட்களுக்கு ஆயத் தீர்வை அறவிடுவது, என்பனவெல்லாம் தங்களுக்கு மேல் சுமத்தப்படுகின்ற ஒரு சுமை என்று சிலர் நினைக்கிறார்கள். "கொழும்பிலிருந்து பயணக் களைப்போடு செல்லும் தங்களை ஏன் ஆயச்சோதனை என்ற பெயரில் ஏன் தாமதிக்க வைக்க வேண்டும்" என்றெல்லாம் சிலர் நினைப்பதுண்டு. சிறீலங்கா அரசும் அதன் கைக்கூலிகளான துரோகக் கும்பல்களும் இதையெல்லாம் ஒரு பெரிய விடயமாக பிரச்சாரம் செய்கின்றன. இந்தப் பிரச்சாரத்தின் மூலம் தமிழீழ அரசின் இருப்பை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள் என்பது பாவம் அறிவிலிகளான அவர்களுக்குத் தெரியாது.

மக்களின் வரிப்பணத்தில் இயங்குவது தான் அரசு. மக்கள் தங்களுடைய இருப்பை, இறையாண்மையை, அடையாளத்தை பாதுகாப்பதற்காக செலுத்துகின்ற பங்களிப்புத்தான் வரி என்பதையும் உணர்ந்து மக்களிடம் வரி வாங்கும் நாடோ அரசோ

கிடையாது என்பதையும் பலர் உணருவதில்லை. இங்கே ஐரோப்பாவிலே நாங்கள் உண்ணுகின்ற உணவிலிருந்து உடுக்கின்ற உடுப்புவரையாக இன்னும் குறிப்பாகச் சொன்னால் இப்போதைக்கு சுவாசிக்கின்ற காற்றைத் தவிர மற்ற அனைத்துக்கும் அவற்றுக்குரிய கட்டணத்துடன் சேர்த்து வரியும் கட்டுகிறோம். தொலைபேசிக்கு வரி, தொலைக்காட்சிக்கு வரி, மின்சாரத்துக்கு வரி, தண்ணீருக்கு வரி, வீட்டுவரி, நில வரி, செய்யும் வேலைக்கு வரி, வாங்கும் சம்பளத்துக்கு வரி, எல்லாவற்றுக்கும் பணம் கொடுக்கிறோம். இந்த வரிப்பணத்தில் தான் நகரங்களினதும் கிராமங்களினதும் நிர்வாகம் இயங்குகிறது. திட்டங்கள் போடப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. சமூகநலக் கொடுப்பனவுகள் கொடுக்கப்படுகின்றன. ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

உண்மையில் புளியங்குளம் சோதனைச் சாவடி நடைமுறைகள் என்பது எங்களுடைய நாடு, எங்களுடைய தாயகம், ஒரு தனியரசாக இயங்குகிறது என்பதற்கு அடையாள சாட்சியாகும். எங்களுடைய தமிழீழ அரசும் உலகிலுள்ள மற்ற அரசுகளைப் போலத்தான் மக்களிடம் அறவிடும் தீர்வைப் பணத்தை வைத்து நிர்வாகக் கட்டமைப்பை நடத்துகிறது. சமூகக் கொடுப்பனவுகளைக் கொடுக்கிறது என்கின்ற யதார்த்தை புரியாதவர்கள் எமது தாயக விடுதலையை நேசிக்காதவர்களாகவும், தமிழீழத் தனியரசு உருவாகிவிடக் கூடாது என்ற நோக்கத்தை உடையவர்களாகவும், தான் இருக்க வேண்டும்.

அது போலத்தான் இந்தச் சோதனைச் சாவடிகளில் ஏற்படுகின்ற தாமதம் மற்றும், ஆயச் சோதனை நடவடிக்கைகளை விமர்சிப்பவர்கள் இங்கே ஐரோப்பிய விமான நிலையங்களில் இருந்து அமெரிக்காவுக்கோ, பிரான்சின் கலே துறைமுகத்திலிருந்து ஐக்கிய இராட்சியத்தின் டோவர் துறைமுகத்தூடாக இங்கிலாந்துக்கோ பயணிக்க முற்படுகின்ற போது அங்குள்ள குடிவரவு அதிகாரிகள் காட்டுகின்ற கெடுபிடிகளை பார்த்தால் அல்லது அனுபவித்திருந்தால் நிச்சயமாக இதை ஒரு பெரிய விடயமாகவே எடுக்கமாட்டார்கள்.

பலர் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியையும் புளியங்குளத்திலுள்ள தமிழீழக் குடிவரவுப்பகுதியையும் ஒன்றாகப் பார்க்கின்றார்கள். உண்மையில் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி என்பது சிறீலங்கா படையினரது தடை முகாம் மட்டுமே. ஆனால் புளியங்குளம் சோதனைச் சாவடி என்பது எமது நாட்டின் (தற்காலிக) நுளைவாயில். நாட்டின் குடிவரவுப் பகுதி. இதை கட்டுநாயக்கா விமான நிலையத்துடன்தான் ஒப்பிட முடியும்.

கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவுப் பகுதியில் சிறீலங்கா அரச தரப்பின் குடிவரவுச் சோதனைகள் முடிந்துவிடுகின்றன. அவர்கள் இரண்டாவது தடவை ஓமந்தையில் குடிவரவுச் சோதனை செய்யத் தேவையில்லை. அதனால் சிறீலங்கா படையினர் அங்கே மேலோட்டமான தங்களது சோதனைகளை முடித்துவிட்டு அனுப்புகின்றார்கள். ஆனால் எங்களுடைய தேசத்தின் குடிவரவு சோதனை என்பது புளியங்குளத்தில் தானே ஆரம்பிக்கிறது.

உண்மையிலே ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு கிளாலிக் கடல் கடக்கப்பட்ட பாடுகளையும், சிங்களப் படையினரின் எறிகணை மற்றும் விமானக்குண்டு வீச்சுக்களால் அந்தக் கிளாலிக் கடற்பரப்பில் இருளோடு இருளாக உடல் சிதறிப் பலியான முகம்தெரியாத எம் உறவுகளின் கதைகளையும், இவையெல்லாம் தாண்டி தாண்டிக்குளம் சென்ற போது தடை முகாமில் சிங்களப்படை படுத்திய பாட்டையும் மறக்காத எனக்கு எம் தாயக நிர்வாகக் கட்டமைப்பின் இந்த குடிவரவுப் பகுதியைப் பார்த்த போது நான் அடைந்த மகிழ்ச்சியை பெருமிதத்தை எப்படிச் சொல்வது?

அந்தக்காலத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பார்த்து இது எங்களுடைய விமான நிலையம், இது எங்களுடைய குடிவரவுப் பகுதி, இது எங்களுடைய ஆயத்துறை, இவர்கள் எங்களுடைய குடிவரவு அதிகாரிகள், என்றெல்லாம் சொல்ல முடிந்ததா எங்களால்? அல்லது உணர்வுதான் எங்களிடம் இருந்ததா? எங்களுக்கென்று எங்களது என்று உரிமை கொண்டாட எதுவுமே இல்லாத ஏதிலிகளாத் தானே நாங்கள் இருந்தோம்! ஆனால் இன்றைக்கு எங்களுக்கென்று எல்லாமே வந்துவிட்டது. அந்த புளியங்குளம் மண்ணிலே நிற்கின்ற பொழுது, 'இது எங்களுடைய மண், இது எங்களுடைய நிர்வாகம், இது எங்களுடைய குடிவரவுப் பகுதி, இவர்கள் எங்களுடைய குடிவரவு அதிகாரிகள், என்று எங்கள் மனதிலே பிறக்கிற உணர்வு இருக்கிறதே! இதற்கு எது ஈடாக முடியும்.

புளியங்குளம் குடிவரவுப் பகுதியில் "திரைப்பட வெளியீட்டுப் பிரிவு" என்ற ஒரு பகுதி இருந்தது. குடிவரவுப் பகுதியில் திரைப்பட வெளியீட்டுப் பிரிவுக்கு என்ன வேலை என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தாயகத்தில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை அங்கே திரையிட்டுக் காட்டுகின்றார்களோ என்ற எண்ணம் தான் எனக்கு முதலில் ஏற்பட்டது. பின்னர் அங்கு சென்று விசாரித்த போதுதான் அவர்கள் அங்கே சமூகப் பொறுப்புள்ள ஒரு முக்கியமான பணியை செய்துகொண்டிருப்பதைக் காண முடிந்தது.

சிறீலங்கா அரசு தாயகத்திலுள்ள எமது இளந்தலைமுறையின் விடுதலை உணர்வையும் தாயகப் பற்றையும் திசைதிருப்பி மழுங்கடிப்பதற்கும், அவர்களது வாழ்க்கையை சீரழிப்பதற்குமாக திட்டமிட்ட அடிப்படையில் மிக மலினமான வக்கிரத்தனமான பாலியல் படங்களை தொடர்ச்சியாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்தது. படையினர் நேரடியாக இவற்றை எடுத்துச் சென்று குடாநாட்டில் விநியோகிப்பது ஒரு புறம் என்றால், ஏ ஒன்பது வீதியூடாகச் செல்பவர்கள் மூலமும் இதை அவர்கள் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். இதை தடுத்து இத்தகைய ஆபாச சினிமாக்களை கண்டுபிடித்து அழிக்கின்ற பணியைத்தான் குடிவரவுப் பகுதியில் இந்த திரைப்பட வெளியீட்டுப்பிரிவு செய்துகொண்டிருக்கிறது. (தற்போது ஏ ஒன்பது வீதியூடாக திரைப்படங்கள் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.)

இயன்றவரை இந்த தமிழீழ குடிவரவுப் பகுதியினூடாக பயணிக்கும் மக்களை தாமதமின்றி சோதனை செய்து அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், பயணிகளால் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள் இயன்றவரை திருத்தியமைக்கப்படுவதாகவும் அங்கிருந்த முறைப்பாட்டுப் பிரிவிலிருந்த பணியாளர்கள் தெரிவித்தனர். வெளிநாடுகளிலிருந்து தாயகத்துக்கு செல்லும் பயணிகள் தங்களுக்கு இந்த குடிவரவுப் பகுதியில் ஏதாவது குறைபாடுகள் சிக்கல்கள் இருந்தால் அங்குள்ள வெளிநாட்டுப் பயணிகளுக்கான தொடர்பகத்தில் தெரிவித்து ஆலோசனைகளையும், வேண்டிய உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அந்த முறைப்பாட்டுப் பிரிவிலிருந்த பணியாளர்கள் சொன்னார்கள்.

குடிவரவுச் சோதனை ஆயச் சோதனை எல்லாம் முடிந்த பின்பு ஆயத் தீர்வை கட்ட வேண்டியிருந்தால் அதையும் கட்டிய பின்னர் குடிவரவுப் பகுதியில் இருந்து வெளியேறும் இறுதிப் பகுதிக்குச் செல்லலாம். அங்கே வாகன ஓட்டுனர் அவருக்குரிய நடைமுறைகளை செய்து முடித்திருந்தால் அங்கிருந்து முகமாலை நோக்கி பயணத்தை தொடரலாம். நான் கிளிநொச்சிக்கு செல்வதாக தெரிவித்ததால் எனக்குத் தந்த 'தமிழீழம் உங்களை வரவேற்கிறது' என்ற அனுமதிப் பத்திரத்தில் கிளிநொச்சி மட்டும் என்று எழுதி முத்திரை குத்தித் தந்தார்கள். ஏறக்குறைய ஒரு 40 நிமிடம் அங்கே அந்த தமிழீழக் குடிவரவுப் பகுதியிலே குடிவரவுச் செயற்பாடுகளுக்காக தரித்து நின்றபின்னர் எங்களுடைய சிற்றூர்ந்து புறப்பட்டது.

(தொடரும்)

# அணையாத தீபங்கள்



## போராளிகளின் விடுதலை வாழ்வு

### சிறு குறிப்பு

ஒடுக்குமுறைக்கெதிரான விடுதலைப் போராட்டம் தீவிரம் அடையத்தொடங்கிய காலத்திலிருந்து கலை இலக்கியமும் பல் வேறு பாய்ச்சல்களையும் நிகழ்த்தியிருக் கிறது.

விடுதலைக்காகப் போராடிய வீரர்களி னது வாழ்க்கைக் குறிப்புகள் எழுதப்பட் டது. அவர்கள் எவ்வாறானதொரு வாழ்க் கையை வாழ்ந்தார்கள் அவர்களுடைய விடுதலை வாழ்வும் மரணமும் எத்தகைய வழிகளைத் திறந்து வைத்தது.

அது எம்மை விடுதலைக்குரிய மனி தர்களாக மாற்றுவதில் நிறைந்த சமூகப் பயன் மிக்கதாக விளங்கிற்று.

**2**

அவர்களுடைய நெடிய பயணம், அடர்ந்த காடுகளுக்குள்ளால் அவர்கள் நேசம் மிக்க மக்களின் ஓயிலாங்களை மறைந்திரைகளில் காவிச்சென்றார்கள்.

புழுதித் தெருக்களின் அருகே மர நிழல்களில் எதிரியின் முதுகெலும்பை முறிப்பதற்காக தவம் கிடந்தார்கள்.

ஒரு சித்தனுக்குரிய பேர் மன நிலையில் அவர்கள் இயங்கினார்கள்.

சித்தர் என்ற சொல் இயற்கை அதீத வலுவுடையோர், பூரணத்துவம் அடைந்தோர், உயர் இலக்கைப் பெற்றுக்கொண்டவர்கள் என்று பொருள்படும் என்பர் மோனியர் வில்லியம்ஸ். எமது போராளிகளினுடைய அகப் பண்பாடு அத்தகைய நிலையையே எய்தியிருந்தது.


அவர்களுடைய பண்பாட்டு அதிர்வுகள் நிலத்தில் பல மாற்றங்களுக்கான அதிர்வுகளை ஏற்படுத்தின.

நிலத்தின் மீது பதிந்த அவர்களுடைய விடுதலைச் சுவடுகளைப் பற்றிச் செல்லுகின்ற ஒரு வரலாற்று ஆசிரியருக்கு அவர்களது வாழ்வும் மரணமும் புதிய செய்திகளை நிச்சயம் வழங்கக் காத்திருக்கிறது.

விடுதலைக் காலத்தில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை எம்மை ஒரு புள்ளியில் சந்திக்க வைக்கும். ஆன்மாவால் ஆழமாக உணர்ந்து, உடலை ஆயுதமாகக் கொண்டு விடுதலையைப் பாடிய அவர்களது வாழ்க்கை மிகப் பெரிய காவியங்களே.

சில வேளை அவை ஒழுங்குபடுத்தப்படாமல் சிந்திச் சிதறிக் கிடக்கும். அது பல பழமைவாதக்கட்டுக்களிலிருந்து தன்னை முற்றிலுமாக விடுவித்திருக்கும். அது எத்தகைய வடிவத்தில் இருக்கிறது என்ற கேள்விக்கு இடமற்றுப் போயிருக்கிறது.

சுதந்திர வாழ்வின் வலியை உணர்த்தி சுதந்திரத்தை பெறுகின்ற பண்பாடுடைய மக்கள் தொகுதி ஒன்றிற்கான ஆழமான உணர்வுகளை பாய்ச்சுகின்றன மக்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிப்பதற்காக போராளிகளாயும், கலைஞர்களாயும், கவிஞர்களாயும், கவிபோர ளாயும், கட்டமைப்புகளாயும், மருத்துவர்களாயும் பல்வேறு பன்முகத் தளங்களில் அவர்களின் இயக்கம் விரிகிறது.



அத்தகைய விடுதலைப் போராளிகள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் படிக்கப்பட வேண்டியவை. அவர்களது கமராக்கள் எழுதிய புகைப்படங்கள் உணர்வுபூர்வமானவை. அவர்களது கிறுக்கல்கள் ஓவியங்களாக போற்றப்பட வேண்டியவை. அவர்களது ஓயாமல் இயங்கும் நுட்பங்கள் சந்ததி சந்ததியாய் கையளிக்கப்பட வேண்டியவை.

விடுதலை என்றே அவர்களது வாழ்க்கை
விடுதலையே அவர்களது மூச்சு
விடுதலையே அவர்களது ஆன்மா
விடுதலையே அவர்களது நாளை, இலக்கு, இயக்கம்

கோசங்கள் அற்றவர்கள். போலித்தனங்கள் அற்றவர்கள் விடுதலை வாழ்க்கையை வாழ்ந்து விட்டு, விட்டுப் போனவர்கள் பற்றிய போராட்ட வரலாற்றுக் குறிப்புகள் மெய்மையானவை. அவை மனிதனை மேம்படுத்தவல்லவை. அவை சிலவேளைகளில் ஒரு அறிக்கையைப் போல் இருக்கும். ஆயினும் அவை போராளிகளினது நினைவுகளைப் பதிவுசெய்கின்றன. அவரின் தடங்களை பின்பற்றி ஒரு நாவலோ அல்லது ஒரு கவிதையோ அல்லது கவிதையும் உரையும் இணைந்த ஒன்றோ அல்லது ஒரு திரைப்படமோ விரியலாம். அது ஒவ்வொரு வாசகனும் தன் வாழ்வில் பெற்ற அனுபவங்களைப் பொறுத்தது. வாசக மனங்களில் விடுதலைக்கான தூண்டுதல்களை அருட்டல்களை அவை மேலெழுப்பும் சக்தியைக் கொண்டு இயங்குகின்றன.

உணர்ச்சிப் பெருக்கு உணர்வுகளில் ஒன்றித்து எழும்பும் போது அவை ஒரு சோகத்தை வாசிக்கின்றன. ஒரு நிமிர்வைத் தருகின்றன.


இத்தகைய எழுத்துக்கள் எவ்வாறு மேல் எழும்புகின்றன என்பதைக் கண்டடைகின்றவர்கள் நாளை காவியங்களை படைக்கும் வல்லமைகளைப் பெறுவார்கள்.

விடுதலைப்போராட்ட வரலாற்று நூலில் இணைந்துத் தொகுத்துக் அடிக்குறிப்புகளாக கூட அவை விளங்கலாம். நாம் நிலத்தில் விடுதலைக்காக எத்தனை போராளிகள் எத்தனை சூழ்நிலைகளில் போராட்டத்துக்காகவே போராடி வாழ்ந்ததைக் கதைப்பதாக இருக்கின்றன. நாம் அறிந்திடு இராத பக்கங்களைப் புரட்டிக்காட்டுகின்றன. அவர்களால் வார்த்தைகளால் ரசனைப்படுத்த முடியாமல் போயிருக்கலாம். ஆனால் அவை அவர்களோடுதான் இருந்திருக்கலாம்.

ஆழமான பாதை. விடுதலை நேசிப்பையும் நட்பையும் உணர்த்தியபடி அவர்கள் காலங்களைக்கடந்து போகிறார்கள். அவைபோல நீட்சியை ஏதோ அவர்கள் நிலம் எங்கும் ஒலிக்கொள்ளவும் கிறார்கள் வாழ்வு ஒளி பொருந்தியதாக வேண்டும் என்பதற்காக.

எம்முடைய காலத்தில் எங்களை அழகாக்கு நாளைகளில் இருந்து மீட்டுதலாகவும் எங்களுடைய வாழ் நிலத்தை மீட்டுத் தருவதற்காகவும் பயணம் செய்த விடுதலைப் பயணிகளின் பக்கமான உறவுப் படங்களை எங்கள் இதயங்களிலும் அவை மாட்டி விடுகின்றன.

சுடரன்





Tamileelam Archive





# 'தமிழ் மண்ணைக் காத்த மாவீரர் கோயில்'

செ. புரட்சிகா

நாலைந்து நாட்களின் முன்தான்
நோர்வேயிலிருந்து வந்ததாகச் சொன்னாள் அந்த இளம்
தாய்
கையிலே உயிருள்ள மாலை.
உறவுகள் யாரேனும்
உயிர் விதைத்துப் போயிருப்பர்...
அங்கே என எண்ணிக் கொண்டேன்.
அருகிலே ஒரு குழந்தை — ஆனாலும்
தன்னைத் தூக்கென்று அடம்பிடிக்கவில்லை
திறந்த வாயில் வழியே
நடந்து உள்நுழைந்து
'என்ன கோயிலம்மா இது?'
தாயின் சின்ன விரல் மடித்துச்
சிரித்தபடி கேட்டது.
'தமிழ்
மண்ணைக் காத்த
மாவீரர் கோயில்' என்றாள்.
எதுவும் விளங்காமல்
தாய் முகத்தைப் பார்த்தது பிஞ்சு.

'பொல்லாத ஆக்கள் வந்து
எங்கள அடிக்கேக்க
இவையள்,
பொல்லாதவையிட்டயிருந்து
எங்களைக் காத்தவையள்'
ஏதோ விளங்கியிருக்க வேணும்.
தலையைச் சரித்து
யோசித்த அந்தப் பூ.

'காக்கிறது கடவுள்தானேயம்மா'
அந்தப் பிஞ்சின் வார்த்தையில் ஒரு
தத்துவம் புதைந்து கிடந்தது.
ஆம் கடவுள்கள் தான்.
சுற்றி வர ஒளியேற்றிச்
சுடரில் எம் உணர்வைப்
பற்ற வைத்துக் கொண்டோம்.
பகைமையான தமிழீழத்திற்காய்
மீண்டும்...............
கடுகலன்களைக் கைப்பிடித்தபடியே
நடந்தோம் காப்பரண் நோக்கி.



அணையாத தீபங்கள்



## காற்றாகி கனவாகி.!

காற்றாகி கனவாகி
கனவில் ஓர் ஒளியாகி
நேற்றுப் போல் எங்கே
நீ கரைந்தாய்
சேற்றில் ஒரு தாமரையோ
செவ்வான ஆதவனோ
காற்றுப் பெருவெளியில் கண்டறியா அற்புதமோ
பார்த்தறிய முடியாத பகலவனே
எம் இருளை
போக்கவென நீ போய் மறைந்தாய்,
வியர்க்க விறுவிறுக்க
விண்ணை நாம் அண்ணாந்து நோக்குகிறோம்
சூரரே உம்மை நாம் தேடுகிறோம்!

போராளி வித்தகி

---

பூநகரியில் பிறந்த புலிவீரன் சூரன்

பூநகரியில் நிலை கொண்ட இராணுவத்தை புறங்காணச் செய்வதில் புலியாகிச் சீற்றம் கொண்ட சிறுத்தை களம் பல பாய்ந்த சூரன் தனது கால்களில் ஒன்றைப் பறிகொடுத்தும் களமாடும் போர்வீரம் குறையவில்லை.

1993ல் புலனாய்வுப் பிரிவில் இணைந்து இவன் செயற்பட்டான். களங்கள் பல சென்று களமாடி மகிழ்ந்த வீரனுமாவான் அக்காலப்பகுதியில் சூரன் சந்தித்த களங்களில் மன்னார் கட்டைக் காட்டில் காவலரண் மீதான தாக்குதல், பூநகரி இராணுவ முகாம் மீதான தவளை நடவடிக்கை போன்றன குறிப்பிடத்தக்கவையாகும்.

போர் வீரமும் ஆற்றலும் உள்ள சூரன் 1996ல் கடற்புலியணியில் இணைந்தான். கடும் பயிற்சிகள் பலவற்றைப் பெற்று ஆற்றல் உள்ள கடற்புலியாக அணையாத தமிழீழ தாகம் உள்ள கடற்கரும்புலியாக நிமிர்ந்தான்.

இவனின் நிமிர்வு - சாதனை நிமிர்வு

ஓயாத அலைகள் - 3ல் யாழ்குடாநாட்டின் முற்றுகைப் போர் நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவத்தின் விநியோகக் கப்பலான உருண கப்பல் மீதான கடற்கரும்புலிகளின் தாக்குதலில் ஐந்து கரும்புலிகளுடன் தானுமொரு கரும்புலியாகிச் சென்றான் நேரங்கள் பார்த்து நிமிடங்கள் குறித்து நெஞ்சிலே விடுதலைக் கானங்கள் இசைத்து 26.06.2000 அன்று பாய்ந்தனன், தன்னையும் தமிழர்க்காய் ஈய்ந்தனன் சூரன்.





# இதமான ஈரக்காற்றும்
# எமைத் தழுவ மறுப்பது மேன்
# எம்மினிய தளபதியை இழந்ததனாலா


அந்நியர் வந்து எம் மண்ணையும்
மன்னுயிர் தனையும் அழிக்கையிலும்
ஈழமக்கள் வாழ வழியின்றி ஏங்கி அலைகையிலும்
கன்னியர்கள் வாழ்விழந்து அலைகையிலும்
தாங்கா மனங்கொண்டெழுந்தவன்.

அன்னை படையணியில் இணைந்து
தாய்மண்ணை மீட்டெடுக்கப்
தளரா மனங்கொண்டு துணிந்தெழுந்தான்.
படையணிக்கு படைபலங்கள் பல சேர்த்தான்.
அந்நியர் கடற்கலங்கள் பலவுடைத்தான்.
எதிர் பலமெலாம் இழக்க வைத்தான்.
தமிழ் தாய் மண்ணை முத்தமிட்டு சாதனைகள் பல
படைத்தான்.

ஆர்ப்பரித்து எழும் அலையும்
சோவென அடிக்கும் சோழகக்காற்றும்
மௌனம் கொண்டதேன்
இதமான ஈரக்காற்றும்
எமைத் தழுவ மறுப்பதுமேன்
எம்மினிய தளபதியை இழந்ததனாலா

கடற்கரும்புலி
லெப். கேணல் [illegible]

தாயின் மடியில் [illegible]
தாயகக் கடலில் [illegible]
சின்னப்பு ரத்தினம் (ரத்தா)
வடமராட்சி கிழக்கு, [illegible],
செம்பியன்பற்று.



ஒற்றைப்பனைக்கும் கடலோரக்
காற்றுக்கும் தெரிந்திடும் உன் வீரம்
இரவு பகல் பாராது
மழை வெயிலெண்ணாது
தாயகத்தின் கடன்தீர்த்த தளபதியே!

கடலரக்கனை அழிக்கவெனத்
தலைவன் காட்டிடும் திசையில் -
கடற்கரும்புலியாய் கனன்றிருந்தாய்

அலைகடலில் நீ அழியாத காவியமானாய்!
எம் மனங்களில் மறையாத விருட்சமானாய்!

சொல்லுக்குமுன் செயலே புகழ்தந்தது
தோழர்கள் பலர் படகேறிப் போர்புரிய
நீ ஆசானாயும் இருந்தாய்.

தரையினில் நீ சரித்திரம் பல படைத்தாய் - சுதந்திர
ஈழத்தை அமைப்பதற்காய்.
தொண்டமனாற்றில் தொடங்கிய உன் சமர் அலையொன்றில்
ஓய்ந்ததுவோ
தலைவன் படையணியில் நிலை தளராது நின்றாய்
தலைகுனியார் தமிழ்ப் பெண்களென வீரம் சாற்றினாய்
ஓங்கி ஒலித்த அலை மூன்று வரை

கடலிலே வீரத் தளபதியாய் நின்று
வெற்றிகள் பல குவித்தவளே.

உன் உருவத்தினுள் இருந்து எத்தனை பெரிய
உறுதியான
கட்டளைகள் உருப்பெற்றன.
உணர்வே வெடிக்குதம்மா
உன்னையே எண்ணுகையில்
நளாயினி, பாமா ஏற்றி வைத்த தீபத்திற்கு
ஒளி கொடுத்த விளக்கே
அவர்கள் தொடர்ந்த பாதம் தொட்டு மண்ணை
முத்தமிட்டவளே.

எண்ணிய செயலெல்லாம்
எமைக்கொண்டு செயலாக்கி
தானைத் தலைவன் உறுதியை உரமாக்கி
எமையெல்லாம் ஈழத்தின் விருட்சமாக்கி
பெண்ணினத்தின் பெருமைதனை
கடலலை தனிலும் பசுமரத்தாணி போல் பதிந்தாய்
உன் வீரம் இன்னும் நாம் இழக்கவில்லை
என்றும் எம் உணர்வில் தோன்றி நிற்கிறதே
என்றும் எம் கடற்பயணம்
தொடர்ந்து செல்லும் விடிவின் திசை நோக்கி.

(கடற்கரும்புலி லெப். கேணல் அமுதசுரபி அவர்கள் நினைவாக அவர்தம்
கடற்புலிகளின் நளாயினி படையணிப் போராளிகள் வெளியிட்ட நினைவு வாசிப்பிலிருந்து)

## லெப் கேணல் அமுதசுரபி

இவர் கடற்கரும்புலியாகவும், கடற்புலி மகளிர் தளபதியாக இருந்த காலத்தில் தாக்குதல் தளபதியாகவும் செயற்பட்ட தீப்பொறி. இவர் கடற்புலி மகளிர் 2வது பயிற்சிப் பாசறையில் ஆரம்பப் பயிற்சியை முடித்தவர். இவரின் ஆரம்ப பயிற்சிக் கல்லூரியிலே தன் அணையாத இலட்சியத் தாகத்தின் வெளிப்பாடாக உறுதியான போராளியாக பிறப்பெடுத்தாள். இதன் பின் அடுத்த கட்ட வளர்ச்சியாக 'ஆசீர்' பயிற்சிக் கல்லூரியில் அதிகாரிகள் பயிற்சியை முடித்து முன்னணி அதிகாரியாக வெளியேறினாள்.

கடற்சமர்களிலும் சரி, தரைச்சமர்களிலும் சரி திறமையாக செயற்பட்டவர். சாதாரணமாக முகாம்களில் அன்பின் உருவாக பாசம், பற்று, இரக்கம் கொண்ட ஒரு மென்மையானவள். ஆனால் கடலில் எதிரியின் அடாவடித்தனங்கள் அதிகரிக்கும்போது அவர்விழிகள் பொறி கக்கும். தரைச்சண்டைகளில் கூட கொம்பனிக் கொமாண்டராக இருந்து அக்கினியாக எதிரியை சுட்டெரித்தவர். தன்னையும் சகபோராளிகளையும் சண்டைப் பயிற்சிகளில் மிகத்தெளிவுடன் போர்கலைகளை தான் கற்பதுடன் கற்பித்தும் கொடுப்பார். கடலில் பல டோராக்களை மூழ்கடித்து பல கடற்படையணியைக் கொன்று குவித்தவர். சண்டையின் இறுக்கமான கட்டத்திலும் நிதானமாக முடிவுகளை எடுத்து போரை வழிநடத்தும் ஒரு தாக்குதல் தளபதி அடுப்பங்கரையே உலகமாக இருந்த பெண்குலம் கடற்கரை மணல் தெரியாது வீட்டுக்குள் முடங்கிக்கிடந்த பெண்ணினம் தங்கத்தலைவன் காலத்தில் புயலாக எழுந்து களங்களில் பகை முடித்த பெண்கள் வரிசையில் இவளின் தியாகம் பெரியது. கடற்புயலாக ஆர்ப்பரித்த அமுதசுரபி கடற்சமரில் எதிரியின் குண்டுகள் சராமாரியாக அவளின் உடலை சல்லடை போட்டதால் சில நாட்கள் மருத்துவ மனையில் காயத்துடன் போராடி 2001.10.26 அன்று லெப் கேணல் அமுதசுரபியானாள்.

கடற் சண்டைகள் பலவற்றை வெற்றியாக செய்த அமுதசுரபி கடல் அரக்கர்களை தவிடு பொடியாக்கி சிதைக்க வேண்டும் என எண்ணங்கொண்டு கடற்கரும்புலியாக தலைவரிடம் அனுமதி பெற்றார். ஆனால் அவரது இலட்சியக் கனவு முற்றுப்பெறவில்லை. இவர் போன்ற பல மாவீரர்கள் விட்டுச்சென்ற இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற கடல் வேங்கைகள் நாம் அவர்களின் வழி தொடர்வோம்.

'கடலிலே காவியம் படைப்போம்'

ஆதவள்
கடற்புலிப் போராளி

# அன்பு அம்மா

பொங்கிவரும் துயரிடையே நன்றியுடன்
நினைக்கின்றோம்
பெயருக்குப் பொருத்தமாய்
பொறுப்புடன் நீ எமக்கு
புரிந்திட்ட சேவையினை

வெங்களம் பல கண்ட
விழுப்புண் அடைந்த வீரன் நீ
வேங்கைப் படையினிலே
வீரத் தளபதி நீ அன்பு அம்மா

பொங்கிவரும் துயரிடையே நன்றியுடன்
நினைக்கின்றோம்
பெயருக்குப் பொருத்தமாய்
பொறுப்புடன் நீ எமக்கு
புரிந்திட்ட சேவையினை

வெங்களம் பல கண்ட
விழுப்புண் அடைந்த வீரன் நீ
வேங்கைப் படையினிலே
வீரத் தளபதி நீ
சிக்கல் மிகு வழங்கற் பணி
சிரமங்கள் மத்தியிலும் சிறப்பாகச் செய்தவன் நீ!

களமுனை வேங்கையாக நீ
கன காலம் இருந்ததனால்
நேர் வந்து கண்டு எம் குறை
நிவர்த்தித்து நின்றாய்.

ஒழுங்காகப் பணி செய்து எம்
உள்ளத்தில் உயர்ந்து விட்ட
அன்பு அம்மாவே!
உன் நினைவில் உறுதி பெற்று
உயர்த்துகின்றோம் கரங்களை.


■ களமுனைப் போராளிகள்



[இக்கட்டான ஜெயசிக்குறுய் எதிர் சமர் காலப்பகுதியில் வழங்கற் பகுதிப் பொறுப்பாளராக இருந்து 10.06.1998 அன்று வீரகாவியமாகி விட்ட மாவீரர் லெப். கேணல் அன்பு /அம்மா [வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரன்] நினைவாக...]

●

நன்றி - சுதந்திரக் காற்று - ஜூன் 1998



# எம் நெஞ்சில் தீபமாய் நிலைத்தவர்







தேசியத் தலைவருடன் லெப். கேணல் ராதா

1985ம் ஆண்டு பங்குனி சித்திரை மன்னார் மண்ணில் வீரவேங்கை லெப். கேணல் ராதாவின் காலடிபடுகிறது. அப்போது மன்னாரில் எமக்கு ஒரே ஒரு முகாம் மட்டுமே இருந்தது. இராணுவத்தின் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டநேரம்.

வீரத்திற்கும் விவேகத்திற்கும் விக்டர் அண்ணன் எமக்கு அர்த்தம் சொல்லித்தந்த காலம். ராதா வந்திற்று. ராதா இனி கவனிக்கும். விக்டர் அண்ணன் சுமை குறைந்தவராகப் பேசினார். ராதா அண்ணன் இடது கைகாரர், ராதா அண்ணன் தலை சீவமாட்டார். ஆம், இடதுகைதான் ராதா அண்ணனுக்குச் சீப்புக்கூடவே, மழலைச் சிரிப்பு.

முதலாவது அணியில் பயிற்சி முடித்தவராம் நல்ல கெட்டிக்காரனாம் ஆரம்பத்தில் ராதா அண்ணனைப்பற்றி அறிந்து கொண்டது இவைதான். போராட்ட பயணம் தொடர்கிறது, மன்னார் பொலிஸ் நிலையம் தாக்குவதற்கு திட்டமிடப்படுகிறது.

ஐசே! ஐசே! என்றவாறு ஒவ்வொரு தோழனையும் தோள்தட்டி வளர்த்தவர் ராதா அண்ணன். நுட்பமான பேச்சு, நுட்பமான வேலை, வெற்றிகரமான பொலிஸ் நிலையத்தாக்குதல்.

அன்று இரவு பீ.பீ.சி வானோலிச் செய்தியில் கரந்தடிப்படையினர் துல்லியமாகத் தாக்கியுள்ளனர் என்று அந்தத் தாக்குதலை வர்ணித்தது. விக்டர் அண்ணன் தலைமையேற்ற தாக்குதலில் ராதா அண்ணனின் முதல் பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தது. மன்னார், புலிகளின் போராட்ட சாதனைக்கு வித்திட்டதாகவும் அது அமைந்திருந்தது.

எமது ஒப்பற்ற தலைவரின் நன்மதிப்பைப் பெற்ற ராதா அண்ணன் குழந்தையுள்ளம் படைத்தவர். ஆழமான அரசியலறிவுடன் இராணுவ தொழிநுட்பங்களிலும் கைதேர்ந்தவர்.

ஆங்கில மொழியில் அழகாகப் பேசுவார். சிங்கள மொழியும் சரளமாப் பேசக்கூடியவர். தனது அபார திறமையினால் மூத்த உறுப்பினர்களுக்கு இணையாக நின்றவர். தலைவர் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர். இயக்கத்தில் தோழர்களிடத்தில் உயிரையே வைத்திருந்தவர்.

தமிழ் மக்கள் படுகின்ற வேதனைகளை, சிறீலங்கா இராணுவத்தினரின் காட்டு மிராண்டித்தனங்களைக் கண்டு கண்சிவந்து நிற்பார். உயிருடன் இருக்கும் வரை எம் இனத்தின் விடுதலைக்காகப் போராடுவோம். மக்களுக்காகப் போராடுவதை நாம் மகிழ்ச்சியோடு ஏற்போம். கண்டபடி மண்ணில் நடமாடும் இவனிற்கு (சிறீலங்கா இராணுவம்) நல்ல அடி போடவேணும்.

ஐசே! என்றெல்லாம் சமயத்தில் தத்துவம் பேசுவார். வாய்ச்சொல்லிலிருந்த வீரம் ராதா அண்ணன் வாழ்க்கையிலும் இருந்தது.

எமது ஒரு தோழன் இராணுவத்தால் சுடப்பட்டுவிட்டான் என்றால் ராதா அண்ணன் பொறுக்கமாட்டார். மறுநாள் பாரிய வெடிப்பு. ஜீப்பொன்று தூள். அல்லது இராணுவ டிரக்கொன்று சிதைக்கப்பட்ட சேதி எம் காதுகளில் தேனாகப் பாயும். நிமிர்ந்து பார்த்தால் அங்கு ராதா அண்ணன் வெற்றிக்களிப்பில் நிற்பார்.

எமக்கு வீரமூட்டி, தன்னம்பிக்கையூட்டி, அறிவூட்டி வளர்த்த ராதா அண்ணன் தலைவரின் அழைப்பையேற்று மன்னாரிலிருந்து செல்கின்றாராம் என்ற சேதி. எமக்கிடையில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

"என்ன ராதா அண்ணன் மன்னாரை விட்டுப் போறீங்களாம்" என்று கேட்ட தோழர்களிடம் "இல்லை, ஐசே! அண்ணன் (தலைவர்) கூப்பிடுகிறார் நான் சீக்கிரம் திரும்பி வருவேன்" என்று கூறினார். துக்கம் கனத்த குரல் கண்கள் குளமாகின்றது. ராதா அண்ணனுக்கு ஒரு பழக்கம் யாரையாவது தண்டித்தால் அல்லது யாராவது வீரமரணமடைய நேரிட்டால் தேம்பித் தேம்பி அழுவார்.

சுற்றிவர நின்று பார்க்கிற எம்மைச் சமாளிப்பதற்காக தம்மை சுதாகரித்துக்கொள்ள, பின்னர் நாம் கிண்டல் செய்ய தந்தையாக, தாயாக, அண்ணனாக, தம்பியாக எதுவாக ஒப்பிட்டாலும் ராதா அண்ணன் பொருத்தமானவர்.

* * *

12.10.86 அன்று அடம்பனில் நடைபெற்ற மோதலில் சாதனை படைத்து சரித்திரமாகிவிட்ட விக்டர் அண்ணனின் வீரச்சாவு செய்தி கேட்டு மன்னார் மக்கள் கண்ணீர் சிந்தியவேளை மன்னாரைப் புலிகள் தேற்று வாரற்று நின்றவேளை கண்ணீர் துடைத்துக் கடமை ஏற்க ராதா அண்ணன் வருகிறார்.

வேதனையில் சோர்ந்த நெஞ்சங்களுக்கு வலுவூட்டாக ராதா அண்ணன்வந்துவிட்டார். 27.10.86ல் மீண்டும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் படையெடுப்பு ஆத்திரம் மிகுந்த யுத்தம். குறுகியநேரப் புயற்பாய்ச்சல். பின்னர் பதுங்கிக்கொண்டோம். வெட்டிவீழ்த்த வந்தவன் வெறுங்கையுடன் திரும்பிச்செல்கிறான்.

ராதா அண்ணனின் யுத்த தந்திரத்திற்கு ஒரு 'ஜே' ஸ்ரீலங்கா இராணுவத்தை உடலுள ரீதியில் பயமுறுத்தி வைத்திருந்தார். மிகவும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாரிய வெற்றிகள் ஈட்டித் தந்தார் ராதா அண்ணன்.

ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளை அழிக்க எமது மண்ணை ஆக்கிரமிக்கப் பல வழிகளைக் கையாண்டது. அதில் ஒன்று, தென்னாபிரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டதாம். கண்ணிவெடிக்கு மாட்டாதாம் இது ஸ்ரீலங்கா இராணுவத்தின் மிரட்டலும் ஒப்பாரியும்.

அன்று தைப்பொங்கல் திருவிழா எமது மக்கள் வீட்டு முற்றத்தில் பொங்கல் படைக்கின்ற நேரம் ஓர் சத்தம். தென்னாபிரிக்கா பவல் சுக்குநூறு மக்கள் வெள்ளம் படையெடுத்தது. "நல்ல அடி, ராதா என்றால் ராதாதான்" மக்கள் மனம் விட்டுப் பாராட்டுகின்றனர்.

இதே மண்ணிற்தான் 84ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04ம் திகதி 200ற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொன்றனர். அந்த நினைவுகள் மனதில் புரள்கின்றன.

மக்கள் மனதில் ஓர் துணிவு நம்பிக்கை பிறக்கிறது.

ஐயா, ராஜு, அசோக், நோயல், இவர்களை ஒவ்வொருவராக அழைத்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறார் ராதா அண்ணன். ஐசே! ராஜு பார்த்தீரா விளையாட்டை அசோக் கவனம் ஐசே! நோயல், நீர் மன்னாரின் முள்ளந்தண்டு என்றெல்லாம் ஒவ்வொருவரதும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து உரமூட்டி செயற்படுவார்.

1987ம் ஆண்டு மாசி 07ம் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் மீண்டும் பாரிய சுற்றிவளைப்பை மேற்கொண்டு படையெடுத்தது. பலத்த மோதல், நோயல் வீரச்சாவடைந்த செய்தியை ராதா அண்ணன் மனவருத்தத்துடன் வோக்கியில் அறிவிக்கிறார்.

எதிரி பெரும் பலம்கொண்டு தாக்கும்போது கெரில்லாப் படை சமயத்தில் பின்வாங்கி அவதானிப்பது கெரில்லா யுத்த நடைமுறைகளிலொன்று. அது அன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டது.

எமக்கு நிரந்தரமான, உறுதியான தளமொன்று தேவை. எம்மைப் பாதுகாக்க, பலப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வேலைகள் நடைபெற்றன.

தமிழீழ பிரதேசங்களில் சகல மாவட்டங்களிலும் இதுபோன்ற ஸ்ரீலங்காப் படையின் பாரிய யுத்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தன. அப்போது யாழ் தளபதி கிட்டண்ணாவிடமிருந்து தகவல் வந்தது.

ராதா அண்ணன் தலைமையில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படுகிறோம். அங்கும் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்கான ஆயத்தவேலை நடைபெற்றது. மறுகணம் யாழ்ப் பொலிஸ் விடுதி தாக்கப்படுகிறது.

எட்டு ஸ்ரீலங்கா சிங்களப் பொலிசார் கைதுசெய்யப்படுகின்றனர். கிட்டண்ணாவும் ராதா அண்ணாவும் சேர்ந்து நடத்திய சாதனை.

இதன் பின்னர் துரோகியொருவனது கோழைச்செயலால் தளபதி கிட்டண்ணா ஒரு காலையிழக்கின்றார். ராதா அண்ணன் யாழ் மாவட்டத் தளபதியாக தலைவரவர்களால் நியமிக்கப்படுகின்றார்.

தொடர்ந்து காங்கேசன்துறைக் காபர்விபூ இராணுவமுகாம் தாக்கப்படுகிறது. மயிலியதனை இராணுவமுகாம், குரும்பசிட்டி இராணுவமுகாம் தாக்கப்பட்டு ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு பல இராணுவம் கொன்று குவிக்கப்பட்டது. நிலைதடுமாறிய சிறீலங்கா அரசும் அதன் கூலிப்படைகளும் யாழ்மண்ணை யுத்த பூமியாக்கினர்.

20.05.87 காலை ஆகாய விமானத்தாக்கல் பீரங்கித்தாக்கல், செல் வீச்சுக்கள் சகிதம் பெரும் படையுடன் புறப்பட்ட இராணுவத்தை பல முனைகளிலும் எமது வீரர்கள் எதிர்த்துத் தாக்கினர். பலத்த இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கி முகாமினுள் முடங்கியது. அன்று தமிழ்மண் கண்ணீரில் மூழ்கியது. எங்கள் அன்பான, ராதா அண்ணன் எம் நெஞ்சங்களில் ஒளிரும் தீபமாகிவிட்டார்.

# எம் நினைவுகளில் இவன்



மா.பிரதீப்
(புலனாய்வுத்துறை)

அதிகாலை 4.00மணி எமது யாழ் நகர்வு அணி கைதடியில் எதிரியின் தாக்குதலிற்கு உள்ளாகிவிட்டது. நான்கு போராளிகள் வீரச்சாவு என்பதும் அறிய வருகிறது. ஒருபோராளி தப்பிவிட்டார். ஆனாலும் யார் தப்பிச்சென்றவர் விபரம் தெரியவில்லை. ஒரு வாரமாய் வீரச்சாவடைந்தவர்களுள் சிவனேசன் இருக்கக்கூடாதென எல்லோர் மனங்களும் ஏங்குகின்றன. ஆனாலும் தப்பிச்சென்றவன் சிவனேசன்தான். என எம்மனம் சொல்கிறது.

அவன் இதுமாதிரிப் பலமுறை எதிரிக்குத் தண்ணிகாட்டியவன். ஒன்றா, இரண்டா எண்ணிக்கையற்ற தடவைகள் எத்தனை தடவைகள் என்பது அவனுக்கே மறந்த விடயம். எத்தனை தடவைகள் அவன் தனது புத்தி சாதுரியத்தாலும், அவனுக்கே உரிய துடிதுடிப்பான செயலாலும் வென்றிருக்கின்றான். ஆகவே தப்பிச்சென்றது அவன்தான்- என என் மனதுக்குள் ஒரு எதிர்பார்ப்பு.

மேஜர் குலதீபனுடன் வீதியால் வந்துகொண்டிருக்கும் போது திடீரென வழிமறித்த இராணுவத்தைத் தாக்கிவிட்டுத் தப்பிவிடுகிறான். அதில் மேஜர் குலதீபன் வீரச்சாவடைகிறார். கந்தரோடைப்பகுதியில் எமது சிறிய அணியொன்று தங்கியிருந்த வீடு இராணுவ முற்றுகைக்குள்ளானபோது அதிலிருந்து முற்றுகையையுடைத்து முதலில் வெளியேறித் தப்பிச்சென்றவன் இவனே!

மிகச் சமீபகாலப் பகுதியில் நவாலியில் கிளைமோருடன் வந்துகொண்டிருந்தபோது வழிமறித்த இராணுவத்தினருக்கு அடித்துவிட்டுத் தப்பிச் சென்றவர்களுள் இவனும் முதன்மையானவன். ஆங்கிலத் திரைப்படங்களிலே பார்த்துப் பரவசப்படும் சாகச நிகழ்வுகளைத் தனது போராட்ட காலத்தில் தனிப்பட்ட ரீதியில் எதிர்கொண்டவன். இதனாலேயே நண்பர்களால் 'ஜக்கோல்' என ஆங்கிலத் திரைப்படமொன்றின் சாகச நாயகனின் பெயர்கொண்டு அழைக்கப்பட்டவன்.

இப்படியானவன் தப்பியிருப்பானென்ற என் எண்ணத்தில் தவறேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் நாட்கள் வாரமாக நம்பிக்கை குறையத்தொடங்கியது. சிவனேசன் இருந்தால் இவ்வளவிற்கு (தொடர்பெடுத்து) கதைத்திருப்பானே! என்ன நெருக்கடியென்றாலும் தொடர்பு கொண்டிருப்பானே! கேள்விகள் பலவானாலும் அவற்றின் விடைகளை எனக்குச் சாதகமாகவே சொல்லிக்கொண்டேன். ஆனால் அறிந்துகொண்டிருந்த விபரங்களோ சிவனேசன் வீரச்சாவென்பதை உறுதி செய்வனவாகவே இருந்தன.

எல்லா எதிர்பார்ப்புக்களையும் சிதறடித்துச் சிவனேசனின் வீரச்சாவுச் செய்தி வந்தது. சிவனேசனின் வீரச்சாவு யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இலகுவில் ஈடுசெய்யமுடியாத இழப்பு. இருந்தும் அது நேர்ந்துவிட்டது. இவனை நான் ஆரம்பப் பயிற்சிப் பாசறையிலே முதலில் சந்தித்தேன். எந்நேரமும் துறுதுறுத்தபடி இருப்பான். 'குழப்படிக்காரன்' என்றே பயிற்சி முகாமில் முத்திரை குத்தப்பட்டவன். 1996இன் பிற்பகுதியில் பயிற்சி முடிந்ததுமே சூரியகதிர் 01 நடவடிக்கைக்கெதிரான சண்டைக்குச் சென்று காலில் காயப்பட்டு மருத்துவ முகாமிலிருந்து பின் சிறிதுகாலம் நிர்வாக வேலைகள் செய்தான். அங்கும் இவனது துறுதுறுப்பான செயல்கள் ஆனாலும் இவனுக்குக் கொடுக்கப்பட்ட கடமைகள் சரிவர நடக்கும்.

இவனது துடியாட்டமான துறுதுறுத்த தன்மையே 1996ல் யாழ் சென்ற அணியின் உதவியாளனாய் இவனை அழைத்துச்செல்லத் தூண்டியதென நினைக்கிறேன். அவனது அத்துடுக்குத்தனமும் துடியாட்டமும் அவன் வீரச்சாவடையும்வரை அவனுடனேயே இருந்தன. ஆயினும் பிற்காலத்தில் அனுபவம் வாய்ந்த ஓர் ஆர்வமிக்க புலனாய்வாளனாய் வர இதுதான் அவனுக்கு உதவியதோ என எண்ணுகிறேன்.

1996லிருந்து வீரச்சாவடையும்வரை யாழ் மண்மீட்பிற்கான தடைகளை அகற்றுவதில் அகற்றுவதில் தனது பணிகளாக ஏற்று எதிர்பார்ப்புகளிற்கு மேலாகச் செய்து தந்தவன். யாழிலுள்ள எமது போராளிகள் நெருக்கடிக்குள்ளாகும்போது அவர்களை அழைத்துவர வேண்டுமென்றால் எல்லோருமழைப்பது சிவனேசனைத்தான். ஏனெனில் அவன் தனியேயும் சென்றுவருவான். சென்றும் வந்துள்ளான்.



யாழ்ப்பாணத்தில் அவனைத் தெரியாதவர்களில்லை. அவனுக்கும்தான். எதிரிக்கும்தான். எதிரி வெள்ளையைத் தெரியுமா? என இவனிடம் விசாரித்த சம்பவங்களும் உண்டு.

இவனுக்காகவே சுற்றிவளைப்பும் நடக்கும். சுற்றிவளைப்புக்குள்ளிருந்து தந்திரமான முறையில் இவன் வெளிவந்த சம்பவங்கள் நிறைய உண்டு. தனது பலமே மக்களோடு தான் பழகும், நேசிக்கும் தன்மைதானென்பான். ஆம் அந்தளவு இவன் மக்களை நேசித்தான். சிவனேசன் யாழ்ப்பாணத்திலென்பது எப்போதுமே இரகசியமான விடயமாகப் பத்துநாட்கள் வரையிருக்கும். பிறகு அங்கு கண்டேன், இங்கு கண்டேன் என்ற செய்திகள் மக்களால் இங்கு கிடைக்கும்.

தன் கைப்படவே வரைந்து தேசியத் தலைவரின் பிறந்த நாளிற்கு வாழ்த்து அனுப்புவான். வாழ்த்துக் கிடைத்ததென வரும் நன்றி தெரிவித்த கடிதத்தைக் காட்டிப் பெருமிதம் கொள்வான். இவனுக்குத் தேசியத்தலைவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அமையவில்லை. எமக்குச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போதெல்லாம் இவன் யாழ்ப்பாணத்தில் நிற்கும் சூழல். இப்படியே பல சந்தர்ப்பங்கள் தவறிப்போயின. ஆயினும் தனது தலைமையில் அசைக்க ஆடியாத விசுவாசமும் ஆழமான பற்றுமுடையவன்.

"நான் இம்முறை யாழில் செய்யப்போகும் தடையகற்றல் மூலமே தேசியத் தலைவரிடம் இனங்காட்ட விரும்புகிறேன், நான் சாதிக்கும் செயலின் மூலம் அவரின் மனதில் நிலையான இடத்தைப்பெறுவேன். என்று கூறிவிட்டே சென்றவன். அவனது கனவுகள் நிறைவேறாது போனாலும் அக்கனவுகளை நனவுகளாக்க இலட்சியத் துடிப்புடன் மேலும் யாழ் செல்வர். அவன் கொண்ட இலட்சியம் நிறைவேறும்வரை யாழ்மண் மீட்கப்படும்வரை தமிழீழம் மலரும்வரை எம்பணி ஓயாது. சிவனேசன்- அவன் மரணிக்கவில்லை. அன்பு மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். யாழ் வானில் ஓர் நட்சத்திரமாக இருந்து எமக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கிறான். யாழ் நோக்கிய எமது பயணத்திற்கு இவனின் நினைவுகளே ஓர் உந்துசக்தி!



# ஒரு போராளிக் கவிஞனின் நினைவுக் குறிப்புகள்.

அணையாத தீபங்கள்

கருணாகரன்

ஒரு கவிஞனின் படைப்புக்களைப் பிரசுரித்து வரும்போது திடீரென அவனது அஞ்சலிக்குறிப்பை எழுத நேர்வது அதிர்ச்சி தரும் துக்கத்துக்குரியது. அடுத்த 'வெளிச்சம்' இதழுக்கெனத் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, தேர்வாகியிருந்த கவிதையொன்றின் கவிஞன் வீரச்சாவடைந்துவிட்டான். என்ற செய்தி வந்தது. 'வெள்ளை' ஒரு போராளி, ஒரு கவிஞன், சமூகவியலிலிருந்து கலை, இலக்கியம் வரை அக்கறையை ஆழமாக்கிக் கற்றுக்கொள்ள விரும்பிய ஆர்வமிக்க இளைஞன். மக்களிடத்தில் ஆழமான அன்பு வைத்தவன். விடுதலையின் மீதான அளவற்ற விருப்பும் சுதந்திர தாகமும் கொண்டவன். வெள்ளையினுள் குடிகொண்டிருந்த கவித்துவமே வெள்ளையை ஆழுமைமிக்க போராளியாகத் தொடர்ந்தும் செயலூக்கத்திற்கு விரித்தது. வெள்ளையைப்பற்றி யோசிக்கும்போது எந்த விதமான சம்பிரதாயமுமற்ற வார்த்தைகளுமின்றி இப்படித்தான் எழுதமுடிகிறது.

ஒரு போராளியாக இருந்தபோது ஒரு கவிஞனாகவே வெள்ளை வெளிச்சத்துடன் அறிமுகமாகினான். அது அவனை கலை, இலக்கியத்திலும் படைப்பாளிகளிடத்தும் அறிமுகப்படுத்தியது. தமிழீழத்தின் கலை பண்பாட்டு இலக்கிய மேன்மை பற்றிய அவனது ஆவல் மேலும் வெளிச்சத்தோடும் படைப்பாளிகளோடும் அவனை உறவாக்கியது. விடுதலைப்போராட்டத்தின் தாற்பரியத்தைப் புரிந்துகொண்டு கலையிலக்கியப் படைப்பாளிகள் இந்தக்காலத்தில் புதிய படைப்புக்களை உருவாக்கிப் போராட்டத்தை மேலும் புதுவேகத்திற்குக் கொண்டு செல்லவேண்டுமென்று தன்னோடு நெருங்கியுறவாடும் படைப்பாளிகளுக்குச் சொல்லுவான். இந்த மண்ணின் புதிய படைப்புக்களைச் செழுமையுடன் வெளிக்கொண்டு வரவேண்டுமென்பதில் ஒவ் வொரு படைப்பாளியின் பங்களிப்புப்பற்றியும் அவர்களுக்குள்ள பொறுப்புணர்வைச் சுட்டிக்காட்டுவான். மிகவும் இயல்பாக நட்பின் நெருக்கத்துடன் தன்னுடைய போராட்டக் கருத்தை முன்வைப்பதில் எப்போதும் அவன் வல்லவனாகவேயிருந்தான். இலக்கியத்தில் மட்டுமன்றி கலையின் எல்லாக்கூறுகளிலும் வெள்ளையின் ஈடுபாடு வேரோடியிருந்தது. இசைமீது அவனது ரசனை தனித்துவமானது. அதனீர்ப்பில் அவன் இசைபாடல்கூட எழுதியிருக்கிறான். இயக்கத்தின் பணிகளை நிறைவாகச் செய்யவேண்டுமென்ற அக்கறையோடு கலையிலக்கியத்தைப் போராட்டத்தின் எழுச்சியாகப் பயன்படுத்துவதிலும் கலைபண்பாட்டுக் கழகத்துடன் அவன் சில வேலைகளைச் செய்வதிலும் முன்னின்றுழைத்தான்.

யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்தபோது வெள்ளை நெருப்பாக நின்றான். அவ்வளவு ஆக்ரோசம் அவனுக்கிருந்தது. தனது ஊர், தான் தவழ்ந்து, விளையாடி, எழுந்து நடந்து உறவாடி வாழ்ந்த மண் அன்னியனிடம் பறிபோகக்கூடாது என்ற தவிப்பும் அன்னியர்களை அங்கே விட்டுவைக்கக்கூடாதென்ற உறுதியும் அவனுள் தீவிரமாயிருந்தன. தங்கள் ஊரைவிட்டு வந்து இங்கே வாழத்தவிக்கும் மக்களைப் பார்த்து அவனடைந்த துக்கம் கொஞ்சமல்ல துயரப்படுவோரை ஆறுதற்படுத்துவான். போராட்டத்தின் தன்மையையும் அவசியத்தையும் வழிமுறையையும் தெளிவுபடுத்தி அவர்களைப் புதிய வாழ்வில் பதியம் போட்டுவிட்டு வெள்ளை யாழ்ப்பாணத்துள் நுழைந்தான். சந்தி, தெரு, முற்றம், கோவில், பள்ளி, வீடு, கடை, நகரம் என்று எங்கும் பரவிநிற்கும் சிங்கள இராணுவத்தின் கனவுகளைச் சிதைக்கத் தொடங்கினான். ஒரு அதிர்ச்சி மையமாக வெள்ளை அங்கே பரிணமித்தான். உள்ளொடுங்கி, உணர்வுகளைச் சுருக்கி வாழவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கும் யாழ்ப்பாண மக்களின் துயரத்தை வன்னியிலிருக்கும் மக்களிடம் சொல்லிவிட வேண்டுமென்று அவனது கவிதைமொழி அவாவுற்றது. "கொஞ்சம் பொறுத்திருங்கள்" எங்கள்



தலைவரின் திட்டப்படி நமக்கு விடிவுகிடைக்கும். எல்லோரும் ஊருக்குத் திரும்பலாம் அதுவரை எதையும் தாங்கிக்கொள்ளுங்கள். என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டினான்.

நெகிழ்ச்சிக்குரிய அன்பும் நேசிப்புந்தான் வெள்ளையின் அடையாளம் எல்லோரையும் தன் ஞாபகங்களில் ஏந்திச்செல்லும் பண்புள்ளவன். முற்றுகையிட்ட நாட்களில் அவன் யாழ்ப்பாணத்தில் இயக்கப் பணிகளில் ஈடுபட்டிருந்த பொழுது எவரையும் ஞாபகம் கொள்ளத்தவறவில்லை. இந்தப் பிரதான அம்சமே இன்றைய யாழ்ப்பாணத்தின் நெருக்கடிகளுக்குள்ளும் வெள்ளையால் பணியாற்ற முடியுமாயிருந்தது. யாழ்ப்பாணத்துள்ளேயிருந்தவர்களுடனோ வெளியே இருந்தவர்களுடனோ அவன் இயக்கத்தின் செயற்பாட்டிற்காகவும் போராட்டத்தின் வெற்றிக்காகவும் எப்போதும் தொடர்பு கொண்டு அவர்களையும் தன்பணியுடன் இணைத்துப் பங்காற்ற வைத்தான். ஈழத்தின் கலை, இலக்கியம் பற்றிப் பேசுமிவன் வெளிச்சத்தின் வளர்ச்சிக்காக அடிக்கடி பல விடயம் குறித்து விவாதிப்பான். எந்தச் சூழ்நிலையிலும் தன்னால் முடிந்த பங்களிப்பை வெளிச்சத்திற்குச் செய்யத் தவறியதில்லை. அத்தோடு கலைபண்பாட்டுக் கழகத்தின் பணிகளில் அவன் அக்கறையுடன் பங்கேற்றுமிருக்கிறான்.

தன்னுடைய விடுதலைப்பணியை நிறைவேற்றிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப்படையால் வெள்ளை வீரச்சாவடைய நேரிட்டது. எல்லோருடைய ஞாபகங்களையும் ஏந்திச்சென்ற வெள்ளை இன்று நம் எல்லோரிலும் ஞாபகமாகிவிட்டான்.

'ஒரு போராளியின் இறுதிக்கணக் கனவு எப்போதும் அவனது இலட்சியம் பற்றியதாகவேயிருக்கும். அதுவே நமக்கும்'

# விழித்துழைத்தாய்

வெள்ளையுள்ளம் கொண்டவனே
வெள்ளை நீ தூங்கப்பா
காளையுனை ஈன்றெடுத்த
அன்னை தந்த வீரமதோ
தோளையுயர்த்தி நின்றாய்
தூங்காது விழித்துழைத்தாய்
தூங்கிவிட்டாய் நிரந்தரமாய்த்
தமிழீழம் மீட்பதற்காய்

நாளை விடிந்துவிடும்
இவ்வுலகின் நமது மக்கள்
வாழையடி வாழையாக
சுதந்திரமாய் வாழ்ந்திருக்க
தலைவன் வழிசமைப்பான்
தமிழோங்கி மணம்பரப்பும்
நாளை வரும் சமுதாயம்
நெஞ்சுருகி உமைவாழ்த்தும்

மாவீரன் லெப். கேணல் பாவரசன்



அணையாத தீபங்கள்

# புதியதோர் புறநானூறு



**வாசன்!**

போராட்ட விருட்சத்தில்
மலர்ந்த புஸ்பங்களில் ஒன்று

கண்ணிலே கனவைத்தாங்கி
நெஞ்சிலே உறுதியேற்று
கையிலே கருவியேந்தி
இலட்சிய வேள்விக்காக
தியாகத் தீயிலே ஆகுதியானவன்.

ஒடுக்கு முறைகளின் வடிவங்கள்
வடுக்களாய் விழுந்த வேளையில்
ஆர்ப்பரித்து எழுந்த அலைகள்
கரையில் மோதின
தரையில் கிடந்த ஆரியப்பெருமாவும்
தரைமட்டமான யாழ் பொலிஸ் நிலையமும்
இவனது விடுதலைப் பாதையில் அழியாத்
தடங்கள்.

அன்று இவன் சிந்திய இரத்தம்
இன்றும் எங்கள் நாடி நரம்புகளில்
சூடாய் பாய்கிறது.
இவனது கனவை நனவாக்க
இவன் ஏந்திய கருவி எங்கள் கைகளில்
இவனது கோல்சர் எங்கள் மார்பில்
இவனது சைனைட் எங்கள் கழுத்தில்
அதே தாகத்துடன்
எங்கள் பயணம் தொடர்கிறது.

நன்றி: தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆவணக்காப்பகம்

வாசனின் நண்பர்கள். [21.05.1987]





மாவீரர் லெப். கனிதா/ புவிதா,
[செல்வி நிசாந்தி துரைரத்தினம்,
சுன்னாகம் மேற்கு
சுன்னாகம்
23-02-1982 - 19-02-2001]

நினைவாய் அவரது அன்புத் தம்பி கிரிசன் மூட்டிய பாவிது

# வானத்திலிருந்து என்னை வாழ்த்துவாயா!

என், அருமைச் சின்னக்காவே!- உங்களை
குட்டி, என்றே செல்லமாக அழைக்கிறேன்- என்
குரல் கேட்டு தலையில் குட்டுவதற்குக் கூட
நீ வாராயோ என ஏங்கித் தவிக்கிறேன்
நீ எங்கு சென்றுவிட்டாய்.

என் ஆசை அக்காவே!- நான்
புலமைப் பரிசில் சித்தியானதை அறியாயா - என்
திறமைகளை உனக்கு சொல்லி மகிழ
பெருமையுடன் எதிர்பார்த்திருந்தேனே - குட்டி
ஏன் நீ எம்மிடம் வரவில்லை
மருத்துவம் கற்று பணிசெய்தாயாமே அக்கா - உன்

அற்புத ஆற்றல் வெளிப்படுமுன்பே - நீ
சொற்ப ஆயுளில் அமைதியானது ஏன்
விடுதலைக்காய் வீறுகொண்டபோதும் - நீ
விடிவு கிடைக்குமுன்பே காவியமாகினாயோ

என்பிரியமான சின்னக்காவே - நீ
ஆயிரமாயிரம் மாவீரர்களுடன் சேர்ந்துவிட்டாயம் -
இனி என்னருகில் வர முடியாவிடினும்
வானத்திலிருந்து என்னை வாழ்த்துவாயா அக்கா
எண்ணத்தில் என்ன எண்ணினாயோ
உன்பணி தொடரும் அக்கா
தமிழீழம் மலரும்.





கப்டன் குகன்

# மண்ணில் மலர்ந்த மாண்புமிகு தீரன்!

அணையாத தீபங்கள்



# மேஜர் முரளி





"இலண்டனில் இரு இளைஞர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் எமது வீட்டிற்கு கிரமமாக வந்தார்கள். பின்னர் ஈழத்திற்குத் திரும்பியவர்கள் விடுதலைப் புலிகள் வரலாற்றில் மிக முக்கியமான புகழ்பெற்ற பாத்திரங்களாக மாறினார்கள். ஒருவர் ரத்னா. பின்னர் முரளி அழைக்கப்பட்டார். வளமான வாழ்வு தேடி வெளிநாடு வந்த இவர், பாதுகாப்பான வெளிநாட்டுச் சூழலில் பணம் சம்பாதித்து ஊரிலே உள்ள குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்க எண்ணியிருந்தார். ஆனால் தாயகம் திரும்ப வேண்டும் என்பது அவரது தாகமாய் இருந்தது." என 'சுதந்திர வேட்கை' எனும் நூலில் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களால் குறிப்பிடப்படும் மேஜர் முரளி 1960 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் நாள் தமிழீழ மண்ணில் பிறந்தார். கொழும்பில் உயர்கல்வி கற்று 1979ஆம் ஆண்டு ஜேர்மனிக்குச் சென்றார். அதன் பின் அயர்லாந்திற்குச் சென்று பிரித்தானியாவிற்குச் சென்றார். அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுடனான தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டார்.

அங்கிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையில் பணியாற்றிய முரளி 1983இல் இந்தியாவிற்கு வந்து அங்கு அடிப்படைப் பயிற்சியினைப் பெற்றார்.

தாயகத்திற்கு வந்து அரியாலை தொடக்கம் தொண்டமானாறு வரையான பகுதிகளுக்கான பொறுப்பாளராக கடமையாற்றினார். அதன் பின்னராக கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவரமைப்பை தாயகமெங்கனும் கட்டியெழுப்பினார்.

யாழ் பொலிஸ் நிலையத் தகர்ப்புத் தொட்டு சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான எண்ணிறைந்த தாக்குதல்களில் கலந்து கொண்ட மேஜர் முரளி யாழ் பொலிஸ் விடுதி படைமுகாம் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்தார். 23.12.1987 அன்று இந்திய இராணுவத்துடன் கோப்பாயில் இடம்பெற்ற மோதலின்போது வீரச்சாவடைந்தார்.

அவர் தனிப்பட்ட மனித அபிலாசைகளுக்கு சுகங்களுக்கு இடங்கொடுக்கவில்லை. துள்ளும் இளமை உணர்வுகளையெல்லாம் தூர எறிந்தார். தாயகத்தின் விடியலுக்காய் தலைவன் வழியில் நின்று போராடினார். தூரதேசம் சென்றாலும் தாய் மண்ணை மறவாது வாழ்ந்தார். தாயகம் திரும்பி வந்து களமாடினார். தாயகத்தின் விடுதலைக்காய் மறைந்தவர் வழியில் என்றும் பயணிப்போம்.

மேஜர் முரளி முதலானோர் விதையாகிய பூமியில் இன்று தமிழீழத்தின் முதலாவது மாவீரர் துயிலுமில்லமான கோப்பாய் மாவீரர் துயிலுமில்லமாக நிமிர்ந்து நிற்கின்றது.





அணையாத தீபங்கள்

# மானிடம் வென்ற மருத்துவன்

## தமிழீழ மருத்துவக் கல்லூரிப் போராளிகள்

யாழ்வேள் வீரச்சாவெய்தி விட்டான் என்ற தகவல் இவனை அறிந்தவர்களுக்குக் கிடைத்த பொழுது முதலில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாமற்தான் இருந்தது.

சதா சிரித்த முகமும் சிரிக்கும்போது குழிவிழுகின்ற கன்னங்களுமாக யாழி என்று தன் இனிய தோழர்களால் அழைக்கப்படும் எங்கள் யாழ்வேள் தான் எடுத்த பயணத்தை முடிக்கும் முன்னரே எம்மைப்பிரிந்து சென்றது உண்மைதானா....

அன்றைய தினம் காலைச்சாப்பாட்டை கூடியிருந்து உண்டு மகிழ்ந்து குளித்துவிட்டு வரும்போது வேட்டைக்குச்சென்று வருகின்றேன் சமையலுக்குரிய ஆயத்தங்களுடன் நம்பிக்கையோடு காத்திருங்கள் என்றே கூறிச்சென்றிருந்தான். ஆனால் அன்று மாலை யாழ்வேளின் வித்துடல் மீட்கப்பட்டு அஞ்சலிக்கு எடுத்துவரப்பட்டபோது எல்லோர் இதயத்தையும் ஆழ ஊடுருவி அதிரச்செய்த அச்செய்தியை மௌனமாக ஏற்றுக்கொள்ள நேரிட்டது.

பேழையில் கைகளை உடலோடு சேர்த்தபடி கண்களை மூடிமெல்லத் துயில்வது போன்ற பாவனையில் படுத்திருந்தவனைப் பார்த்த கணத்தில் அனைவர் விழிகளிலும் நீர் கசிந்தது. இவனது பிரிவை தெருவினில் இவன் செல்லும்போது வீடுகளில் நின்று குதூகலத்துடன் கைகாட்டும் மழலைகளும் குடும்ப உறவுகளும் பாசத்துடன் பழகிய மக்களும் எப்படி ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள். என்ன வேலை என்றாலும் எங்கே யாழ்வேள் என்று தேடும் மருத்துவக் கல்லூரி நண்பர்களையும் வைத்தியர்களையும் பொறுப்பாளர்களையும் தேற்றுவார்உளரோ? பத்து மாதம் கருவில் சுமந்து இருபத்து மூன்று அகவை வரைக்கும் தன் அரவணைப்பிலே வளர்த்த தாய் மனதை தேற்றுவார் உளரோ? யாழ்வேள் நீர் நில வழங்கொழிக்கும் வட்டக்கச்சி மண்ணில் உதித்த தேச விடுதலை வீரர்களில் ஒருவன்.

இவன் தத்தி நடைபயின்ற வயல் வரம்புகள் நண்பர்களோடு சென்று மகிழ்ந்த கோவில்கள் காலையும் மாலையும் அணிவகுத்துச்செல்லும் கால்நடைகள் யாவுமே இன்று சோபை இழந்து காட்சி தருகின்ற உணர்வு.... இவன் மாணவனாயிருந்த பருவத்திலேயே இந்த தேசம் பற்றிய பரந்த சிந்தனைகள் கொண்டிருந்தான். அறியாமையாலும் இல்லாமையாலும் கல்லாமையாலும் உழலும் மக்களை முன்னேற்றி, விடுதலையே தனது எதிர்கால கனவாக வரித்துக் கொண்டவன். தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டத்தை மனதார ஏற்றுக்கொண்டவன். இவன் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் பெற்றோருக்குத் தெரியாமல் சண்டைக்கான பின்களத் தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்குச் சென்றுள்ளான் சில வேளைகளில் வீட்டிற்கு வராமல் வாரக்கணக்கில் முகாமில் தங்கிநின்று விருப்புடன் செய்து கொடுப்பான். அவற்றுடன் இவன் திருப்தி அடைந்துவிடுவதில்லை முழுநேர ஆயுதம் தாங்கிய போராளியாக மாறும் நாளை எதிர்பார்த்திருந்தான்.

1995ம் ஆண்டு யாழ்ப்பாண மண்ணில் இயங்கிய தமிழீழ மருத்துவக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட உதவி மருத்துவர் கற்கை நெறியில் இணைந்தான். சில மாதங்கள் கடந்த நிலையில் சிங்கள இராணுவத்தினரின் யாழ் மண் கைப்பற்றும் தொடர் இராணுவ நடவடிக்கைகளினால் அப்பயிற்சிநெறி இடையில் நின்று போனது. தமிழர் வாழ்வு தொடர்ச்சியான இடப்பெயர்வுகளுடனும் நோய் பிணிகளால் அல்லலுறுவதைக் கண்டு இனியும் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்று எமது விடுதலைப்படையில் இணைந்து கொண்டான். இவனுக்கே உரித்தான கலகலப்பான சுபாவத்தினால் பயிற்சி முகாமில் நிலவிய இறுக்கமான சூழ்நிலைகளை கலகலப்பாக்கினான். சமையற்கலையில் இருந்த ஆர்வமும் எவ் உணவாயினும் சுவைபட சமைத்து வழங்கும் பண்பினாலும் போராளிகளிடத்தில் தனி மதிப்பைப் பெற்றிருந்தான். பயிற்சி முடிவடைந்ததும் தமிழீழ மருத்துவக் கல்லூரியில் மருத்துவர் கற்கை நெறியில் கல்வியைத் தொடர்கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

பாடக்குறிப்புகளை வெறுமனே புத்தகங்களில் வாசித்து அறிந்து கொள்வதுடன் இவன் திருப்தி அடைந்து விடுவதில்லை. நண்பர்களுடன் சாதாரண கருத்துக்களைக் கூட தர்க்கரீதியாக விவாதித்து தன் கருத்துக்களை முன்வைப்பான். செயல்முறை வகுப்புகளில் அடங்காத ஆர்வத்துடன் கலந்து கொள்வான். விளையாட்டுத்துறையில் சாதனை படைக்க வேண்டுமென்ற ஆர்வம் இவனிடம் நிறையவே இருந்தது. அதற்காக தனியொரு விளையாட்டில் மட்டும் ஈடுபாடு கொண்டவனாக இருந்ததில்லை மாலை வேளைகளில் நண்பர்கள் சோர்ந்து காணப்பட்டாலும் அரைக்காற்சட்டை காலணிகளை அணிந்து விளையாட்டு வீரனுக்குரிய கோலஉடையில் வந்து மற்றவர்களையும் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச்சென்று விடுவான். ஓய்வு நேரங்களில் விளையாட்டுச் செய்திகளை வானொலியில் கேட்பதில் ஆர்வம் மிகுந்தவன்

வன்னி மண்ணில் மருத்துவக்கல்லூரி இயங்கத் தொடங்கியபோது கல்லூரி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இடம்பெற்ற நிகழ்வை ஒழுங்கு படுத்தியதில் யாழ்வேனின் பங்கு அளப்பரியது. கலை நிகழ்வுகளில் தான் பங்கு பெறுவதைக்காட்டிலும் மற்றவர்களை இடம்பெறச்செய்து நிகழ்வுகளின் குறை நிறைகளை சுட்டிக்காட்டும் மிகுந்த நெறியாளன்.

இவனை சுற்றிவரும் நோயாளிகளும் பொதுமக்களும் டொக்டர், டொக்டர் என விழித்தலும் இவன் அவர்களை அணுகும்போது பல படிகள் கீழிறங்கிச்சென்று நண்பனாக சகோதரனாகவே அவர்களுடன் உறவாடுவான். தொடர்ச்சியான இடப்பெயர்வின் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் சுகாதார சீர்கேடுகள் மலிந்து கொலரா போன்ற உயிர் கொல்லி நோய்கள் கோரத்தாண்டவமாடிய வேளைகளிலெல்லாம் மேற்கொள்ளப்பட்ட விளிப்புணர்வுப் போராட்டத்திலும் நோயொழிப்பு நடவடிக்கையிலும் யாழ்வேள் முன்னின்று செயற்பட்டான். நோய் முற்றி உடல் மெலிந்து நடைதளர்ந்து படுக்கையில் வயிற்றோட்டமும் வாந்தியுமாக வரும் முதியவர்களைக் கண்டு அருவருப்படையாது குளிசையும் நீரும் அருகிற்கொண்டு சென்று அவர்கள் அதை உட்கொண்ட பின்னரே அப்பால் நகர்வான்.

யாழ்வேள் போராளியாகப் பணியாற்றிய காலத்தில் கலந்துகொண்ட சண்டைகள் பல. ஓயாத அலைகள் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைக்கெதிரான தாக்குதலில் மருத்துவப் போராளியாகவே யாழ்வேள் செயற்பட்டான்.

ஓயாத அலை-1 நடவடிக்கையே இவனது முதலாவது கள மருத்துவப் பணியாக இருந்தது. இதற்கு அடுத்ததாக ஆனையிறவு பரந்தன் மீதான வலிந்த தாக்குதலில் ஆனையிறவுத் தளத்தினுள் ஊடுருவிச் செல்லும் அணியின் மருத்துவப் பணியாளனாகச் சென்றான். தாக்குதலின் முதல் நாளே தளத்தினுள் ஊடுருவித் தாக்குதல் முடித்து எதிரியின் எதிர்ப்புகளை முறியடித்து வெளியேறி அணியினுடைய களமருத்துவப்பணி இவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதனை இவன் திறம்பட செய்து முடித்திருந்தான்.

இவனது களப்பணிகளில் முக்கிய பங்கு ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கை பணிகளில் நடந்தேறியது. இச்சமர் ஆரம்பமாவதற்கு முன்னரே சமருக்குரிய இடங்களில் எவ்வாறு களமருத்துவப் பணியை செய்யும் நிலைகளை அமைக்க வேண்டும் என களமருத்துவப் பொறுப்பாளர்கள் ஆயத்தப்பணிகளை மேற்கொண்ட வேளையில் இவனும் அவர்களில் ஒருவனாக ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டான். எமது நிலைகளை அமைக்கும் இடங்களை நடந்து சென்று பார்த்து வரும் பணியாளன் இவன் வவுனியா மாவட்டத்தில் இவனது பாதம் படாத இடங்களே மிகக் குறைவு என்றே கூறலாம். எதிரி முன்னேறி வரும்போது அடிக்கும் எறிகணை மழையில் நின்றுகொண்டு இறம்பைக்குளத்தில் உள்ள எமது நிலையில் இவன் ஆற்றிய மருத்துவப்பணியால் களமுனைத் தளபதிகளின் மனங்களில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தவன்.



**மேஜர் சுகுணன்**
இராசரத்தினம் செந்தில்ராஜா
[29.11.1979 - 23.01.2000]



# நெஞ்சத்தில் நீளுகின்ற உன் நினைவில்...

சோகத்துள் இவ்வளவு துயரச்சுமை இருக்குமென்று அந்தச்சேதி வந்த பின்புதான் எம்மால் சரியாக உணர முடிந்தது.

"சுகுணன் வீரச்சாவாம்"
இதயத்தை இரும்புச்சக்கரம் சுழன்று பிழிவதைப் போன்ற வேதனையைத் தந்தது எல்லோருடைய வாய்களிலும் மௌனப்பூட்டுத் தொங்கியது. மனதுள் பெரும் பூகம்பத்தைத் தோற்றுவித்தது.

செந்தில்ராஜா என்ற இயற்பெயருடன் உடுவில் மண்ணில் அந்தச் சிறுவனின் கால்த்தடங்கள் பதிந்த நாட்கள் அற்புதமானவை. இராசரத்தினம் சிவசோதி தம்பதிகளின் தவப்புதல்வனாக 29.11.1979ல் செந்தில்ராஜா இம்மண்ணில் வந்துதித்தான்.
சிறுவயதிலேயே அறிவும், ஆளுமையும் அழகான துடியாட்டமும் நிறைந்த இவன், வீட்டில் மட்டுமல்ல அந்த ஊரிலே ஒருசெல்லப்பிள்ளைதான். தன் ஆரம்பக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும் பின் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் தொடங்கியவன் படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்த வீரன். நல்ல மாணாக்கனாய் சிறந்தவோர் துடுப்பாட்டக்காரனாய் இவனது திறனாய்வுப் பட்டியலானது அகலமானது, ஆழமானது அழகானது.

பகைவனால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களாலும் பொதுமக்கள் மீதான நாசகார வெறியாட்டத்தாலும் இவன் அதிர்ந்து போனான். அக்காட்சிகள் அவனது மனச்சுவரில் அழியாத ஓவியமாய் பதிந்தது. அடுக்கடுக்காய் அரங்கேறிய ஆக்கிரமிப்பாளனின் அட்டூழியங்கள் இவனைக் கிளர்ந்தெழச் செய்து போராட்டத்தின்பால் ஈர்த்தெடுத்தது.

ஆம்! 18.09.1995 அன்று எம் தன்மானமிக்க தலைவன் சேனையில் தானுமோர் புலியானான்.

வேள்வித்தீயில் வேரூன்றி விழுதெறிவதற்காய் செந்தில்ராஜா தன்னைச் சுகுணனாக மாற்றிக்கொண்டான்.

சுகுணன் எல்லோராலும் விரும்பப்பட்டான். எதையுமே பெரிதாக எடுத்துக்கொள்ளாத தன்மை, மென்மையான சுபாவமும் சீரான நடத்தையும் கொண்ட இவனையெல்லாம் எவ்வாறு மறப்பது.

சில மாதங்களின் பின் அடிப்படைப் பயிற்சிகள் முடிவடைந்து அணிகள் பிரிக்கப்பட்டது. இந்நேரத்தில்த்தான் யாழூரை நெருப்புப் பொறிகளால் வளையமிட்டுச் சூரியகதிரென்று பாரிய படையெடுப்பை எதிரி நிகழ்த்தினான். குறைந்த படை- ஆயுதபலத்துடன் பொங்கிவரும் படையுடன் மோதவேண்டிய முக்கிய கட்டம்.

இதுவே சுகுணனின் முதற்களம்.
அவன் சற்றும் தளரவில்லை. 'சாயாது புலிவீரம் தாளாது தன்மானம்' என வீரமுடன் போரிட்டான். சில மாதங்களில் சண்டை ஓய சுகுணனின் படையணி முகாம் வந்தது.

அப்போதுதான் இராணுவச் சிறப்பு வேவுப்பிரிவிற்காய் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு ஆரம்பமானது. குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தோர் அப்பிரிவிற்காய்த் தெரிவாகினர். இத்தேர்வுகளில் தானும் திறமையாகச் சித்தியெய்தி தானுமோர் வேவுப்புலியானான். சுகுணன் அடுத்த கட்டமாக காலக்கிரமத்தில் ஆரம்பமான வேவுப்பயிற்சியிலும் தானோர் சிறந்த வேவாளனாக வரவேண்டுமென்ற வீராப்புடன் பயிற்சியில் ஈடுபட்டான். விரைவில் வேவுப்பயிற்சியை திறமையாக முடித்துக்கொண்டவன் வேவுப்பணிக்காக ஆனையிறவுப் பகுதிக்கு செல்கிறான். இதுவே இவனது கன்னிவேவு.

'வேவு' என்பது மெய்சிலிர்க்க வைக்கும் ஒரு வேலைத்திட்டம்.

அந்த நெருப்பாற்றில் தினங்குளிக்கும் வேவுப்புலிகளின் நெஞ்சுறுதியினை அளவிட அளவுகோல் கிடையாது. உயிருறுஞ்சக் காத்திருக்கும் துப்பாக்கி முனைகளிடையே பொறிவெடிகள், மிதிவெடிகள், கம்பிச்சுருள்கள், முட்கம்பி வேலிகள், சட்டென்று பற்றிக்கொள்ளும் அதியுயர் மின்சாரக்கம்பிகள் அதனூடே இரவையே பகலாக்கும் மின்குமிழ் வரிசைகள் இவற்றையெல்லாம் இலாவகமாகத் தாண்டி உட்சென்று எதிரியின் மண்டையோட்டில் கூடாரமடித்து மூளையின் செல்களைச் செப்பனிடுவது போன்றதே இந்த வேவுப்பணி. இப்பணியில் ஈடுபடும் வேவு வீரர்கள் திரும்பி வருவதென்பது கடினம் எல்லோரும் செய்யக்கூடியதொன்றல்ல.

அச்சத்தர்ப்பங்களில் விழுப்புண்ணேற்கும் சக தோழர்களை மீட்டு வருவதென்பது 'கடுகைத் துளைத்து அதனுள் ஏழ்கடலைப் புகுத்துவது' போலென்றால் அது மிகையாகாது. இப்படியான கட்டங்களில் சக வீரர்களைக் காப்பாற்றிக்கொண்டு திரும்புவதில் இவனுக்கோர் தனித்திறனுண்டு. இதனால் இவ்வாறான பணிக்கு சுகுணனின் தலைமையில் செல்வதென்றால் போராளிகளின் மனதில் புது உத்வேகம் காணப்படுவதை எல்லோராலும் உணர முடியும்.

ஏனெனில் மிக முக்கியமானதும் உயிராபத்துமிக்கதானதும் ஆனால் தவிர்க்க முடியாத ஒரு வேவு நடவடிக்கையின்போது கரிப்பட்டமுறிப்பில் எதிரியின் கொலைவலயத்துள் சுகுணன் தலைமையிலான ஒரு வேவு அணி சிக்கிக்கொண்ட சந்தர்ப்பத்தில் புத்தி சாதுரியமாய் செயற்பட்ட சுகுணன் தன்னுடனிருந்த சிறு அணியை வைத்துத் தொகையான

அச்செழுப்பகுதியில் இவனது நிலைக்கு முன்னின்றிருந்த எதிரியின் கவசவாகனத்தைக் கண்டு ஆர்.பி.ஜிக்குரியவனை அழைத்துவர ஆளனுப்பிவிட்டுத் தொடர்ந்துமதை அவதானித்த வேளையில், அதிலிருந்து வீசப்பட்ட குண்டு இவனது நிலைக்கு மிக அண்மையில் விழ்ந்து இவனையும், இன்னுமிருவரையும் காயப்படுத்தியது. உதவிக்குச்சென்றவர்களை நோக்கி முதலில் சக போராளிகளைத் தூக்கும்படி கேட்டுக்கொண்டான். களத்தை விட்டகன்று சத்திரசிகிச்சைக்குச் செல்லும்வரை சரளமாகக் கதைத்துத் தனது காயம் சிறிதுதான் கவலைப்படத்தேவையில்லை என்பதான நம்பிக்கையை அவனேற்படுத்தியிருந்தாலும் தலையின் பின்பகுதியில் தைத்திருந்த சிதறியதுண்டு அவற்றையெல்லாம் பொய்யாக்கிவிட்டது.

அன்றே ஒரு சிறந்த வீரனும், ஆளுமைமிக்க போராளியுமான இளங்கோவை இம்மண் இழந்துவிட்டது.

இவனது குடும்பம் மிகவும் ஏழ்மையானது. தந்தை ஆறுமுகம், தாய் சரஸ்வதி. இவனும் இவனோடு பிறந்த தமையனும், ஒரு தங்கை, இரு தம்பிகளென ஐவர். வீட்டில் வறுமையானாலும் வாழ்வில் வலுவிழக்கக்கூடாது, பள்ளிப்படிப்பின்றிப் பரிதவிக்கக்கூடாதென்பது இவர்களது நோக்கு. 'ரவீந்திரன்' இளங்கோவிற்குப் பெற்றோர் ஆசையாக இட்ட பெயர். இவன் தன்கல்வி பாதிக்கக்கூடாதென்பதில் மிகத்தெளிவுடனிருந்தான். அதற்காகக் கடுமையாக உழைத்தான் குடும்பத்திற்கு மட்டுமன்றித் தன் கல்விக்காகவும்.

ஊரிலிருந்த காலங்களில் அவனது விடலைப்பருவத்து உணர்வுகளில் குடும்ப நிலைக்கடுத்து தனது கிராமத்தின் பின்தங்கிய நிலைபற்றிய கவலைகளே நிறைந்திருந்தன. தனது கல்வி கிராமத்தையும் குடும்பத்தையும் உயர்த்தும்வகையில் இருக்கவேண்டுமென விரும்பினான். இதற்காகத் தன் நண்பர்களுடனிணைந்து ஒரு விளையாட்டுக்கழகத்தையும் உருவாக்கியிருந்தான். தனது உறவையும், ஊரையும் நேசித்துச் செயலாற்ற விளைந்தவன் தாய்நிலத்துக்காகப் போராட முடிவெடுத்ததில் என்ன வியப்பிருக்கப்போகிறது.

இளவயதில் வாழ்வின் தடைகளைமீறி எதிர்நீச்சல் போட்ட துணிவும் பட்டறிவும்தானோ என்னவோ இவனை நல்லமுயற்சியாளனாய் ஆக்கியிருந்தது. அதுவே இயக்கத்திலும் அவனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் வெளித்தெரிந்தது.

முரசுமோட்டை றோ.க பாடசாலை, முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம், மல்லாவி அ.த.க பாடசாலை இவையே இளங்கோவின் தேடல் ஆர்வத்திற்கும் தெளிந்த பார்வைக்கும் வித்திட்ட கல்விக்கூடங்கள். இங்கெல்லாம் விளைந்த இவனது உடல், உளவுரனே பின்னர் இயக்கத்தில் சிறந்த பயிற்சியாளனாய், விளையாட்டு வீரனாய், கலைஞனாய் இவனை மிளிர வைத்தது.

கடின பயிற்சிகள் எதனிலும் சலியாத தன்மை, நிறைந்த வாசிப்பாற்றல் இவையே அவன் ஆளுமையை மேம்படுத்தியவை. நாவன்மை மிக்கவன் அவனால் எம் கல்லூரி விவாத அரங்குகள் அரிதாரம் பூசி ஆத்மபூர்வமாய் எழுந்தன.

கட்டையான அந்த சிவந்த கட்டுடலுக்குரியவன் இன்று இல்லை, சத்தமிட்டு கலகலத்துச் சிரிக்கும் அந்தக் குரலுக்குரியவன் இல்லாது போய்விட்டான். அவனது நினைவுகளும் கனவுகளும் எம்மை என்றும் விடியலை நோக்கிய பாதையில் உந்திக்கொண்டேயிருக்கும்.

---

நா. தமிழக்குடிமகன்

# நிதர்சனா

எமது மக்களின் இன்னல்களிற்க்கு விடிவு காண வென அருணா 1998ம் ஆண்டு ஆடித் திங்கள் 2ம் நாள் தமிழீழவிடுதலைப்புலிகளின் இயக்கத்தில் இணைந்து கொண்டாள்.

எதிரி எம் தேசத்தின் மீது கட்டவிழ்த்து விட்டு இருக்கும் இராணுவ அட்டூழியங்களைக் கண்டு அவள் மனம் கொதித்திருக்க வேண்டும். போராடினால்தான் தம் தேசம் விரைவில் விடியும் என்றே மாலதி படையணியின் லீமா 09 பயிற்சிப் பாசறையில் நிதர்சனா என்ற பெயருடன் தன் அடிப்படைப் பயிற்சிகளை முடித்துக் கொண்டாள்.

துடிப்பும் தன்னம்பிக்கையும் கொண்ட நிதர்சனா அறிவாற்றல் படைத்தவள். ஓயாத அலைகள் இரண்டு சமருக்கு காவு அணியுடன் சென்று காயமுற்ற பல போராளிகளின் உயிரைக் காப்பாற்றினாள். சண்டையில் களைத்திருந்த போராளிகளுக்கு உணவும் நீரும் எதிரியின் எறிகணைத் தாக்குதல்கள் மத்தியில் எடுத்துக் கொடுத்தவள். முதற்களமானாலும் விவேகத்துடன் செயற்பட்டாள்.

பாசறைப் படிப்புக்களிலும் பயிற்சிகளிலும் திறமையாகச் செயற்பட்டவள். சண்டையிலும் அவ்வாறே செயற்பட்டாள். எமது தலைவர் அடிக்கடி கூறுவது போல அதாவது தனித்து நின்று பல எதிரிகளுடன் போராடும் துணிவு வளர வேண்டும். என்பதற்கு அமைய எந்த சலனமும் இன்றி எதிரியை நேரடியாக எதிர்கொண்டு தனித்துணிவுடன் செயற்படக்கூடியவள். சகபோராளிகளுடன் அன்பாகவும் அவர்கள் சோர்வுற்றிருக்கும் போது நகைச்சுவைக் கதைகள் சொல்லிச் சிரிக்க வைத்து மீண்டும் உற்சாகத்தை வரவைப்பாள். ஒட்டுமொத்தமாக நிதர்சனா ஒரு திறமையான விடுதலைப் போராளி.

மன்னார் பெரியமடுப் பகுதியில் எதிரி பதுங்கியிருந்து தாக்கியதில் 17ம் நாள் நான்காம் மாதம் 1999 ஆம் ஆண்டு அன்று நிதர்சனா வீரவேங்கை நிதர்சனாவாக இம் மண்ணிற்கு வித்தானாள்.

---

லெப். யாழினி
சிறப்புத் தளபதி
மாலதி படையணி







மேஜர் சுகுணன்
இராசரத்தினம் செந்தில்ராஜா
[29.11.1979 - 23.01.2000]

# நெஞ்சத்தில் நீளுகின்ற உன் நினைவில்...

சோகத்துள் இவ்வளவு துயரச்சுமை இருக்குமென்று அந்தச்சேதி வந்த பின்புதான் எம்மால் சரியாக உணர முடிந்தது.

"சுகுணன் வீரச்சாவாம்"

இதயத்தை இரும்புச்சக்கரம் சுழன்று பிழிவதைப் போன்ற வேதனையைத் தந்தது எல்லோருடைய வாய்களிலும் மௌனப்பூட்டுத் தொங்கியது. மனதுள் பெரும் பூகம்பத்தைத் தோற்றுவித்தது.

செந்தில்ராஜா என்ற இயற்பெயருடன் உடுவில் மண்ணில் அந்தச் சிறுவனின் கால்த்தடங்கள் பதிந்த நாட்கள் அற்புதமானவை. இராசரத்தினம் சிவசோதி தம்பதிகளின் தவப்புதல்வனாக 29.11.1979ல் செந்தில்ராஜா இம்மண்ணில் வந்துதித்தான்.

சிறுவயதிலேயே அறிவும், ஆளுமையும் அழகான துடியாட்டமும் நிறைந்த இவன், வீட்டில் மட்டுமல்ல அந்த ஊரிலே ஒருசெல்லப்பிள்ளைதான். தன் ஆரம்பக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும் பின் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் தொடங்கியவன் படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்த வீரன். நல்ல மாணாக்கனாய் சிறந்தவோர் துடுப்பாட்டக்காரனாய் இவனது திறனாய்வுப் பட்டியலானது அகலமானது, ஆழமானது அழகானது.

பகைவனால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களாலும் பொதுமக்கள் மீதான நாசகார வெறியாட்டத்தாலும் இவன் அதிர்ந்து போனான். அக்காட்சிகள் அவனது மனச்சுவரில் அழியாத ஓவியமாய் பதிந்தது. அடுக்கடுக்காய் அரங்கேறிய ஆக்கிரமிப்பாளனின் அட்டூழியங்கள் இவனைக் கிளர்ந்தெழச் செய்து போராட்டத்தின்பால் ஈர்த்தெடுத்தது.

ஆம்! 18.09.1995 அன்று எம் தன்மானமிக்க தலைவன் சேனையில் தானுமோர் புலியானான்.

வேள்வித்தீயில் வேரூன்றி விழுதெறிவதற்காய் செந்தில்ராஜா தன்னைச் சுகுணனாக மாற்றிக்கொண்டான்.

சுகுணன் எல்லோராலும் விரும்பப்பட்டான். எதையுமே பெரிதாக எடுத்துக்கொள்ளாத தன்மை, மென்மையான சுபாவமும் சீரான நடத்தையும் கொண்ட இவனையெல்லாம் எவ்வாறு மறப்பது.

சில மாதங்களின் பின் அடிப்படைப் பயிற்சிகள் முடிவடைந்து அணிகள் பிரிக்கப்பட்டது. இந்நேரத்தில்த்தான் யாழூரை நெருப்புப் பொறிகளால் வளையமிட்டுச் சூரியகதிரென்று பாரிய படையெடுப்பை எதிரி நிகழ்த்தினான். குறைந்த படை- ஆயுதபலத்துடன் பொங்கிவரும் படையுடன் மோதவேண்டிய முக்கிய கட்டம்.

இதுவே சுகுணனின் முதற்களம்.

அவன் சற்றும் தளரவில்லை. 'சாயாது புலிவீரம் தாளாது தன்மானம்' என வீரமுடன் போரிட்டான். சில மாதங்களில் சண்டை ஓய சுகுணனின் படையணி முகாம் வந்தது.

அப்போதுதான் இராணுவச் சிறப்பு வேவுப்பிரிவிற்காய் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு ஆரம்பமானது. குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தோர் அப்பிரிவிற்காய்த் தெரிவாகினர். இத்தேர்வுகளில் தானும் திறமையாகச் சித்தியெய்தி தானுமோர் வேவுப்புலியானான். சுகுணன் அடுத்த கட்டமாக காலக்கிரமத்தில் ஆரம்பமான வேவுப்பயிற்சியிலும் தானோர் சிறந்த வேவாளனாக வரவேண்டுமென்ற வீராப்புடன் பயிற்சியில் ஈடுபட்டான். விரைவில் வேவுப்பயிற்சியை திறமையாக முடித்துக்கொண்டவன் வேவுப்பணிக்காக ஆனையிறவுப் பகுதிக்கு செல்கிறான். இதுவே இவனது கன்னிவேவு.

'வேவு' என்பது மெய்சிலிர்க்க வைக்கும் ஒரு வேலைத்திட்டம்.

அந்த நெருப்பாற்றில் தினங்குளிக்கும் வேவுப்புலிகளின் நெஞ்சுறுதியினை அளவிட அளவுகோல் கிடையாது. உயிருறுஞ்சக் காத்திருக்கும் துப்பாக்கி முனைகளிடையே பொறிவெடிகள், மிதிவெடிகள், கம்பிச்சுருள்கள், முட்கம்பி வேலிகள், சட்டென்று பற்றிக்கொள்ளும் அதியுயர் மின்சாரக்கம்பிகள் அதனூடே இரவையே பகலாக்கும் மின்குமிழ் வரிசைகள் இவற்றையெல்லாம் இலாவகமாகத் தாண்டி உட்சென்று எதிரியின் மண்டையோட்டில் கூடாரமடித்து மூளையின் செல்களைச் செப்பனிடுவது போன்றதே இந்த வேவுப்பணி. இப்பணியில் ஈடுபடும் வேவு வீரர்கள் திரும்பி வருவதென்பது கடினம் எல்லோரும் செய்யக்கூடியதொன்றல்ல.

அச்சத்தர்ப்பங்களில் விழுப்புண்ணேற்கும் சக தோழர்களை மீட்டு வருவதென்பது 'கடுகைத் துளைத்து அதனுள் ஏழ்கடலைப் புகுத்துவது' போலென்றால் அது மிகையாகாது. இப்படியான கட்டங்களில் சக வீரர்களைக் காப்பாற்றிக்கொண்டு திரும்புவதில் இவனுக்கோர் தனித்திறனுண்டு. இதனால் இவ்வாறான பணிக்கு சுகுணனின் தலைமையில் செல்வதென்றால் போராளிகளின் மனதில் புது உத்வேகம் காணப்படுவதை எல்லோராலும் உணர முடியும்.

ஏனெனில் மிக முக்கியமானதும் உயிராபத்துமிக்கதானதும் ஆனால் தவிர்க்க முடியாத ஒரு வேவு நடவடிக்கையின்போது கரிப்பட்டமுறிப்பில் எதிரியின் கொலைவலயத்துள் சுகுணன் தலைமையிலான ஒரு வேவு அணி சிக்கிக்கொண்ட சந்தர்ப்பத்தில் புத்தி சாதுரியமாய் செயற்பட்ட சுகுணன் தன்னுடனிருந்த சிறு அணியை வைத்துத் தொகையான

எதிரியுடன் மோதி தான் விழுப்புண்ணடைந்த நிலையில் வீரச்சாவடைந்த வீரனொருவனின் துப்பாக்கியையும் காயமடைந்த வீரனொருவனையும் காப்பாற்றி மீண்டு வந்த செயலை வர்ணிக்க வார்த்தைகளேயில்லை.

எங்கள் சுகுணன் இப்படி எத்தனையெத்தனை வீர சாதுரியங்களைப் புரிந்தவன் திசைகாட்டியை இலாவகமாகக் கையாளுதல், பெறப்படும் தரவுகளை நூல் பிசகாது வரைபடத்தில் குறித்தல், வெடிபொருள் ஆயுதகையாளுகையென இவனது திறமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். அத்தோடு இராணுவப் பிரதேசத்துள் ஊடுருவித் தாக்கும் உட்சண்டைகளிலும் தனக்கெனவோர் இடத்தைப் பிடித்துக்கொண்டவன் எங்கள் சுகுணன். இவ்வாறாக இவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பாதையில் ஆணிவேர் தரவுகளால் தடம்புரண்ட பகைத்தளங்களோ பல. சூரியகதிர்- 01 முதல் இன்றைய ஓயாத அலை- 03 வரையான சமர்க்களங்கள் ஒவ் வொன்றிலும் இவனிற்கென ஓர் தனிக்கதை நிச்சயம் எழுதப்பட்டிருக்கும்.

இவ்வாறு ஆழமான மிக அற்புதமான குணாதிசயங்களைத் தனதாக்கிக்கொண்ட அந்த உத்தம வீரனை எம் மண்ணும் மக்களும் இழந்ததென்பது தாங்கிக்கொள்ளவும் முடியாது! 23.01.2000 அன்று மன்னார் கட்டையடம்பன் பகுதியில் திடீரென ஏற்பட்ட நேரடி மோதலில் எம் இதயநாயகன் சுகுணனை நாமெல்லாம் பிரிந்துவிட்டோம். அவனது உயிரும் உடலும் எம்மை விட்டுப்போனதன்றி வசனத்து ரசனைக்கு ஏற்ப வளைத்தெடுக்க முடியாத அவன் வாழ்வோட்டம். அவனது ஆழமான நட்பு. காலங்களால் மட்டும் கடந்துபோன அந்தப்பசுமையான நாட்கள் இன்னும் எம் நெஞ்சத்து மஞ்சத்தில்....

---

போராளிகள்:
இராணுவ சிறப்பு வேவுப்பிரிவு



அணையாத தீபங்கள்

# கடற்கரும்புலி மேஜர் திருமாறன்/ திருவாளன்

கேணல் சூசை,
சிறப்புத் தளபதி,
கடற்புலிகள்.

1995ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்ட திருவாளன் 1998இல் திருமாறன் என்ற பெயரில் கடற்புலிகளின் அணியில் இணைகின்றான்.

எந்த ஒரு விடயத்தினையும் இலகுவாகவும் விரைவாகவும் விளங்கிக் கொள்ளும் திறன் இவனிடம் மிகுந்து காணப்படுவதால் எமது அணியில் இணைந்த சில நாட்களிலேயே சிறந்த ஓர் படகுச் சாரதியாக தன்னை மாற்றிக் கொள்கின்றான்.

எதிரியின் இரும்புக் கலங்களை கடலில் மூழ்கடிப்பதுடன் அவற்றை நங்கூரமாகப் பாவித்து தமது படகுகளை அவற்றில் கட்ட வேண்டுமென்பதே இவனது தணியாத ஆசையாக இருந்தது.

அவனது அவாவின் காரணத்தாலும் அயராத முயற்சியினாலும் மிகக்குறுகிய காலத்தில் தன்னை ஓர் சிறந்த படகுச் சாரதியாகவும் இயந்திரப் பொறியிலாளராகவும், கனரக ஆயுதங்களைக் கையாள்வதில் வல்லவனாகவும் மாற்றிக் கொண்டான். இதனால் எந்த ஒரு படகிலும் அதன் எந்த நிலையிலும் உடனடியாகச் செயற்படக் கூடிய ஆற்றல் இவனுக்கிருந்தது. பாராட்டக் கூடியதொன்றாகும்.

கடற்புலிகளின் தீவிரமான செயற்பாடுகளும் கடல் மீது வரலாறுகள் படைத்த நிகழ்வுகளும் நாம் குடாநாட்டை விட்டு வன்னிப் பெருநிலப் பகுதிக்கு வந்த பின்தான் மேலோங்கிக் காணப்பட்டதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதொன்றாகும்.

இக்காலகட்டத்தில் எம்முடன் இணைந்த திருமாறன் எமது கடல் கடந்த நடவடிக்கைகளிலும் கடற்சண்டைகளிலும் தனது முழுத் திறமைகளையும் வெளிப்படுத்தி நின்றதை என்னால் மதிப்பிடக் கூடியதாய் இருந்தது.

1999ஆம் ஆண்டில் இவன் தன் இடியன் படகுடன் எதிரியைத் தேடி அலைந்த நாட்களும் ஓயாத அலை - 03 போது வடமுனைப் போரில் வடமராட்சி கிழக்குக் கடலில் இவனது துணிகரச் செயலும் இன்றும் என் மனத்திரையில் நிலைத்துத்தான் நிற்கின்றன.

திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி வேவு பார்த்து அந்நடவடிக்கையை பெரிய அளவில் செய்யலாம் என்ற நம்பிக்கையை எனக்கு ஆழமாய் ஊட்டியது இவனது மடல்.

ஈற்றில் திருமலைத் துறையில் தாம் திட்டமிட்ட தாக்குதலிற்கு தனக்கு கட்டாயமாக சந்தர்ப்பம் தரப்பட வேண்டும் என்று எம்மைக் கேட்டுக்கொள்கின்றார். நீண்டகாலமாக தனது இலட்சியத்தை நிலைநாட்ட உழைத்து நின்ற இவருக்கு அச்சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அதன்படியே 23.10.2000ஆம் ஆண்டு அன்று தனது ஏனைய கடற்கரும்புலித் தோழர்களுடன் இணைந்து அத்தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டு வீரச்சாவடைகின்றான்.

உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தி சிறீலங்காவின் படைத்தரப்பிற்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய இச்சாதனையில் காவிய நாயகர்களான கடற்கரும் புலி மேஜர் திருமாறன் ஏனைய கடற்கரும்புலிகளான லெப். கேணல் றெஜி, மேஜர் நிதர்சன், மேஜர் மயூரன், மேஜர் நித்தி, மேஜர் றோஸ்மன் ஆகியோருக்கும் எனது வீரவணக்கம்.



## அணையாத தீபங்கள்

# வீர விருட்சத்தின் வித்து



அஞ்சாமை
ஆளுமை
இலட்சிய மேன்மை
ஈகைத்தன்மை
உண்மை பிறளாமை
ஊக்கும் தன்மை
எதிலும் திறமை
ஏற்ற பணி முடிக்கும் வன்மை
ஐயம் கொள்வோரை வெறுத்தமை
ஒருவரையும் குறைகூறாமை
ஓயாது போராட்டத்திற்குப் பங்காற்றியமை
ஔவியக் கருத்துக்களை எதிர்க்கும் தன்மை

இவை அனைத்தும் பின்னிப் பிணைந்த உருவம்தான் மதுரா.....

தலைமைமீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட இவள், தன்னை முழுநேர விடுதலைப் போராளியாக மாற்றிக்கொண்டமை வியப்படையக் கூடியதொன்றல்ல. காரணம், இவள் கல்வி கற்ற நேரத்திலும் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் போதும் எங்களோடு போராட்ட வேலைகளிலும் ஈடுபட்டவள். பெண்களை இழிவுபடுத்துகின்ற அடிமைப்படுத்துகின்ற கருத்துக்களை வெறுத்து ஒதுக்கிவிட்டுத் திடமாக நின்று செயல்பட்டவள் தான் இந்த மதுரா....

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைகளும் அடாவடித்தனங்களும் மலிந்திருந்த நேரத்தில் ஆதரவுகளை நாம் தேடித்திருந்த வேளை, தேடிவந்து உதவி புரிந்தவர்களில் இந்த மதுராவினதும் நளினியினதும் பங்கிற்கு அளவுகோல் இல்லை.

இவர்கள் இருவரும் கொழுத்தும் வெயிலில் கொல்லைப்புறங்களிற்கு உணவுவகைகளைச் சுமந்து வந்து எமக்குத்தந்து விட்டு காவலுக்கு நின்ற காட்சி பசுமையானதே.

இவள் வேங்கையாகியதும், வெஞ்சமர் ஆடியதும் சாய்ந்து மண்மீட்புக்காய் தன்னை அர்ப்பணித்ததும் ஒரு வேகத்தாலல்ல. இந்த மண்ணும், எமது மக்களும் சுதந்திரத்துடனும், சுபீட்சத்துடனும் வாழவேண்டுமாயின் போராட்டத்தில் விழுதுகளாய் மட்டும் இருந்தாற் போதாது... விருட்சமாகமாறவேண்டும். மாறி, மண்ணையும் மக்களையும் காக்கவேண்டும் என்ற பேருணர்வுதான் காரணம்....

அந்த வகையில் செயற்பட்ட இவள் வீழ்ந்தாலும் இந்த விருட்சத்தின் வித்துக்கள்(உணர்வுகள்) எங்கள் மனங்களில் விதைக்கப்பட்டிருக்கிறது. மக்களின் மனங்களில் வேரூன்றி இருக்கிறது. வித்துக்கள் வெடிக்கட்டும் விருட்சங்கள் வளரட்டும்.

திரு. சி. இளம்பரிதி
பொறுப்பாளர்,
அரசியல் துறை,
யாழ் மாவட்டம்.

## அணையாத தீபங்கள்

தமிழீழ விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் ஒவ்வொரு போராளியினது சாவும் உன்னதமானதும் மேன்மையானதும் ஆகும். அதிலும் ஒவ்வொரு போராளியினது சாவும் வித்தியாசமானதும்கூட.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் ஓமந்தை இராணுவமுகாம் மீதான தாக்குதலில் வீரகாவியமான 2ம் லெப்டினன் ஈழவாசனின் சாவும் ஒரு வித்தியாசமானதே.

தமிழீழத்திற்கு அப்பால் மலையகத்தின் ஒரு மூலையில் அமைந்திருக்கும் நுவரெலியாவில் ஒரு சிறு குடிசையில் வாழ்ந் வந்த விஸ்வலிங்கம் சுசீலா தம்பதிகளிற்கு 1978.12.07 அன்று ஒரேயொரு பிள்ளையாகப் பிறந்தவன்தான் ஈழவாசன். இவனுடைய தாயாரிட்ட பெயர் சுரேஸ். இவனுடைய வாழ்க்கையில் சோகமே கவிந்திருந்தது. அதாவது இவன் பிறந் ஆண்டே இவனுடைய தகப்பனார் இறந்து விட நேர்ந்தது. இவனுடைய தாயார் இவனை வளர்ப்பதில் கஸ்டங்களை அடைந்தார்.

மாறி மாறி ஆட்சிப்பீடத்திலமரும் சிங்கள இனவாத அரசுகளின் அடக்கு முறை காரணமாக நுவரெலியாவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள பாவற்குளத்திற்கு வந்து தஞ்சம் புகுந்தனர். அங்கேயே இவனது தாயார் பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அதேபாடசாலையிற்தான் சுரேஸ் தனது ஆரம்பக்கல்வியைக் கற்றான். பின்னர் அங்கும் சிங்களவருடைய அடாவடித்தனத்தா சுரேசின் தாயார் பாவற்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையொன்றிற்கு மாறினார்.

# உண்மைகள் உதயமாகின்றன



தாயாருக்கு அளவெட்டியிலுள்ள அருணோதயாக் கல்லூரிக்கு மாற்றம் கிடைத்தது. பின்னர் சுரேஸ் தனது படிப்பை அருணோதயாக் கல்லூரியில் தொடர்ந்தான். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். அதே போன்றுதான் படிப்பிலும்சரி, விளையாட்டிலும்சரி போட்டி போட்டு முதன்மையாக வருபவர்களில் இவனுமொருவனாகத் திகழ்ந்து வந்தான். அதுமட்டுமன்றி நல்ல பழக்கவழக்கமுடையவனாவான். இதனால் ஆசிரியர்களின் மத்தியிலும் மாணவர்களின் மத்தியிலும் நன்கு போற்றப்பட்டும் மதிக்கப்பட்டும் வந்தான்.

இவனுடைய பங்கு இவற்றுடன் மட்டும் நின்றுவிடாது பல்வேறுவகைகளிலும் அமைந்திருந்தது. அதாவது சிரேஸ்ட சாரணர், மாணவரமைப்புப் போன்றவற்றில் தன்னையுமொரு அங்கத்துவனாக மாற்றிக்கொண்டான். மாணவரமைப்பில் அங்கத்துவனாக இருக்கின்றபோதுதான் தன்னால் இயன்றளவு விடுதலைப்புலிகளமைப்பிற்கும் உதவிசெய்து வந்தான்.

எனினும் சுரேஸிற்கு சின்ன வயதிலிருந்து ஒரு மனக்குமுறல் இருந்து வந்தது. அதாவது சிங்கள எதிரிப்படையை தானும் தன்கையால் தாக்கவேண்டுமென்பதேயாகும். அவன் 1995.05.20 அன்று தன்னை விடுதலைப் புலிகளமைப்பில் இணைத்துக்கொண்டான். சுரேஸ் தனது ஆரம்ப இராணுவப்பயிற்சிக்காக வடமராட்சியிலுள்ள சரத்பாபு முகாமிற்கு அனுப்பப்பட்டான். அங்குதான் அவனிற்கு ஈழவாசனெனப் பெயர் மாற்றப்பட்டது. அங்கிருந்து பயிற்சியெதுவுமின்றி மண்டைதீவு, புலிப்பாய்ச்சல் ஆகிய இரு தாக்குதல்களுக்கும் காவுகுழுவாகச் (சப்பிளை) சென்றான்.

மண்டைதீவில் அவனாற்றிய பங்கே அனைவரையும் வியப்படைய வைத்தது. அதாவது அவனும் அவனுடன் சென்ற மற்றைய போராளிகளும் இணைந்து காயப்பட்ட போராளிகளைப் பின்னிற்கு அனுப்பிவிட்டு கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களை அப்புறப்படுத்தினர். இதன்போது மற்றைய போராளிகள் களைத்துவிட்டார்கள். ஆனால் இவன் களைக்காமல் தனியாகவே செயற்பட்டான். அதேபோன்றுதான் புலிப்பாய்ச்சற் சண்டையிலும் கொடுக்கப்பட்ட பணியைத் திறம்படச் செய்துமுடித்தான்.

இத்தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர் ஆரம்பப் பயிற்சிக்காக சரத்பாபு முகாமிற்கு மீண்டும் அனுப்பப்பட்டான். ஆரம்பப் பயிற்சி முடிவடைந்தபின் புதிய போராளிகளைப் பல துறைகளிற்கும் தெரிவுசெய்து அனுப்புவது வழமை. அதேபோன்று ஈழவாசனுடன் அவன் தோழர் பதின்மர் அனைத்துலகத் தொடர்பகத்திற்கு அனுப்பப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்து சூரியகதிர் 01 இராணுவ நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டான். இச்சமர்தான் இவனிற்கு முதன்முதல் ஆயுதக்களமாகும். எதிரியானவன் முன்னேறி நீர்வேலிப்பகுதிக்கு அண்மித்தபோது ஈழவாசன் சண்டைக்களத்திற்கு அனுப்பப்பட்டான். அங்கு கையில் விழுப்புண்ணடைந்தான். அதன் பின்னராக ஈழவாசன் ஆனையிறவைச் சுற்றியமைக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் தனது கடமையைச் செய்தான்.

மீளவும் அனைத்துலகத் தொடர்பகப் பணிகளுக்காக களத்திலிருந்து எடுக்கப்பட்டான். அங்கு அவன் ஆவணக்காப்பகத்திற்கு இரண்டாவது பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான்.

ஓயாத அலைகள்- 01 நடவடிக்கையில் விடுதலைப்புலிகள் முல்லைத்தீவு முகாமை முற்றாகத்தாக்கியழித்தனர். இத்தோல்வியை மூடிமறைப்பதற்காக ஆனையிறவிலிருந்து சத்ஜெய 01,02,03 எனப்பெயர் சூட்டப்பட்டு இராணுவநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதுதான் முன்னேறும் எதிரிப்படைக்கு எதிராகப் பெரியளவில் 120 எம் எம் மோட்டார் பயன்படுத்தப்பட்டது. அவ் 120 எம் எம் மோட்டார்களுக்கு அனைத்துலகத் தொடர்பகத்திலிருந்தும் போராளிகள் எடுக்கப்பட்டனர். அதில் ஈழவாசனுமொருவன். சத்யஜெயவைத் தொடர்ந்து மறுவருடம் ஆனையிறவு, பரந்தன் சமர் நடைபெற்றது. இதில் ஈழவாசன் மிகவும் திறமையாகச் செயற்பட்டான். இதன் பின்னர் திரும்பவும் அனைத்துலகத் தொடர்பகத்திற்கு எடுக்கப்பட்டான்.


ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்வதற்காக 120 எம் எம் மோட்டார்களுக்குரிய பாதுகாப்பிற்கான அதிக பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டன. ஒரு சண்டைக் களத்திலமைக்கும் பதுங்குகுழி போன்றில்லாமல் அவற்றைவிடவும் நான்கு அல்லது ஐந்து மடங்கு பெரிதாக இரண்டு அல்லது மூன்று பதுங்குகுழி அமைக்க வேண்டும். இப்படியாக ஓமந்தை தொடக்கம் கனகராயன்குளம் வரை 120எம் எம் மோட்டாருக்குப் பதுங்குகுழி அமைக்கப்பட்டது. இதில் ஒவ் வொரு பதுங்குகுழியிலும் இவனுடைய பங்கிருக்கும்.

1997.05.13 அன்று ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. ஓமந்தை, இறம்பைக்குளம், விளக்குவைத்தகுளம், பன்றிக்கெய்தகுளமென இராணுவம் தனது காலை அகலவிரித்துக்கொண்டே வந்தது. விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இராணுவம் பெரியமடுவுடன் தனது நகர்வைச் சிறிது நிறுத்தித் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது.

1997.08.01அன்று ஓமந்தைத் தாக்குதலிற்காக சகல ஆயத்தங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இரவு சண்டை ஆரம்பமானது. வர வர சண்டையின் உக்கிரம் அதிகரிக்க அவனும் அதிகமாக 120எம் எம் மோட்டாரில் உதவிகளைச் செய்துகொண்டிருந்தான். சண்டையின் உக்கிரத்தால் 02.08.97அன்று காலை விடிந்துகொண்டிருப்பது எவருக்கும் தெரியாமலிருந்தது. எதிரிப்படையின் விமானங்களினால் 120எம் எம் மோட்டார் இருக்கின்ற இடங்களைக் கண்டுபிடித்து விடுவானென்பதால் ஈழவாசன் அவ்விடத்தை உருமறைப்புச் செய்துகொண்டிருந்த அக்களத்தில் எதிரியினால் ஏவப்பட்ட எறிகணையொன்றின் சிதறல் ஈழவாசனின் தலையில் தைக்க அந்த இடத்திலேயே ஈழவாசன் தான் உயிருக்குயிராய் நேசித்த அந்த மண்ணை செங்குருதியினால் நனைத்தான்.

**க. உமாசுதன்**





# தீச்சுவாலையின் மனக்கனல்கள்

த.வஞ்சி

சமாதானம் கதவு தட்டிய போது A-9 பாதையும் புதிதாய் கருமை பூசி நீள நிமிர்ந்து கிடக்கிறது. நாளும் புதுப்புது வரவுகளாய் முகமாலையைக் கடக்கும் அத்தனை முகங்களுக்கும் இத்தனை வரலாறுகளை தனக்குள்ளே புதைத்தபடி மௌனமாய் அது அமைதி காப்பது புரியாது.

ஆம். 2000.04.05 இல் தீச்சுவாலையின் மீது செந்நீருற்றுகளாக வீழ்ந்த எங்கள் வெற்றிகரமான தாக்குதல், எதிரியை நீண்ட நாட்களுக்கு புதிய திட்டம் எதையும் தீட்டாமல் இருக்க வைத்ததோடு, சமாதானம் நோக்கி வலுவாய் அசைய வைத்ததற்கும் காரணங்களில் ஒன்றாய் அமைந்து விட்டது.

அந்த வெஞ்சமர் மூண்ட அந் நிலத்தில் பல நூறு பரணிகள் எழுதப்பட்டன. அந்த மண்ணிலே சாய்ந்த ஒவ்வொரு விடுதலை வேரினதும் உறுதி யாராலும் வரைய முடியாதது. அந்த நாட்களின் சில நினைவுகளை மட்டுமே இங்கு பகிர்ந்துகொள்கிறேன்.

'எதிரியின் வரவு நிச்சயம்' கட்டளைப் பணியகம் அன்றைய சமரை முதல் நாளே எதிர்வுகூறி இருந்தது. அதிகாலை வரவோடு அன்று வெடியதிர்வுகளும் செவிப்பறையை உதைக்கத் தொடங்கின. எதிரி எல்லா முனைகளிலும் வேகமாய் முன்னேறத் தொடங்கினான். போரின் உக்கிரம் உலைக்களமாய் களமுனையில் அனல் பறந்துகொண்டிருந்தது. கண்டல் பகுதி எதிரியின் வரவை எதிர்பார்த்த முக்கிய பகுதி. அது எதிரியின் முற்றுகைக்குள், கடுஞ்சமர் அங்கே வளர்ந்துகொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல விழுப்புண்ணடைந்தவர்களினதும் வித்துடலானவர்களினதும் தொகை அதிகரித்துக்கொண்டிருந்தது. அங்குதான் அவள் மருத்துவப் போராளியாய் முதுகில் மருந்துப்பையுடன் ஓடி ஓடிக் கட்டிக்கொண்டிருந்தாள். காயமடைந்தவர்களை அனுப்ப முடியாத நிலை அவளிடமும் எதுவுமே இல்லை. குருதிப் பெருக்கால் வித்துடலாகிக்கொண்டிருக்கின்ற வெங்கொடுமையை அவள் அந்த பதுங்கு குழியில் அனுபவித்துக்கொண்டிருந்தாள்.

எதிரி மிகமிக அண்மையாக, வெடிபொருட்கள் தீர்ந்துபோய்விட்டன. கொஞ்சம் கொஞ்சமாக அங்கே ஒலித்துக்கொண்டிருந்த குரல்களும் ஓய்ந்துவிட்டன. விடுதலையின் உன்னதமாய் தன்னால் காப்பாற்ற முடியாத அந்த வித்துகளுடன் ஓர் குண்டின் சிதறலில் அவளும்....

* * *

துடிதுடிப்பான செயற்பாடு, எல்லோரிடமும் இயல்பாக புகும் சுபாவம் அவள் அந்த மருத்துவத்தளத்தில் ஓடி ஓடி காயமடைந்தவர்களுக்கும் சிகிச்சை செய்பவர்களுக்கும் உதவி செய்துகொண்டிருந்தாள்.


இத்தனைக்கும் அவள் அந்தத் தளத்திற்குரியவளல்ல. 23.04.2000 அன்று நள்ளிரவு பாம்பு தீண்டியதால் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தாள். நல்ல வேளையாக பாம்பின் விசம் அவளைப் பாதிக்கவில்லை. ஆனால் அவளை K.U.O வில் வைத்திருப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்தாள்.

சண்டை தொடங்கியதுதான் தாமதம் 'நான் போக வேண்டும். என்னை விடுங்கோ' என்று வைத்தியரிடம் கேட்டுக்கொண்டிருந்தாள். மீண்டும் மீண்டும் அவள் உதடுகள் அதே வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டன. என்றாலும் அவளுக்கான அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் இரவு காயம் ஏற்றிய வாகனத்தில் ஏறி அவள் சென்று விட்டிருந்தாள். அன்றைய பொழுதே 'அவள் வித்துடலாகிவிட்ட செய்தி' காதினால் மூளையைச் சென்றடைந்தபோது நெஞ்சில் ஓங்கிய அதிர்வு ஓ.... இதற்குத்தானா இவ்வளவு அவசரப்பட்டாள். ஏங்கியது மனம். 26.04.2001 காலை எதிரி வாசலைத் தேடித் தேடி கடந்த அந்த உரம் வாய்ந்த அவளது பாதங்கள் காணாமல் மீளாத்துயிலுடன் அவள் வந்தபோது மரணமே!!!... ஏன் எங்கள் வீரர்களைக் கொல்கிறாய் மனம் வாய்விட்டலறியது.

* * *

26.04.2001 அந்த மருத்துவத் தளத்தின் சுமை ஓரளவு குறைந்திருந்தது. களத்தின் வெடியதிர்வுகளும் ஓய்ந்துபோயிருந்தன. அங்கே அவன் வந்திருந்தான் மெலிந்த நெடிய வெயிலில் நன்கு கறுத்திருந்தது தேகம். முகத்தில் ஏதோவொரு இறுக்கம் 'என்னவாய் இருக்கும்' என்ற வினா மனதோடு எழுந்தது. காரணம் தெரிந்தபோது 'விடுதலையின் விழுது இத்தனை உரம் வாய்ந்ததால் தான் நிமிர்ந்த தமிழன் வாழ்வு இன்று சிறப்போடு நிற்கிறது' என்ற நிஜம் மீண்டும் ஒரு முறை உறைத்தது. அவன் அக்கா தீச்சுவாலையை அணைத்த மழையாகிய 140 இற்கு மேற்பட்ட மறப்புலிகளில் ஒன்றாகிவிட்டாள். களத்தை விட்டுச் செல்ல முடியாது கடமை அழுத்தியதால் அவன் தன் உதிரத்து உறவின் முகத்தை அந்த மருத்துவத் தளத்தில் இறுதியாக காண்பதற்காய் வந்திருந்தான்.

வந்த வித்துடல்களில் அவள் வரவில்லை. அவன் தன் உடன்பிறந்தவளின், இந்தத் தேசத்தின் புதல்வியின், அக்காவின் அன்பான முகத்தை அவன் பார்க்கவே... இல்லை. ஏனெனில் பின்னொரு நாளில் தான் அவளைக் கண்டுபிடித்தோம் வெந்தணல் கொட்டிய அந்த மண்ணில் தன் உதிரத்தையும், உடல்தசைகளையும் மண்ணுக்கே ஆகுதியாக்கியருந்தான் அவள்.





# விடுதலை வீரனின் வீர வரலாறு



## கெனடி !

பயிற்சி ஆசிரியருக்கேயுரிய ஆளுமை இவனிடத்தே மேலோங்கிக் கிடந்தது. இராணுவ அறிவு இவனிடம் பொதிந்தேயிருந்தது. தன்னம்பிக்கையென்பது இவனிடம் ஒன்றிப்போயிருந்தது. எந்தவொரு வேலையைக் கொடுத்தாலும் அதற்கு முழுமையாக அர்ப்பணிக்கும் பண்புகொண்டவன். இவையனைத்தும் இவனைச் சிறந்த ஆசானாக்கியது.

அன்று விடியற்காலை அடர்ந்த வாழைத்தோட்டத்தின் நடுவில் அமைந்திருந்த காப்பரணில் நாம் நின்றிருந்தவேளை சூரியகதிர் இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள களம் விரைந்தான் கெனடி. தன் அணிகளைத் தாக்குதலிற்குத் தயார்படுத்திவிட்டு பகைவெள்ளத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பல களங்கண்டவன். பல போராளிகளைக் களத்தில் திறம்பட வழிநடத்தி தளபதிகளின் பாராட்டைப் பெற்றவன். இத்தனைக்குமப்பால் போராளிகளிற்குச் சண்டைப்பயிற்சி வழங்கி நிறைந்த அனுபவத்தைப் பெற்ற போர்வீரன் எம்மை வழிநடத்தவிருந்தான். ஆனால் நாம் கண்ட கனவுகளனைத்தும் காற்றோடு போகுமென யார்தான் நினைத்தார்கள். பகைவெள்ளம் தனது நடவடிக்கையை மூர்க்கமாக நடத்தியவண்ணம் பாய்ந்து கொண்டிருந்தது. களத்தளபதியிடமிருந்து காற்றோடு ஒரு செய்தி கெனடியின் காதோரம் வந்தது. முன் நகர்ந்துவரும் ராங்கை உடனழிக்கும்படி கட்டளை கேட்டதும் கதைமுடிக்க எழுந்தவனது குரலை கூவிவருமெறிகணை நிறுத்தியது.

தமிழீழத்தில் முதலாவது மரபுப்படையணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியாகும்.

இப்படையணியில் மணலாறு மாவட்டத்திலிருந்து வந்த அணியுடன் ஒருவராகக் கெனடியும் வந்தார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் கனரக ஆயுதப்பிரிவில் கெனடி இணைந்துகொண்டார். அதன்போது

அணையாத தீபங்கள்

பலமாதங்களாக வழங்கப்பட்ட அவ் வாயுதங்கள் சம்பந்தமான சகலவிதமான செய்முறைகள், சூட்டுப்பயிற்சிகளனைத்திலும் மிகவும் திறமையாகச் செயற்பட்டார்.

ஆகாயக்கடல்வெளிச்சமர் தாக்குதலில் ஈடுபடும் எமது தாக்குதலணிகள்மீது எதிரி விமானங்கள் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதே விமான எதிர்ப்புப்படையணியின் முக்கியவேலை. கெனடியின் 14.5எம் எம் பீரங்கி தென்மராட்சிப் பகுதியில் வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு நோக்கி நகர்ந்த எதிரியின் நகர்வைத் தடுப்பதில் ஈடுபடும் போராளிகளுக்கு வான்பாதுகாப்பை வழங்கியது.

கெனடியின் பீரங்கி அருகிலிருப்பதைக் கேள்விப்பட்டால் தாக்குதலில் ஈடுபடும்போராளிகள், வாகன ஓட்டுனர்கள் மிகவும் சந்தோசப்படுவார்கள். ஏனெனில் விமானங்களின் தாக்குதல் அவ்விடத்தில் நடக்காது என்பதுதான் அந்தச் சந்தோசத்தின் வெளிப்பாடு.

அவனது குறிவல்லமையை நேரில்கண்ட எல்லோராலும் கெனடி பாராட்டப்பட்டான். தனது குறிவல்லமையை நிருபித்துவிட்ட கெனடி அமைதியாகவே நின்றான். இது அவனது விடாமுயற்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் ஒரெடுத்துக் காட்டாகும். பயிற்சியை முடித்துக்கொண்டு பதுங்கிச்சுடும் துப்பாக்கியுடன் பல போர்முனைகளில் எதிரியை எதிர்கொண்டான்.

அதன்பின்னர் 1992ஆண்டு வளலாய் 150 காவலரண் தாக்குதல்த் திட்டத்திற்கமைய தாக்குதலணியின் 2ம் அணித்தலைவனாக நியமிக்கப்பட்டான். அத்தாக்குதலிற்காக வழங்கப்பட்ட பயிற்சிகளையும் நல்லமுறையில் செய்ததுடன் தனது அணியையும் திறம்பட வழிநடத்தினான். பயிற்சியில் எவ்வளவு திறமையாகச் செயற்பட்டானோ அதேமாதிரி அச்சண்டையிலும் திறமையாகச் செயற்பட்டதுடன் தனது அணியையும் திறம்பட வழிநடத்தினான்.

பூநகரி 66 காவலரண் தாக்குதலைத் தொடர்ந்தும் பல சண்டைகளில் கெனடி ஈடுபட்டான். 1992ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் படைத்துறைச் செயலகத்தினால் எமது தாக்குதலணிகளிற்கு பயிற்சி வழங்குவதற்கென ஒரு இராணுவப் பயிற்சி ஆசிரியர் பிரிவு உருவாக்கப்பட்டது. அதற்கான ஆட்சேர்ப்பு சகல துறை, மாவட்டம், படையணிகளிலிருந்தும் பயிற்சி ஆசிரியர் பிரிவிற்குச் சிலர் அனுப்பப்பட்டனர். கெனடியின் செயற்பாடுகளையும் திறமைகளையும் கண்ட தளபதி அவனையும் பயிற்சி ஆசிரியர் பிரிவிற்கு அனுப்பிவைத்தார். அப்பிரிவிற்குப் பொறுப்பாகவிருந்த லெப். கேணல் கில்மன் அவர்களிற்கான பயிற்சியை வழங்கினார். குறிப்பிட்டசில நாட்களாகக் கடும்பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வேளை அவசர அவசரமாகச் சில தாக்குதலணிகளிற்கு பயிற்சி வழங்கவேண்டிய தேவையேற்பட்டது. அதில் கெனடியுமொருவனாகச் சென்றான். அந்தக்காலகட்டத்தில் எதிரியின் இராணுவ நடவடிக்கைகளை முறியடிப்பதற்கான பயிற்சிகள் சகல படையணிகளிற்கும் வழங்கப்பட்டது. அதில் கெனடியின் பங்கென்பது முக்கியமானதாக இருந்தது.

கெனடியின் அமைதியான சுபாவமும் திறமையான சுறுசுறுப்பான செயற்பாடும் அனைத்துப்போராளிகளையும் கவர்ந்தது.

பெருந்தாக்குதலொன்றிற்காக (எமது வலிந்த தாக்குதல்) சகல இடத்திலுமுள்ள தாக்குதலணிகளிற்குப் பயிற்சி வழங்குவதற்காக அசிரியர்கள்



அனுப்பப்பட்டனர். கெனடி மணலாறு மாவட்டத் தாக்குதலணிகளிற்குப் பயிற்சி வழங்குவதற்காக அனுப்பப்பட்டான். நீச்சற்பயிற்சியும் வழங்கப்பட்டது. நீச்சல் தெரியாத போராளிகளிற்கு இவன் மிகவும் இலாவகமாக நீச்சல் பழக்கி அவர்களை நீச்சலில் தேர்ச்சி பெற வைத்தான்.

பயிற்சி நடந்துகொண்டிருந்தவேளையில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையினை இராணுவத்தினர் மேற்கொண்டனர். இதனால் அனைத்து அணிகளும் தாக்குதலிற்காகச் சென்றன. தான் பயிற்சி கொடுத்த அணியுடன் கெனடியும் சண்டைக்குச் சென்றான். சண்டையிலேற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்துகொண்டு மீண்டும் குறுகிய நாட்களின்பின் இடைநிறுத்தப்பட்ட பயிற்சி ஆரம்பமானது.

கெனடி தன் கடமையை மீண்டும் ஆரம்பித்தான். பயிற்சி முடிவடைந்ததும் பூனகரி முகாம் தாக்குதலிற்கான திட்டங்கள் விளங்கப்படுத்தப்பட்டு தாக்குதல் திகதி குறிக்கப்பட்டது. அதன்படி 11.11.1993ல் பூனகரிக் கூட்டுப்படைத்தளம் மீதான பெருஞ்சமர் (நடவடிக்கை -தவளைப்பாய்ச்சல்) ஆரம்பமானது. அச்சண்டைக்குக் கெனடி மணலாறு மாவட்ட சிறப்புத்தளபதி அன்புவின் அணிகளுடன் பயிற்சி ஆசிரியராகவும் மேலதிக அதிகாரியாகவும் சென்றான்.

தனது திறமையை நிரூபித்த கெனடி1994ம் ஆண்டு நடுப்பகுதியில் அனைத்துலகத் தொடர்பகத்திற்கு அனுப்பப்பட்டான். அங்கு அவனிற்குப் புலம்பெயர்ந்த அன்னிய தேசத்தில் வாழும் தமிழ் மக்கள் எம் தாயகத்திற்கு வரும்போது அம்மக்களையணுகி எமது விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை விளக்கி விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவுதேடும் பணியில் அமர்த்தப்பட்டான்.

மக்கள் பலம் மாபெரும் பலமாக மாறி விடுதலைப் போராட்டத்துடன் இணையும்போது விடுதலையென்பது விரைவுபடுத்தப்படும் என்பதை மனதில் பதிந்து செயற்பட்டான். கெனடியின் செயற்பாடுகளையும் திறமைகளையும் கண்ட பொறுப்பாளர் அனைத்துலகத் தொடர்பகப் பிரிவின் பயிற்சி ஆசிரியராக நியமித்தார். இவ்வாறு இவனது பயிற்சியாசிரியர் வாழ்வு நகர்ந்துகொண்டிருக்கும்போது கெனடியின் தலைமையில் விசேட பயிற்சி பெறுவதற்கு இவனது அணி அனுப்பப்பட்டது.

யாழ் குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கோடு பல இராணுவ நடவடிக்கைகளைப் பல முனைகளிலுமிருந்து முயன்றும் தோல்வியைச் சந்தித்தபின்னர் இறுதியாகச் சூரியகதிர் இராணுவ நடவடிக்கை மூலம் எதிரி யாழ் மண்ணை விழுங்கிக்கொண்டிருந்தான். இவ்வாறே நீர்வேலியில் கால்பதித்துக்கொண்டிருந்த நேரத்தில் எதிரியைத் தடுப்பதற்காக களம் விரைந்தான் கெனடி. களம் விரைந்தவன் அணிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டான். மறுநாள் சமரிற்கேற்ப பலதரப்பட்ட முன்னேற்பாடுகளை மேற்கொண்டதுடன் தானும் சூழவுள்ள பிரதேசத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு சண்டையை எதிர்பார்த்த வண்ணமிருந்தான்.

காலைக் கதிரவன் செக்கச்சிவந்த கதிர்களை வீசிக்கொண்டிருக்க வாழைத்தோப்புள் ஒரே மயான அமைதி இன்னும் சில நேரத்தில் என்ன நடக்கப்போகின்றது என்ற எதிர்பார்ப்பு.

அந்தவேளையில் எதிரி தனது முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி விமானத்தாக்குதலை மூர்க்கமாக நடத்திக்கொண்டிருக்க, எறிகணைத்தாக்குதலை சரமாரியாக ஏவிக்கொண்டிருக்க, ராங் தனது அனலைக் கக்கிக்கொண்டிருந்தது.

பகைவெள்ளம் தமிழ்மண்ணை விழுங்கிக் கொண்டிருந்த வேளையில் களத்தளபதியிடமிருந்து காற்றோடு ஒருசெய்தி வருகிறது.


கெனடியின் காதோரம் தவழ்ந்து வந்த கட்டளை - முன் நகர்ந்து வந்து மூர்க்கமாக அடித்துக்கொண்டிருந்த ராங்கை உடனழிக்கும்படி கேட்ட செய்திக்கு செயல்வடிவம் கொடுக்க எழுந்தவேளையில் எதிரியின் ராங்கிலிருந்து பாய்ந்துவந்த குண்டொன்று இவன் மார்பைத் துளைக்கின்றது. தன் உயிரிலும் மேலாக நேசித்த தாய்மண்ணை முத்தமிட்டான். இவனின் உடல்தான் களத்தில் இல்லையே தவிர இவனின் உயிர் என்றும் எம்முடன்.

ஒருபோராளி வாழும்போது மற்றவர்களிற்கு முன்னுதாரணமாகவும், சாகும்போது மற்றவர்களிற்குப் பாடமாகவும் அமைகின்றான்.

-நண்பன்

---

*தமிழீழம் எங்களின் உயிர்மூச்சு – அது*
*கிடைத்திடும் வரையினில் வேறு என்ன பேச்சு*
*கடமை முடித்துக் காவியமானீர்கள்*
*கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்*
*நெஞ்சம் நிறைந்த உங்கள்*
*நியாயமான கனவுகளால்*
*நிமிர்ந்து கொள்கின்றோம்–*



■■ மாவீரர்களின் அற்புதமான இலட்சியம் வாழ்க்கை அவர்களது தியாகங்கள் அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் அவர்களது ஏக்கங்கள் கனவுகள் இவையெல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச்செல்கிறது ■■

தமிழீழத் தேசியத் தலைவர்.

# மீள்பார்வை

## 17.10.2004

"போ என்று சொல்லி புலம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் நாள் குறிப்பதற்கு முன், வா என்று சொல்ல எங்களுக் கென்று ஒரு நாட்டை உருவாக்க வேண்டும்" என்று எமது மூத்த உறுப்பினர் பாலகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் நகரத்தில் 17.10.2004 அன்று மாலை நடைபெற்ற நினைவெழுச்சி மாலையில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அவர், சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயங்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும் அந்த சோதனைக் காலத்தைக்கூட சாதனைக் காலமாக மாற்றியவர்கள் நாங்களே என்றும் கூறினர்.

இந்த நிகழ்வில் உணர்வுபூர்வமான உரையொன்றை ஆற்றிய புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், ஊடகங்கள் வாயிலாக புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளை சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆற்றலையும் நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் 'காலத்தை வென்றவன்' என்னும் நூல் வெளியிடப்பட்டது.

## 18.10.2004

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல் ஹைம் 18.10.2004 அன்று மாலை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில், சிறீலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும், திருமதி அடேல் பாலசிங்கமும் கலந்து கொண்டனர். அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்த எரிக் சூல்ஹைய்ம், இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அந்த நாட்டு இராஜதந்திரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இச்சந்திப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

## 20.10.2004

1987 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் யாழ்ப்பாண மருத்துவமனையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 28 பொதுமக்களின் நினைவு நிகழ்வு 20.10.2004 அன்று நினைவுகூரப்பட்டது. யாழ்ப்பாண மருத்துவமனைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சதுர்முகத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட 28 பேரினதும் உருவப்படங்களுக்கு அஞ்சலி செய்யும் நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாண நகர அரசியல் துறை பொறுப்பாளர் செழியன் பங்கேற்றார்.

## 21.10.2004

தமிழ் தேசியத்தை வலியுறுத்தியும் தேசியத் தலைவருக்கு ஆதரவாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கே பல்வேறு இடங்களில் கவனயீர்ப்புப் பேரணிகள் நடைபெற்றுள்ளன. இந்தப் பேரணிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

## 24.10.2004

தமிழர் தாயகத்தில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் ஈழத் தமிழர்கள் தமது அசையும், அசையாச் சொத்துக்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றால் அவை அனைத்தும் மீண்டும் பாதுகாப்பாக அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும். என்று விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

## 25.10.2004

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியின் தொடர்மாடியொன்றில் வைத்து, தேசவிரோதிகள் நான்குபேரின் மீது இனந்தெரியாதோர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளதுடன், இன்னுமொருவர் படுகாயமடைந்துள்ளார். ஏனைய இருவரும் சிறிய காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## 25.10.2004

கடந்த 1995, 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கடற்புலி மாவீரர்கள் மூவரது நினைவுக் கற்கள் 25.10.2004 அன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டன. 30.09.1995 அன்று வீரச்சாவடைந்த கடற் புலி லெப்டினன்ட் கலையரசன் என்ற இராசு தம்பிராசு, 12.06.1997 அன்று இடம் பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலி லெப்டினன்ட் இறையரசன் என்ற செல்வராசா கமல்ராஜ், 16.12.1997 அன்று வீரச் சாவடைந்த கடற்புலி மேஜர் தேனமுதன் என்ற யூரி குருஸ் பிரபாகரன், ஆகியோரது நினைவுக் கற்களே திரைநீக்கம் செய்யப்பட்டன.

## 28.10.2004

அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பு, ஆக்கபூர்வமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். அயர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கும் எமது பிரதிநிதிகளுக்கும் இடையில் அயர்லாந்து வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் செல்வன் அவர்களுடன் சமாதானச் செயலக பொறுப்பாளர் புலித்தேவன் அவர்களும், பிரதிப் பொறுப்பாளர் செல்வி கார்த்திகேயன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அயர்லாந்து அரசு தரப்பில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கொனோர் லெனிஹன், வெளிவகார அமைச்சின் அரசியல் துறை இயக்குநரும் உதவிச் செயலாளருமான டேவிட் கூனி, அமைச்சின் அபிவிருத்தி ஒத்துழைப்புப் பிரிவின் நிர்வாக அதிகாரி அனி ஒ கீ ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## 29.10.2004

ஈராக்கில் இலங்கையரான தினேஸ் தர்மேந்திரன் என்பவர் இஸ்லாமிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் இவர் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளம் ஒன்றுக்கு தாம் பணியாற்றும் கனரக வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருக்கையிலேயே கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 29.10.2004

அரசாங்கம் குறுக்கு வழியில் அரசியல் அமைப்பபை திருத்தம் செய்ய முயற்சிக்குமானால் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு அரசியல் அமைப்பு நிர்ணய சபையை அமைப்பதை தவிர்க்க முடியாதுபோய் விடும் என்று சிறீலங்காவின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெற்காசிய மற்றும் ஆசிய பசுபிக் வலயத்தில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒத்துழைப்பு கருத்தரங்கு 29.10.2004 அன்று கொழும்பில் நடைபெற்ற போதே ரணில் விக்கிரமசிங்க இந்த கருத்துக்களை வெளியிட்டார். இதில் அவுஸ்திரேலிய, தாய்வான் நாட்டு பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

## 30.10.2004

மட்டக்களப்பு வவுணதீவில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் 30.10.2004 அன்று சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அன்று காலை போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவின் முன்னிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைத்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கௌசல்யன், சிறீலங்கா படையினரின் பாதுகாப்பு சோதனை சாவடிகளில் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள், தொடர்பாக படையினருக்கு விளக்கமளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

## 31.10.2004

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் 31.10.2004 அன்று பிற்பகல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பள்ளிவாசலொன்றும், இரண்டு மதக் கலாச்சார கட்டிடங்களும் சேதமாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இப் பிரதேசத்தில் இஸ்லாமிய மத கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் தொடர்பான முரண்பாடுகளின் எதிரொலியாகவே இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளது.

தமிழர் விடுதலை வரலாற்றில் நவம்பர்

# நினைவுக்குறிப்பு

## மாவீரர்களை நினைவு கூரும் புனித நாள்:






தமிழீழ விடுதலைக்காக முதல் களப்பலியான புலிவீரன் லெப். சங்கர் நினைவு நாளான 27-11-1982 தாயகதேசத்தின் விடிவுக்காக தாயின் மடியில் புதைக்கப்பட்ட அனைத்து மாவீரர்களையும் நினைவுகூரும் மாவீரர் நாளாக கொண்டாடப்படுகின்றது. தனது இனிய உயிர் அர்ப்பணிப்பால் விடுதலைக்கு வித்திட்டு உரமான மாவீரர்களை நினைவுகூரும் புனித நாளான இந்நாள், தமிழீழத்தின் தேசிய நாளாகக் கருதப்படுகிறது.

### ஓயாத அலைகள்–3:

இலங்கையின் இராணுவ அரசியல் வரலாற்றில் பல திருப்பங்களுக்கும், மாற்றங்களுக்கும் காரணியாக இருந்த ஓயாத அலைகள் -3 இராணுவ நடவடிக்கை 02.11.1999.அன்று விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. சுமார் ஏழு மாதங்கள் நீடித்த இவ்வெற்றிமிகு நடவடிக்கை மூலம் சிறீலங்கா அரசானது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியாது என்பதை உறுதி செய்தது.

### சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரிச் சமர்:

விடுதலைப் புலிகளின் ஒப்பரேசன் தவளை நடவடிக்கை மூலம் 13.11.1993 அன்று நவீன ராடர் சாதனங்களுடன் கூடிய கடற்படைமுகாமுடன் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் இணைந்த பல மினிமுகாம்களையும் நூற்றுக்கணக்கான காவலரண்களையும், உள்ளடக்கி 25 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்திருந்த பூநகரி கூட்டுப்படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. 10.11.1993அன்று நள்ளிரவு தாண்டிய வேளையில் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட இச் சமரில் 1000ற்கும் அதிகமான இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட வடிவத்திற்கு புதியதொரு பரிமாணத்தைச் சேர்த்த இப்பெரும் சமரில் 456 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

### யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம் தாக்கப்பட்ட நாள்:

யாழ் புனித ஜேம்ஸ் தேவாலயம் 13.11.1993 அன்று சிறீலங்கா இராணுவத்தின் வான்படைத் தாக்குதலில் தாக்கப்பட்டது. இதில் தேவாலயத்தினுள் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



## தமிழீழக் காவல்துறையின் ஆரம்பம்:

தனியரசு உருவாக்கத்திற்கான வளர்ச்சிப் போக்கில் இன்னுமொரு படிக்கல் தமிழீழக் காவல்துறையாகும். 19.11.1991அன்று தமிழீழக் காவல்துறை அணி உருவாக்கம் பெற்றது. தமிழீழக் காவல்துறையினர் தமது முதலாவது அணிவகுப்பு மரியாதையை 19.11.1991 அன்று தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் முன்னிலையில் வழங்கினர்.

### ஒஸ்லோவில் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த மாநாடு:

25.11.2002 அன்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு நடைபெற்றது. நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். உலக நாடுகள் பலவற்றின் முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்ட இம் மாநாட்டில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் குறித்தும், சிங்கள ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான இராணுவ அடக்குமுறை குறித்தும், மனிதஉரிமை மீறல்கள் குறித்தும் எடுத்துரைத்த திரு. பாலசிங்கம் அவர்கள், இந்த அடக்குமுறைக்கெதிராக, தமிழ்மக்களின் உரிமையை நிலைநாட்ட தோற்றம் பெற்ற விடுதலைப் போராட்டம் குறித்தும் எடுத்துவிளக்கினார்.



## மடுத்திருப்பதிப் படுகொலை:

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுமாதா தேவாலயத்தின் மீது 20.11.1999 அன்று சிங்கள இராணுவம் நடத்திய பலத்த பீரங்கித் தாக்குதலில் தேவாலயத்தினுள் அடைக்கலம் புகுந்திருந்த 13 குழந்தைகள் உட்பட 44 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 60ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் தேவாலயத்தின் ஒரு பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது.

# நினைவுக்குறிப்பு



### கிழக்கு மாகாணத்தில் முதல் கரும்புலித் தாக்குதல்:

புத்தூர், நவக்கிரி பகுதியிலிருந்து சூரியக்கதிர் என்ற மிகப்பெரு மெடுப்பிலான படையெடுப்பை வலிகாமத்தில் மேற்கொண்ட சிங்க ளப்படையினர் 50நாட்கள் நடத்திய உக்கிரசமரின் முடிவில் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றினர். ஏறக்குறைய 5.5 இலட்சம் பேரைக் கொண்ட வலிகாமத்தில் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக வெளியேறிய நிலையில் வெறும் கட்டிடங்களுக்கு மத்தியில் 05.12.1995 அன்று சிங்களப்படை அமைச்சர் அநுருத்த ரத்வத்த சிங்கக் கொடியை ஏற்றிய ஒருசில மணிநேரத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப் பில் சிங்களச் சிறப்பு அதிரடிப் படையின் முகாம் மீது மேஜர் ரங்கன் கரும்புலித் தாக்குதலை நிகழ்த்தி சிங்களத்தின் ஆக்கிரமிப்பிற்கு பதிலடி கொடுத்தார்.

### தியாகி அப்துல் ரவூஃப் நினைவு நாள்:

ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் 24வயது தமிழ் இளைஞர் அப்துல் ரவூஃப் 15.12.1995 அன்று தீக்குளித்து தியாக மர ணம் எய்தினார். சூரியக்கதிர் யாழ்ப்பாணப் படையெடுப்பின்போது வலிகாமத்தின் ஒட்டுமொத்தமான சனத்தொகையும் முற்று முழுதாக இடம்பெயர்ந்து வெளியேறிய ஒரு முக்கியமான காலத்தில் அவர் இத் தியாகச்சாவை எய்தினார்.

## எம்.ஜி.இராமச்சந்திரன் நினைவு நாள்:



தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்த ஒரு சிறந்த மனிதர். இவர் புலிகள் இயக்கத்திற்கு பெருந்தொகை நிதியை அளித்து போராட் டத்தை முன்னோக்கித் தள்ள உதவியவர். இவர் 24.12.1987 அன்று உடல்நலக்குறைவு காரணமாக மரணமடைந்தார். இவர் நினைவுநாள் தமிழ்நாட்டு மக்களாலும், தமிழீழ மக்களாலும் நினைவுகூரப்படுகின்றது

## ஜெயசிக்குறுய் எதிர்ச்சமர்:

அனைத்து இராணுவ வளங்களையும் ஒருமுகப்படுத்தி பெரும் நம்பிக்கையுடன் சிங்களம் தொடுத்த பாரிய இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை 04.12.1998 அன்று கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் குடாநாட்டுக்கு தரைப்பாதை அமைக்க 13.05.1997 அன்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய படையெடுப்பு விடுதலைப் புலிகளின் புயலையொத்த எதிர்த்தாக்குதல்களால் நிலைகுலைந்தது சிங்களப்படைக்கு பலத்த இழப்பையும் வரலாற்றில் பெருத்த இராணுவ அவமானத்தையும் ஜெயசிக்குறுய் பெற்றுக் கொடுத்தது.

### சாவகச்சேரிப் படுகொலை:

டி.பி.விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டம் சாவகச்சேரி நகரில் 30.12.1993 அன்று குழுமியிருந்த மக்கள்மீது சிறீலங்கா விமானப்படையின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் 10ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

### குருநகர், பாசையூர் மக்கள் படுகொலை:

டி.பி.விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டம் குருநகர் பாசையூர் மக்கள் குடியிருப்புக்கள் மீது 05.12.1993 அன்று சிறீலங்கா விமானப்படையின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் சிறுவர்கள் பெண்கள் உட்பட 25 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 70ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர்.

### மிருசுவில் படுகொலை:

19.12.2001 அன்று சந்திரிகா ஆட்சிக்காலத்தில் தென்மராட்சியின் வடக்குப் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஒன்பது தமிழர்களில் சிறுவன் உட்பட 8பேர் சிங்கள இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு அடித்தும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 25.12.2001 அன்று இவர்கள் புதைகுழியிலிருந்து சடலங்களாக மீட்கப் பட்டனர்








இத்தாலி பலெர்மோவின் தமிழர் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் 'பகை வெல்லும் புலி வீரம்' என்ற 2 வது இசைத்தட்டு வெளியீட்டு விழா 31-10-2004 அன்று பலெர்மோ டொன் பொஸ்கோ அரங்கில் இத்தாலி பணியக பொறுப்பாளர் திரு. மேதா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு பேச்சாளராக எமது தாயகத்தில் இருந்து வருகை தந்த திரு. க. வே. பாலகுமாரன் அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து அவ் இசைத்தட்டின் முதற் பிரதியை திரு.ராஜன் என்பவரிடம் இருந்து பாலகுமாரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். ஆத்துடன் தேசிய தலைவரின் ஆளுமை பற்றிய 'காலத்தை வென்ற தலைவன்' என்ற ஆங்கில நூலை திரு. ப. ஈஸ்வரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். திரு பாலகுமாரன் அவர்களால் கலைஞர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர் திரு. எ. பொஸ்கோ சிறப்பு பரிசினை பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து செல்வி சுரேக்கா குமாரசாமி அவர்களின் நெறியாழ்கையின் கீழ் மாலதி கலைப் பள்ளி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.





14.11.2004 அன்று இத்தாலி பலெர்மோவில் நடைபெற்ற திலீபன் தமிழ்ச் சோலையின் கலைமாலை - 2004.







## தேசியத் தலைவரின் ஒளிப்பட நூல் வெளியீடு:

கனடாவில் 13.11.2004 அன்று 'காலத்தை வென்ற தலைவன்' என்ற தேசியத் தலைவரின் புகைப்படத் தொகுப்பு நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது








## தேசியத் தலைவரின் ஒளிப்பட நூல் வெளியீடு:

அவுஸ்திரேலிய மெல்பேண் நகரில் 'காலத்தை வென்ற தலைவன்' என்ற புகைப்படத் தொகுப்பு நூல் 14.11.2004 அன்று வெளியிடப்பட்டது இந்நூலை தென்துருவ தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் அவுஸ்திரேலியாவில் வெளியிட்டுள்ளது.

திருமதி அடேல் பாலசிங்கத்தின் தாயார் திருமதி பெற்றி வில்பி அவர்கள் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். அருட் தந்தை வூட்டன் அவர்கள் இந்நூலை வெளியிட்டு வைத்தார்கள். நூல் குறித்த ஆய்வுரைகளும் நிகழ்த்தப்பட்டன



## யசீர் அரபாத் காலமானார்.

11 நவம்பர் 2004.

மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த பலஸ்தீனிய அதிபர் யசீர் அரபாத் தனது 75ஆவது வயதில் பிரான்சில் உள்ள இராணுவ வைத்திய சாலையில் காலமானார். இத்தகவலை பாரிசிலுள்ள பலஸ்தீனப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

பிரான்சில் உள்ள இராணுவ வைத்தியசாலையொன்றில் இரு வாரங்களாக அனுமதிக்கப்பட்டிருந்த அதிபர் அரபாத் அங்கு மரணமடைந்தார்.

1929ஆம் ஆண்டு பிறந்த அரபாத் பலஸ்தீனியர்களின் விடுதலைக்காகப் போராடி வந்தவராவார்.

அரபு லீக்கின் தலைமையில் மரணச் சடங்கு கெய்ரோவில் நடைபெற்றது. பின்னர் அதிபர் அரபாத்தின் பூதவுடல் மேற்குக் கரைப் பிரதேசத்திலுள்ள றமளா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### யசீர் அரபாத் மறைவுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அனுதாபக்கடிதம்



யசீர் அரபாத் பலஸ்தீன மக்களால் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களாலும் முன்னுதாரணமானவராக, வலிமைமிக்க ஒரு தலைவராக ஆத்மபூர்மாக உணரப்பட்டவர் எனத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பலஸ்தீன மக்களுக்கும், அவர்களது தலைமைத்துவத்திற்கும் அனுப்பிய அனுதாபக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ மக்கள் சார்பாக பலஸ்தீன மக்களின் உயர் மரியாதைக்குரிய தேசியத் தலைவர் சனாதிபதி யசீர் அரபாத் அவர்களின் மறைவுக்கு எனது இதய பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பலஸ்தீன மக்களின் தேசிய ஒற்றுமையின் குறியீடாக யசீர் அரபாத் விளங்கினார். அவர் விடுதலைக்கான தமது மக்களின் போராட்டத்தின் சரித்திர நாயகனாவார். வரலாற்றில் சிக்கலான தருணத்தில் நிகழ்ந்துள்ள அவரது மறைவு ஒடுக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, அதிலிருந்து சுதந்திரமும், விடுதலையும் பெற அவாவுறும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைகிறது எனத் தேசியத் தலைவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் மறைவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் கவலையளித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்டன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். இன அடக்குமுறைக்கு எதிராக விடுதலைப் போராட்டமொன்றை முன்னெடுத்தவர் என்ற வகையில் அவரது மறைவு கவலையளிக்கின்றதென அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.



## தமிழீழத் தேசியத் தலைவரை ஜான் பீற்றர்சன் சந்தித்தார்.

11 நவம்பர் 2004.

கிளிநொச்சிக்கு வருகை தந்த நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை 11 நவம்பர் 2004 அன்று முற்பகல் சந்தித்தார்.

இலங்கைத் தீவகத்தில் தமிழீழம், சிறீலங்கா நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி முயற்சிகள் தொடர்பான இருதரப்பு பேச்சுகளின் போது ஆராயப்பட்டன.

இப்பேச்சுகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் உடனிருந்தார். பீற்றர்சனுடன், பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விதார் ஹெல்ஹசன், நோர்வே தூதர் எரிக் சொல்கெய்ம், ஹான்ஸ் பிராட்ஸ்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

நோர்வே குழுவினருக்கு தேசியத் தலைவர் அவர்கள் மதிய விருந்தளித்து சிறப்பு செய்தார்.



## ஆலய பூசகர் இராணுவ வாகனம் மோதிப்பலி

14 நவம்பர் 2004.

யாழ்-வவுனியா(ஏ-9) வீதி, கொடிகாமத்தில் சிறீலங்கா இராணுவ வாகனம் மோதி ஆலய பூசகர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். பலியான பூசகரின் உடலை உடனே படையினர் அகற்ற முற்பட்டதால், ஏற்பட்ட முறுகல் நிலையில் ஆத்திரம் கொண்ட பொது மக்களினால் இராணுவ வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பலியான பூசகர் கல்வியங்காட்டைச் சேர்ந்த 24 வயதான வரதராஜப்பெருமாள் ஹரிகரசர்மா ஆவார்.

புலம்பெயர் கவிஞர் தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் தாயகத்தில் வெளியீடு:

15 நவம்பர் 2004,




புலிகளின் குரல் வெளியீடான புலம்பெயர் கவிஞர் தா.பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டுவிழா வெகுசிறப்பாக கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் 15.11.2004 அன்று புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் வி.செயல்வீரன் தலைமையில் ஆரம்பமான இவ்வெளியீட்டு விழாவில் ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றினார். பொதுச்சுடரை மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் மௌலியின் தாயாரும் போராளியின் தாயாருமான திருமதி நீலாவதி தாமோதரம்பிள்ளை ஏற்றினார். தொடர்ந்து மாவீரர் வணக்க நடனத்தை செல்வி சுகன்யா வழங்கினார். வரவேற்புரையை புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளரும் படைப்பாளியுமான ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். தலைமையுரையினை அடுத்து கவிஞர் சு.வில்வரத்தினம் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

நூலினை தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வெளியிட்டு வைத்து, சிறப்புரையை நிகழ்த்தினார். நூல் மதிப்பீட்டுரையை அரசியல் ஆய்வாளரும் படைப்பாளருமான நிலாந்தன் நிகழ்த்த, பதிலுரையை கவிஞர் மு.பொன்னம்பலம் நிகழ்த்தினார். நன்றியுரையை போராளி எல்லாளன் நிகழ்த்தினார்.

தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்: சு.ப.தமிழ்ச்செல்வன்

16 நவம்பர் 2004,

தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை 16 நவம்பர் 2004 அன்று சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ளனர் எனவும், இது இழுபட்டுச் செல்வதற்கு புலிகள்தான் காரணமெனவும் சர்வதேச சமூகத்திற்கு பல வழிகளிலும் பிரச்சாரப்படுத்தி வருகின்றனர்.

இதில் எந்தவித உண்மையும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக பேச்சுக்களை தொடர்வதற்கும் தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசுவதற்கு தயாராகவே இருப்பதாக நாங்கள் எப்போதும் தெரிவித்து வந்துள்ளோம்.

இது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து தெளிவாக்கி வந்துள்ளோம். இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் முழுமையாக செயற்பட்டு வருகின்றனர். தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய தமிழ் மக்களின் ஆணையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவுடனான ஒப்பந்தம் இராணுவத் தீர்வுக்குப் பயன்படுமென புலிகள் அஞ்சத்தேவையில்லையாம்!" - ஜனாதிபதி சந்திரிகா

17 நவம்பர் 2004,

ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொள்ளப் போகும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு இனப்பிரச்சினை, இராணுவத் தீர்வுக்குப் பயன்படுத்தப்படுமென விடுதலைப் புலிகள் அஞ்சத் தேவையில்லை ஏனைய நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கையைப் போன்றே, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இருக்கும். இதனை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாணப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டுக் கொல்லப்பட்டார்

19 நவம்பர் 2004,

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியான சரத் அம்பேபிட்டிய 19 நவம்பர் 2004 அன்று மாலை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரது மெய்க்காப்பாளரான சிறீலங்கா காவல்துறையினர் ஒருவரும் உயிரிழந்துள்ளார். இந்தத் துப்பாக்கி சூட்டை நடத்தியவர்கள், வெள்ளை நிற மென்டா ரக வாகனத்திலேயே தப்பி சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வாகனம் கொழும்பிலுள்ள வாகனங்களை வாடகைக்கு விடும் பிரபலமான நிறுவனத்துக்கு சொந்தமானது என்று சிறீலங்கா காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். நீதிபதி சரத் அம்பேபிட்டிய போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய ஒரு குழுவினருக்கு மரண தண்டனை வழங்கிவிட்டு வீட்டிற்கு திரும்பியபோதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்த தீர்ப்பிற்கும் நீதிபதியின் கொலைக்கும் தொடர்பு இருக்கலாம் என சிறீலங்கா காவல் துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் இரு இளைஞர் கொலை

19 நவம்பர் 2004,

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் 19 நவம்பர் 2004 அன்று மாலை 6.00 மணியளவில் உந்துருளியில் வந்தவர்களால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இன்னுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் இளைஞர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது தலைக் கவசம் மற்றும் ஜாக்கட் அணிந்த இருவர் உந்துருளியில் வேகமாக வந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஆதிகோவிலடிப் பக்கமாகத் தப்பியோடித் தலைமறைவாகிவிட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்து 21 வயதுடைய சதாசிவம் குமரன், 21 வயதான இராஜேந்திரம் சுரேஸ்குமார் ஆகியோர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இதே வேளை 34 வயதான பொன்னுத்துரை தெய்வேந்திரம் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மீசாலையில் சிறீலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்

20 நவம்பர் 2004,

யாழ் குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மகாலிங்கம் சுந்தரராஜா (21) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறீலங்காவில் கொலை, போதைவஸ்து விற்பனை மற்றும் கற்பழிப்புக் குற்றங்களிற்கு இனிமேல் மரண தண்டனை

20 நவம்பர் 2004,

நீதிபதி அம்பேபிட்டியாவின் கொலை தொடர்பாக ஆராய்ந்த சிறீலங்கா ஜனாதிபதி தலைமையிலான உயர்குழு கொலை, போதைவஸ்து விற்பனை மற்றும் கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு 20 நவம்பர் 2004 முதல் மரணதண்டனையை அறிவித்துள்ளது. 30 வருடங்களிற்குப் பிறகு தற்போதே மீண்டும் மரண தண்டனை இவ்வாறான குற்றங்களிற்கு அமுலிற்கு வருகிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் அன்று நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான உயர்மட்ட மகாநாட்டில் இதற்கான உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

வானொசை - 14ல் வெற்றி பெற்றோருக்கு தேசியத் தலைவரின் கையெழுத்திட்ட சான்றிதழ்கள் வழங்கி கௌரவிப்பு

21 நவம்பர் 2004,

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் கையெழுத்திடப்பட்ட சான்றிதழ்கள் வானொசை 14 போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு விழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

புலிகளின் குரல் வானொலியின் 14ஆம் ஆண்டு நிறைவு வானொசை 14 நிகழ்வு புலிகளின் குரல் தமிழன் அரங்கில் நிகழ்ந்துள்ளது.

### "சிறீலங்காவில் தூக்கு மரங்கள் தயார்" - சிறீலங்கா நீதியமைச்சர்

21 நவம்பர் 2004,

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றம் மீண்டும் அமுலுக்கு வந்ததையடுத்து வெலிக்கடை, கண்டி, போகம்பரை சிறைச்சாலைகளில் தூக்கு மரங்கள் தண்டனைகளை நிறைவேற்றுவதற்காக தயார் நிலையில் இருப்பதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

### போராளி மரணம்:

21 நவம்பர் 2004,

மட்டக்களப்பு கொத்தியாவலையில் 21.11.2004 அன்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வீரவேங்கை லெப்டினனட் மலைஜெகன் எனப்படும் சத்தியநாதன் இன்பராஜா வீரச்சாவடைந்தார் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

### குடும்பிமலைக் கோட்ட மாவீரர் பெற்றோர் கரடியனாற்றில் கௌரவிப்பு:

22 நவம்பர் 2004,

பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் மட். அம்பாறை மாவட்ட தளபதி ராமு, மட். அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், மட்டு. அம்பாறை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, குடும்பிமலைக் கோட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் புகழன், மட்டு. அம்பாறை காப்பகப் பொறுப்பாளர் ஜங்கரன் மற்றும் போராளிகள் கலந்து கொண்டனர். குடும்பிமலைக் கோட்டத்திலுள்ள சுமார் 500இற்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




### திருமலை மாவட்டத்தில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு:

22 நவம்பர் 2004,

திருமலை உட்துறைமுக வீதியில் உள்ள இந்துக் கலாசார மண்டபத்தில் 22 நவம்பர் 2004 அன்று காலை மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

### தேசிய மாவீரர் நினைவெழுச்சி நாட்கள் எழுச்சியுடன் ஆரம்பம்:

25 நவம்பர் 2004,

மாவீரர் தினத்துக்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் 25.நவம்பர் 2004 அன்று காலை 8 மணிக்கு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் தேசியக் கொடியேற்றலுடன் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது. 25ம் திகதி முதல் மூன்று தினங்கள் எழுச்சி தினங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு 27 ம் திகதி மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டது. இந்த மூன்று நாட்களும் பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை ஆகிய நிகழ்வுகள் வரிசைக்கிரமப்படி இடம்பெற்றன.

தேசிய மாவீரர் நினைவெழுச்சி நாட்கள் எழுச்சியுடன் ஆரம்பமாகிய போது சிறீலங்கா படையினர் அந்த நிகழ்வுகளை குழப்பி, மாவீரர்களை அவமதிக்கும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டனர். மாவீரர்களுக்கு அவமரியாதை செய்யும் சிறீலங்கா படையினரின் அடாவடித்தனங்கள் மன்னார், வவுனியா, திருகோணமலை போன்ற பல இடங்களில் தொடர்ந்து இடம்பெற்றன. வவுனியா மன்னார் நகரங்களில் சிறீலங்கா படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் பல பொது மக்கள் காயமடைந்துள்ளனர். சிறீலங்கா படையினரின் இந்த இனவெறிச் செயற்பாட்டினால் தமிழர் தாயகம் பொறுமையிழந்து கொதித்துப் போயுள்ளது.

### திருமலையில் மாவீரர் தின நினைவெழுச்சி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு:

25 நவம்பர் 2004,

மாவீரர் தின நினைவெழுச்சி நிகழ்வுகள் 25 நவம்பர் 2004 அன்று திருகோணமலையிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு காலை 9 மணிக்கு திருகோணமலை பொது மைதானத்தில் இருந்து முச்சக்கர வண்டி ஊர்வலம் ஆரம்பமாகி உட்துறைமுக வீதியில் இந்து கலாசார மண்டபத்தினை சென்றடைந்தது. அங்கு மாவீரர் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் விமின்பன் தேசியக்கொடியினை ஏற்றிவைத்தார். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் பொதுச்சுடரேற்றினார்.

இதேவேளை, தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு திருகோணமலையின் பிற பகுதிகளிலும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

### வந்தாறுமுலையில் இரு குடும்பஸ்தர்கள் சுட்டுக் கொலை:

25 நவம்பர் 2004,

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி வந்தாறுமுலையில் 25 நவம்பர் 2004 அன்று இரண்டு குடும்பஸ்தர்கள் இனந் தெரியாத ஆயுததாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் சண்முகம் தயாபரன் (வயது 32) மற்றும் சம்பூநாதன் மனோகரன் (வயது 45) ஆகியோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவார்.



### தமிழீழ மாணவர் சமூகம் வாழ்த்தியது:

25 நவம்பர் 2004,

தேசியத் தலைவரின் 50வது அகவை வாழ்த்தி தேசத்தின் பல்வேறு பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் கேடயங்கள், பரிசுப் பொருட்கள், வாழ்த்து மடல்கள் ஆகியவற்றை 25 நவம்பர் 2004 அன்று அரசியல்துறை நடுவகப் பணியகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கையளித்தனர்.

### தமிழீழ நிதித்துறை மாணவர் நிதியம் அமைப்பு:

25 நவம்பர் 2004

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாளையொட்டி தமிழீழ நிதித்துறை கல்வி மேம்பாட்டு நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபா இந்நிதியத்திற்கு ஒதுக்கப்படும். நிதித்துறையால் நடத்தப்படும் தமிழ்மொழித் திறன்தேர்விலும் பொது அறிவு மற்றும் உளச்சார்புத் தேர்விலும் சிறந்த பெறுபேறு பெறுவோருக்கு இந்நிதியத்திலிருந்து காசுப்பரிசில்கள் வழங்கப்படும்.

தமிழீழத்தில், க.பொ.த சாதாரண தரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளுடன் தேறி நிதி வாய்ப்பின்மையால் தொடர்ந்து கற்கமுடியாத மாணவருக்கும் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்வதில் நிதிச்சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவருக்கும் பின்வரும் பாடங்களைக் கொண்ட கற்கை நெறிகளைக் கற்பதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

### மன்னாரில் காடைத்தனம்!

25 நவம்பர் 2004,

நூற்றுக்கணக்கான மக்களை அடித்து தாக்கியது சிறீலங்கா இராணுவம் 25 நவம்பர் 2004 அன்று மன்னாரில் சிங்கள இராணுவம் காடைத்தனத்தில் இறங்கியுள்ளது. நூற்றுக்கணக்கான தமிழ் மக்களை அடித்துத் தாக்கியுள்ளது. 14 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மன்னார் நகரில் வைக்கப்பட்டிருந்த மாவீரர் நாள் பதாகைகளை சாய்த்த சிங்கள இராணுவக் காடையர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இராணுவத் தாக்குதலிலிருந்து மக்களை காப்பாற்ற முனைந்த சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் நோகரதலிங்கமும் படுகாயமடைந்துள்ளார்.



### மாவீரர் துயிலும் இல்லங்களில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றம்:

25 நவம்பர் 2004,

மாவீரர் நாள் நிகழ்வையொட்டி தமிழீழ மாவீரர்கள் துயிலும் இல்லங்களில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளன. தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு அவர்கள் தேசியக் கொடியேற்றினார். மட்டு அம்பாறை துணைத்தளபதி பிரபா விளக்கேற்றினார்.

மட்டு தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு-அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் இ. கௌசல்யன் தேசியக் கொடியேற்றினார். இந்நிகழ்வுகளில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

### 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை:

25 நவம்பர் 2004,

மாலதி படையணியின் உருவாக்கத்தில இசைவாணர் கண்ணன் அவர்களின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை உருவாகி வெளிவந்திருக்கின்றது.



### தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கு அகவை 50:

26 நவம்பர் 2004,

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு 26 நவம்பர் 2004 அன்று 50 தாவது அகவையாகும்.

தமிழன் என்றால் அடிமை என்றும், அடிவாங்கி அடங்கி வாழப் பிறந்தவன் என்றும், எழுதப்பட்டிருந்த விதியை மாற்றி, தமிழர்கள் என்றால் வீரர்கள், என்றும் சாதனை படைக்கக்கூடியவர்கள் என்றும் தமிழருக்கென்றொரு அடையாளத்தையும் முகவரியையும் தேடித்தந்த அவருடைய பிறந்தநாள் தின நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நடைபெற்றுள்ளன.





### கிளிநொச்சியில் கடற்புலிகள், கரும்புலிகள் அணிவகுப்பு !

26 நவம்பர் 2004,

தமிழீழத் தேசியத் தலைவரின் ஐம்பதாவது அகவையை முன்னிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினதும், கரும்புலிகள் அணியினதும் விசேட கண்காட்சி அணிவகுப்பு நிகழ்ச்சியொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அன்று காலையில், தேசியத் தலைவருக்கு நல்லாசி வேண்டி கிளிநொச்சி நகரில் விசேட பொங்கல் நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

தமிழீழ தேசியத் தலைவரின் 50 வது பிறந்த தினத்தை அவரது சொந்த இடமான வல்வெட்டித்துறை மக்கள் 50 கிலோ எடையுடைய கப்பல் வடிவிலான கேக்கை வெட்டி கொண்டாடினார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது அகவை தினத்தை முன்னிட்டு வாகரைப் பிரதேசத்தில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது.








ஊடகக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு:

26 நவம்பர் 2004,

கிளிநொச்சி மாவட்டம், முறிகண்டி அறிவியல் நகர்ப்பகுதியில் ஊடகக் கல்லூரிக்கான அடிக்கல்லை சு.ப.தமிழ்ச்செல்வன் நாட்டினார்.

ஊடகக் கல்லூரிக்கான நிதிக்கென, தேசியத் தலைவரினால் வழங்கப்பட்டிருந்த விசேட நிதியினை, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர்களிடம் கையளித்துள்ளார். இந்த நிகழ்வில், ஊடகவியலாளர் டி.சிவராம், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோரும் சிறப்புரைகள் ஆற்றினர்.

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் (கோபு) அவர்களும் அடிக்கல் நாட்டினார் தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்தநாளையொட்டி இக்கல்லூரி உருவாக்கப்படுகிறது.

தம்பிலுவில் மாவீரர் நினைவாலயம்:

26 நவம்பர் 2004,

அம்பாறை மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் 26 நவம்பர் 2004 அன்று தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன் ஏற்றி வைத்தார். மாவீரர் நினைவாலயத்தினை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் திறந்து வைத்தார்.

விவரணச்சித்திரம்:

26 நவம்பர் 2004,

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50ஆவது அகவையையொட்டி, நிதர்சனம் வெளியீடாக 'தலைநிமிர்வு' என்னும் பெயரிலான, 'தமிழீழ விடுதலைப் போராட்டமும், தேசியத் தலைவரின் 50ஆவது அகவையும்' என்னும் விவரணச் சித்தரம் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

தென்னிலங்கையைச் சேர்ந்த கலைஞர்களான, தர்மசிறி பண்டார நாயகா, அசோகா கந்தகம, பிரசன்ன விதானகே, றோகித பாஷண ஆகியோருடைய வாழ்த்துச் செய்திகளும் இந்த விவரணச் சித்திரத்தில் இடம்பெறுகின்றன.

மாவீரர்நாள்:

27 நவம்பர் 2004,

தாயக விடுதலைக்கு தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய 17,780 மாவீரர்களை நினைவு கூரும் வகையில் தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் 27.11.2004 அன்று மாவீரர்நாள் எழுச்சியாகவும் உணர்வுபூர்வமாகவும் நினைவுகூரப்பட்டுள்ளது.

தாயக நேரம் மாலை 5.40 மணியளவில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய மாவீரர்நாள் சிறப்புரை தமிழர் தாயகத்திலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நேரடியாக ஒளி ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

மாவீரர் நாளன்று வன்னியில் ஓரிடத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மாவீரர் தின ஒழுங்கின்படி மாவீரர்களுக்கான நினைவு வணக்கத்தை செலுத்தினார்.

அதேநேரம் 6.00மணிக்கு அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நினைவு மண்டபங்களிலும் நினைவொலி எழுப்பப்பட்டது. பின்னர் அகவணக்கம் இடம் பெற்றது. அகவணக்கத்தை அடுத்து தளபதிகள் மற்றும் அரசியல் துறை பொறுப்பாளர்களினால் பொதுச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளுக்கும் மற்றும் நினைவுக் கற்களுக்கும் முன்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஈகச்சுடர்கள் ஏற்றப்பட, மாவீரர் பாடல் இசைக்கப்பட்டது. போராளிகள், பொதுமக்கள் அனைவரும் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர்தூவி, மலர் மாலைகளை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினர்.

தாயக விடுதலைக்குத் தங்கள் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவாக 27 நவம்பர் 2004 அன்று மாலை சிறீலங்கா பாராளுமன்றத்திலும் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும் பாராளுமன்ற முன்புற வாசலில் கூடி 21 ஈகைச் சுடர்களை ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்கள்.

சிறீலங்கா பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவாக ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியது இதுவே முதற் தடவையாகும்.






# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்வுகள் – 2004

அவுஸ்திரேலியா





கனடா





டென்மார்க்





# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்வுகள் – 2004



பிரான்ஸ்





ஜேர்மனி





இத்தாலி



# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்வுகள் – 2004

பிரித்தானியா






நோர்வே





தென்னாபிரிக்கா





# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்வுகள் – 2004

சுவீடன்





சுவிற்சலாந்து





ஐக்கிய அமெரிக்கா





விடுதலை வேட்கை மிக்க
எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான
ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின்
யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு
மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத
இலக்கியமாக எரிமலை

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



ஆக்கங்கள் அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு


◇ ERIMALAI,
C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020
Paris, FRANCE.

◇ Tel: 01 - 43 58 11 42

◇ Fax: (33) 1 43 58 11 91

◇ Email: erimalai@erimalai.com

